துக்காராம்

பாலசந்திர நெமதே



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

துக்காராம்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனனுக்கு நிமித்தகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து இந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச் சிற்பம்—கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. பட உதவி: நேஷனல் மியூஸியம், புது தில்லி.)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

துக்காராம்

ஆசிரியர்:
பாலசந்திர நெமதே

தமிழாக்கம்:
ஆர். கே. நாகு

சாகித்திய அக்காதெமி

Tukaram—Tamil translation by R. K. Nagu of Bhalchandra Nemade's monograph in English. Sahitya Akademi, New Delhi (1986) Rs. 5.

First Published : 1986

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம்:

ரவீந்திரபவன், 35, பெரோஸ்ஷா சாலை, புது தில்லி 110 001

கிளை அலுவலகங்கள்:

29, எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை 600 018

பிளாக் V–B, ரவீந்திர சரோபர் ஸ்டேடியம், கல்கத்தா 700 029

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், பம்பாய் 400 014

ரூ. 5.

அச்சிட்டோர்: டயோசிசன் அச்சகம், சென்னை 600 007

உள்ளுரை

1. முன்னுரை

தற்கால இந்திய மொழிகளுள் ஒன்று என்ற நிலையை மராத்தி மொழி அடைந்து சுமார் ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பின்பே, அது இலக்கியவளமுள்ள மொழியாக மாறத் தொடங்கியது. கி.பி. பதின்மூன்றும் நூற்றாண்டில்தான் மராத்தி இலக்கியம் செய்யுள், உரைநடை ஆகிய இரு பிரிவுகளிலும் முழு வளர்ச்சியைப் பெற்றது. தொடக்ககாலத்திய மராத்தி இலக்கியப் படைப்பாளர்களுக்கு, அவர்தம் இலக்கியப் படைப்புகளுக்கான உந்துசக்தியாக இருந்தவை சமயச் சீர்திருத்தமும், சமுதாயச் சீர்திருத்தமும் ஆகிய இரண்டுமேயாகும். சக்ரதாரி (Chakradhar), மகிம்பட்டர் (Mahimbatta), நாமதேவர், ஞானதேவர், ஜனாபாய், முக்தாபாய்— முதலான இவர்களெல்லாரும் மராத்தி இலக்கியத்திற்கான மரபுக்கூறுகளை உருவாக்கியவர்கள்; தம் காலத்தில் வழக்கத்தில் இருந்த சமக்கிருதத்திற்குப் போட்டியாக மராத்தி இலக்கியம் விளங்கும் வகையில் புதிய மரபுகளை மராத்தி இலக்கியத்திற்குப் படைத்துக்கொடுத்த படைப்பாளிகளாவர். இத் தொடக்ககாலப் படைப்பாளிகளின் காலத்திற்குப் பின்பு, மராத்தி இலக்கிய வளர்ச்சியில் ஒரு தேக்கநிலை ஏற்பட்டது. இரண்டரை நூற்றாண்டுக் காலம் அத்தேக்கநிலை நீடித்தது; சோம்பல்நிலை—ஒரு பேருறக்கநிலை நீடித்தது. அப்பேருறக்கநிலை கலைய இரண்டரை நூற்றாண்டு களாயின. சமயச்சார்பான பக்தி இலக்கியப் புத்தொளி மீண்டும் பரவத் தொடங்கிய பின்னரே, அப்பேருறக்கநிலை, அதாவது கும்பகருணநிலை கலைந்தது. மராத்தி இலக்கியம் தூக்கம் கலைந்து சோம்பல் முறித்து மீண்டும் நடைபோடத் தொடங்கியது. பக்தி இலக்கியப் புத்தொளி பரவியது; அப்பக்தி இலக்கியம் பாடிய பள்ளியெழுச்சியால்தான் தூங்கிக்கிடந்த மராத்தி இலக்கியம் தனது துயில்நீங்கி விழித்து நடைபோடத் தொடங்கியது. துயிலெழுப்பிய அப்பக்தி இலக்கியப் புத்தொளி மீண்டும் காலூன்றிக் கதிர்விரித்துப் பரவக் காரணமாய் அமைந்தவர் ஏகநாதர் என்பவராவார். இரண்டரை நூற்றாண்டுக்காலப் பேரமைதியைக் கலைத்துப் பக்தி இலக்கிய மரபுக்குப் புத்துயிரூட்டிய வர் ஏகநாதரே. அவருக்குப் பின்னர் வந்தவர்களுள் குறிப்பிடத் தக்கவர் துக்காராம். துக்காராம், மராத்தி மொழிபேசும் மக்களின் வாழ்வில், அந்தப் பக்தி மரபை ஓர் ஆற்றல்மிக்க சக்தியாக மாற்றி, அதனைக் கால்கொள்ளச் செய்தார்; எழுந்து வந்த பக்திப் பெரு

வெள்ளத்தை வாழ்க்கை வயல்களுக்குப் பாய்ச்சி வளப்படுத்திய பெருமைக்கு உரியவர் துக்காராம் ஆவார்.

துக்காராம் போன்ற திருத்தொண்டர்களை அறிந்துகொள்வதற்கு, அன்னார் வாழ்ந்த காலச் சூழலை அறிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். அவர் காலத்திய சூழல் வேறு; இன்றைய காலச் சூழல் வேறு. இன்று நாம், அறிவியல் வளர்ச்சிபெற்றுள்ள விஞ்ஞான யுகத்தில் வாழ்கிறோம். இன்றைய காலச் சூழல் எத்தகையது? கட்சி அரசியலும், நாளிதழ்களும், பொழுதுபோக்குகளும், தனிமனிதனின் தன்னிச்சையான செயலுரிமையை வாழ்த்தி வரவேற்கும் கோட்பாடுகளும் மலிந்த காலம்; பல்வேறு கட்சிகளின் கொள்கைக் குரல் முழக்கங்கள் செவியைத் துளைக்கும் காலம்; புலனுகர்ச்சியையும் இன்பக்களியாட்டங்களையும் பெரிதுபடுத்திப் பேசுங்காலம்; இன்றைய இலக்கியங்களும் சமூக ஆக்கங்கருதிப் படைக்கப் பெறாமல், புலனுகர்ச்சியைப் பெரிதுபடுத்திக்காட்டும் விதத்தில் அல்லவா எழுதப்பெறுகின்றன. இன்றைய இந்தியப் படிப்பாளிகளுக்கு, சமயஞ்சார்ந்த வாழ்க்கை முறைகளும், ஆன்மீகச் சார்பான வாழ்க்கைப் போக்குகளும் அந்நியமாகிவிட்டன. இன்றைய இந்திய வாசகனுக்கு அத்தகையதொரு வாழ்க்கை நெறியோடு ஒட்டுறவு இல்லாதநிலை ஏற்பட்டுள்ளது. இந்திய மண்ணில் வழி வழியாக, வாழையடிவாழையாகப் பரப்பப் பெற்றுவரும் மெய்ஞ்ஞானக் கோட்பாடுகள், இன்றைய வாசகனுக்குப் பிடிக்காதவையாகவும் இருக்கக்கூடியநிலை ஏற்பட்டுள்ளது; அறிவியல் கண்டுபிடிப்புகளைப் பெரிதுபடப் பேசுவதே இன்றைய யுகத்தின் போக்காக உள்ளது. பொறிகளால் தொடர்புகொள்ளத்தக்க புறவுலகச் சிந்தனையே இன்றைய உலகைக் கவ்வியுள்ளது. பொறிபுலன்களைக் கடந்த ஓர் உலகம் இருப்பதையே எண்ணிப்பார்க்க விரும்பாத போக்கு இன்று பரவலாக உள்ளது. இதுதான் இன்றையநிலை; இன்றைய படிப்பாளிகளின் நிலை இதுதான். ஆனால், இவ்வளவு வியப்புமிக்க விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டுள்ள இந்தக் காலத்திலுங்கூட, இந்திய மண்ணில் வாழும் மக்களுள் பெரும்பான்மையான ஒரு கூட்டத்தினர், நம் பொறிபுலன்களுக்கும் அறிவுக்கும் எட்டாத வாழ்க்கை ஒன்று இருக்கின்றது என்பதனை நம்புகின்றனர். எல்லாவற்றையும் தமக்குள்ள அறிவால் கண்டு தெளியமுடியும் என்ற நம்பிக்கை அவர்கட்கு இல்லை. அறிவின் எல்லைக்கு அப்பாற்பட்ட, அறிவின் எல்லைக்கு அகப்படாத புதிரான ஒருநிலை வாழ்க்கையில் ஒரு கூறுகப் படிந்திருக்கிறது என்பதனை, அவர்கள் இன்றும் நம்புகின்றனர். தற்கால வாசகர்களிடமிருந்து—அதாவது படிப்பாளிகளிடமிருந்து விலகி, வேறுபட்டு நிற்கும் இத்தகைய ஒரு பெரும்

பான்மை மக்களைக்கொண்ட கூட்டத்தினரும் இந்திய மண்ணில் இன்றும் வாழ்கின்றனர். துக்காராம் அவர்களின் வாழ்க்கையையும் வாக்கையும் அறிந்து மகிழ்வதற்கு, படிப்பாளிகளிடமிருந்து விலகி வேறுபட்டு நிற்கும் இப்பெரும்பான்மைக் கூட்டத்தினரின் மனோபாவமே துணைசெய்யும்; தற்கால வாசகரின் மனநிலை துணை செய்யாது.

இந்தியா என்ற இந்தப் பரந்த நிலப்பரப்பில், இந்த மண்ணுக்கே உரியதும், தொன்றுதொட்டு வந்துகொண்டு இருக்கக் கூடியதும், பழமை வாய்ந்ததுமான பண்பாடு, அதன் தூய தனித் தன்மையோடு வளர அனுமதிக்கப்படவில்லை; அப்பண்பாட்டின் இயல்பான வளர்ச்சியோ காலந்தோறும் தடைப்படுத்தப்பெற்றே வந்துள்ளது. இயல்பாக வளர்ந்து செழிக்கவேண்டிய மரத்தை, அடிக்கடி வெட்டி வெட்டி அதன் வளர்ச்சியைத் தடைசெய்வது போல, இந்த மண்ணுக்கேயுரிய பழமையான பண்பாடும் இயல்பான வளர்ச்சியுடன் செழித்து வளர்ந்துவிடாமல் காலந்தோறும் சிதைக்கப்பெற்றே வந்துள்ளது. அதனால்தான், அப்பழமையான பண்பாடு நமக்கு வழங்கியுள்ள பக்தி நெறியும் யோக நெறியும் இடையறாத அந்நியத் தலையீடுகளால் செழித்து வளரமுடியாமற் போயின. சிதைவுகளைத் தாங்கிக்கொண்டே வளரவேண்டியநிலை அந்நெறிகளுக்கு வாய்த்தன; தலையீடுகளைத் தாங்கிக்கொண்டு ஊனமுற்றே வளரவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. வி. எஸ். நைபால் அவர்கள் கூறியதுபோன்று, மொத்தத்தில் நம்முடைய நாகரிகமானது, ''ஓர் ஊனமுற்ற நாகரிகம்தான்.''

பக்திநெறியைப் பரப்பியவர்களில் குறிப்பிடத்தகுந்தவர் துக்காராம் ஆவார். மகாராஷ்டிர மாநிலத்தின் நாட்டுப்புறங்களில் வாழும் பல இலட்சக்கணக்கான மக்களிடையே நன்கு அறிமுகமானவர் துக்காராம். கிட்டத்தட்ட அவர்களனைவரும் துக்காராமின் பண்ணூர்ந்த பாசுரங்களில் ஒருசிலவற்றையாவது தெரிந்து வைத்துள்ளனர். முழுப் பாடல்களைத் தெரிந்து வைத்துக் கொள்ளாவிட்டாலும், அவற்றின் சில வரிகளையாவது தெரிந்து வைத்துள்ளனர். மிகுதியான பாடல்களைத் தெரிந்து வைத்திருப்பவர்களும் அவர்களுள் பலருண்டு. துக்காராமின் பாடல்கள் அனைத்தையுமே மனப்பாடஞ் செய்து வைத்திருப்பவர்களும் வெகு சிலர் உண்டு. மகாராஷ்டிர மக்களால் நேசிக்கப்பெறும் அருள் கவிஞர்கள் பலர் உண்டு. அவர்களுள்ளும் பெரிதும் மக்களால் விரும்பப் பெறுபவர் துக்காராம். மராத்தி மொழிபேசும் மக்களிடையே துக்காராமிற்குள்ள வியத்தகு செல்வாக்கினை, இந்தியா மற்றும் அயல்நாட்டிலுள்ள இலக்கிய நோக்கர்கள் மிகத் தெளிவாக அறிந்து வெளிப்படுத்தியிருக்கின்றனர். ஆடி,

கார்த்திகை ஆகிய மாதங்களில், துக்காராமின் பண்ணூர்ந்த பாடல்களைப் பாடிக்கொண்டே, நீண்ட ஊர்வலமாகச் செல்லும் கிராமிய மக்களை இன்றும் நாம் காண்கிறோம். மகாராஷ்டிரத்தின் எல்லாப் பகுதியிலிருந்தும் இத்தகைய ஊர்வலங்கள் புறப்படுகின்றன. விட்டல்பெருமானின் திருத்தலமான பந்தர்பூரில் அவை வந்து சேருகின்றன. மகாராஷ்டிரத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் புறப்பட்டு வெளிப்போந்த பாகவத வெள்ளம் பந்தர்பூரில் சங்கமம் ஆகின்றது. பாகவத வெள்ளம் பக்திப் பாடல்களை முழங்கிக்கொண்டே வந்து திரள்கின்றது. இக்கண்கொள்ளாக் காட்சியைக் காண்போர்க்கு என்ன எண்ணத் தோன்றுகிறது? அப்பாகவத வெள்ளம் காண்போர் உள்ளத்தில் எவ்வித உணர்ச்சியைத் தோற்றுவிக்கிறது? துக்காராம் அவர்களாலும் மற்றும் 'வரகரி' நெறியைப் பரப்பிய திருத்தொண்டர்களாலும் உரமேற்றி வளர்க்கப் பெற்ற சமய உணர்ச்சியும், பக்திநெறியும், பாசுர மரபும், இம்மை மறுமை வாழ்க்கைக் கோட்பாடுகளும், நாட்டுப்புற மக்களின் உள்ளங்களில் ஆழ வேரூன்றியிருக்கின்றன என்ற உண்மையை அல்லவா உணர்த்துகின்றது! மகாராஷ்டிர மக்கள் துக்காராமின் பாடல்களைச் சமயச் சார்பான சடங்குகள் நிகழும்பொழுது, குழுவாக இருந்து பாடுவதற்கு மட்டுமே பயன்படுத்துவதில்லை. அவர் பாடல்களைப் பஜனைப் பாடல்களாக மட்டும் பயன்படுத்துவதோடு நின்றுவிடாமல், அன்றாட வாழ்விற்கான அறவுரைப் பாடல்களாகவும் கருதி அவற்றை எடுத்துக் கொள்ளுகின்றனர். துக்காராமின் பாடல்கள் மகாராஷ்டிர நாட்டுப்புற மக்களின் வாழ்வில்—அவர்தம் அன்றாட வாழ்விலும் சரி, சமயச் சார்பான சடங்கு வாழ்விலும் சரி, எல்லா நிலைகளிலும் ஊடுருவியுள்ளன என்பதையே இவை காட்டுகின்றன. அன்றாட வாழ்வில் மக்கள் அவருடைய பாடல் வரிகளை அடிக்கடி மேற்கோளாக எடுத்துக்காட்டிப் பேசுவர்; அவ்வாறு மேற்கோள் காட்டிப் பேசக்கூடிய சிறப்பான வாழ்க்கைக் கூறுகளை உள்ளடக்கிய வரிகளைப் பாடிப் பெருமை சேர்த்துக்கொண்டவர் துக்காராம் ஆவார். அவர் ஓர் அருள்கவிஞர்; அவருக்கு நிகராகச் சொல்லக் கூடிய புலவர் வேறு எவருமிலர்; மக்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்ட அருள்கவி; பெரும்புலவர் அவர். அவருடைய பண்ணூர்ந்த பாசுரங்கள் ஒவ்வொன்றும் முடியுந்தறுவாயில் ''துக்கா சொல்கிறார்'' என்ற சொற்றொடர்வந்து, பின்னரே முடியும். இத்தகைய சொல்லாட்சியை அவர் பாடல்கள் பெற்றுத் திகழ்கின்றன; அதாவது ஒரேபடித்தான முடிவுச் சொற்களை ஆளும் யாப்பு மரபைக் காணலாம். அதுமட்டுமன்றி, மறுக்கமுடியாத வாழ்க்கை உண்மைகளை வெளிப்படுத்தும் ஒரு பொருள் பன்மொழிகளைத் தாங்கிய சொற்றொடர்கள்கொண்டே

பாசுர முடிவுகள் அமையும். இவ்வாறான யாப்பமைதியும் பொருள் மைதியும் துக்காராமின் பாடல்களுக்கான தனித்தன்மைகள் எனக் கொள்ளலாம்.

இந்தியப் பண்பாட்டின் ஒரு பெரிய அங்கம் என்று கருதுமள விற்குப் பண்பாட்டு இலக்கியங்களாக, இடைக்கால மராத்தி இலக் கியங்கள் உள்ளன. அப்பண்பாட்டு இலக்கியங்களில் மகாராஷ்டிர மக்களின் உரிமையை நிலைநாட்ட எழுந்த நாட்டு விடுதலைக் குரலும் உண்டு; அதாவது, அக்கால இலக்கியங்களின் ஒரு பகுதி, படையெடுத்து வந்த இசுலாமியர்களுக்கு எதிராக மகாராஷ்டிர மக்கள் திரண்டெழுந்து தம் உரிமையை நிலைநாட்டும் பொருட்டு முழங்கிய உரிமைக் குரலை ஒலித்துக் காட்டும்; அவ்விலக்கியங்களின் மற்றொரு பகுதியோ ஆன்மீகத்தையும், சமுதாயச் சீர்திருத்தத்தை யும் ஒருசேர ஒலித்துக் காட்டும். இடைக்கால மராத்தி இலக்கியங் களில் விடுதலை வேட்கைப் பாடல்களும் உண்டு; ஆன்மீகத்தைப் பாடும் சமயப் பாடல்களும் உண்டு; அரசியல் விடுதலையைக்கூடக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் சமுதாயத் துறைகளின் நல்லாக்கம் கருதிப் பாடிய சீர்திருத்தப் பாடல்களும் உண்டு. சமய, சமுதாய, அரசியல் இயக்கங்களான அம்மூன்று இயக்கங் களின் பாதிப்புக்கு, துக்காராமைப்போன்ற ஒரு புரட்சிக் கவிஞர் ஆளாகியிருந்தார் எனலாம்.

துக்காராமின் உணர்ச்சிமிக்க இசைப் பாடல்கள் தனிச் சிறப்பு வாய்ந்தவை; அவை வெறுமனே கண்களால் அமைதியாகப் படித்துச் சுவைப்பதற்குரியவை மட்டுமல்ல; பாடி அனுபவிக்க வேண்டிய பண்ணுார்ந்த பாசுரங்கள் அவை. கீதமினிய அக் கீர்த்தனங்கள், வாய்விட்டு இசையோடு பாடி அனுபவிக்க வேண்டியவை என்ற உண்மையை அப்பாடல்களில் பயின்று வரும் சொற்கள் மிகத் தெளிவாக நமக்குக் காட்டுகின்றன. இன்று நமக்குக் கிடைத்துள்ள துக்காராமின் பாடல்கள் அனைத்தும் வாய் மொழியாக வழங்கி வந்துள்ளனவற்றைக் கேட்டுத் தொகுக்கப் பெற்றவைதாம். அதாவது, அப்பாடல்கள் யாவும் அவருடன் உறவு வகையில் நெருக்கமில்லாத அவர்தம் சீடர்கள் பாடக் கேட்டுத் தொகுக்கப் பெற்றவையே. அவருடைய சீடர்களுக்கோ அவர் (துக்காராம்) பாடல்கள் அனைத்தும் மனப்பாடம். துக்காராமைப்பற்றி அறிய விரும்புவோர் குறித்து வைத்துக் கொள்ளவேண்டியது என்னவென்றால், துக்காராம் பாடல்கள் அனைத்துமே வாய் வழியாக வழங்கி வரும் சிறப்பியல்புகளைப் பெற்றது என்பதுதான். துக்காராமின் ஐயாயிரம் பாடல்களையும் மனப்பாடஞ் செய்து ஒப்புவிக்கும் எழுத்தறிவில்லாத கிராம மக்களை இன்றும் காணலாம். அவர் வாழ்ந்த காலப் பகுதியில்

எப்படி மதிக்கப் பெற்ருரோ, அப்படியே இன்றும் மதிக்கப் பெறுகிருர். மூன்றரை நூற்ருண்டுக் கால இடைவெளிக்குப் பின்பும் கூட, அன்றிருந்த அதே செல்வாக்கோடு இன்றும் மக்கள் உள்ளங்களில் பசுமையாகத் துக்காராம் வாழ்கிருர். அவருடைய பாடல்கள் அன்ருடப் பேச்சு வழக்கில் உள்ளன; அவை எளிய பாடல்கள்; அவற்றின் கருத்துகளோ ஒளிவு மறைவின்றித் தெளிவானவை; அப்பாடல்கள் செவ்வியல் பாங்குடையவை; முதல்தரமானவை; சிந்தனைக்கு உரியவை. மக்கள் மத்தியில் துக்காராமிற்கு இடைவிடாத செல்வாக்கும், மதிப்பும் இருப்பதற்கான இரகசியத்தை ஆராய்வது சுவையான ஒன்ருக அமையும்.

இலட்சிய நோக்குடைய சமூக அமைப்புகளில் திருத்தொண்டர்கள் இயல்பாகவே மதிக்கப்பெறுவர். ஏனென்ருல், அவர்கள்தான் மனித இனத்தின் பேரார்வத்தை நிறைவேற்றுவதற்கான சமுதாயத்தொண்டில் ஈடுபடுகின்றனர். கற்பனையல்லாத நடைமுறை உலகின் மெய்ம்மைகள் ஒருபக்கம்; நடைமுறை உலகிற்கு அப்பாற்பட்ட, பொறிபுலன்களுக்கெட்டாத, கருத்தளவிலே உள்ள ஆன்ம உலகத்தின்மீது மனித இனத்திற்குள்ள நாட்டம் மற்ரெரு பக்கம். இவ்விரண்டிற்குமிடையே மனித இனம் கிடந்து தவிக்கிறது. மனித இனத்தின் தவிப்பை உணர்ந்துகொண்ட திருத்தொண்டர்கள் அவ்விருவகை உலகிற்குமிடையே ஓர் இணக்கத்தை ஏற்படுத்தித் தருகின்றனர். அவ்விருவகை உலகிற்குமிடையேயான இணக்கத்தை, அதாவது, அவை ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுப்பதால் ஏற்படும் உடன்பாட்டைத் தெளிவாகத் தம்முடைய எழுத்துகளில் வெளியிடுகின்றனர். அவர்களது எழுத்துகள் மக்களின் தாகந்தீர்க்கும் அருமருந்தாக அமைந்து இருப்பதால், அவை மக்களின் வாழ்வோடு கலந்து, நிலைபெற்று வாழ்கின்றன. திருத்தொண்டர்களின் அனுபவங்களை, அவர்களின் சுயானுபூதிகளை—அவ்வனுபூதிகளையடைய அவர்கள் கடந்து வந்த படிநிலைகளை—கடந்து வரும்போது பெற்ற அனுபவங்களை, தங்களைத் தாங்களே படிப்படியாகப் பதனஞ் செய்து பெற்ற ஆன்ம போதங்களை—அதாவது ஆழ்வாராதியர் போன்ற பெருமக்கள் வாடியதை, வாடி வருந்தியதை, ஓடியதை, ஓடிச் சென்று உணர்வெனும் பெரும்பதந் தெளிந்ததை—எல்லாம், அத்திருத்தொண்டர்தம் எழுத்துகளில் மக்கள் காண்கின்றனர். அத்தொண்டர்தம் திருவாய்மொழிகள், எழுத்தோவியங்கள்—தம்மையறிந்து இன்புறத் துடிக்கும் மனித குலத்தின் நீடித்த 'தேவைகளுக்கு நிறைவு தருபவைகளாக அமைகின்றன. துக்காராம் போன்ற திருத்தொண்டர்கள், அவாவி ஓடி அலையும் மனித குலத்தின் தேவைகளை நிறைவு செய்ய வந்தவர்களாவர். துக்காராம் போன்ற திருத்தொண்டர்களின் மன உளைச்சல்களும், உணர்ச்சி

யனுபவங்களும், சொற்களின் துணைகொண்டு அற்புதமான கவிதைகளாக மலருகின்றன. அத்தகு கவிதைகள்தாம் சோர்வுற்றுக் கலங்கி நிற்கும் மனித குலத்திற்கு, சோர்வு நீங்கி எழுச்சி பெற்றுக் கிளர்ச்சியுறுவதற்கான உந்து சக்திகளாக உள்ளன. தளர்வுறும் அகமனம், கிளர்வுற அமைந்த தூண்டுதல்களே அக் கவிதைகள். இலட்சிய நோக்குடைய சமூக அமைப்புகளில் வாழ்ந்துகொண்டிருக்கும் மனித குலத்திற்கான தேவைகளை நிறைவு செய்ய வந்தவைபோல் திருத்தொண்டர்தம் எழுத்துகள் அமைந்திருப்பதால், அவ்வெழுத்துகளுக்குரியவராகிய அத் தொண்டர்கள் அத்தகைய சமூகத்தில் மதிக்கப்பெறுகின்றனர்.

துக்காராம் ஒரு கவிஞர் என்ற அளவில் தன்னேரில்லாத மதிப்பினைப் பெற்றவர். பல்வேறு வகைப்பட்ட சூழல்களுக்கு ஆட்பட்டுத் தவிக்கும் மனித வாழ்க்கையின் அனைத்து நிலைகளையும் உருக்கொடுத்து விளக்கிக் காட்டவல்ல திறமையும் அவரிடம் இருப்பதை மக்கள் காண்கின்றனர். வாழ்க்கை விளக்கங்களாக அவர் கவிதைகள் அமைந்திருக்கும் அழகையும் மக்கள் காண்கின்றனர். பொதுவாக அருட்கவிகள் என்போர், திருத்தொண்டும் கவிபாடும் ஆற்றலும் வாய்க்கப் பெற்றவராவர்; அருட்கவிகள் இந்த நாட்டில் அளவுக்கு மீறிப் புகழப்படுகின்றனர். அவர்கள் அவ்வாறு அளவுக்கு மீறிப் புகழப்படுவதற்கான காரணம், அவர்களிடமுள்ள இலக்கியத் திறமை குறித்தது அல்ல என்றும், சமய உணர்வு காரணமாகவே அவர்கள் அவ்வாறு அளவுக்கு மீறிப் புகழப்படுகின்றனர் என்றும் ஒரு கருத்து பரவலாக உள்ளது. இக்கருத்து ஒருவகையில் மெய்ம்மையாகவும் இருக்கலாம். இக்கருத்து எல்லா அருட்கவிகளுக்கும் பொருந்தாது. மக்கள் நினைவிலிருந்து விலகிப்போயிருக்கும் ஒருசில அருட்கவிஞர்களைப் பொறுத்தவரை அக்கருத்து உண்மையாக இருக்கலாம். ஆனால், துக்காராம் போன்ற அருட்கவிஞரைப் பொறுத்தவரை அக்கருத்து தவறானதேயாகும். அவர் ஓர் அருளாளர்—திருத்தொண்டர் என்பதற்காக மட்டும் மக்களின் நெஞ்சங்களில் பசுமையாக இடம் பெற்றுவிடவில்லை. அவரிடமுள்ள கவித்துவப் பெருமையினாலேயே அவர் மக்களின் நெஞ்சங்களில் நீடித்து வாழ்கிறார். அவர் படைத்துத் தந்திருக்கும் தன்னேரில்லா இலக்கியங்களே, மக்கள் அவரை எப்பொழுதும் நினைவில் வைத்துப் போற்றுவதற்குரிய உண்மையான காரணங்களாகும்.

துக்காராம்காலத்திற்கு முற்பட்டகாலத்தைச் சார்ந்தவர்கள், ஞானேசுவரி, தாசபோதர் (Dosbodth) சிரீதர் (Shridhar) முதலான இலக்கியவாதிகள்; பன்னிரண்டாம் நூற்றாண்டு தொடங்கி வரும் காலப் பகுதியைச் சார்ந்தவர்கள். அன்னார்

பாடல்களைக் காட்டிலும் சிறப்புற்று விளங்குகின்றன துக்காராம் பாடல்கள். அவருக்கு முற்பட்டுள்ள கடந்த காலத்திய பாடல்களை யெல்லாம் விஞ்சிய நிலையில் துக்காராம் பாடல்கள் இருப்பதற் கான காரணம் யாது? இத்தகைய வினாவை எழுப்பிக்கொண்டு துக்காராமின் பாடல்களை அணுகினால், அவர் பாடல்களின் சிறப்பையும், அவரது சிறப்பையும் ஒருசேரக் காணலாம். அனு தாபத்தோடும், பரிவோடும், அன்புள்ளத்தோடும் உலகைக் கூர்ந்து கவனித்து வெளியிட்ட வெளியீடுகளாகவே அவர் கவிதைகள் இருப்பதைக் காணலாம். ஏனைய பக்திப் பாவலர்களிடம் காண முடியாத ஓர் மனித நேயம் அவரிடம் உள்ளது; அவரது மனித நேயம் அவர் பாக்களில் இழையோடி நிற்பதை யாவரும் காணலாம். மனிதாபிமானத்தோடு உலகியல் நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனித்து, அவற்றை எளிய முறையில் யாவரும் புரிந்துகொள்ளத்தக்க விதத் தில் கவிதைகளாக வெளிப்படுத்திக்காட்டும் ஆற்றல் துக்காரா மிடம் இருந்தது. சாதாரணமான வாசகர்களை எப்போதும் எட்டவே நிறுத்தி வைக்கத்தக்க அரிய சொல்லாட்சிகள் அவர் பாடல்களில் இல்லை; சமக்கிருதச் சொற்களைக் கலந்து எழுதும் வீறுயர்ந்த அலங்காரமான நடையும் அவரிடம் இல்லை; கல்வியில் வல்ல பண்டிதர்களே அறியத்தக்க கவிதைப் போக்கு துக்காரா மிடம் இருந்ததேயில்லை; மாறாக, மிக மிகச் சாமானியர்களையும் கவரத்தக்க எளிமை அவர் பாடல்களில் கொலுவீற்றிருந்தது; தாழ்ந்த சாதியில் பிறந்தோரிடம் அவருக்கிருந்த பரிவு அவரது இலக்கிய வாயிலாக வெளிப்பட்டது. அவரிடமிருந்த அப்பரிவுதான் அவர் இலக்கிய உலகில் பெரும்புகழ் ஈட்டுவதற்குக் காரணமாயும் அமைந்தது. பொதுமக்களோடு அவருக்கிருந்த நெருக்கமான உறவு அவர் கவிதைகளில் வெளிப்படுத்தப்பெற்றது. மானுடத் தின்மீது அவருக்கிருந்த எல்லையற்ற கருணையும் பரிவும் ஈடுபாடும் மூதுரைபோன்ற அமைப்புடைய அவர் கவிதைகளில் வெளிப் பட்டன. அவர் கவிதைகள் பழமொழிபோல் அமைந்தன. தாழ்ந்த குலத்தில் பிறந்து வாழ்வோரின் துயரமும், சமத்துவத்தை நேசிப் பவரின் அளவுக்கு மீறிய கொதிப்பும் இணைந்து அவரிடம் காணப் பெற்றதால், அவர் மக்கள் கவிஞரானார்.

துக்காராம் இல்லற வாழ்க்கையை வெறுத்து எழுதினாரில்லை. உலகியல் வாழ்க்கையை அவர் எப்பொழுதும் வெறுத்ததுமில்லை. மாறாக, துன்பங்களுக்கிடையே உழலும் சாதாரண மனிதனின் வாழ்க்கையைக்கூடப் புகழ்ந்தே கூறியுள்ளார். அன்பு பீறிட்டு ஒழுகிப் பரவும் பக்தி வெள்ளத்தில் அனைத்தையும் மூழ்கடித்தார். ‘இவ்வுலக வாழ்க்கை முழுமையும் இன்பமயமானது’ என்பது அவர் கருத்தாகும். அன்பெனும் பிடியுள் அகிலத்தை அடக்கினார். அன்பு நெறியாகிய பக்தி நெறிநின்று அருட்கவிகள் எழுதியதால்

அவருக்கு இவ்வுலகம் அன்புமயமாய்க் காட்சியளித்தது. 'மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்ற கோட்பாட்டாளராகி, வாழ்க்கையை நேசித்தே அவர் எழுதினார். 'அன்பின் வழியது உயிர்நிலை' என்று அறிந்து எழுதிய அருட்கவிஞர் துக்காராம்.

துக்காராமின் நோக்கும் போக்கும் எழுத்துகளாய் மலர்ந்தன. மலர்ந்த அவரது எழுத்துகள் அவருக்குமுன் மராத்தி இலக்கியத்தில் ஆழமாக வேரூன்றி விழுதுவிட்டிருந்த பண்டித மரபைச் சிதைத்துத் தகர்த்தன. துக்காராமின் மனிதநேயப் படைப்புகளில் மகளிரும் தாழ்ந்தகுடிப் பிறப்பினரும் தகுதி வாய்ந்த இடங்களைப் பெற்றுச் சிறப்புற்றனர். சாதிப் பாகுபாட்டால் தாழ்வுற்று இருந்த குடியினரும், சமுதாய நிலையில் அடக்கி வைக்கப் பெற்றிருந்த மகளிரும், அவரது படைப்புகளில் சமூக மதிப்பைப் பெற்றனர்.

மகானுபாவர், நாதர், சைதன்யர் மற்றும் அருட்கவிஞர்களாகிய நாமதேவர், ஞானதேவர், ஏகநாதர் ஆகியோரும், இவர்களோடுகூட, பல்வேறு வகுப்பினரிடையே பிறந்து வளர்ந்த கணிசமான கூட்டத்தினருமாகச் சேர்ந்து தோற்றுவிக்கப் பெற்றதே ''சமத்துவம் சகோதரத்துவம்'' என்ற கோட்பாடாகும். துக்காராமின் சமகாலத்தவர், அருட்கவிஞர் பகினாபாய் (Bahinabai) என்ற அம்மையாராவார். அந்த அம்மையார் துக்கராமைக் குறித்து எழுதும்போது,

> '' வரகரி இயக்கத்தை—அப்பக்தி மரபை, ஒரு கோயிலாகக் கொண்டால், அக்கோயிலின் கோபுரமாக—தூபியாக, விளங்கியவர் துக்காராம்'' —என்கிறார்!

வரகரி இயக்கம், பதின்மூன்றாம் நூற்றாண்டில் நிறுவப் பெற்றது. அந்த இயக்கம் துக்காராமாலும், பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த வேறு பலராலும் வலுப்படுத்தப் பெற்றது. பல்வேறு சாதியினர் மட்டுமல்லாது இசுலாமியர்களும் அதில் இடம்பெற்றனர். அனைவரையும் அரவணைத்துக்கொண்டு அவ்வியக்கம் வளர்ந்தது. எக்குலத்தவராயினும், எச்சமயத்தவராயினும், வரகரி இயக்கத்திற்குள் வந்துவிட்டால், சமமாகவே மதிக்கப் பெற்றனர். அவ்வியக்கத்தின் உயிர்மூச்சான விசாலமான பரிவுணர்ச்சி,—ஆன்ம நேய ஒருமைப்பாடு, நடைமுறையில் அன்றிருந்த பிராமணீயப் போக்கைத் தோல்வியுறச் செய்தது. அவ்வியக்கத்தின் செல்வாக்கு வளர வளர, சமுதாயத்தில் தீவிரமாக இருந்த சாதிப் பாகுபாடுகள் தகர்ந்தன; மகளிர் நிலையும் உயர்ந்தது.

சுருங்கக் கூறுவதாயின், துக்காராம் மராத்தியத் திருத் தொண்டர்கள் கட்டிக் காத்த பக்திநெறிக்குரிய சார்பாளராகத் திகழ்ந்தார். அத்திருக்கூட்ட மரபின் சார்பாளராகத் திகழ்ந்த தால், அவருடைய பண்ணூர்ந்த பாசுரங்கள் ஆன்மீகப் பேற்றுக் கான அடையாளங்களாகக் கருதிப் போற்றப் பெற்றன. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், தியாசபிகளாலும் கிறித்தவர்களாலும் மற்றும் 'பிரார்த்தனை சமாஜிகள்' என்று அழைக்கப்பெறும் வழிபாட்டுக் குழுவினராலுங்கூட, அவருடைய பாடல்கள் ஆன்மீகப் பேற்றுக்கான அடையாளங்களாகக் கருதப் பெற்றன. துக்காராம் தனி மனிதர் மட்டுமல்லர்; ஒரு திருக் கூட்டத்தின் பிரதிநிதி. சமய உலகில் துக்காராமிற்கு நிலையான ஓரிடம் உண்டு; அதற்கான காரணம், அவர் வெளிப்படுத்திய ஆன்ம ஞானமேயாகும். அவர் காட்டிய ஆன்ம ஞானம் மெய் யானது. கள்ளங்கபடமின்றி மெய்யான ஆர்வத்தோடு நாடி உழைப்போர் அனைவரும் அவர் பெற்ற ஆன்ம அனுபவத்தைப் பெறலாம்; மெய்ம்மையானதும், உண்மையாகப் பெற விரும்பி உழைப்போர் யாவரும் அடையக்கூடியதுமான ஆன்ம அனுப வத்தையே அவர் வெளிப்படுத்தியுள்ளதால், சமய உலகில் நிலை யான ஓரிடத்தை அவர் பெற்றார். துக்காராமின் பண்ணூர்ந்த பக்திப் பாக்கள், அறிவார்ந்த தத்துவப் போக்குகளை வற்புறுத்த வில்லை; சமயத்தின் ஒரு பகுதியான ஆன்ம வளர்ச்சிக்கான படி நிலைகளையே வற்புறுத்துகின்றன. அறிவாற்றல் மிக்க கருத்துகளை யும், எளிதில் யாவரும் புரிந்துகொள்ள இயலாத தத்துவக் கருத்து களையும் போக்குகளையும் எதிர்த்து, எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடியதும் உண்மையாக விரும்பி உழைப்போர் அடையத் தக்கதுமான பல்வேறு படிநிலைகளையே வற்புறுத்திப் பாடியுள்ளார். பார்ப்பனச் சாதியில் பிறந்து வளர்ந்து, சில காலத்திற்குப் பின்பு கிறித்துவ நெறியைத் தழுவிப் பெருமை பெற்றவரும், கவிஞரும் ஆன, திருத்தகு. என். வி. திலக் (1865–1919) என்பவர்,

'' துக்காராம் கட்டிய பக்திப் பாலத்தின்மீது நடந்து சென்றே, கிறித்துவின் பாதங்களைச் சென்றடைந்தேன்'' —என்கிறார்.

வாசகர்க்கு ஒரு வார்த்தை

இந்நூலாசிரியனாகிய நான் தெரிவிக்க விரும்புவது: குறிப்பாக, முழுமையும் மதச் சார்பின்றி வாழும் மக்களுக்கு இந்நூலில் விளங்கவியலாப் புதிர்கள் இருக்கக்கூடும். அத்தகைய வாசகர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம், அவர்களின் ஐயங் களுக்கான தெளிவுதரும் விடைகளை வேறெங்காகிலும் தேடிக் கண்டுகொள்ள வேண்டும் என்பதுதான். ஏனென்றால், இந்த நூல்

ஓர் வரையறைக்குட்பட்ட நோக்கத்தில் எழுதப் பெற்றது; எல்லை வரையறை செய்துகொண்டு எழுதப் பெற்ற இந்த நூலில், புதிர்களுக்கான விளக்கங்களைப் பெற இயலாது; மேலும், இந்த நூலைப் படிப்போர் 17ஆம் நூற்றாண்டில் 'தெகு' என்ற பெயர் பெற்ற ஒரு சிறிய கிராமத்தின் வாழ்க்கையைக் கற்பனை செய்துகொள்ள வேண்டும். அன்றைய கால உணர்வோடு அன்றைய சூழலைப் புரிந்துகொண்டு நூலைப் படிப்பவர்கள் இருக்கவேண்டும் என்பதே ஆசிரியரின் உண்மையான விருப்பம். நூலில் கொடுக்கப் பெற்றுள்ள துக்காராமின் பாடல்கள் அனைத்தையும் ஆங்கிலத்திற்கு மொழி பெயர்ப்புச் செய்தவர் ஆசிரியரே; மொழிபெயர்ப்பில் கவிதையின் முழுப் பொருளையும் கொண்டு வந்து தரவியலாது என்ற குறை பாட்டை உணர்ந்துகொண்டுதான் ஆசிரியர் இதனைச் செய்திருக்கிறார்.

2. காலச் சூழல்

பதின்மூன்ரும் நூற்ருண்டு முதற்கொண்டு மகாராஷ்டிரப் பகுதியில் நிலையானதும் அமைதியானதுமான ஆட்சி அரசியல் நடைபெறவில்லை. சமயத் துறையில் சகிப்புத் தன்மையற்ற போக்குகளும், ஆட்சி அரசியலில் உட்சூழ்ச்சிகளும் நிறைந்ததாக மூன்று நூற்ருண்டுக் காலப் பகுதி அமைந்தது. அக்காலத்திய பேரதிர்ச்சி தரத்தக்க கொடுமைகளைப் பற்றிய நீடித்த நினைவுத் தடங்களை, அக்காலப் பகுதி ஏற்படுத்திவிட்டுப் போயிருந்தது. துக்காராம் வாழ்ந்த காலத்தில்—அதாவது கி.பி. 1608 முதல் 1650 வரையில், தக்காணப் பகுதி முழுவதும் பெருங்குழப்பத்தில் இருந்தது. தங்கள் தனித் தன்மையை நிலைநாட்டுவதற்காக மராட்டியர்களை முழு மூச்சுடன் போராடத் தூண்டிய காலமும் அந்தக் காலம் தான். மிகச் சிறிய இந்து அரசுக்கான அடித்தளம், சிவாஜியால் இடப்பெற்றதும் அந்தக் காலத்தில்தான். அப்போது அடித்தளம் போட்ட இந்துச் சிற்றரசுதான் பிற்காலத்தில் பேரரசாக உருப் பெற்றுச் செழித்தது. கி.பி. 1565இல், தெற்கேயிருந்த ஒரே ஒரு இந்து அரசும், அதாவது தெற்கே ஆண்டு கொண்டிருந்த விசய நகர அரசும், பாமினியர்களிடம் ஆட்சியுரிமையை இழந்து நின்றது. அந்தக் காலக் கட்டத்தில், வடக்கில் திசை எட்டும் பரவிப் பேரிடர் தருவதாக இருந்த முகலாயப் பேரரசு தெற்கு நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது. தெற்கே அகமதுநகர், பிஜப்பூர், கோல்கொண்டா, பீடார் (Bidar), பெரார் (Berar) ஆகிய இடங்களிலிருந்து ஆண்டு கொண்டிருந்த பாமினி மரபினர், முகலாயப் பேரரசு தெற்கு நோக்கி முன்னேறி வருவதற்குப் பெருந்தடையாக இருந்தனர். அவர்கள் முகலாயப் பேரரசை அச்சமின்றி எதிர்த்துப் போரிட்டனர். பாதுகாப்புக் கருதி அவர்கள் முகலாயப் பேரரசை எதிர்த்துப் போரிட்டதுபோல, அப்பாமினி மரபினர் தங்களுக்குள்ளும் ஒருவருக்கொருவர் போரிட்டுக்கொண்டனர். அகமதுநகர் ஆட்சியாளர்களுக்கும் முகலாயர்களுக்குமிடையே இடையருத போர் நிகழ்ந்தது. அவ்விரு ஆட்சியாளர்களுக்கும் இடையே நடந்த இடையருச் சண்டை காரணமாக, துக்காராம் அவர்களின் கிராமத்தைச் சுற்றியிருந்த நாட்டுப்புறப் பகுதிகள் எல்லாம் பாழ்பட்டு நின்றன; அப்பகுதிகளிலிருந்த சொத்துகளும் அடிக்கடி சூறையாடப் பெற்றன.

தபி நதி வரையிலான வடக்குப் பகுதி முழுவதும் முகலாயர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த அந்தக் காலப் பகுதியில்தான்

துக்காராம் பிறந்தார் (கி.பி. 1608இல், அவர் பிறந்தார்). பீடார், பெரார் ஆகிய இடங்களிலிருந்து ஆட்சி நடத்திக்கொண்டிருந்த பாமினி மரபினரின் ஆட்சிப் பகுதிகள் ஏற்கெனவே முகலாயப் பேரரசோடு சேர்ந்துவிட்ட காலம் அக்காலம். 1636இல் ஜஹாங்கீரும் ஷாஜஹானும் அகமதுநகர் அரசை வென்று கைப்பற்றிக் கொண்டனர்; அகமதுநகர்மீது அவர்கள் நடத்திய போர், மகாராஷ்டிரத்தின் வடக்குப் பகுதியில் நிலவிய அமைதி அனைத்தையும் அழித்தது. அப்பொழுது முகலாயர்களின் தெற்கு நோக்கிய முன்னேற்றத்தைத் தடைசெய்து கொண்டிருந்தவை பிஜப்பூர் கோல்கொண்டா அரசுகள் மட்டுமே; மகாராஷ்டிரத்தின் தென்பகுதி போர்க்களமாக இருந்தது. அகமதுநகர் அழிவிற்குப் பின்பு, முகலாயர்களும் பிஜப்பூர் ஆட்சியாளர்களும் அதனைப் பங்கு போட்டுப் பிரித்துக்கொண்டனர். அவ்வாறு பங்கு போட்டதில் புனேயைச் சுற்றியுள்ள நிலப்பரப்பு பிஜப்பூர் மன்னர்களின் பங்குக்குப் போய்விட்டது. பிஜப்பூர் ஆட்சியாளர் வசம் சென்ற புனேயைச் சுற்றியுள்ள அந்தப் பகுதியில்தான், துக்காராம் பிறந்தார். துக்காராம் பிறந்த நிலப்பகுதி, பீமா, நீரா என்ற இரு ஆறுகளுக்கும் இடைப்பட்ட பகுதியாகும்.

தெற்குப் பகுதியில் முசுலீம் அரசு வலிமை பெறுவதற்குக் காரணமாகவும், அவர்தம் வலிமைக்கு மூல ஊற்றாகவும் இருந்தவர்கள் மராட்டிய நிலப் பண்ணையார்களே. மகாராஷ்டிரப் பகுதி முழுவதும் முசுலீம் பேரரசின் தன்னாட்சிக்கு உட்பட்டிருந்தபோதிலும், அப்பகுதியின் வருவாய் இனங்களை மேற்பார்வையிடும் பொறுப்பு முழுவதும் அப்பண்ணையார்களிடமே இருந்தது. மேலும் அப்பண்ணையார்கள் மொழியே, அரண்மனை மொழியாகவும் இருந்தது. வெளியேயிருந்து வந்த அந்த முசுலீம் ஆட்சியாளர்களின் மூர்க்கத்தனமான வன்முறைப் போக்கைத் தணிப்பதிலும் அப்பண்ணையார்கள் வெற்றி பெற்றே இருந்தனர்.

கோல்கொண்டா, பிஜப்பூர் பகுதியை ஆண்டு வந்தவர்கள் முகலாயர்களுக்கு இணையானவர்கள் மட்டுமல்லர்; அவர்கள் முகலாயர்களையும் விஞ்சியவர்கள் என்பதை மெய்ப்பித்துக் காட்டினர். என்றாலும், கடைசியில் கோல்கொண்டா முகலாயர்களின் தாக்குதலுக்குத் தாங்கமாட்டாது வீழ்ச்சியடைந்தது. வீழ்ச்சியடைந்த நிலையில் ஷாஜகானுக்குத் திறை செலுத்தவும் ஒத்துக்கொண்டது. பிஜப்பூர் ஒன்றுதான் வீழ்ச்சியடையாமல் எஞ்சியிருந்தது. முகலாயர்கள் அதன்மீது குறிவைத்துக் கொண்டேயிருந்தனர். 1646இல் தொடங்கிய சிவாஜி மன்னர் ஆட்சிக்குப் பின்பும், அப்பிஜப்பூர் ஆட்சிக்குட்பட்ட பகுதி போர் நடவடிக்கைக்கான அரங்கமாகவே இருந்தது. அந்த அரங்கில் தொடர்ந்து

மாறி மாறிப் போர் நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டே யிருந்தன. மராட்டியர்களுக்கும் பிஜப்பூர் ஆட்சியாளர்களுக்கும் ஒரு முறை போர் நடக்கும்; பிஜப்பூர் ஆட்சியாளர்கள் முகலாயர்களுடன் போர் நடத்துவர்; சிலபொழுது மராட்டியர்களுக்கும் முகலாயர்களுக்கும் போர் நடக்கும்; இவ்வாறு நடைபெற்ற ஓயாத போர் நடவடிக்கைகளுக்கான களமாகவே அப்பகுதி விளங்கியது.

பிஜப்பூர் ஆட்சியாளர்களும், வடக்கிருந்து வந்த முகலாயர்களும் இசுலாமிய சமயத்தைச் சேர்ந்தவர்களாயினும், அவர்களுக்குள்ளே பிரிவினை இருந்தது. வடக்கிருந்து வந்த முகலாயர்கள் இசுலாமிய சமயத்தின் கிளையான 'ஷன்னிஸ்' (Sunnis) பிரிவைச் சார்ந்தவர்கள். தெற்கே ஆண்டுகொண்டிருந்தவர்களோ "ஷியா" (Shias) என்று அழைக்கப்பெறும் இசுலாமியக் கிளையைச் சார்ந்தவர்கள். எனவே, அவ்விரு ஆட்சியாளர்களுக்குமிடையே நடந்த போரானது, அரசியல் சார்புடையது மட்டுமல்ல; சமயப் பிரிவுகளுக்கிடையே நடந்த சண்டையாகவும் அவர்களது போர் நடவடிக்கைகளைக் கொள்ளலாம். அவ்விரு சாராரும் தம்தம் முரட்டுத்தனமான ஆற்றலை அடிக்கடி வெளிப்படுத்திக்கொள்ளும் விதத்தில் போர் நிகழ்ச்சிகளில் ஈடுபட்டனர். அப்போர்களின் விளைவாக மராட்டிய தேசத்தின் பொருளாதார நிலை முற்றிலும் சிதைவுற்றது; எல்லையோரப் பகுதிகளில் அடிக்கடி போர்கள் நிகழ்ந்துகொண்டிருந்ததால், வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டு அமைதியாக வாழ்ந்துகொண்டிருந்த நாட்டுப்புற மக்களும் பாதிக்கப் பெற்றனர். அமைதியாக வாழ்ந்துகொண்டிருந்த அவர்களிடமும் போருக்கான வீர உணர்ச்சியைத் தூண்டிவிட்டன. ஆகவே, அவர்களின் அமைதியும் குலைந்தது. சமய வெறிகொண்ட முசுலீம் ஆட்சியாளர்கள் இந்து மக்களைச் சமுதாய நிலையில் வலுவற்றுப் போகுமாறு செய்தனர்; வலுவற்றுப்போன நிலையில் இந்து மக்கள் எல்லாவகையான ஆதிக்க சக்திகளுக்கும் பணிந்து போகும் நிலைக்கு ஆளாகிவிட்டனர்.

போர்களின் காரணமாக ஆட்சி அரசியலில் குழப்பம் புகுந்தது. குழப்பம் புகுந்ததால் நாட்டில் மிகப் பெரிய சீர்குலைவு ஏற்பட்டது. சீர்குலைவுமிக்க சூழலில் நல்ல பல இலக்கியங்கள் தோன்றுமற் போனதில் வியப்பில்லை. பதின்மூன்றும் நூற்றாண்டிற்குப் பின்பு, மகாராஷ்டிரத்தில் மிகப் பெரிய இலக்கியங்கள் என்று சொல்லத்தக்கவை எவையும் தோன்றிவிடவில்லை. போர்களும், குழப்பங்களும், சீர்குலைவுகளும் மலிந்த சூழலில் பெரிய இலக்கியங்கள் தோன்றுமற் போனதில் வியப்பொன்றுமில்லை. மராத்தி இலக்கியத்தைப் பொறுத்தவரையில், பதினான்கு, பதினைந்து, பதினாறும் நூற்றாண்டுகள் வறண்ட காலமேயாகும். மராத்தி

இலக்கியம், அந்த மூன்று நூற்றூண்டுக் காலப் பகுதியில், ஏகநாதர் என்ற புகழ்வாய்ந்த பெரும்புலவர் ஒருவரைத் தவிர வேறு எவரையும் பெற்றுவிடவில்லை; ஏகநாதர் ஒருவர்தான் விதிவிலக்கான பெருங்கவிஞராக இருந்தவர். அவர் வாழ்ந்த காலம் கி.பி. 1548 முதல் 1599 வரையிலாகும்.

மனிதத் தன்மைக்கு மதிப்புக் கொடுக்காத காலக்கட்டத்தில் தான் துக்காராம் போன்ற திருத்தொண்டர்கள் வாழவேண்டியிருந்தது; புறச்சூழலைப் புறங்கண்டு வாழவேண்டிய நிலையில் அவர்கள் இருந்தனர். அதோடு மட்டுமின்றி, கடவுட் பேரரசாகக் கருதத்தக்க பக்தி இயக்கத்தைக் கட்டிக் காக்கவேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு இருந்தது. அக்காலச் சூழலில் இந்து மக்களிடையே தோன்றிய சமய மறுமலர்ச்சிக்கு, அரசியல் பின்னணியும் இருந்தது. சமய மறுமலர்ச்சி இயக்கம் மெல்ல மெல்ல உருப் பெற்றது. வன்முறைக்கு இடமில்லாத நிலையில் அவ்வியக்கம் வலுப்பெற்று வளர்ந்துகொண்டிருந்தது; அந்த இயக்கம் சமயப் பொறையைத் தோற்றுவித்தது. சமயப் பொறைக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்தார் என்று சிவாஜி மன்னரைப் புகழ்கிறோமே, அவருக்கு அத்தகைய பாதிப்பைத் தந்தது இவ்வியக்கம் ஆகும். சமயப்பொறை இயக்கத்தின் பாதிப்புக்கு ஆளான சிவாஜி மன்னர், தன் இலட்சியத்தை அடைய வன்முறையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவில்லை. அக்காலத்தில் பரவலாக வளர்ந்துகொண்டிருந்த சமய மறுமலர்ச்சிக்குரிய சின்னமாக மன்னர் சிவாஜி விளங்கினர். அம்மறுமலர்ச்சி இயக்கத்தின் பிரதிநிதியாகவே சிவாஜி விளங்கினர்.

சமுதாய அளவிலும் அரசியல் அளவிலும், மாற்றங்கள் நிகழ்வதற்குக் காரணமாய் இருந்தது தற்காலத்தில் உள்ள மறுமலர்ச்சி இயக்கமேயாகும். நவீன இந்தியாவின் இந்த மறுமலர்ச்சி இயக்கத்திற்குக் காரணமாய் அமைந்தவர்கள் பலருண்டு. துக்காராமுக்கும், அவரைப் போன்ற மற்றும் பலருக்கும் இந்த மறுமலர்ச்சி இயக்கத்தில் நேரடியான பங்கு இல்லாவிட்டாலும், இது போன்ற இயக்கம் வளர்வதற்கு அவர்களின் மறைமுகமான செல்வாக்கும் உண்டு. சிவாஜி மன்னர் அரசியல் வானில் தலைக்காட்டிய அந்தக் காலப் பகுதியில், இந்தியாவின் மேற்குப் பகுதி முகம்மதியர்களின் பிடியில் இருந்தது. முகம்மதியர்கள் ஆட்சியாளர்களாய் இருந்தபோதிலும், அவர்கள் அந்நியர்களாகவும், அழிக்க வந்தவர்களாகவும் கருதப்பெற்றனர். அப்பொழுது, சமயப் பெரியார்களின் போதனைகள் நாட்டுப்புற மக்களிடையே சமய மறுமலர்ச்சி ஏற்படுவதற்குத் துணைபுரிந்தன. அப்பெரியார்களின் போதனைகள், நாட்டுப்புற மக்கள் தங்களுடைய பழமையான சமயத்தைப் பற்றிப் பெருமையாக நினைத்துப் பார்க்குமளவிற்கு, அவர்களிடம்

விழிப்புணர்ச்சியைத் தோற்றுவித்தன. தொன்மையான சமயத்திற்கு நாம் சொந்தக்காரர்கள் என்று பெருமைப்படும் நிலையை மக்கள் உள்ளத்தில், அப்பெரியார்கள் உண்டாக்கினர். இந்துக்கள் அனைவரையும் உள்ளடக்கிய ஓர் இயக்கம்,—அதாவது, இந்தியா இந்தியருக்கே என்ற இயக்கம், மெல்ல மெல்ல உருப்பெற்று வளர்ந்தது. இந்து மக்கள் தழுவிய அவ்வியக்கம் உருப்பெற்று வளர்வதற்குப் பேருதவியாக இருந்தவர்கள் அத்தகைய பெரியார்கள்தாம். அவர்களெல்லோரும் சமயஞ் சார்ந்த பாடல்களைப் பாடி, சமய மறுமலர்ச்சியை உருவாக்கத் துணை நின்ற அருட்கவிகள் ஆவார்கள். இந்து மக்களுக்கென எழுந்த அந்த இயக்க வரலாற்றில் அந்த அருட்கவிஞர்களுக்குத் தனியான ஓர் இடம் உண்டு. அவர்கள் சமய மறுமலர்ச்சிக்கு உழைத்தவர்கள். அதோடு கூடப் பாசுரங்கள் பலவற்றைப் பாடி, மராத்தி மொழியின் வளர்ச்சிக்கும் ஆக்கப் பணிகள் செய்தனர். மராத்தி மொழியின் படிப்படியான வளர்ச்சியில், அந்த அருட்கவிஞர்களுக்கு மிகப் பெரிய அளவிலான பங்குண்டு என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

மகாராஷ்டிரப் பகுதியில் மாறுதலை ஏற்படுத்தக்கூடிய எத்தனையோ சக்திகள் தலைதூக்கின; அச்சக்திகளையெல்லாம் புறங்கண்டு வாழக்கூடிய பழமையான சமூக அமைப்புகள் அங்கு நிலவின; எதிர்ப்புச் சக்திகளையெல்லாம் முறியடித்து வாழக்கூடிய ஆற்றலை அப்பழமையான சமூக அமைப்புகள் பெற்றிருந்தன. தாக்குப் பிடித்து வாழக்கூடிய அச்சமூக அமைப்புகளைக் குறித்து எம். ஜி. இரானடே என்பார் பின்வருமாறு எழுதியுள்ளார்: "அத்தகைய சமூக அமைப்புகளில், கிராமங்களிடையே இருந்த அமைப்புகள் குறிப்பிடத்தக்கவையாகும். கிராம மக்களின் நலன்களைக் கவனிக்கும் கிராமியக் குழுக்களைக் கொண்ட ஓர் அமைப்பு இருந்தது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அத்தகையதோர் அமைப்பு இருந்ததால்தான், அந்நியத் தலையீடுகளையெல்லாம் வென்று புறங்கண்டு வாழ முடிந்தது. நாட்டின் பிற பகுதிகளுக்குக் கேடாக வந்த அந்நியத் தலையீடுகள், மராட்டியத்தைப் பாதிக்க முடியாமல் செயலிழந்து போயின; அதற்குக் காரணம் மகாராஷ்டிரத்தில் இருந்த கிராமியக் குழு அமைப்புமுறைதான். பஞ்சாயத்து அமைப்புமுறை போன்றது, அக்கிராமியக் குழு அமைப்புமுறையாகும். அம்முறை தற்காலம் வரையிலும் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தது. அரசின் உயர்ந்த நோக்கங்களுக்குத் துணைபோகும் பாணியில் அரசுக்குச் சார்பாக இருந்து அக்குழு முறை செயல்பட்டு வந்தது. நாட்டின் பிறபகுதிகளைப் பார்க்கும் போது, நிலவுரிமைக் கொள்கைகளில், சமத்துவமும் ஜனநாயகப் பாங்கும் நிலவுவதை மகாராஷ்டிரத்தில் காணலாம். மக்களாட்சிப்

பாங்கும் சரிநிகர் சமான உணர்ச்சியும் நிலவுகின்ற தனித்தன்மை காரணமாக, மகாராஷ்டிர மக்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்வதும், தன்னுரிமையோடு செயல்படுவதுமான பழக்கங்களை விடாது வைத்துப் போற்றி வந்துள்ளனர். சமுதாயக் கட்டமைப்பில் சாதி அமைப்புகளின் விளைவுகளைப் பற்றி, எம். ஜி. இரானடே என்ற அறிஞர், மராத்திய ஆட்சியின் எழுச்சி என்ற நூலில் இரண்டாவது இயலில் குறிப்பிடுவதாவது[1]: —"சாதிகளில் உட்பிரிவுகள் உண்டு; அவைகளுக்கிடையே ஒருவகையான சகிப்புத்தன்மையிருந்தது; சாதிப் பிரிவுகளைப் பற்றிக் கவலைப் படாமல் செயல்படும் போக்கு இருந்தது; பிரிவுகள் இருப்பினும், பிரிவுகளைப் பற்றிச் சட்டைசெய்யாமல் சகிப்புத்தன்மையோடு செயல்படுவது இந்தப் பகுதிக்குரிய தனித்த பண்புக்கூறுகும். பிராமணர்களும் பிராமணரல்லாத சூத்திரர்களும் நாட்டில் வேறு எங்குமில்லாத அளவிற்கு, இப்பகுதியில்தான் ஒருவருக்கொருவர் கலந்து பழகி நட்புறவுடன் சரிசம நிலையில் வாழ்ந்தார்கள் எனலாம். அவ்வாறு அவர்கள் வாழ்வதற்குரிய சூழல் அங்கு ஏற்பட்டிருந்தது. வைணவ சமயத்தை வளர்த்த திருத்தொண்டர்களின் செல்வாக்கால், சூத்திரர்கள் என்று அழைக்கப்பெற்ற அம் மக்கள் தங்களின் வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொள்ள முடிந்தது. பழமையான நூல்களில் (சாத்திர நூல்களில்) அச் சூத்திரர்களுக்குச் சமூக நிலையில் தாழ்ந்த இடமே ஒதுக்கப் பெற்றிருந்தது; வைணவத் திருத்தொண்டர்களின் இயக்கத்தில் சேர்ந்து தங்களை உயர்த்திக்கொள்ள முடிந்தது. தாங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்ட செயல்களுக்கேற்பத் தம்மைச் சமூக நிலையில் உயர்த்திக்கொண்டார்கள். போர்த்தொழிலை மேற்கொண்டவர்கள் க்ஷத்திரியர்களானார்கள்; அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டுழைத்தவர்கள் வைசியர்களானார்கள். இவ்வாறு, வெவ்வேறு பணிகளில் ஈடுபட்டுழைத்த சூத்திரர்கள் தாம் தேர்ந்தெடுத்துக் கொண்ட செயல்முறைகளுக்கேற்பத் தம்மை க்ஷத்திரியர்களாகவோ வைசியர்களாகவோ சமூக நிலையில் உயர்த்திக் கொண்டனர். அவ்வாறு அவர்கள் உயர்வுபெற வைணவ இயக்கம் துணைபுரிந்தது. சூத்திரர்களிடமிருந்தும், 'பரியாக்களிடமிருந்தும்'—அதாவது, 'மகர்' என்றழைக்கப்பெறும் தீண்டத்தகாதவர்களிடமிருந்தும்கூட, திருத்தொண்டர்கள் தோன்றினர்; அருட்கவிகள் தோன்றினர். அவ்வாறு அச்சாதிப் பிரிவுகளிலிருந்து தோன்றிய திருத்தொண்டர்களும் அருட்கவிஞர்களும் நாடு முழுவதும் வாழும் மக்களால் உயர்வாக மதிக்கப்பெற்றனர். மக்கள் அத்தொண்டர்களையும் கவிஞர்களையும் தெய்வத்தன்மை வாய்ந்தவர்களாகக் கருதிப் போற்றினர். அவர்களைப் போற்றிய மக்களுள் (உயர்

[1] மராத்திய சக்திகளின் எழுச்சி, இயல் 11.

குலத்தவராகிய) பிராமணர்களும் இருந்தனர். இதனால், அக்காலக்கட்டத்தில் ஏற்றத்தாழ்வுகளை மட்டுப்படுத்தும் ஒரு நிதானப் போக்கு நிலவியது. அப்போக்குக்கு ஆட்பட்ட முகம்மதியர்களுங் கூடத் தங்கள் குருட்டுப்பிடியான வெறிப்போக்கைக் கைவிட்டனர். முகம்மதியர்களின் பெருவிழாக்களுக்கு இந்துக்கள் ஒத்துழைத்தனர். அதுபோல, முசுலீம்களும் இந்துக்களுக்கு விட்டுக்கொடுத்து ஒத்துழைத்தனர். வடக்கத்தியச் செல்வாக்குக்கு ஆட்பட்ட முசுலீம்களைத் தவிர, ஏனைய முசுலீம்கள் அனைவரும் இந்துக்களோடு பொது நிகழ்ச்சிகளில் இணைந்தே செயலாற்றினர்; ஒருவருக்கொருவர் சமுதாய அளவில் விட்டுக்கொடுத்தே வாழ்ந்தனர். இந்து சமயத் திருத்தொண்டர்களோடு முகம்மதியப் பக்கிரிகளும் ஒருங்கு வைத்துப் போற்றப்பெற்றனர்; இந்துக்களாலும் முகம்மதியர்களாலும் ஒன்றுபோலக் கருதி மதிக்கப்பெற்ற திருத்தொண்டர்களும் இருந்தனர். இவ்வாறு ஓர் இணக்கமான சூழல் நிலவியது. சகிப்புத்தன்மையும் நிதானப்போக்கும் கொண்ட சூழல்கள் நூற்றுண்டுக்காலமாகத் தொடர்ந்து வந்துகொண்டிருந்தன. இத்தகைய சூழல்கள்தாம், தேசியப் பண்பாட்டிற்கான நிலையான கூறுகள் பல உருவாவதற்குக் காரணிகளாயின.

திருநூல்கள் அனுமதிக்கும் நான்கு வருணப் பாகுபாட்டைக் கொண்ட சமுதாயமானது, மாற்றம் எதுவரினும் அதற்கு இடங்கொடுக்காத நிலையில் இருந்தது; இந்தச் சமூக அமைப்பானது எந்த வகையான மாற்றத்தையும் ஏற்றுக்கொள்ளாத நிலையில் கடுமையாக இருந்தது. அயலவராக வந்த முசுலீம் ஆட்சியாளர்களுங்கூட அந்தச் சமூகத்தின் பழக்க வழக்கங்களை மதித்து ஒழுகினர்; பல்வேறு சாதியினரின் சமூகக் கட்டுகளையும் அந்நிய ஆட்சியாளர்கள் மதித்து ஒழுகினர். அயலவராக வந்த முசுலீம் ஆட்சியாளர்கள், இந்து மக்களிடையே வெளிப்படையாகவும் அதே நேரத்தில் கடுமையாகவும் இருந்த புரோகித அமைப்புமுறையை ஒத்துக்கொண்டனர். அவர்கள் தேர்வுசெய்து எடுத்துக்கொண்ட நீதிமன்றத்துக்குரிய சட்டத் தொகுப்பும், இந்துக்களின் சமய சமுதாய நடைமுறை விதிகளின் அடிப்படையில் உருவானதுதான். புனித மறைநூல்களால் வரையறுத்து ஒப்புக்கொள்ளப்பெற்ற சமுதாயக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு இந்து மக்கள் வாழ்ந்தனர். அக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு இந்து மக்கள் வாழ்ந்தார்கள் என்பதால்தான், அவர்களை அக்கடுமையான கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கும் பணியில் துக்காராம் போன்றவர்கள் ஈடுபட்டனர். துக்காராமின் எழுத்துகளில் கணிசமான ஒரு பகுதி, சாதி அமைப்பின் தீமைகளைக் குறித்தும், கட்டுப்பாட்டின் கடுமைகளை விமரிசித்தும் எழுதியவைதான். பிராமணர்கள் மட்டுமே கல்வி கற்பதற்குரியவர்கள் என்ற நிலைமை இருந்தது; அப்பிராமணர்கள்

காலப்போக்கில் பகைச் சமய உணர்வுடைய அன்னிய ஆட்சியாளர் களுக்குக் கட்டுப்பட்டு அவர்களைச் சார்ந்து வாழத்தலைப்பட்டனர்; பிராமணர்கள் ஆட்சி அரசியலின் அடிமை முறைக்கு உட்பட்டு வாழலாயினர். மொத்தத்தில் கல்வியறிவுடைய பிராமணர்கள் ஆட்சி அரசியலின் அடிமைகளாயினர்.

தன்னுட்சியுரிமையைக் காலவோட்டத்தில் இழந்தனர். அந்த இழப்பு அதனைத் தொடர்ந்து தன்னைத்தானே திருத்திக் கொள்கிற சமூக அமைப்பையும் இழக்கப் பண்ணியது. சமூக நலங்கருதி யமைந்த பொது நிறுவனங்களில் செயல் முடக்கம் ஏற்பட்டுத் தேக்கநிலை பரவியது. அன்றைய நிலையில் சமுதாயக் கூட்டமைப் பைக் கூறுகூறுக்கிச் சிதைப்பதற்கான கருவியாகச் சாதி அமைப்பு செயல்பட்டது. சமுதாயத்திற்குப் புற்றுநோயாக இருந்த சாதீய அமைப்பை, அக்காலத்தில் வாழ்ந்த அருள் கவிஞர்கள், — பக்திப் பாவலர்கள், மிகச் சரியாகத் தெரிந்து வைத்திருந்தனர். நோயுற்று வருந்தும் சமுதாயத்தின் நாடிபார்த்துக் கூறும் மருத்துவர்கள் போல் அக்கவிஞர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் சமுதாயத்தில் புரையோடிக் கிடக்கும் சாதீய அமைப்பின் தீமைகளைக் களைந் தெறிய மனவுறுதி கொண்டனர். அதற்கான முதற்பணியை அந்த அருள் கவிஞர்கள் தங்களுடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்த சமய அமைப்புகளில் தொடங்கினர்.

தன்னுரிமைக்காகப் போராடும் போராட்டம் அரசியல் வட்டத்தில் மட்டுமல்லாது, சமய உலகிலுங்கூட உணரப் பெற்றது. மராத்திய சக்தி எழுச்சியுற்ற அந்தக் காலத்தில்தான், திருத்தொண்டர்களையும் தீர்க்கதரிசிகளையும் உள்ளடக்கிய ஞானியர் குழு சமுதாய அரங்கில் தலைகாட்டியது; அத்திருக் கூட்டத்தில் எல்லாச்சாதியினரும் இருந்தனர்; எல்லா வகுப்பினரும் இடம் பெற்றனர்; தாழ்ந்தவர்களும் இருந்தனர்; உயர்ந்தவர் களும் இருந்தனர்; அவர்களுள் 'குன்பியர்' என்ற மராத்தியர், தையல் தொழில் செய்வோர், தோட்டவேலை பார்ப்போர், குயவர், பொற்கொல்லர், கழிந்ததற்கு வருந்திய கணிகையர், அடிமைப் பெண்டிர், சாதி நீக்கம் செய்யப்பெற்றோர் ஆகிய அனைத்துப் பிரிவினரும் இருந்தனர். அத்திருக் கூட்டத்தாரால் சமய எழுச்சி பொங்கியது; பொங்கிய அப்பேரெழுச்சி உலகிற்கு ஓர் உண்மையை வெளியிட்டது. உயரிய ஆன்மீகப்பேறு ஒரு வகுப்பாருக்கு மட்டும் உரிமையானது அல்ல என்றும், அது சமூகத் தின் எல்லாத் தரப்பினராலும் அடையக் கூடியது என்றும் தெளிவு செய்யப் பெற்றது. ஆன்மீகப் பாதிப்பு ஒரு வகுப்பாருக்கு மட்டும் உரியதல்ல; சமுதாயத்தில் எல்லாப்படி நிலைகளில் வாழ்வோரிட மும் ஆழமாக அது ஊடுருவிப் பாயக் கூடியது; ஆண், பெண், —

எழுத்தறிவுடையோர், எழுத்தறிவு அற்றோர்,— இந்து, முகம்மதியோர் ஆகிய எல்லாரிடமும் ஒன்றுபோல எவ்வித பேதமும் இன்றி ஊடுருவிப் படரக் கூடியது அவ் ஆன்மீகமாகும் என்னும் உண்மையைப் பொங்கி வந்த சமயப்பேரெழுச்சி உலகிற்கு வெளிப்படுத்திக் காட்டியது. நானக், சைதன்யர், இராமானந்தர், கபீர், நர்சிமேத்தா, சந்திதாசர், ஜயதேவர், வித்தியாபதி, துளசிதாசர், சூர்தாசர், மீராபாய், ஞானதேவர், நாமதேவர், ஜனபாய், சோகாமேளா, இரவிதாசர், புரந்தரதாசர், ஏகநாதர், சவதா மாலி, நரஹரி, கோரா, சேனு, துக்காராம் ஆகியவர்கள் குறிப்பிட்டுக் காட்டக்கூடிய பெரியோர்கள்; இப்பெரியார்களைக் கொண்டே இந்தியாவில் ஏற்பட்ட சீர்திருத்தத்தின் தனிச் சிறப்பியல்புகள் எவையென்பதை உணரலாம். எல்லாத் தரப்பிலுமிருந்தும் வந்த ஆன்மீகச் செல்வர்கள் நாடுதழுவிய ஓர் எழுச்சியைக் கொண்டு வருவதில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு உழைத்தனர். சகோதரத்துவ உணர்வு, ஒருதெய்வக் கோட்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய புரட்சிகரமான சிந்தனையை ஒரு கருவியாகக் கையிலெடுத்துக் கொண்டு செயல்பட்டனர்.[2]

தென்கோடியில் தொடங்கப் பெற்ற பக்திநெறி பதினைன்காம் நூற்றுண்டில் இந்தியா முழுவதும் வேகமாகப் பரவியது. அந்த நெறி பரவும்பொழுது, பல்வேறு பகுதிகளில் பல்வேறு வகையில் வேறுபட்டு இருந்த வழிபாட்டு முறைகளையெல்லாம் அது தன்னுள் ஈர்த்துக்கொண்டது. அவ்வாறு பரவிய பக்திநெறியை மேலை

[2] இசுலாமிய சமயத்தின் உயிர்நாடியான கோட்பாடுகளில் மிகவும் சிறந்தவை சகோதரத்துவமும் ஒருதெய்வக் கோட்பாடுமேயாகும். இந்திய மண்ணில் நாடு தழுவிய சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய திருத்தொண்டர்கள் அந்த இரு இசுலாத்தின் கொள்கைகளால் பெரிய அளவில் கவரப்பெற்றுள்ளனர். அவற்றின் செல்வாக்குக்கு அத்திருத்தொண்டர்கள் ஆட்பட்டனர் என்று கருதுவதில் தவறில்லை; அத்தகைய ஒன்றும் அன்றையச் சூழலில் நிகழக்கூடியதேயாகும். மேலும் அன்றைய காலச் சூழலில், திருத்தொண்டர்கள் சிலர் நாடு பூராவும் சுற்றித் திரிந்து சமயம் பரப்பிய கிறித்தவப் பாதிரிமார்களுடன் தொடர்பு வைத்திருக்கவேண்டும் என்று யூகிப்பதற்கும் போதிய இடமிருக்கிறது. கிறித்துவ சமயப் பரப்புநர்களோ ஏற்கெனவே நாட்டின் மேலைக் கடற்கரைப் பகுதியில் புகுந்து அங்குத் தங்களது செல்வாக்கை ஏற்படுத்திவிட்டிருந்தனர். அச்சமயப் பரப்புநர்களுக்கும் (நமது) திருத்தொண்டர்களுக்கும் இடையே கலந்து பழகும் வாய்ப்பு இருந்திருக்கலாம் என்பதை மெய்ப்பிக்க சான்று ஒன்று உள்ளது. ஸ்டீபன் (1549–1619) என்ற கத்தோலிக்க மதகுரு, 'கிறிஸ்த புராணு' என்று மராத்தி மொழியில் எழுதினர்; அவர், மராத்தியத் திருத்தொண்டர் பாக்களில் பயின்று வரும் யாப்புவகை, சொல்வண்ணம், ஒட்டுமொத்தமான போக்கு (தோரணை) ஆகியவற்றோடு முழுமையும் தொடர்பு கொண்டே தனது படைப்பைச் செய்திருக்கிறார். நமது நோக்குக்கு இது அரண் செய்வதுபோலாகும். ஆக, இந்திய மண்ணில் வாழ்ந்த அருள் செல்வர்கள் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற நாடு தழுவிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியதற்கு இவ்விரு சமயத்தாக்கங்கள் காரணமாகவும் இருக்கலாம்.

நாட்டில் தோன்றி வளர்ந்த புரோடஸ்டண்டு இயக்கத்துடன் ஒப்பிடலாம். புரோடஸ்டண்டு இயக்கமானது கிறித்துவ நெறியிலுள்ள ஒரு சீர்திருத்த இயக்கம் ஆகும். இலத்தின் மரபோடு கூடிய கிறித்துவ நெறியை எதிர்த்தும், உரோமன் கத்தோலிக்க சமய நெறியை எதிர்த்தும் கிளம்பியது அப்புரோடஸ்டண்டு இயக்கம்; ஆனால், விவிலியத்தைத் தழுவியெழுந்த சீர்திருத்த இயக்கமாகும். தென்கோடியில் தோன்றி இந்தியா முழுதும் வேகமாகப் பரவிய பக்தி நெறியை, அந்த மேலை நாட்டுச் சமயச் சீர்திருத்தத்தோடு ஒப்பிட்டுக் கூறலாம். ஆனால், மேலை நாட்டுக்கு வாய்த்த நற்பேறு இந்திய மண்ணிற்கு இல்லை. இந்தியாவில் தோன்றிய சமயப் பெரியார்கள் தாங்கள் பிறந்து வளர்ந்த மண்டலப் பகுதிகளாலும், பேசிவந்த வேறுபட்ட மொழிகளாலும் ஒன்று சேர்ந்து சாதிக்கும் நற்பேற்றை இழந்து நின்றனர். அவர்களின் சாதனையை ஒட்டுமொத்தமாகவும் முறையாகவும் மதிப்பீடு செய்யும் நற்பேறு எப்பொழுதும் வாய்க்கவில்லை. இந்த அவப்பேறு இந்த மண்ணில் தோன்றிய சமய ஞானிகளுக்கு உண்டு.

இந்திய நாட்டில் தோன்றிய திருத்தொண்டர்கள் பிராமணீயத்தின் கொடுங்கோன்மையை வெளிப்படையாகக் கண்டித்தார்கள். சமயத்தின் பேரால் நிகழும் சடங்குகளையும், அச் சடங்குகளின்மீது காட்டும் தீவிரப் பற்றினையும் பலரறியப் பழித்தனர். கல்விப் பேற்றால் தனிச்சலுகை பெற்று சமுதாயத்தில் வாழ்ந்துகொண்டு இருப்பவர்களின் ஏகபோகத்தையும், வேதத்தின் ஏகபோகத்தையும் வெளிப்படையாகவே எதிர்த்தனர். கல்வியறிவு பெற்றவர்களின் தனி உடைமையாக இருந்த சமயப்போக்கினைச் சாடினர்; அவர்களின் புரட்சி அத்தோடு நின்றுவிடவில்லை. சமக்கிருத மொழியைத் தூக்கிக் கிடப்பில் போட்டுவிட்டு மக்களின் அன்றாடப் பேச்சு வழக்கு மொழியைத் தேர்ந்து எடுத்தனர். தீவிர உருவ வழிபாட்டின் முக்கியத்துவத்தைக் குறைத்தனர். ஒரு தெய்வ வழிபாட்டின்கீழ் பக்தர்களையெல்லாம் ஒன்று திரட்டினர். அதாவது, பந்தர்பூரிலுள்ள விட்டல்பெருமானைப் போன்றுள்ள ஒருதெய்வ வழிபாட்டின்கீழ் பக்தர்களனைவரையும் ஒன்று திரட்டினர். துக்காராம் காலத்தில் இந்து மக்களிடையே பல தெய்வ வழிபாடு இருந்தது. ஆரியக் கடவுளர்கள், திராவிடத் தெய்வங்கள், தொடக்க காலந்தொட்டு வந்துகொண்டிருக்கும் பழங்காலக் கடவுளர்கள் எனப் பல தெய்வங்களை இந்து மக்கள் வழிபட்டு வந்தனர். பல தெய்வ வழிபாட்டு முறையானது இந்து சமய உலகில் ஒரு பெருங் குழப்பத்தை உண்டாக்கியிருந்தது. சமயச் சீர்திருத்தம் செய்ய வந்த திருத்தொண்டர்கள் சிறு தெய்வங்களையெல்லாம் வழிபடும் போக்கினைத் தீவிரமாக எதிர்த்தனர். திருத்தொண்டர்களான சமயப் பெரியார்கள் இவ்வாறு தீவிரமாக

எதிர்த்தது, இந்து மக்களின் மனங்களில் இறைவனைப் பற்றிய ஒரு புதிய சிந்தனையைப் பிறக்கச் செய்தது. இறைவன் பற்றிய புதிய சிந்தனை மக்கள் மனங்களில் ஆழமாகப் பதிந்தது. 'ஒன்றே தெய்வம்' என்ற சிந்தனை பரவியது. ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக் கணக்கான மக்கள் ஒருதெய்வ வழிபாடான விட்டல்பெருமானை வழிபடும் பக்திநெறிக்கு ஈர்க்கப் பெற்றனர்.

முகம்மதியர்களிடம் உள்ள ஒரு கடவுள் கொள்கையின் பாலுள்ள தீவிரம், இந்து சமயத்தைச் சார்ந்த தீர்க்கதரிசிகளின் உள்ளங்களை வெகுவாகக் கவர்ந்தது. மகாராஷ்டிரத்திலுள்ள சமயச் செல்வர்கள், கண்டிப்பான சமயச் சடங்கு நெறிகள், சாதிப் பிரிவுகளாகிய தளைகளிலிருந்து மக்களை விடுவித்து அம் மக்களுக்குப் புதுநெறி காட்டிய அந்தக் காலகட்டத்திலும், அதுபோலவே திருத்தொண்டர்கள் இராமனும் இரஹீமும் ஒன்றே யென மக்களுக்குப் போதித்து வந்த அந்தக் காலகட்டத்திலும், 'கடவுள் ஒருவரே' என்ற கோட்பாட்டின் செல்வாக்கு மகாராஷ்டிரப் பகுதியில் தீவிரம் பெற்றிருந்தது எனலாம். மக்கள் அன்பால் ஒருவருக்கொருவர் ஒன்றுபட்டு இணைந்து வாழ்வதையும், 'ஒருவனே தேவன்' என்ற நம்பிக்கையில் வாழ்வதை யும் அப்பெரியார்களின் தத்துவங்கள் தூண்டின. அச்சமயப் பெரியார்கள், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற வாழ்க்கை நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுமாறு மக்களைத் தூண்டினர். இத்தகைய இணைப்பு முயற்சியை இந்து சமயப் பெரியார்கள் வலியுறுத்தினர். அவர்கள் எடுத்துக்கொண்ட இணைப்பு முயற்சி தான், சகிப்புத் தன்மையற்ற முசுலீம் ஆட்சியாளர்களை மென்மை யாக நடந்துகொள்ளுமாறு செய்திருக்கக்கூடும். ஒரு நிலையில் நின்று பார்க்கும்போது இப்படி ஓர் உண்மை நமக்குப் படுகிறது. மற்றொரு சார்பில் நின்று நோக்கும்போது, பல இசுலாமியத் தலைவர்கள் நாடு தழுவிய ஆன்மீக விழிப்புணர்ச்சிக்குப் பாடு பட்டது தெரியவரும். பல இசுலாமியத் தலைவர்கள்,—அபுல்பஜா லும் ஃபெய்ஜியும், அக்பரும் ஷாஜஹானின் மூத்த மகனை தாரா ஷுகோவும், கபீரும் மகாராஷ்டிரத்திலுள்ள ஷேக் மகம்மதுவும்— ஆகியோரைப் போன்ற இசுலாமியத் தலைவர்கள் நாடு தழுவிய ஆன்மீக விழிப்புணர்ச்சியைப் பரப்ப முயன்றனர். அன்றைய சமயப் பெரியார்களின் கனவே, இன்று நாம் காணுகின்ற இந்து முசுலீம் ஒற்றுமை. முசுலீம்களும் தம் கோட்பாட்டை மறந்து அய லவர் கொள்கைகளில் அமிழ்ந்து வாழ்ந்துகொண்டிருப்பார்கள் —அப்படி வாழ்ந்துகொண்டிருப்பதும் இவ்வுலகில் நிகழக்கூடிய ஒன்றுதான் என்பதை, இந்த நாட்டில் தவிர, உலகில் வேறு எங்கும் காண இயலாது என்று கூறலாம்.

இதுவரையிலும் காட்டப்பெற்றதை ஒரு முழுமையான படப்பிடிப்பாகக் கொள்வதற்கில்லை. நாட்டில் சமய மறுமலர்ச்சியும், சமயம் மற்றும் ஒழுக்கநிலையில் கடுந்தூய்மையைக் காட்டும் உணர்ச்சியார்வமும் செயல்பட்டுக் கொண்டிருந்தன. அவை வெறும் உணர்ச்சியாக மட்டும் அமைந்துவிடாமல் செயல்வடிவம் பெற்றுக்கொண்டிருந்தன. சமயப் பெரியார்கள் நாட்டில் ஒற்றுமையைத் தோற்றுவிக்க முயன்றனர். ஒற்றுமையைச் சாதிக்க முயன்றதில், அவர்கள் சமுதாய நிலையில் முழுமையும் வெற்றிபெற முடியாது போனாலும், ஆன்மீக உலகைப் பொருத்தவரையில் அவர்கள் நாடி உழைத்த நாட்டு ஒற்றுமையைச் சாதிக்க முடிந்தது. புதுமையை எதிர்த்துத் தாக்குகிற மனநிலை கொண்டவர்களும், மாறுபாட்டை வரவேற்காத மரபை விரும்புகின்றவர்களுமான இந்துக்கள் இன்னும் சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்துகின்ற நிலையிலேயே உள்ளனர். மகாராஷ்டிரத்தில், மரபைப் போற்றி வாழும் இப்பகுதியினர் பெஷாவர் ஆட்சியின்போது இழந்த தங்கள் ஆதிக்கத்தை மீண்டும் வெகுவிரைவில் திரும்பப் பெற்றுக் கொண்டனர். பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியில் பிராமணீயத்தின் மட்டுமீறிய உணர்ச்சி ஆர்வம் தன்னுடைய ஆதிக்க வெம்மையை உமிழ்ந்து அனல் பரப்பியது. வரலாற்றுப் போக்கில் இவற்றையெல்லாம் நோக்கும்போது நாம் ஓர் உண்மையை உணரலாம். அதாவது, மொத்தத்தில் சீர்திருத்தம் செய்ய வந்த சமயப் பெரியார்களின் இயக்கம், நடைமுறையில் இருந்த அமைப்புக்கு ஏற்பட்டதோர் எதிர்ப்பேயாகும்; அந்த எதிர்ப்பும் கடுமையில்லாத எதிர்ப்புத்தான். மகாராஷ்டிரத்தில் சமுதாய நிலையில் அதன் சாதனையைக் கணக்கிட்டால், அது ஒரு மறுமலர்ச்சி இயக்கமாகச் செயல்பட்டது என்பதேயாகும். அதன் பணி மக்களை மூட நம்பிக்கையில் இருந்து விடுவித்து, அம் மக்களுக்கு அறிவு கொளுத்தியதேயாகும். அந்த இயக்கத்தின் ஆற்றலால் சமூகத்தில் இடம் பெற்றிருந்த வன்முறைப் போக்கும் சகிப்புத் தன்மையற்ற போக்கும் மாறின. சமுதாயத்தில் அன்புநெறியும், சகிப்புத்தன்மையும் தலைதூக்கின.

துக்காராம் பாடல்களைப் படித்தால், அக்காலத்திய நிலை தெளிவாகப் படம் பிடித்துக் காட்டப்பட்டிருப்பதை அறியலாம். கண்மூடித்தனமாக எதையும் நம்பி வழிபடும் போக்கு அன்று இருந்ததையும், பகுத்தறிவோடு அணுகிப் பார்ப்பதை வெறுக்கும் போக்கும் அன்று இருந்ததையும் துக்காராம் பாடல்கள் காட்டுகின்றன. சமயச் சடங்குகளும், எவ்வகைப்பட்ட கல்வியானாலும் அதைக் கற்கும் வாய்ப்பும் பிராமணர்களின் ஏகபோகமாக அன்று இருந்தன. பிராமணர்கள், தங்களுடைய சமூக மதிப்பைப் பாது காத்துக்கொள்ளும் பொருட்டு, அவற்றை எப்பொழுதும் தம்

மிடமே இருக்குமாறு பார்த்துக்கொண்டனர். சமுதாயத்தில் பிராமணீயத்தின் சுரண்டல் நிலவியது. பிராமணீயத்தின் சுரண்டலை எதிர்த்து அறைகூவல்விட உறுதிபூண்டவர்கள்தாம், மராத்தியத் திருத்தொண்டர் குழாமைச் சேர்ந்த அனைவரும். நாதர்கள், மகானுபாவர்கள், கோசவிகள், வரகரிகள் மற்றும் தாதர்கள் (Dattas) எனப்படுவோரே அத்தொண்டர் குழாமைச் சேர்ந்த பெரியோர்கள்; ஆன்மீக உலகில் மோட்சம் அடைவதிலும் ஏற்றத்தாழ்வு, சமுதாய நிலையில் பெண்களுக்கு ஒருவகையான நீதி, சமய உலகில், சமயத்தின் பேரைச் சொல்லி சூத்திரர்களை ஒதுக்கிவைத்தல்—இவை போன்ற பல செயல்கள் அன்று நடந்தன. பிராமணர்களோ, ஏகபோகமாகத் தொடர்ந்து தாங்கள் அனுபவித்து வந்த உரிமைகளைத் தங்களிடமே நீடித்திருக்குமாறு பார்த்துக்கொள்வதில் கவனமாக இருந்தனர்; தங்கள் குழு நலன்களில் மிகவும் அக்கறை காட்டினர்; எதிர்த்துக் கேட்கப்படாத நிலையில் பிராமணர்கள் இருந்து வந்தனர். திவான்கள், தேஷ் பாண்டேக்கள், குல்கர்ணிகள் என்ற பதவிகளில் அப்பிராமணர்கள் இருந்துகொண்டு, அந்நிய ஆட்சியாளர்களுக்குத் தொண்டூழியம் செய்வதற்கு வெட்கப்படவில்லை; அயலவர்களுக்கு அடிமை ஊழியம் செய்கிறோமே என்ற வருத்தம் அவர்களிடம் சிறிதும் இல்லை. எவ்வித வருத்தமுமின்றிப் பிராமணர்கள் அயலவர்களுக்குத் தொண்டூழியம் செய்வதைப் பிற சாதியினரும் கண்டனர். அவர்களும் பிராமணர்களைப் பின்பற்றி தேஷ்முக்குகள் என்றும் ஜஹாகிர்தார்கள் என்றும் மாறி, முசுலீம் ஆட்சியாளர்களுக்கு உண்மை ஊழியர்களாக மாறினர். ஏற்றத்தாழ்வும், அநீதியும் கலந்த நச்சுச் சூழலில் சமுதாயம் முழுவதும் நெளிந்து கொண்டிருந்தது.

சமுதாயத்தில் நிலவிய நச்சுச் சூழலைத் திருத்தொண்டர்கள் கண்டனர்; அதனைத் தம் சொல்லாலும் செயலாலும் தீவிரமாக எதிர்த்துத் தாக்கினர்; போர்க்கொடி உயர்த்தித் தாக்குதல் நிகழ்த்தினர்; கர்ம மார்க்கத்தையும் தியான மார்க்கத்தையும் வெளிப்படையாகவே கண்டித்தார்கள்; பலரறிய அவற்றைக் கண்டித்ததோடு நின்றுவிடாமல், பக்தி மார்க்கமே அவற்றையெல்லாம்விட உயர்ந்தது என்று பக்திநெறியைப் பலபடப் பாராட்டிப் பேசினர். அத்திருத்தொண்டர்களைப் பொறுத்த வரையில் பக்தி என்பது அவர்தம் இலட்சியத்தை அடைவதற்கான கருவி மட்டும் அல்ல; அதுவே, அவர்களுக்கு எல்லாம்; ஓதலும் அது, முடிவும் அஃதே. பக்திநெறியென்பது, ஒரு வாழ்க்கைக்கான மெய்விளக்கநெறி என்று அவர்கள் கருதினர். அத்திருத்தொண்டர்கள் காலத்தில் நடைமுறையில் பல சிறு தெய்வ வழிபாடுகள் இருந்தன. அப் புல தெய்வ வழிபாட்டின்

செல்வாக்கை ஒடுக்குவதற்காகவே விட்டல்பெருமான் என்றழைக்கப்பெறும் ஒரு புதிய கடவுளைப் போட்டிக் கடவுளாக நிறுவினர்கள். போட்டியாக நிறுத்தப்பெற்ற கடவுளின் தோற்ற மூலமோ அறியமுடியாத ஐயத்திற்கு இடமானதுதான்; இருந்த போதிலும், பல தெய்வங்களை வழிபடும் போக்கை அடக்கி ஒடுக்குவதற்காகவே அத்தகைய ஒரு கடவுளை உண்டாக்கினர். துக்காராம் போன்ற திருத்தொண்டர்கள், ஒருதெய்வக் கோட்பாட்டை உயர்த்திக் காட்டுவதற்காக,—அதாவது, விட்டல் பெருமான் வழிபாட்டைச் சிறப்பித்துப் பேசுவதற்காக, நடைமுறையிலிருந்த அனைத்துத் தெய்வக் குழுக்களையும் எள்ளி நகையாடினர்; இகழ்ந்தும் பேசினர். மராத்தி பேசும் மக்களுடைய செல்வாக்குமிக்க வழிபடு தெய்வமாக விட்டல்பெருமான் ஆகி, ஒரு முழு நிலை பெறும்வரையில், பல தெய்வ எதிர்ப்பு நீடித்திருந்தது. அத்தகையதோர் எதிர்ப்புப் புரட்சி, மராத்தி மொழி பேசும் மக்களுள் அனைத்துப் பிரிவினரும்—ஆண் பெண் இருசாராரும், சரிசமமாகப் பந்தர்பூரை நோக்கி ஈர்க்கப்பெற்ற அந்தக் காலம் வரையிலும் நீடித்திருந்தது.

வரகரி இயக்கத்தாரின் பக்திநெறி மக்களை நோக்கியதாக இருந்தது. அது ஒரு புதிய அறக்கோட்பாட்டைத் தோற்றுவித்தது. அந்த அறக்கோட்பாடானது, எங்கெங்கு நோக்கினும் அங்கங்கு விரவி நிற்கும் இறைமை, தூய்மை, பெருந்தன்மை, அச்சமின்மை, சலனமற்ற அக அமைதி ஆகியவற்றைக் கொண்டது. 'வரகரி' என்ற சொல்லுக்குரிய பொருள், 'காலத்தைப் பேணி ஒழுகுபவர்' என்பதாகும். வரகரி இயக்கத்தைச் சார்ந்தவர்கள் குறிப்பிட்ட கால இடைவெளி விட்டுவிட்டு, பந்தர்பூருக்கும், துக்காராமின் பிறப்பிடமான "தெஹு" (Dehu)விற்கும், ஞானதேவின் பிறப்பிடமான 'ஆலந்தி' (Alandi)க்கும் யாத்திரை போவதைக் கண்டிப்பான வாடிக்கையாக வைத்திருப்பவர்கள். வரகரி என்பதற்கான பொருள், வாடிக்கையாகச் செல்லவேண்டிய சமய யாத்திரையை முறைப்படுத்திக்கொண்டு கால ஒழுங்குடன் செல்பவர் என்பதாகும். வரகரி இயக்கத்தைச் சார்ந்தவர்கள் சில நெறிகளைக் கடைப்பிடித்து ஒழுகினர்; அவர்கள் மது வகைகளைப் பருகமாட்டார்கள்; ஊன் உணவைத் தவிர்த்தனர்; துளசி மணிமாலையைக் கழுத்தில் கழுத்தணியாக அணிந்துகொள்வர்; உண்ணுநோன்பும் மேற்கொள்வர்; அனைத்துவகைப் பாவச் செயல்களையும் கண்டித்தனர்; பிறருக்கு நன்மை செய்வதையே அறமாகப் போற்றி ஒழுகினர்; சாதிப் பாகுபாடுகளை மதிக்காமலும், சமுதாய அளவில் ஆடம்பரமில்லாத எளிமையை ஏற்றுக்கொண்டும் செயல்பட்டு வந்தது வரகரி இயக்கம். அந்த இயக்கம், எல்லாரும் சமம் என்ற கோட்பாட்டைக் கொண்டதாக இருந்

தது. சமுதாய அளவில் வரகரி நெறியானது, பிராமணீயத்தின் ஆண வப்போக்கைச் சரிக்கட்டும் மாற்றுச் சக்தியாக மலர்ந்திருந்தது. அந்த வரகரி நெறி மக்கள் உலக வாழ்க்கையில் முற்றும் மூழ்கி விடாதபடி அறிவுறுத்தியது. பற்றற்று இயல்பாக வாழும் வாழ்க்கை நெறியை மக்களுக்கு அது காட்டி உதவியது.

ஒருவகையில் பார்த்தால், வரகரிகள் என்போர் ஐயத்துக்கிட மின்றி அத்துவைதத்தைத் தழுவியவர்களாவர். ஆனுல் துவைதமா, அத்துவைதமா என்ற புளித்துப்போன வெறும் சொற்போருக்கு இடம் வைத்துக்கொள்ளாத அத்துவைதிகள் அவர்கள். தனிமுதலாக விளங்கும் பரம்பொருள்மீது பற்றுக் கொண்டவர்கள் அவர்கள். அவர்கள் போற்றிய 'தனிமுதல்', துவைதம் என்றும் அத்துவைதம் என்றும் புகழக்கூடியவற்றிற்கும் மேலானதாகும். இறைவனைச் சிவன் என்ருே, விஷ்ணு என்ருே, வேறு பெயர்களிலோ வழங்கலாம். ஆனுல் வரகரி நெறி யாளரின் கோட்பாட்டின்படி, இறைவன் வேறு, தான் வேறு என்று எண்ணுமல், அப்பரம்பொருளோடு தன்னை இணைத்துக்கொண்டு ஒருமைப்படுத்துவதன்மூலம், மனிதனுனவன் படிப்படியாகத் தன்னை உலக பந்தங்களிலிருந்து அறுத்துக்கொள்கிருன். பந்தங் களை அறுத்துக்கொண்டபின், அதனைத் தொடர்ந்து 'மூலமுதல்' வெளிப்பட்டுத் தோன்றுதல் நிகழக்கூடும் என்பதாகும். பிரபஞ்சம் முழுவதுமே தன்னுடைய உடலில் ஓடிக்கொண்டிருப்பதாக உணர்வது ஒருபடி நிலை; அதாவது, பிரபஞ்சமும் தானும் ஒன்று என உணர்வதாகும்; அந்தப் படிநிலையை அடைய விரும்புதலே வரகரி இயக்கத் திருத்தொண்டரின் இலட்சியமாகும். அதே நேரத்தில், இவ்வுலக வாழ்வைத் துறப்பதும், காட்டிற்குப்போய் சந்நியாசம் மேற்கொள்வதும் அவர்களின் நோக்கமல்ல. வரகரிகள் என்போர், உலக வாழ்க்கையினின்று தங்களை விடுவித்துக்கொள்ள மாட்டார்கள். இவ்வுலகில் மனிதன் பிறந்து வாழவேண்டும் என்பது இயற்கை நியதி; அது மனிதனுக்கு விதிக்கப்பட்ட விதி யாகும்; இவ்வுலகிடை வாழ்வதென்பது, ஒருவகையான கூண்டி லடைக்கப்பெற்ற சிறை வாழ்வு போன்றதுதான். இந்த வாழ்வை விட்டு நீங்கிக் காட்டுக்குச் சென்று வாழவேண்டும் என்பதோ, வரகரி நெறியாளரைப் பொறுத்தவரையில், ஒரு கூண்டைவிட்டு வேறு ஒரு கூண்டிற்குள் புகுவதற்கு ஒப்பானதாகும். ஒரு கூண்டிலிருந்து தப்பிச்செல்வது இன்னெரு கூண்டிற்குள் போய் மாட்டிக்கொள்வதற்காகவா? என்பது அவர்கள் கேள்வி. உலகம் மாயை என்று புறக்கணிப்பதை முழுமையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ''உலகம் மாயை; மாயை என்ற அது பாதி உண்மையேயன்றி, முழு உண்மையாகாது; மனிதனுடைய கூர்த்த மதிக்கு அது அவ்வாறு தோன்றுகிறது'' என்கிருர் துக்காராம்.

இவ்வாருக, மகாராஷ்டிரத்தில் வாழ்ந்த திருத்தொண்டர்கள், பருப்பொருள் சார்ந்த இவ்வுலக வாழ்விற்கும், பருப்பொருள் சார்பற்ற நுண்பொருளவாய ஆன்ம வாழ்விற்கும்—ஆக, இவ்விரண்டனுக்கும் ஒரு தனித்தன்மை வாய்ந்த ஒட்டுறவினைப் புதிதாகக் கொண்டு வந்து புகுத்தினர்; அவர்கள் தோற்றுவித்த பக்தி மரபு தான் அத்தகையதோர் இணக்கத்தைக் கொண்டு வந்து புகுத்தியது.

பதின்மூன்ரும் நூற்ருண்டில் அந்த மரபைத் தோற்றுவித்தவர்கள், நாமதேவரும் ஞானதேவரும் ஆவர். அவர்கள் எல்லாச் சாதி மக்களையும் ஓர் அமைப்பின்கீழ் கொண்டு வந்தனர்; ஓர் ஆற்றல் வாய்ந்த அமைப்பினை ஏற்படுத்தினர்; விட்டல்பெருமானை வழிபடும் வழிபாட்டு மரபை மையமாகக்கொண்டு அந்த ஆற்றல் மிக்க அமைப்பினை உருவாக்கினர்; அவர்கள் பௌத்த, சமண தத்துவங்களால் கவரப்பெற்றவர்கள்; அதே நேரத்தில், இந்து தத்துவத்தின் பெரும்பான்மையான ஒழுங்குமுறைகளை எடுத்துத் தமதாக்கிக்கொண்டவர்கள்; அவர்கள் சங்கரரின் மாயாவாதத்தையும் அவ்வாறே தமதாக்கிக் கொண்டவர்கள். வேத மரபின் அடிப்படையான கருத்துகளையும் அவர்கள் அறிந்திருந்தனர். வேத மரபானது, கருமக் கோட்பாடு, மறுபிறவி உண்மை, மோட்சம் அல்லது வீடுபேறு நிலை, நான்கு வருணங்கள் ஆகியவற்றைக் கூறுவது. அத்தகைய வேதமரபின் கருத்துகள் முழுவதையும் பயனற்றவை என்று அவர்கள் தள்ளிவிடவில்லை. ஆனுல் அப் பெரியார்கள், வேதநெறிக்குப் புதுமையானதும் முற்றிலும் வேறுபட்டதுமான விளக்கங்களைத் தங்கள் நூல்களில் தந்தனர். புதிய விளக்கங்களையும் தந்தனர்; அவற்ருேடு புதுப் புதுக் கருத்துகளையும் தந்தனர். புதிய விளக்கங்களையும் புதிய கருத்துகளையும் தாங்கி வெளிவந்த இவரது நூல்கள், தாழ்ந்த சாதிகளுள்ளும் மிகத் தாழ்ந்த நிலையில் இருந்த மக்களை வெகுவாகக் கவர்ந்தன; அந்த நூல்கள் அந்த மக்களை நேரடியாகக் கவர்ந்து தம்பால் இழுத்தன. அப்பெரியார்கள் வெளிப்படுத்திய தத்துவங்கள், சமக்கிருதக் கல்விக்கு என்றிருந்த தனியானதோர் மதிப்புரிமையை வெற்றிகரமாகத் தகர்த்தெறிந்தது. புதிராக இருந்த சமக்கிருதத்திற்குத் தீர்வுகாணும்படியான வழிமுறைகள் பதின்மூன்ரும் நூற்ருண்டில் ஞானதேவரால் தொடங்கப்பெற்றன. ஞானதேவரால் பதின்மூன்ரும் நூற்ருண்டில் தொடங்கப்பெற்ற பணி, 17ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த துக்காராம் அவர்களால் முடிவுக்கு வந்தது.

வரகரி நெறியைச் சார்ந்த திருத்தொண்டர்கள் மராத்தி மொழிக்கு உயரிய மதிப்பை ஏற்படுத்திக் கொடுத்தனர்; மராத்தி

மொழியையே இலக்கிய மொழியாகவும் ஆக்கினர்; மராத்தி மொழியைச் சமயஞ் சார்ந்த நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி னர். நாமதேவர் போன்ற திருத்தொண்டர்கள் கிராம மக்களை ஒன்றுதிரட்டி, ஓரிடத்தில் சேர்த்து வைத்துக்கொண்டு, தங்கள் புதிய கருத்துகளையெல்லாம் அவர்கள் மொழியிலேயே அவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும்படி எடுத்துக்கூறி விளக்கினர். புதிய கருத்துகளை மக்களிடம் பரப்பும்பொழுது, பண் நிறைந்த பாசுரங் களைப் பாடி மக்களை ஒரு பக்கம் கவர்ந்தனர். திரண்டிருக்கும் மக்களை நோக்கிப் பாடிக்கொண்டே, கருத்துகளை அவ்வப்போது நீதிபோதனை செய்வதுபோலப் போதித்தும் வந்தனர்; இவ்வாருக, மக்கள் மத்தியில் புதிய புதிய கருத்துகளைப் பரப்பினர். கருத்து களை மக்களுக்குத் தரும்போது, அந்த மக்களுக்குத் தெரிந்த மொழி யிலேயே தந்தனர். பழமையின்பேரால் நடந்துகொண்டிருக்கும் காலத்துக்கு ஒவ்வாத செயல்களையெல்லாம் எடுத்துக்கூறி, மக்களுக்கு அறிவு கொளுத்தினர். சமயச் சடங்குகளிலும், சமயத் தின்பேரால் நடைபெறும் கொண்டாட்டங்களிலும் எளிமையை மேற்கொள்ளவேண்டுமென்று எடுத்து விளக்கினர். போலியான ஆடம்பரங்களைச் சமயத்தின்பேரால் நிகழ்த்துவதை எடுத்துக் காட்டி, எளிமையின் ஏற்றத்தை மக்களுக்கு எடுத்துச் சொன் ஞர்கள். சொற்பொழிவுகளைக் கேட்கத் திரளாக வந்திருக்கும் மக்கள் மனங்களில் பதியுமாறு, அவர்களுக்குத் தகுதியான வாழ்க்கை அறங்களை எடுத்துக்கூறி அறிவு கொளுத்தினர்.

இரக்கங்காட்டுதல், பொறுத்துப்போதல், அமைதி காத்தல், சகிப்புத்தன்மையுடன் நடத்தல், தயாள குணம், தருமம் செய்தல் ஆகிய நல்லறங்களையெல்லாம் வாழ்க்கையில் நடை முறைப்படுத்திக் காட்ட மக்களை ஏவினர்கள்; அறப்பணிகளில் மக்கள் ஆர்வங்காட்டுவதற்குத் தூண்டிக்கொண்டிருந்தார்கள்; தங்கள் பண்ணுர்ந்த பாடல்கள்மூலம் ஊக்குவித்தார்கள். அவர்கள் அவ்வாறு ஊக்கமூட்டியதின் விளைவு, பிந்திய நூற்ருண்டுகள் முழுவதும், சமயத் துறையிலும் அரசியல் துறை யிலும் எழுச்சியைக் காண முடிந்தது. அந்த எழுச்சிக்குக் கருவி யாக, அவர்களுடைய கீதமினிய கீர்த்தனங்கள் அமைந்தன. வரகரி இயக்கத்தார் குறிப்பாகச் 'சந்நியாசி' நெறியை ஊக்குவிக்க வில்லை; வாழ்க்கையைவிட்டு ஒதுங்கிப்போகும் துறவற நெறி யையோ, வாழ்க்கையிலுள்ள சிக்கலைக் கண்டு தப்பியோடிப் போக விரும்பும் மனநிலையையோ அவர்கள் எதிர்த்தனர். எண்ணத் தாலும், செயலாலும் அத்தகையதோர் போக்கை எதிர்த்துத் தீவிரமாகப் போராடும் போராட்டத்தை ஊக்குவித்தனர், இத் தீவிரப் போக்குக்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்தவர் இராமதாசர். அவர்தான் இந்து மக்களையெல்லாம் ஒரு குடைக்கீழ்க் கொண்டு

வரத்தக்க செயல்பாடுகளைக்கொண்ட மராத்திய அரசுக்கு விழாக் கண்டவர்.

வரகரி இயக்கத்தை, சமயஞ் சார்ந்த ஓர் இயக்கம் என்று மட்டும் பார்ப்பது தவறாகும். ஏனென்றால், அவ்வியக்கத் தலைவர்களுக்கிருந்த மிகுந்த அக்கறையெல்லாம், பரவியிருக்கும் சமூகக் கொடுமைகளை வேரோடு கல்லியெறிவதுதான். அவர்கள், பூமியில் வாழ்கின்ற இகவாழ்க்கைக்கும், பரத்திற்குத் தேவையான ஆன்மீக வாழ்க்கைக்குமான விதிமுறைகளை உருவாக்கி, மக்களுக்குச் சிபாரிசு செய்தனர். அவர்கள், மக்கள் தம்மிடமுள்ள வேற்றுமைகளை மறந்து, ஒன்றுபட்டு வாழ்வதற்கான சூழ்நிலைகளை உருவாக்கினர். அச்சூழலுக்குள் புகுந்துவிட்டால் பேதங்கள் எல்லாம் கரைந்து, ஒருமையாகி நிற்கும் என்றனர். இனங்கள், குழுக்கள், சாதி அமைப்புகள், வருணங்கள், உட்பிரிவுகள், சமய வெறிகள் ஆகிய எல்லாப் பேதங்களும் கரையும் என்றனர். அவ்வியக்கத்தார் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் போற்றிப் பேசினார்கள். அவர்கள் பேதங்களையும், பிரிவினைகளையும், வெளிவேடங்களையும், போலி நடிப்புகளையும், சோம்பேறித்தனத்தையும், பிராமணர்களின் பொருளற்ற சமயச் சடங்குகளையும் அழிக்கப் பெரு முயற்சி எடுத்துக்கொண்டு, கடுமையாகப் போராடினார்கள். இவ்வியக்கத்தைச் சார்ந்த திருத்தொண்டர்கள் தொண்டு செய்ய முற்பட்ட காலத்தை எண்ணிப் பார்த்தால், அவர்கள் செய்திருக்கும் சாதனையின் அளவு தெரியவரும். அவர்கள் தொண்டு செய்யப் புறப்பட்ட காலம் இந்து மக்களின் வாழ்க்கைப் போக்கில் நலிவு சூழ்ந்திருந்த காலமாகும். அப்போதைய சூழலோ அழிவை நோக்கிப் போய்க்கொண்டிருந்த சூழலாகும்; அன்றைய நிலையோ, அத்தகைய அழிவுப் போக்கிலிருந்து இந்து மக்கள் மீள்வதற்கு வாய்ப்பில்லை யென்றிருந்த காலக்கட்டம் ஆகும். அத்தகையதோர் நலிவு படர்ந்த சூழலில் அத்திருத்தொண்டர்கள் தம் தொண்டைத் தொடங்கினர். அந்தச் சூழலின் பின்னணியில் அவர்கள் தொண்டினை மதிப்பிட்டுப் பார்த்தால், மறக்க முடியாத அவர்களின் சாதனையை நாம் உணரலாம். மக்கள் தங்களுடைய பசிக்கும் பட்டினிக்கும் துயரங்களுக்கும் தொல்லைகளுக்கும் விடிவே இல்லையென்று நம்பிவிட்டிருந்த காலம், எவ்வளவுதான் உழைத்தாலும் பசியோடும் பட்டினியோடும் தொல்லைகளோடும் துயரங்களோடும் வாழ்ந்து மடிவதுதான் தங்களுக்கு விதிக்கப்பட்டது என்று நம்பிவிட்டிருந்த காலமாகும். நீதியோ, தத்துவமோ, கலையோ சமயத்திற்கு மாறானவை அல்ல என்ற ஒரு நம்பிக்கையும் தலைமுறை தலைமுறையாக மக்களிடம் வேரோடிப் போயிருந்தது. சமயத்தைப்பற்றியதோர் ஆழமான நம்பிக்கையிருந்த காலமாக அன்றையச் சூழல் அமைந்திருந்தது.

அத்தகைய நம்பிக்கைகள் நிறைந்த காலத்தில் பிறந்து, அத்தகைய மரபுகள் சூழ்ந்த அமைப்புகளுக்கிடையே உழைத்து வாழ்ந்தவர் துக்காராம். அவர் முயன்று பெற்ற ஞான ஒளியின் துணையால் மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டார். சமயத்திற்குரிய இடத்தை நல்லொழுக்கமோ, நற்சிந்தனையோ, மெய்யுணர்வோ, கலையோ பிடிக்கமுடியும் என்று துக்காராம் விளக்கினார். சமயத்திற்குப் பதிலாக அவை ஆகமுடியாதென்று தலைமுறை தலைமுறையாக இருந்து வந்த நம்பிக்கையைத் தகர்த்தார். பருப்பொருளாய் வெளிப்பட்டுத் தோன்றும் உடம்பிற்குள் இயங்கும் நுண்பொருளான ஆன்மாவின் தூய்மை குறித்தும் குறிப்பாகத் தெரிவித்தார். துக்காராம் தான் வாழ்ந்த காலத்தில், அனைவராலும் மதிக்கப் பெற்றார். பிராமணீயப் பகட்டுக்கு முன்பு, சூத்திரராகப் பிறந்த ஒருவர் சமயத்துறையின் வழிகாட்டியாக ஒத்துக்கொள்ளப் படவேண்டிய நிலையில் இருந்திருப்பாரென்றால், அவர் எவ்வளவு மதிப்போடு அவர் காலத்தில் வாழ்ந்திருக்கவேண்டுமென்று எண்ணிப் பாருங்கள். துக்காராம் அவர்கள், தன் வாழ்நாள் முழுவதும் தனக்குள் போராடிப் பெற்ற ஆன்ம அனுபவங்களை மக்களுக்கு விளக்கிக் கூறிப் புகழ் எய்தியவராவார்.

3. வாழ்க்கை வரலாறு

துக்காராமின் வாழ்க்கை வரலாற்றைச் செவிவழி மரபாகக் கேட்டுக்கொண்டு வருகின்றோம். அவ்வாறு வந்துகொண்டிருக்கும் துக்காராமின் வாழ்க்கை வரலாற்றில் கட்டுக்கதைகள் மிகுதியாகப் புகுந்துள்ளன. மக்களால் ஆர்வமாக நம்பப்பட்டுவரும் அக்கட்டுக்கதைகளினின்று துக்காராமின் வாழ்க்கை வரலாற்றுக்குப் பயன்படும் நம்பகமான தகவல்களைப் பிரித்து எடுப்பது எளிதான செயலல்ல; எந்த வகையிலும் முடியாத ஒன்றாகும். துக்காராம் வாழ்க்கையை அறிவதற்குரிய தலையான ஆதார நூலாக இருப்பது பக்த லீலாம்ருதம் (திருத்தொண்டர்களின் வாழ்க்கை வரலாறுகள்) என்பதாகும். அந்த நூல், துக்காராம் மறைந்து சுமார் 125 ஆண்டுகளுக்குப் பிறகு, அதாவது கி. பி. 1774ஆம் ஆண்டில் மஹிபதி தாஹ்ரராபத்கர் (Mahipathi Tahrabadkar) என்பவரால் எழுதப்பெற்றது. இது, மிகவும் நுணுக்கமான விவரங்களைக்கொண்ட துக்காராம் வாழ்க்கை வரலாற்று நூல்; ஆனால், துக்காராமோடு நேர்முகத் தொடர்பில்லாத ஒருவரால் எழுதப்பெற்ற நூலாகும். அந்த நூலானது, துக்காராமை ஒரு திருத்தொண்டராக,—திருத்தொண்டர்களுக்கெல்லாம் மாதிரியாக விளங்கும் ஒரு திருத்தொண்டராகப் படம்பிடித்துக் காட்டியுள்ளது. துக்காராம் மறைவிற்கும் அந்த நூல் எழுதப்பெற்ற காலத்திற்கும் இடைப்பட்ட 125 ஆண்டுக்கால இடைவெளி, மரியாதைக்குரிய பெயர்தாங்கிய அத் துக்காராமைச் சுற்றிக் கட்டுக்கதைகள் புனைவதற்குப் போதுமான வாய்ப்பை நல்கியது. அவர் வரலாற்றை மிகப் பெரிய அளவில் நமக்குத் தந்திருக்கும் மஹிபதி அவர்களோ, தான் எழுதிய அப் பெரிய நூலில், அந்த நூலுக்கான சான்று ஆதாரங்களை எங்கிருந்து பெற்றார் என்பதற்கான ஒரு சிறு தகவலைக்கூடத் தரவில்லை. பெயர் தெரிய இயலாத எழுத்தாளர்கள் பலர் எழுதிய நூல்களிலிருந்து திரட்டிய செய்திகளை அடிப்படையாகக்கொண்டு, அப் பெரிய நூலை மஹிபதி அவர்கள் எழுதியிருக்கக்கூடும். மஹிபதி அவர்கள் எழுதியுள்ள நூலில் பல தகவல்கள் ஐயத்திற்கிடமானவையும் பொருத்தமற்றவையும் ஆகும். சமயச் சார்புகொண்ட பொய்யான புகழுரைகளிலிருந்து பிறப்பெடுத்த அத்தகைய செய்திகள் மஹிபதியின் நூலில் இடம் பெற்றுள்ளன.

துக்காராம் வாழ்க்கையை அறிந்துகொள்வதற்கு மற்றுமொரு இன்றியமையாத கருவூலமாகத் திகழ்வன அவரது பண்நிறைந்த பாசுரங்களாகும். அவர் பாடியருளிய பாசுரங்கள் சிலவற்றில் அவரது வாழ்க்கை நிகழ்ச்சிகளை அறிந்துகொள்வதற்கான குறிப்பு கள் இலைமறை காய்போல இடம்பெற்றுள்ளன; அப்பாசுரங்களில் அவர் வெளியுலகில் அனுபவித்த இன்னல்களையும், தன் மனத்திற் குள்ளே தான் நிகழ்த்திய போராட்டங்களையும் காணலாம். உலக வாழ்வில் ஓடிஓடி உழன்றதையும், மனத்தகத்துப் பெருந்துயர் இடும்பையில் உழன்று வாடி வதங்கியதையும் ஒருசேர அப்பாசுரங் களில் காணலாம். மஹிபதி அவர்கள் எழுதியிருக்கும் வரலாற்றுக் குறிப்புகளுக்கு ஒத்துப்போவதுபோல் சில பாசுரங்கள் உள்ளன. அவ்வாறு ஒத்திருக்கக்கூடிய பாசுரங்களைப்பற்றிக்கூட ஐயப்பாடு உண்டு; அப்பாசுரங்கள் அவர் பாடியவைதாமா என்ற ஐயம் உண்டு. ஏனென்றால், அவர் பாடல்களையெல்லாம் உள்ளடக்கிய நம்பத்தக்க பதிப்பு நூல் கிடைக்காததே இதற்கெல்லாம் காரண மாகும். எப்போதெல்லாம் துக்காராம் உள்ளத்தில் பாடவேண்டு மென்று தோன்றியதோ, அப்போதெல்லாம் அவர் பாடல்களைப் பாடியிருக்கிறார். பாடவேண்டும் என்று திட்டமிட்டுக்கொண்டு உட்கார்ந்து பாட்டுகள் செய்ததாகத் தெரியவில்லை; அதனால் தான், அவர் பாடல்களில் அந்த அந்த நேரத்தில் தோன்றிய உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் சூழல்களையும் பிரதிபலித் துள்ளார். இடத்திற்கும் காலத்திற்கும் சூழ்நிலைகளுக்குமேற்பச் செஞ்சொல்லால் பாமாலைகள் கட்டியிருக்கிறார். அவர் அவ்வாறு கட்டிய தெய்வ நன்மாலைகள்தாம் அவரது பாசுரங்கள்.

துக்காராம் பாடல்கள் என்று கூறப்பட்டுவரும் பாடல்களைக் கூர்ந்து ஆராயும்பொழுது, அவை முழுமையும் துக்காராமின் பாடல்கள் என்று நம்மால் உறுதியாகச் சொல்லமுடியாத நிலையி லுள்ளன. அவை துக்காராமின் தூய கலப்படமில்லாத பாடல் கள் என்று நம்பிக் கருத்துக்கூறும் நிலையில் நாம் இல்லை. அவர் பாடியருளிய பாசுரங்களையெல்லாம் ஒருசேரவைத்துப் பார்க்கும் போது, அவை எந்த ஒழுங்கில் பாடப்பெற்றன என்றும் அறிய முடியவில்லை. எது எப்படியாயினும், அவரைப் பொறுத்தவரை யில், அவர் பாடத்தோன்றிய நேரங்களிலெல்லாம், உணர்வு வயப் பட்டு உணர்ந்த கருத்துகளைப் பாடல்களாகப் பொழிந்திருக்கிறார் என்று கொள்ளவேண்டியுள்ளது. உள்ளுணர்வால் உந்தப்பெற்றுப் பாடிய பாசுரங்கள் ஆதலால், அப்பாடல்களில் அவருடைய அகமன வாழ்க்கைக் கோலங்கள் அனைத்தையும் காணலாம். அவருடைய முழுமையான ஆன்மீக வரலாற்றை அப்பாசுரங்கள்மூலம் நாம் காணலாம்.

துக்காராமின் வாழ்க்கை வரலாற்றை அறிய வேறு ஒரு வழியும் உண்டு. பஹினுபாய் (Bahinabai) என்ற பெண்பாற் புலவர் ஒருவர் உண்டு. அவர் துக்காராம் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர்; சமகாலப் புலவர். துக்காராமின் கடைசிக்கால வாழ்க்கையைத் தன் கண்ணுல் கண்டவர். அவர் எழுதிய கவிதைகளே வரலாற்றுக் கருவூலங்களாகக்கொண்டு, துக்காராம் வாழ்க்கையை ஓரளவு அறியலாம். துக்காராம் அவர்கள், அவர் வாழ்ந்த காலத்தில் ஆன்மீக உலகிற்கு நாயகராக விளங்கினுர். அவர் அத்தகைய தலைமைச் சிறப்போடு ஆன்மீக உலகில் வாழ்ந்த அதே காலத்தில் பல கவிஞர்களும் வாழ்ந்தனர். அச்சமகாலக் கவிஞர்களின் கவிதைகளிலும் துக்காராமின் வாழ்க்கை வரலாற்றுக்கான மூலங்கள் இருக்கின்றன. இவ்வளவு வரலாற்று மூலங்கள் கிடைத்தாலும், கிடைத்திருக்கும் மூலங்கள் அனைத்தும், அவர் ஆன்மீக உலகின் தலைவராகத் திகழ்ந்த காலத்துக்குரியவைதாம். வரலாற்று மூலங்களை வழங்கிய கவிஞர்கள் அனைவரும், அவர் ஆன்மீக உலகின் நாயகனுக ஆவதற்குப் பட்ட அல்லல்கள் நிறைந்த காலத்தைப் பற்றிய தகவல்கள் எவற்றையும் தரவில்லை. அக்கவிஞர்களோ, துக்காராமின் குழந்தைப் பருவத்திய நிகழ்ச்சிகளைப்பற்றிக் கவலைப் பட்டதாகவும் தெரியவில்லை. அச்சமகாலப் புலவர்களின் பாடல்களோ கருவினுருவாகி வந்து வயதளவிலே வளர்ந்து இளமைப் பருவத்தை அடைந்த காலம்வரையிலுள்ள வாழ்க்கையின் நிகழ்ச்சிகளையும், ஆன்மஞானம் பெறுவதற்குமுன் வாடிவதங்கி ஓடி உழன்ற காலப் பகுதியின் நிகழ்ச்சிகளையும்பற்றி எவையுமே சொல்லாதவைகள்தாம்.

திரு. வி. எஸ். பெந்தரே என்பவர் துக்காராமின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்; அவர் அண்மைக் காலத்தைச் சார்ந்தவர்; பன்னூல் புலமையும் நுண்மாண் நுழைபுலனும் வாய்க்கப் பெற்றவர்; உண்மையல்லாத கட்டுக்கதைகளின்பாலும் விசித்திரமான நிகழ்ச்சிகளின்பாலும் காட்டும் மோகத்தைத் தவிர்த்துக்கொண்டு, துக்காராமின் வாழ்க்கை வரலாற்றை அவர் எழுதினுர். இந்த நேரத்தில் நாம் ஒன்றை நினைவில் கொள்ளவேண்டும். துக்காராமின் வாழ்க்கையை அறியும் பொருட்டு, நம்பத்தகுந்த நிச்சயமான தகவல்களைத் தேடி ஆராயும்போது, துக்காராமைப்பற்றித் தொன்றுதொட்டு வழங்கிவரும் கதைகளிலுள்ள செய்திகள் அனைத்தையும் ஒரேயடியாக ஒதுக்கிவிடவும் முடியாது; ஏனென்ருல், அச் செய்திகள் வலிந்துபெற்றதாகவும் உண்மையல்லாதவையாகவும் இருந்தபோதிலும், அவை யாவும் துக்காராமின் செம்மாந்த நிலையைக் குறிப்பிட்டுப் பேசவந்தவைகளே அச்செய்திகள் என்பதை நாம் அறியவேண்டும்.

அண்மைக்கால ஆராய்ச்சி முடிவின்படி துக்காராம் என்பவர் 'புனே'க்கு அருகேயுள்ள 'தெகு' என்ற ஒரு சிறிய கிராமத்தில் கி. பி. 1608ஆம் ஆண்டில் பிறந்தார் என்று சொல்லப்படுகிறது. அக்கிராமம் இந்திரயானி நதிக்கரையில் அமைந்துள்ளது. அவர் பிறந்த குடும்பம் சமுதாய நன்மதிப்பைப்பெற்ற ஒரு குடும்பமாகும். ஏழு தலைமுறைகளுக்கும் மேலாக அவர்கள் குடும்பத்தினருக்குப் பாசன வசதிபெற்ற 15 ஏக்கர் நிலம் இறையிலி நிலமாக ('இனுமாக') வழங்கப் பெற்றிருந்தது. அப்பாசன வசதியோடு கூடிய 15 ஏக்கர் நிலமும் அவர்கள் மூதாதையர்க்குச் சொந்தமான இல்லத்தைச் சுற்றியே அமைந்திருந்தது. அம் மூதாதையர்க்குரிய பண்ணையில் விட்டல்பெருமானுக்குக் கோயில் ஒன்று இருந்தது; பலசரக்குக்கடை ஒன்றை அவர்கள் நடத்திவந்தனர். பெரும்பாலும் வாரச்சந்தை நாள்களில் அம்மளிகைக்கடை வியாபாரத்தை நடத்திவந்தனர். அச்சிறிய கிராமத்தில் பணத்தைக் கொடுத்து வாங்கும் வட்டிக்கடை ஒன்றையும் சிறிய அளவில் நடத்தி வந்தனர்.

அவருடைய தந்தையார் பெயர் போல்ஹோபா (Bolhoba); தாயார் பெயர் கான்கை (Kankai). அவருடைய பெற்றோருக்கு மூன்று ஆண் குழந்தைகள்; இரண்டு பெண் குழந்தைகள்; ஐந்து குழந்தைகளில் இரண்டாவது குழந்தையாகப் பிறந்தவர் துக்காராம். துக்காராம் தன்னை ஒரு சூத்திர வேளாளன் (குன்பி) என்றே அழைப்பார். 17ஆம் நூற்றாண்டில் பிராமணர்கள் கற்பித்திருந்த மரபுப்படி (அதாவது 17ஆம் நூற்றாண்டைய புரோகித அமைப்பின்படி), பிராமணரல்லாத அனைவருமே சூத்திரர்கள் என்று அழைக்கப் பெற்றனர் (தற்காலத்தில் வழங்கப்பெறும் 'மராத்தி' என்ற சொல், மகாராஷ்டிர மக்கள் அனைவரையும் உள்ளடக்கிய ஆட்சி அரசியலின் அடையாளச் சொல்லாகும். மராத்தி என்ற தற்காலச் சொல்லில் மகாராஷ்டிரத்தில் வாழும் பல்வேறு சாதிகள்—சாதிகளின் உட்பிரிவுகள் எல்லாமே அடங்கும். அது, ஆட்சி அரசியலின் அடையாளச் சொல்). துக்காராமின் குடும்பப் பெயர் 'மொரே' (Moré) என்பதாகும். அது ஒரு மராத்திய கிளையின் பெயராகும் (அதாவது ஒரு கோத்திரப் பெயர்). துக்காராமின் முன்னோர்கள் 'கோசவி' உட்பிரிவைச் சார்ந்தவர்கள். கோசவிகள் என்போர் இல்லறத்தில் வாழுபவர்கள்; உயர் சமயநெறியில் நம்பிக்கையுடையவர்கள், ஏனைய இந்து மக்களைவிடத் தனிப்பாங்கில் வாழ்கிற ஒரு பிரிவினர். கோசவி உட்பிரிவைச் சார்ந்தவர்களாக அவர்களிருப்பினும், துக்காராமின் முன்னோர்கள் ஏழு தலைமுறையாக விட்டல்பெருமானின் பக்தர்களாகவே இருந்துவந்துள்ளனர். அதனால் துக்காராம் குடும்பத்

திற்கு, நாமதேவர், ஞானதேவர், ஏகநாதர் ஆகியோரால் போற்றிப் பாதுகாக்கப்பெற்ற வரகரி இயக்கத்தோடு பாரம் பரியமாகத் தொடர்பு இருந்துவந்துள்ளது. அந்த இயக்கத்தோடு அவர் குடும்பத்திற்குப் பரம்பரையான தொடர்பு இருந்த காரணத் தால், அவர் தன்னுடைய இளமைக் காலத்தில் வரகரி இயக்கத்திற் குரிய இலக்கியங்களைக் கட்டாயம் படித்திருக்கவேண்டும். மேலும், 'கோசவி' குடும்பத்தில் பிறந்து வளர்ந்த காரணத்தால், சமக் கிருதத்திலுள்ள பகவத்கீதையையும் பாகவதத்தையும் அவர் கட்டாயம் படித்தே இருக்கவேண்டும்.

பெற்றோர்களின் முழு அன்பையும் துக்காராம் பெற்றிருந்தார் என்பதையும், துக்காராம் குடும்பத்தின் அப்போதைய பொருளா தாரநிலை மிக நன்றாகவே இருந்தது என்பதையும் அவர் பாடல்கள் மூலம் அறியலாம். குழந்தைப் பருவத்தில் எல்லாக் குழந்தைகளை யும் போலவே அவரும் நாட்டு நடப்புக்கேற்ப ஆடு மாடுகளை மேய்த்திருக்கக்கூடும்; கிராமக் குழந்தைகள் என்றால் பண்ணைத் தொழில் செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்; கிராமக் குழந்தைகளைப்போலவே துக்காராமும் இளமைக் காலத்தில் தங்கள் பண்ணையைக் கவனிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்க வேண்டும். சமய, சமுதாயப் பழக்க வழக்கங்களைத் தனக்கேயுரிய முறையில் வைத்துக்கொண்டிருந்த அக் கிராம வாழ்க்கையானது, நன்னடத்தையை உருவாக்கி வளர்க்கும் முயற்சியில் ஈடுபடுத்தியது. இந்து வாழ்க்கைநெறி பற்றி அவர் செவிவழியாகக் கேட்டுப் பெற்றிருந்த அறிவானது, அவரது தத்துவ வளர்ச்சிக்கும் கவித்துவ நலனுக்கும் துணைபுரிந்தது. அழகான இந்திரயானி ஆறு, கூட்டுக் குடும்பத்திலுள்ள அன்பான உறவுகள், அழகிய படம் போன்ற நாட்டுப்புறச் சூழல், ஒரு கிராமப் பையனுக்குரிய கட்டுப்பாடில் லாத வாழ்க்கை—இவை அனைத்தும் துக்காராமின் மனத்தில் எண்ணச் சுவடுகளை ஆழமாக ஏற்படுத்திவிட்டுப் போயிருந்தன. கிராமிய விளையாட்டுகளோடு அவருக்கிருந்த நெருக்கமான தொடர்பு, அவருடைய பாசுரங்களில் அடிக்கடிச் சுட்டப்பெறு கிறது. அன்றாட வாழ்க்கையிலிருந்து எடுக்கப்பெற்ற நிகழ்ச்சிகள், இழிந்த பேச்சுகள், பிடிவாதம், நாட்டுப்பற்று, உலகின் மீதுள்ள பரிவு, வாணிகம்பற்றிய அறிவு, உழவுத்தொழில், சமயச் சடங்கு கள், இயற்கையை உற்றுநோக்குதல் ஆகிய இவையனைத்தும் அவர் பாடல்களில் கலந்து ஒன்றோடு ஒன்று இணைந்துள்ளன.

துக்காராமுக்குப் பதினேழு வயது நடக்கும்பொழுது அவர் பெற்றோர்கள் இறந்துவிட்டனர். மிக்க இளமைப் பருவத்திலேயே 'ருக்குமா' என்ற மங்கையை மணந்துகொண்டார். அவள்மூலம் அவருக்கு ஒரு மகனும் பிறந்துவிட்டான்; அவள் ஓர் ஆஸ்துமா

நோயாளி. ஆகையால், வெகு விரைவில் இரண்டாந்தாரமாக ஜீஜாபாய் என்ற பெண்ணை மணந்துகொண்டார். அவருடைய மூத்த சகோதரர் 'சஜி'யோ ஆன்மீக நாட்டம் மிக்கவர்; கோசவி கிளைக்குரிய சடங்குகளை வழக்கமாகச் செய்துகொண்டும் ஆன்மீகத்தைப்பற்றியே சிந்தனை செய்துகொண்டும் இருப்பவர் அவர்; அவருடைய மனைவி இறந்தவுடன், அவர் பிச்சையெடுத்து உண்ணும் 'உஞ்சவிருத்திக்காரராக' மாறிவிட்டார். அதற்குப் பின்பு அவர் வீட்டிற்குத் திரும்பவேயில்லை.

குடும்பத்தில் தொடர்ந்து நிகழ்ந்த பெருந்துன்ப நிகழ்ச்சிகள் அவரது வாழ்க்கையின் மகிழ்ச்சியான பகுதியைச் சுருங்கச்செய்து விட்டன; குடும்பத்தின் பாரமெல்லாம் அவர் தலையில் வந்து விழுந்தது. அவர் ஒருவரே பெரிய கூட்டுக் குடும்பத்திற்கு உணவு தந்து காப்பாற்றக்கூடியவராக ஆகிவிட்டபடியால், முதிர்ச்சி பெறாத அந்த இளம் வயதிலேயே பல குடும்பப் பொறுப்புகளையும் ஏற்று நடத்தினர். வேளாண்மைத் தொழிலையும் கவனித்தார்; வாணிகம் நடத்தும் பொறுப்பையும் எடுத்துக்கொண்டார்; பணம் வட்டிக் குக் கொடுத்து வாங்கும் தொழிலையும் அவற்றோடு சேர்த்துச் செய்தார். ஆனால், அவர் மனமோ வாணிகம் செய்வதில் படியவில்லை; அதனால், அத்தொழிலில் தோல்வியைத் தழுவினர். காலிகள் பலர் அவரை அடிக்கடி ஏமாற்றி அதன்மூலம் பணவிரயத்தை அவருக்கு உண்டுபண்ணியதாகக் கதைகள் வழங்குகின்றன. இவ்வாறு அவர் நடந்துகொள்வது அவருடைய மனைவி ஜீஜாபாய்க்கு மிக்க சினத்தை உண்டாக்கியது. இப்படியாக, அவர் வாழ்க்கை நடைபெற்றது. 1629ஆம் ஆண்டுவரை, துக்காராம் ஒருவழியாகத் தன் கடமையைச் செய்துகொண்டு வந்தார்; ஒரு விவசாயி ஆக, ஒரு பொதுவான கிராமத்தானக இருந்துகொண்டு, அவர் தனக்குரிய கடமையைச் செய்தார். கடமைகள் எல்லாம் ஓரளவு நல்ல படியாகவே நடந்துகொண்டிருந்தன. கொஞ்சகாலத்திற்குப் பிறகு 1629ஆம் ஆண்டுவாக்கில் அவர் வாழ்வில் பயங்கரமான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அந்த நிகழ்ச்சிகள் அவருடைய மன அமைதியை அடியோடு அழித்துவிட்டன.

நர்மதை நதிக்குத் தெற்கே, மேற்கிலும் தெற்கிலும் கொடுமையான பஞ்சம் ஏற்பட்டது. தக்காணம் முழுவதும் வெயிலின் வெம்மையால் வறண்டது; இரண்டு ஆண்டுகளாக அங்கு மழையே பெய்யவில்லை. ஆறுகள் வறண்டன; உணவுப் பண்டங்கள் மறைந்துபோயின; அந்த நாள்களில் போக்குவரத்து வசதிகள் குறைவாயிருந்த காலம். உணவு தானியங்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்பிவைப்பதென்பது நினைத்துப் பார்க்கமுடியாத ஒன்று.

பிஜப்பூர் முகலாய ஆட்சியினரின் எல்லைப்பகுதிகளைக்கொண்ட நிலப்பகுதிதான் துக்காராமின் கிராமத்தைச் சூழ இருந்த நிலப் பகுதியாகும். படைகள் சூறையாடியதன் விளைவாக ஏற்கெனவே அப்பகுதியிலிருந்த தோட்டங்களெல்லாம் அழிந்து பாலைவனம் போலக் காட்சியளித்தன. பெரும்பாலான கிராமங்கள் ஏற்கெனவே இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோய்விட்டன. அங்கிருந்த வெகுசில கழனிகளே பயிர்த்தொழில் செய்வதற்கு எஞ்சியிருந் தன. அவற்றைப் பயிர் செய்வதற்கு அவற்றைவிடக் குறைவான மக்களே அங்கு வாழ்ந்துகொண்டிருந்தனர். படைகளின் சூறை யாடல்களைத் தொடர்ந்து அப்பகுதியைப் பஞ்சம் வாட்டியது. இதுவரையிலும் மேற்கு இந்தியா கண்ட மிகக் கொடுமையான பஞ்சங்களில் அதுவும் ஒன்று; வாழும் மக்களோ பஞ்சம் காரண மாக அங்கு எண்ணிக்கையில் குறைந்துவிட்டனர்; கொடு விலங்கு களின் எண்ணிக்கை மிகுதியாகியது. ஓநாய்களோ பொறுக்கமுடி யாத ஆபத்துகளாக ஆகின; அவை கூட்டம் கூட்டமாகக் கிரா மங்களை முற்றுகையிட்டன. அவைகளை எதிர்த்துப் போராடும் திராணியற்றவர்களாக அங்கு வறுமையில் வாடி வாழ்ந்துகொண் டிருந்த உழவர்கள் இருந்தனர்.

பஞ்சத்தைத் தொடர்ந்து அங்குக் கொடிய 'காலரா' நோய் பரவியது. அக்காலப்பகுதியில் வாழ்ந்த வரலாற்று நூல் ஆசிரியர் களான அப்துல் ஹமீது லஹிரி, மிர்ஸா அமின், க்யூஸ்வினி போன்ருேர் அக்கொடிய பஞ்சத்தைத் தம் கண்ணுல் கண்டவர்கள்; அப்பஞ்சத்தை விவரமாகவும் மிகக் கொடூரமாகவும் தம் எழுத்து களில் சித்திரித்துள்ளனர். ஆயிரக்கணக்கான மக்கள் அப்பஞ்ச காலத்தில் உண்ண உணவின்றி உயிர்விட்டனர். நெஞ்சைப் பிளக் கும் துன்பங்களைச் சுமந்த மக்களைப்பற்றிய வருணனைகளைப் படிக் கும்பொழுது, அங்குள்ள எல்லாப் பகுதிகளிலும் அப்போது நிலவிய கொடுமையின் சிகரத்தை, சொல்லவொண்ணுப் பேரிடரை நாம் உணர்கிருேம். பஞ்சத்தைத் தொடர்ந்து பரவிய கொள்ளைநோய் மிக்க தீவிரத்துடன் சீறிப் பாய்ந்து பேரழிவை உண்டாக்கியது; அதன் விளைவாகக் கிராமம் முழுவதும் சுடுகாடுபோல் காட்சியளித் தது; தெருக்களெல்லாம் பிணக்குவியல்கள்; நெடுஞ்சாலைகள் எல் லாம் நடந்துபோகமுடியாத அளவிற்கு அழுகல் குப்பைகள்; தேவைக்கு ஏங்கி நின்ற அன்றைய வறுமை நிலையை வரலாற்று ஆசிரியர் அப்துல் ஹமீது லஹிரி மிக விளக்கமாகத் தன் எழுத்து களில் பதிவுசெய்து வைத்துள்ளார்; வறுமை நிலையின் உச்சத்தைக் காட்டியுள்ளார். மனிதர்கள் ஒருவரை ஒருவர் கொன்று விழுங்கும் கொடுமையின் உச்சத்தை ஓரிடத்தில் குறிப்பிடுகிருர். பிள்ளைப் பாசத்தையெல்லாம் மூட்டைகட்டிவைத்துவிட்டு, மகன் உடலைத் தின்ன விரும்பும் கொடுமை தாண்டவமாடியதாகக் குறிப்பிட்டுள்

ளார். பாசம் தோற்றுப்போய் ஊனுக்காக உயிரை வாங்கும் கொடுமை கோரதாண்டவம் ஆடியதை அவ்வாசிரியர் பதிவுசெய்துள்ளார். செழிப்புக்கும் செல்வக்குவியலுக்கும் பெயர் பெற்றிருந்த அந்த மண்ணில் உற்பத்திக்கான அறிகுறி எதுவும் இருப்பதாகத் தற்போது தெரியவில்லை என்கிறார்; வளமும் வசதியும் நிறைந்த அம்மண்ணில் வளரும் பயிர்களே தலைகாட்டமுடியாமல் வறண்டன என வரைந்துள்ளார். பீட்டர் மண்டி என்ற ஐரோப்பியப் பயணி ஒருவர் 1630 நவம்பரில் தக்காணத்தில் தங்கிப்போகவேண்டிய நிலை ஏற்பட்டது. எதிர்பாராதவிதத்தில் தங்கநேரிட்ட அந்த ஐரோப்பியப் பயணியுங்கூட, அத்தகைய கொடுமைகளைக் கண்டதாகவே எழுதியிருக்கிறார்.

இத்தகைய அச்சம் நிறைந்த காலப்பகுதியில், வாழ்க்கை வசதியுள்ள குடும்பத்தில் பிறந்து, கூச்சமும் உணர்வு நுட்பமும் வாய்ந்த வாழ்க்கையில் பழகிப்போன துக்காராமைப்போன்ற இளைஞன் ஒருவனின் துன்பத்தைச் சொற்களால் விவரிக்க இயலாது; கற்பனை செய்துதான் ஒருவர் பார்க்கமுடியும். பஞ்ச காலத்தில் மக்கள் பட்ட அவதியைத் துக்காராம் துயரந்தோய்ந்த சொற்களில் பதிவுசெய்துள்ளார்.

''தெய்வமே! மன்பதையே திடீரென மறைந்து போயிற்றே'' என்று ஓரிடத்தில் குறிப்பிடுகிறார்.

> ''நான் பார்க்கச் சகியேன்; அத்தகைய நெஞ்சை உருக்கும் புலம்பல் அது; அவர்கள் படும் துயருக்காக என் நெஞ்சம் வருந்தியது; அல்லற்பட்டு ஆற்றாது அழுது புலம்பும் மக்களின் படுதுயர் கண்டு பதறித் துடித்தேன்''

என்று குறிப்பிடுகிறார்.

துக்காராம் தான் பார்த்துவந்த பயிர்த்தொழிலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார்; செய்துவந்த வாணிகமும் நின்றது; அவருடைய ஆடு மாடுகள் தீவனமின்றிச் செத்தன; வாழ்க்கையின் நெருக்கடியைக் கண்கூடாகக் கண்டார்; தனது பதின்மூன்றும் வயதில் வாணிகத்தில் இறங்கியவர், 17ஆம் வயதில் பெற்றோர்களை இழந்தார்; அதைத் தொடர்ந்து உடனே மூத்த சகோதரனின் மனைவி காலமானார். மனைவியின் மரண அதிர்ச்சி தாங்கமுடியாத அவரது மூத்த சகோதரர் வீட்டைவிட்டே வெளியேறினார். வெளியேறிய அவரோ உஞ்சவிருத்தி செய்து பிழைத்தார்—பிச்சையெடுத்து சந்நியாசிபோல் பிழைத்தார். வீட்டைவிட்டுப்போனவர் போனவர்தான்; திரும்பவேயில்லை. துக்காராமுக்கு வாழ்க்கையில் மேலும் மேலும் தொடர்ந்து துன்பங்கள் வந்தன; தன்னுடைய இருபத்து ஒன்றும் வயதில் சொத்துகளையெல்லாம் இழந்து

திவாலாகி நின்றார்; அதாவது ஓட்டாண்டியாகிவிட்டார். அப்படி ஓட்டாண்டியாகிவிட்ட நிலையை மக்கள்முன் காட்டிக்கொள்ளத் தயங்கினார்.

அவருடைய மாமனார் அவருக்கு உதவ முன்வந்தார்; செய்து வந்த தொழிலைத் தொடர்ந்து கவனிக்க கொஞ்சம் பணத்தைக் கடனாகக் கொடுத்து உதவினார்; ஆனால், அந்தப் பணமும் போயிற்று; தன்னுடைய இளமைக் காலத்திலேயே ஒரு பெரிய குடும்பத்தின் பாரத்தைத் தாங்கவேண்டியவராக இருந்தார்; குடும்பத்தில், வறுமையின் கோரப்பிடியில் அகப்பட்டுக் கதறி அழும் குழந்தைகளைக் கண்ணால் கண்டார்; சோகம் கவ்விய முகங்களைப் பார்த்தார். குடும்பத்தில் வறுமையின் கோர தாண்டவத்தைக் கண்ணால் கண்டார்; அந்தக் கொடிய காட்சிகள் எல்லாமே, அவர் வாழ்க்கையின்மீது கொண்டிருந்த நம்பிக்கையை நிச்சயம் அழித்திருக்க வேண்டும். அந்தக் கொடுமையான காலப்பகுதியில்தான் அவருடைய முதல் மனைவி 'ருக்குமா' உண்ண உணவின்றி உயிர் துறந்தார்; அவள் தன் மரணப்படுக்கையில், ''சோறு, சோறு'' என்று கதறி அழுதுகொண்டே உயிரைவிட்டாள் என்று துக்காராம் பிற்காலத்தில் வருந்திக் குறிப்பிட்டிருக்கிறார். அவர் அடைந்த துயரத்துக்கு ஓர் அளவேயில்லை. முதல் மனைவி இறந்ததோடுமட்டுமல்லாது, அவரது மூத்த மகன் 'சந்துவும்' இறந்துவிட்டான். பசிப்பிணியென்னும் பாவி அவர் மகனையும் கவர்ந்துகொண்டான். அந்தக் காலக்கட்டத்தில் குடும்பத்தில் நேர்ந்த இந்த இழப்புகளையெல்லாம் இயல்பானவையென்றோ, தவிர்க்கமுடியாதவை என்றோ தத்துவப்போக்கில் எடுத்துக்கொள்ளும் மனநிலையில் வாழ்ந்தவரல்லர். சரியாக நான்காண்டுக் காலத்திற்குள் பல சாவுகளைத் தன் குடும்பத்தில் கண்டார். ஓட்டாண்டியாகிவிட்ட நிலை, வறுமை, அவமதிப்பு, தாழ்வுணர்ச்சி—இவையெல்லாம் வாழ்க்கையில் அவருக்கிருந்த பிடிப்புகளை ஓரேயடியாகச் சிதைத்துவிட்டன; வாழ்க்கையின்மீது அவருக்கிருந்த நம்பிக்கையை அடியோடு சிதைத்துவிட்டன.

வறட்சி நீங்கியது; பஞ்சகாலம் முடிவுக்கு வந்தது. நடைபெற வேண்டிய மற்றவைகளெல்லாம் இயல்பாக நடைபெறத் தொடங்கின. இந்த உலகப் பொருள்களாலும் பந்தபாசங்களாலும் வாழ்க்கைக்கு ஒரு பயனுமில்லை என்ற தெளிவைத் துக்காராம் பெற்றிருந்தபோதிலும், தொடக்கநிலையில் பல சூழல்களின் வற்புறுத்தல் காரணமாகப் பழையபடியும் குடும்பப் பொறுப்புகளைத் தாங்கினார்; அவற்றையெல்லாம் நிறைவேற்றினார். சுற்றுச் சூழல்களோடு கலந்துவிடாமல், பட்டும்படாமல் ஒருவாறு தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு வாழ்ந்த காலம் அது. அவருக்கு எதிலும் பிடிப்பில்லை;

வாழவேண்டும் என்பதற்காக வாழ்ந்தார். வாணிகத்திலும் பயிர்த் தொழிலிலும் கடுமையாக உழைத்தார். போக்கிரிகள் அவருடைய அப்பாவித்தனத்தைப் புரிந்துகொண்டு எப்படியெல்லாம் அவரை ஏமாற்றினார்கள் என்பதற்கு ஏராளமான கதைகள் இருக்கின்றன. துக்காராம் எளிதில் ஏமாந்தார்; குடும்பக் கடமைகளால் அடிக்கடி மனஞ்சோர்ந்தார்; மொத்தத்தில் சலிப்படைந்தார். அவருடைய மனம் மேலும் மேலும் தியானத்தையே நாடியது; ஆழ்ந்த சிந்தனைகளில் அடிக்கடி மூழ்கினார். அவர் மனம் சிந்தனைகளில் மூழ்க மூழ்கப் புறக் கடமைகளைப் புறக்கணித்தார்—வாணிகத்தைப் புறக்கணித்தார்; புறக்கணிப்பு மனநிலையில் எவற்றையும் பொருட்படுத்தவில்லை; சிந்தனை ஒன்றிலேதான் ஆழ்ந்துபோனார்.

அவர் ஆழ்ந்த சிந்தனைகளில் அடிக்கடி மூழ்கினார்; சிந்திக்கச் சிந்திக்கத் தான் வாழும் வாழ்வே பாவப்பட்ட வாழ்வு என்று எண்ணத் தொடங்கினார்; தான் வாழும் வாழ்வு குறைபாடுள்ளதுபோன்றும், மெய்யாகவே பாவம் செய்வதுபோன்றும் உணரத்தலைப்பட்டார். அவருக்குள் அப்படிப்பட்ட உணர்ச்சி தலைகாட்டியது; நடைமுறை உலகில் தான் அன்றாடம் செய்துவரும் செயல், தன் மனம் உணரும் உணர்ச்சி—அச்செயலுக்கும் உணரும் உணர்ச்சிக்குமிடையே கிடந்து தவியாய்த் தவித்தார்; செயலுக்கும் உணர்ச்சிக்குமிடையே ஒரு சமநிலையை உருவாக்கப் பெரும்பாடுபட்டார். அந்தக் காலப் பகுதியில், அவரடைந்த துயரங்களையெல்லாம் அவர் பாடிய உணர்ச்சிமிக்க பாடல்களில் காண்கிறோம். அவருடைய பாடல்களில் மிகச் சிறந்தவையென்று கருதப்படுபவை, அத்துயரத்தை வெளிப்படுத்திய கவிதைகள்தாம்.

'குடிசெய்வல் என்று குடும்பத்திற்கு உழைத்தபோது,
சம்சார நெருப்பால் வாடிவதங்கினேன் நான்;
ஆகவே, இறைவா!
உன்திருவடிகளைத் தீண்ட நினைக்கிறேன்,
என்னிடம் வா, என் அன்னையே!'

என்று ஒரு பாடலில் குறிப்பிடுகிறார்.

இது நான் பிறந்த நாடல்ல,
எதிர்பாராத விதமாக இங்குவந்து சேர்ந்தேன் யான்,
அலைந்து திரிய;
என்னுடையதென்று,
எதை,
நான் உரிமை கொண்டாட முடியும்?
. . . . . . நானே இங்கு ஒரு அந்நியன் . . . . . .

—இவ்வாறு, தான் உணர்ந்ததைத் தான் பிறந்த இடத்திலிருந்து கொண்டே சொல்கிறார்.

'அபங்' என்றழைக்கப்பெறும் அவருடைய பண்ணார்ந்த பாசுரங்கள் பலவற்றில் அவரே தெரிவித்திருப்பதுபோல, தன் வாழ்க்கையைத் தானே அமைதியாகப் பின்னோக்கி எண்ணிப் பார்க்கக் கற்றுக்கொண்டிருக்கிறார்.

> 'நன்றுசெய்தனை, ஓ இறைவா! நான் ஓட்டாண்டி யானேன்;
> நன்றுசெய்தனை, இந்தப் பஞ்சம் என்னை வதைத்து விட்டது;
> கழிந்ததற்கு இரங்கல் உனைத் தியானிப்பதை உறுதியாகக் கைக்கொண்டது!
> வாழ்க்கையோ கசந்து வாந்திஎடுக்கும் தன்மையதாயிற்று.
> நன்று செய்தனை, ஓ இறைவா! வாய்த்த மனைவி ஓர் அடங்காப்பிடாரி!
> நன்று செய்தனை, எல்லோர் முன்பும் எனக்கு இந்தத் துன்பம்;
> நன்று செய்தனை, அவனியில் யானோ அவமதிப்புற்றேன்;
> நன்று செய்தனை, ஆடுமாடுகளும் என் அனைத்துச் செல்வமும் அழிய நின்றேன் யான்.
> நன்று செய்தனை, பொதுமக்கள் அவமதிப்பைப் பொருட்டாகக் கருதேன் யான்;
> நன்று செய்தனை, உனக்கு யான் சரணென ஒப்புவித்தேன் எனை, ஓ என் இறைவா!
> நன்று செய்தனை, உனக்கெனக் கோயில் ஒன்று கட்டினேன் யான்;
> பெண்டு பிள்ளைகளைப் பேணேன்; புறக்கணித்தேன்.
> ஏகாதசி நன்னாளில் ஏற்குமிவ்வுறுதி, இனிது;
> காய்ந்த வயிறொடு கங்குல் முழுவதும்
> கண்விழித்திருக்க இயலும் என்றால்'

என்றார் துக்கா.[3]

---

3 வரே ஜா^{4}லே தே^{3}வா நிதா^{4}லே தி^{3}வாலே ।
வரி வா து^{3}ஷ்காலே பீடா^{3} கேளீ. ॥
அநுதாபே துஜே^{4} ராஹிளே சிந்தன் ।
ஜா^{4}லா ஹா வமன் சம்வஸார். ॥
வரே ஜா^{4}லே தே^{3}வா வாஇல் கர்க்கசா ।
வரீ ஹோ து^{3}ர்த^{3}சா ஜனமத்^{4}யே ॥
வரே ஜா^{4}லே ஜகீ^{3} பாவலோ அபமான் ।
வரே கே^{3}லே த^{4}ன் டோ^{4}ரே கு^{3}ரே ॥
வரே ஜா^{4}லே நாஹீ த^{4}ரிலோ லோகலாஜ் ।
வரா ஆலோ துஜ் சரண் தே^{3}வா ॥
வரே ஜா^{4} லேதுஜே^{4} கேலே தே^{3}வா இல் ।
லேகரோ பா^{3}இல் உபேக்ஷிலீ ॥
துகாம்ஹணே வரோ வ்ரத ஏகாதசீ ।
கேலே உபவாஸீ ஜாக^{3}ரண் ॥

'மனைவியிடமிருந்தும் மக்களிடமிருந்தும்
மற்றுமென் சகோதரர்களிடமிருந்தும்
என்னை, நான் விடுவித்துக்கொண்டேன்;
ஐயத்திற் கிடமின்றி
அறைகிறேன், யானோர் முட்டாள்,
அதிருஷ்டமில்லா இழிஞன் யான்;
மக்கள்முன் நடமாடும் மாண்பினை இழந்தேன்;
ஆகவே, புகலிடந்தேடிப் புகுந்தேன் காட்டினுள்;
ஆகவே, அடைந்தேன் தனிமை; எனக்கது இனித்தது.
இருப்பது போலவே இருக்கட்டும் மக்கள்,
பார்க்கும் பொழுது அவர்க்குப் பகரவேண்டியது,
கடவுள் உம்மைக் காப்பாராக,
வாழி! போய்வா!—என வழங்குவ தொன்றே;
அவர்களோடு பொழுது போக்க,
யாருக்கு இங்கே நேரமிருக்கிறது?
அவர்கள்,
அனைத்து வகையான வேடிக்கைச் செயல்களிலும்
ஆட்பட்டுக் கிடப்பவர்;
வாழ்க்கை நடவடிக்கைகளினின்று,
வந்துவிட்டேன் உடனே, வெளியே யான்'
என்று துக்கா சொல்கிறார்.

சாதியில் நான் சூத்திரனாகப் பிறந்தேன்,
என் பங்குக்குரிய எல்லாவற்றையும்
கடைப்பிடித்து ஒழுகினேன்,
என் குடும்பத்தில் வழிபட்டு வரக்கூடிய
இந்த விட்டல்பெருமானையே,
தொடக்க முதல் வழிபட்டேன் யான்;
தாயுந் தந்தையும்,
தம் பயணத்தை முடித்தபோது,
வாழ்க்கை நிகழ்ச்சிகளால் பெரிதும் துன்புற்றேன்;
வந்த பஞ்சமோ!
என்னிடமிருந்த செல்வத்தையெல்லாம் இழக்கச் செய்தது,
வறுமை வந்தது,
வாழ்க்கைத் துணைவியோ—
மரணப் படுக்கையில்,
'சோறு, சோறு' எனக் கதறிக்கொண்டே கண்ணை மூடினாள்;
வெட்கப்பட்டேன்;
வேதனை வருத்த வெம்பி நின்றேன்;
வாணிகத்திலும்,
வளத்தை இழந்ததால் வருந்தி நின்றேன்;

விட்டல்பெருமான் வீற்றிருந்த கோயில்
அழிபாட்டோடு அழகற்றிருந்தது;
அதைக்
கட்டவேண்டுவது கடனென உணர்ந்தேன்;
தொடக்கத்தில்,
ஏகாதசி நாளில் மட்டுமே
கீர்த்தனை செய்தேன்;
ஆனால், பின்னரோ,
நடைமுறை உலகில் மனம் பதிய மறுத்தது.
ஆகவே,
அருள்தொண்டர் சிலரின் அருளிச் செயல்களை
முழு நம்பிக்கையோடும், முழு மரியாதையோடும்,
மனப்பாடஞ் செய்து, மனத்தில் இருத்தினேன்;
தூய உள்ளத்தோடும்,
ஈடுபாட்டுணர்வோடும்,
கீர்த்தனைப் பாக்களின் இறுதியில் இடம்பெறும்
மடக்கி மடக்கி வரும்
மடக்கு வரிகளை மட்டுமே பாடினேன்;
அருளாளர்களின் அவ்வடிகள் சுரக்கும்
அமுதத்தைச் சுவைத்தேன்;
மெள்ள மெள்ளவே உள்ளம் புகுந்தன,
வெட்கமுற்றிலேன் அவ்விரைவின்மை குறித்து;
ஒல்லும் வகையால் ஓவாது பிறர்க்கு
நல்லது சிலதை நான் செய்து நின்றேன்;
எவ்வகை இடர்கள் எதிருற்ற போதும்
கவலைப்படாது, அக்காரியம் செய்தேன்.
இப்பணி செயும்போது,
எதிர்ப்படும் நண்பர்கள் எடுத்துக்கூறிய
அறிவுரை தமக்குக்
காதுகொடுத்துக் கேட்டலைத் தவிர்த்தேன்;
உலக வாழ்க்கையை உன்னி உன்னியான்,
மனநோயாளியாய் மாறிப் போனேன்;
உண்மையெது பொய்யெது
எனத் தடுமாறி நிற்கையில்,
என் மனம் கூறியதையே சரியெனக் கொண்டேன்;
பெரும்பான்மையோர் கருத்துக் குறித்து,
எப்போதும் யான், கவலைப்படாதவன் ஆனேன்.
என்குரு எனக்குக் கனவில் வந்து
கனிவுடன் அளித்த கட்டளைகளையே
ஏற்புடையதாக ஏற்று நடந்தேன்.

அதற்குப் பிறகு,
பாக்கள் புனையத் தூண்டப் பெற்றேன்;
அதனைச் செய்தேன், விட்டல்பெருமானிடத்து முழு
நம்பிக்கையோடு;
தடையதிகாரம் அடியென விழவே,
எழுதுவதிலிருந்து தவிர்க்கப் பெற்றேன்;
இவ்வாறு ஏற்பட,
எந்தன் உள்மனம்,
கொஞ்ச காலத்திற்குத் துயரில் தோய்ந்தது;
எந்தன் கவிதைகள்
ஆற்றில் மூழ்கடிக்கப் பெற்றன;
கடவுளின் இல்லக் கதவின் அருகே
உட்கார்ந்திருந்தேன் உண்ணுநோன்புடன்;
கடைசியாகக் கடவுள் வந்து
தேறுதல் கூறி ஆறுதல் அளித்தார்.
இவ்வாறு விரிப்பின் என்கதை பெருகும்;
ஆகவே,
சுருக்கமாகச் சொல்லுவேன் இனி:
இப்பொழுது,
இருப்பதை வைத்தே எந்தன் திட்டமும்;
எதிர்காலத்தில் என்ன நிகழும்?
யாரே அறிவார்?
இறைவன் ஒருவனே எல்லாம் அறிவான்.
ஒன்று மட்டும் உறுதியாகும்,
கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.
பக்தனை எப்பொழுதும்
பரம்பொருள் புறக்கணியாது,
இது உறுதி, உறுதி;
கடவுளோ மிக்க கருணையுள்ளவர்
அதனை யானே அனுபவித்துணர்ந்தவன்;
எந்தன் வாழ்வில் ஈட்டிய சொத்தெலாம்
இதுவே யாகும் என்கிறார் துக்கா;
விட்டல்பெருமான் பேசுவிப்பது எதுவோ,
அதையே யான் பேசுகிறேன் எனச்
சொல்லிச் செல்கிறார்; துக்கா அவர்கள்.
எந்தன் மனைவி இயற்கையெய்தினாள்;
யான் விடுதலை யுற்றேன்;
மாயையிலிருந்து விடுதலை செய்தார்—
இறைவன் என்னை;
பந்தம் அறுந்தது—நன்று, மகனும் மறைந்தான்;

இறைவர் எனக்குப்
பாசத்திலிருந்து விடுதலை தந்தார்,
என் தாய்
என்னைப் பார்த்துக்கொண்டே இறப்பைத் தழுவினாள்;
அன்னை மறைந்தாள் அவனியிலிருந்து,
வாழ்வில் கொண்ட—
அக்கறை ஆர்வம் அனைத்துமே மறைந்தன,
எனத் துக்கா சொல்கிறார், துயருறு மொழியில்.

துக்காராமிற்கு வாழ்வில் துறவு மனப்பான்மை வருவதற்குப் பல காரணங்கள் உண்டு. பஞ்சத்தின் கொடுமை ஓர் உடனடியான காரணம் என்று கருதினாலும், அதுமட்டுமே சரியான காரண மாகாது. மற்றும் பல காரணங்கள் உண்டு. அந்நிய ஆட்சியாளர்களால் நாளுக்கு நாள் ஏற்பட்டு வந்த சமுதாயச் சீர்குலைவுகள், தன்னைச் சூழ்ந்துள்ள உலகில் எல்லாத் துறைகளிலும் பாசி போலப் படர்ந்து கிடந்த ஏற்றத் தாழ்வுகள், இதயத்தைக் கசக்கிப் பிழியும் சமுதாயத்திலுள்ள வறுமை, தன் குடும்பத்திற்குள்ளே தொடர்ந்து ஏற்பட்ட சாவுகள்—குறிப்பாக, அவரது குடும்பத்தில் அவர் மனைவியும் மகனும் இறந்த கொடுமை—இவையெல்லாம் ஒன்று திரண்டு அவருடைய மென்மையான மனத்தை வன்மையான புயல்போல் அலைக்கழித்தது. துன்பங்களுக்குப் பழக்கப் படாத அவரது எளிய மனம், அக் கொடும்புயலில் சிக்கித் தவித்தது. அவர் இதயத்தில் புயல் வீசியது; அமைதி இழந்தார்; அமைதி இழந்தமைக்கான காரணங்களைக்கூட அறியமுடியாத அப்பாவியாக இருந்தார்.

'வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவைபோல்' இருந்து கலங்கிய துக்கா சொல்கிறார்:

துன்பத்திற்கு யாரே துணையாவார்?
எந்த வழிகாட்டியின் துணையோடு நான் எண்ணிப் பார்க்க முடியும்?
என் இதயத்திற்கு ஆறுதல் கூறுவோர் யாருளர்?
இவ்வுலக வாழ்க்கையை உதறித் தள்ளினேன் யான்,
பார்மிசை நிலவும் வாழ்க்கையைப்
பழிப்பது என் பங்காய் அமைந்தது;
எனது என்று இருந்த கனியை எய்தினேன்,
எய்தாதொழிந்தேன் ஏனையவற்றை;
மனமே!
மற்றவர் கருத்தொடு ஒத்துப் போதலை மனங்கொளவில்லை.
வாழ்க்கைத் துணைவியாய் வந்த மனைவியோ,
வாழ்வில் துணைசெய வந்த புதல்வர்கள்—

எல்லாருங் கூடி, என்னைப் பார்த்து,
எள்ளல் செய்தனர்;
காலத்தை வீணே கழிப்பவர் என்றும்,
சோம்பித் திரிபவர் துக்கா என்றும்,
சொல்லால் சுட்டனர், அச்சுற்றத்தார்கள்.[4]

தன்னுள்ளே அமைதியின்மை படிப்படியாகத் தளிர்விடுவதைக் காணத் தொடங்கினார்; பந்தபாசங்களும், சொத்து சுகங்களும்—எல்லாமே நிலையில்லாதவை என்று தெளிந்தார். வாழ்வின் வெம்மையில் வதங்கிய அவர் மனம், உண்மையை நாடியே உழன்றது. இந்திய மக்களுக்கே இயல்பாக உள்ள மறுமையைப் பற்றிய சிந்தனை, அவரையும் தொடர்ந்து சென்று பற்றத் தொடங்கியது. அவர் குடும்பத்தில் வாழையடி வாழையாக இருந்துவரும் சமயநெறியும், கோசவிநெறியும், அளவில்லா ஆனந்தத்தை நாடி, வீட்டை விட்டே விலகிச் சென்ற அவர் அண்ணாவின் பெருவேட்கையும்—ஆக, எல்லாமாகச் சேர்ந்து, அவர் மனத்தை நிரப்பின. அவருடைய சகோதரர்பற்றிக் குறிப்பிடும்போது,

'இத்தொல்லை தரும் உணர்ச்சி யனுபவத்தை,
காட்சியாய்த் துலங்கும் உந்தன் தெய்வீக ஆற்றலை
எம்மீது கொணர்ந்து கொட்டியது நீ!
ஏன் நம் குடும்பத்தை முழுவதுமாய்ச் சிதைத்தாய் நீ!'

என்று துக்கா பாடியுள்ளார்.

வாழ்க்கை அற்பமானது என்பதை அவர் கற்ற புனித நூல்களில் உள்ள திருமொழிகள் எடுத்துக்கூறின; அவற்றைக் கற்றதன் பயனாக, உலகாயதத்தில் பிடிப்புண்டு உழன்றுகொண்டிருந்த மனத்தில் சலனம் புகுந்தது; சஞ்சலம் தொடர்ந்தது; பஞ்சம் வந்து அலைக்கழிக்கும்போது, அலைமோதிக் கொண்டிருந்த அவர் மனம், மேலும் பயங்கரமான அனுபவத்தைப் பெற்று அல்லற்பட்டது.

அலைபாயும் அத்தகைய மனத்திற்கு அருமருந்தாய் இருப்பது தியானமாகும்; தொடக்கநிலையில் துக்காராம் அவர்கள், அமைதியான ஓர் தனியிடத்தைக் கட்டாயம் தேடிச் சென்றிருக்க வேண்டும். அலையும் மனத்திற்கு அமைதி தரத்தக்க 'பாம்நாத்' என்ற இடத்திற்குச் சென்றார் என அறிகிறோம். பாம்நாத் என்பது மலைக் குன்றுகள் மீதுள்ள அமைதியான ஓர் இடம்; எல்லாவற்றையும் விட்டு விட்டு அங்குச் சென்றுவிட்டார்; சென்றவர் தியானத்

4 நிந்தாவே ஹேஜக்^{3} ஜஸா பா^{4}கா^{3} ஆலா பா^{4}க்^{3} ।
ஹோதே தைஸே ஆலே ப^{2}ல் கே^{3}லே நிவ ஹணீ ஸகல் ॥
து^{3}ஸ்த்யாச்யா மதா மிளே நாஸே ஜா^{4}லே சித்தா ।
துகா ஜா^{4}லா ஸாம்டா^{3} விடேவிதீ போரே ராடா^{3} ॥

தில் மூழ்கினர்; கழிந்தன நாள்கள். ஆங்குச் சென்று தங்கிப் பெற்ற ஆன்ம அனுபவத்தை அழகுறச் சித்திரித்துள்ளார்:

மரங்களும் கொடிகளும் மற்றும் விலங்குகளும்,
என் இனிய உறவினராயினர்;
காட்டுப் பறவைகள்,
இனிய தம் குரலால் எழுப்பின கானமும்;
மகிழ்ச்சி நிறைந்தது, மனம் மகிழ்ந்தது;
தங்கி யங்கு வாழ்ந்த அத் தனிமை வாழ்வு இனிமை ஆகியது;
எப்பண்புகளும்—நன்மையோ அன்றித் தீமையோ,
நலியச் செய்யவில்லை உடம்பினை;
எங்கெங்கு என்மனம்,
உலவ விரும்பியதோ அங்கெலாம் உலவுவேன்;
... ...
தனக்குத் தானே விவாதிக்கும் விவாதம் நிகழ்ந்தது இங்கே,
தனக்குத் தானே பேசிக்கொள்ளும்
தனிப்பேச்சு நடந்த இடம் இங்குத்தான் என்பார், துக்கா.[5]

இந்த இடம் அவருக்குள் தெய்வீக உணர்வைத் தோற்றுவித்தது. இந்த இடத்தில் அவர் அகத்தூண்டுதலையும் உணர்ந்தார்; மனத்தின்கண் ஒருவித விழிப்புநிலையையும் பெற்றார்; கடவுளைக் காணவேண்டும் என்ற பேரவாவை அவருக்குத் தோற்றுவித்த இடம் அதுவாகும். அந்த இடத்தில் அவர் மனம் பட்ட பாட்டை,

'(அவர்) மனம் அல்லலுற்றுத் தவித்தது; வெம்மையினால் சுடுசட்டியிலிட்ட பொறி வெடித்துச் சிதறினாற்போல'

என்று அழகிய உவமையால் விளக்கிக் கூறியுள்ளார்.

இந்த மனநிலை கைவரப்பெற்றவுடன், அவருக்கு இவ்வுலகம் அந்நியமாய்க் காட்சி தந்தது. தான் யார்? இந்த உலகம் என்பது யாது? ஆன்ம விசாரம் தலைதூக்கியது. தனக்கும் தான் வாழும் இவ்வுலகிற்கும் ஒட்டுறவு இல்லை என்றும், தான் ஓர் அந்நியன் என்றும் உணரத் தலைப்பட்டார். 'பாம்நாத்' என்ற இடத்தில் தங்கியிருக்கும்பொழுது, ஒரு நெறியை—சிக்கல்களுக்கான ஒரு தீர்வைக்

5 வ்ருக்ஷவல்லீ ஆம்ஹா ஸோயரே வன்சரே ।
பக்ஷீஹீ ஸுஸ்வரே ஆலவீதீ ॥
யேனே ஸுகே[2] ருசே ஏகாந்தாசாவாஸ் ।
நாஹீ குண்தோஷ் அங்கா யேத் ॥
ஆகாச மண்டப் ப்டுதீ[2]வீ ஆஸன் ।
ரமே தேதே[2] மன் க்ரீடா[3] கரு ॥
துகா ம்ஹணே ஹோய் மனஸீ ஸ்ம்வாத[3] ।
ஆபுவாசி வாத்[3] ஆபணஸீ ॥

கண்டுபிடித்தார். ஆனல், அது முடிந்த முடிவான தீர்வு அன்று. அந்த இடத்திலிருந்து பின்பு திரும்பி வந்துவிட்டார். திரும்பி வந்த பின்பு, அவர்பால் விட்டல்பெருமான் வழிபாடும் கிருஷ்ணன் வழிபாடும் பெருகின; பக்திதான் அவரது முழுநேரப் பணி யாகியது; பக்தி! பக்தி! பக்தி! வேருென்றும் அவர் அறியார்: உடல் தேவைகளைப் பற்றியோ, உலக நடைமுறைகளைப் பற்றியோ அவர் வாழ்ந்த வாழ்க்கையை விவரித்துக்கூறும் வகையில், பல கதைகள் அவரைப்பற்றிச் சொல்லப்பெறுகின்றன. குடும்ப வாழ்க்கை நிலையிலும், சமுதாய வாழ்க்கை நிலையிலும் உலகியலைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் அவர் வேறுபட்டமுறையில், பித்துக்குளியாக வாழ்ந்தார் என்பதைக் காட்டப் பல கதைகள் நிலவுகின்றன. மனைவி ஜீஜா அவருக்குக் கொடுத்த ஓயாத தொந்தரவுகள் பற்றியது அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்ருகும். துக்காராம் தான் பாடிய பல பாசுரங்களில் அவளைக் குறிப்பிடத் தவறவில்லை. ஒரு பாசுரத்தில் ஜீஜாவைக் குறிப்பிடும்போது,

'அந்த இழிசினள் நல்ல பொருள்களை விரும்பினுள் அல்லள்,
வெறிநாய் போல் எனைவிடாது பின்தொடர்ந்தாள்'—

எனத் துக்கா சொல்கிருர்.

துக்காராம் எந்தக் காலத்திலும் இல்லறத்தைக் கைவிட்டு விடவில்லை; இல்லறநெறியைப் பழித்தவருமல்லர்; ஆன்மீக உலகில் அடியெடுத்து வைத்த அந்தக் காலத்திலுங்கூட, இல்லறத்தைப் பழித்துப் பேசவில்லை. பல வேளைகளில் துக்காராம் ஆன்மீகத்தில் மூழ்கிப்போய், அதன் காரணமாகக் குடும்பக் கடமைகளைப் புறக்கணித்ததும் உண்டு; ஆன்மீகத்தில் மூழ்கிய அந்த நிலையில், அவர் அவ்வாறு நடந்துகொள்வதென்பது இயற்கையான ஒன்றேயாகும். அவ்வாறு அவர் இல்வாழ்க்கையில் இருந்து கொண்டே ஆன்மீகத்தில் மூழ்கிப்போய்க் குடும்பக் கடமைகளைப் புறக்கணித்ததன் விளைவால், இளம் பருவத்தினளாய அவர் மனைவி ஜீஜா, அவள் வயதுப் பெண்கள் எவ்வளவு உழைக்கவேண்டு மென்று எதிர்பார்க்கப்பெற்றதோ, அதைவிட அதிகமாக அவள் உழைக்கவேண்டியிருந்தது. குடும்பப் பொறுப்புகளை அவள் கவனித்தாள். துக்காராம் எப்போதெல்லாம் பரத்தைப்பற்றிய நினைவுகளில் மூழ்கி, இகத்தைப் புறக்கணித்து வாழ்ந்தாரோ அப்போதெல்லாம் ஜீஜாவுக்கு அந்தப் பெரிய குடும்பத்தைப் பாது காப்பதில் சோதனைக் காலமாக இருந்திருக்கவேண்டும். இவற்றை யெல்லாம் வைத்து எண்ணிப் பார்க்கும்பொழுது, ஜீஜாவை ஓர் அடங்காப்பிடாரியாகத் துக்காராம் சித்திரித்திருப்பது மிகைப் படக் கூறிய ஒரு கூற்ருகவே கொள்ளவேண்டியுள்ளது.

துக்காராம் தன் நேரம் முழுவதையும் தான் எடுத்துக் கொண்ட குறிக்கோளை நோக்கியே செலவழித்துக்கொண்டிருந்த தால், அவர் தன்னையுமறியாமல் தன் காலத்திய தத்துவரீதியான சிந்தனை உலகில் ஒரு புதிய, பெரிய மறுமலர்ச்சியைத் தான் தொடங்கி வைத்திருக்கிறோம் என்ற உண்மையை உணரும் நிலை யில் இன்றித் தன்போக்கில் வாழ்ந்துகொண்டிருந்தார். தத்துவ உலகில் தான் ஒரு புதிய சித்தாந்தத்தைத் தொடங்கிவைக்கிறோம் என்ற உணர்ச்சியில் அவர் இல்லை. தன்னை மறந்து தன் இலட்சியத் தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு உழைத்ததுதான் இத்தகைய நிலைக்குக் காரணமாகும். ஓர் இடத்தில் நடந்ததை, மற்றோர் இடத்தில் வாழ்பவர் அங்கு என்ன நடந்தது என்று அறிந்து கொள்ள முடியாத காலச் சூழலில் துக்காராம் வாழ்ந்தார். மக்களோடு மக்கள் தொடர்புகொண்டு அறிந்துகொள்வதற்கான வசதிகளற்ற காலமாகும். அத்தகையதோர் காலக்கட்டத்தில் வாழ்ந்ததால், சமுதாய எண்ணப்போக்கில் அவர் எழுப்பிய எதி ரெழுச்சி வேகங்கொள்ளவில்லை; அது, ஆமை வேகத்தில் அசைந்தது; அவர் எழுப்பிய புரட்சிக்குரல் ஒரு சில கிராமங்களை மட்டும் எட்டியது; அந்த எல்லையைக் கடந்து அப்புரட்சிக் குரல் ஒலிக்க முடியவில்லை; காலத்தின் கோலம் அது; என்றாலும், புரட்சிச் சிந்தனைகளோடு தொடர்புபெற்ற வெகுசிலர், அவர்தம் புரட்சிக் கருத்துகளைத் தாம் செல்லுமிடந்தோறும் எடுத்துச் சென்று, சிறப்பாகப் பரப்பினர். துக்காராமின் புதிய சிந்தனைகளை ஏற்றுக்கொண்ட அவர்கள் வல்லமை மிக்க தூதுவர்கள்போல் விரைந்து இயங்கி, அக்கருத்துகளைப் பரப்பினர்.

'பாம்நாத்' என்ற இடத்திலிருந்து திரும்பிய பின்பு, துக்கா ராம் உணர்ச்சிமிக்க பாடல்களைப் பாடத் தொடங்கினார். எண்ணும் எண்ணங்களைச் செய்யுள் வடிவில் வழங்குவதற்கு முனைந்தார்.

''இறைவன் துணையுடன் என்னிடம் வந்தார், நாமதேவர்;
எழுப்பினார் என்னை இனிய கனவினில்
உளத்துறு உணர்ச்சியை உருக்கொடுத் தழகாய்ச்
செய்யுள் செய்யெனச் செப்பினார் என்னிடம்''

என்கிறார் துக்கா.

நாமதேவர், மற்றும் நாமதேவரையொத்த அருட்கவிகளான ஞானதேவர், கபீர், ஏகநாதர் ஆகியோர் படைப்புகளால் பெரிதும் ஈர்க்கப்பெற்றவர் துக்காராம். அவர்கள் பாடல்களால் பெரிய அளவில் பாதிக்கப்பெற்றவர் ஆவார். அன்னார் பாடல் களின் செல்வாக்கால் பாதிக்கப்பெற்றவர் என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்துவதற்குச் சான்றுகள் உள்ளன.

நாளாக நாளாகக் கீதையால் பெரிதும் ஈர்க்கப்பெற்ருர். கீதையின்பால் அவருக்கிருந்த கவர்ச்சி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய்ப் பெருகியது. அந்தக் காலக்கட்டத்தில் தான் கீதையைத் தன் தாய்மொழியில் மொழிபெயர்க்கத் தொடங்கினுர். அம்மொழியாக்கப்பணி, அவர் வாழ்வில் மிகப் பெரிய திருப்பம் நிகழக் காரணமாய் அமைந்தது. கீதையைப் பற்றிய சுவையான தகவல் ஒன்றுண்டு. 16,17 ஆம் நூற்ருண்டுகளில் புரோகித மனங்கொண்ட பிராமணர்கள் பல காரணங்களுக்காகக் கீதையை இழிவானதாகக் கருதி வெறுத்து ஒதுக்கி விட்டனர்;[6] அப்பிராமணர்களோ, தூய இந்து சமயச் சிந்தனைகள் என்பது வேதங்களில் பொறிக்கப் பெற்றவைதாம் என்று கருதினர்; வேதமல்லாத வேறு நூல்களில் உள்ளவை இந்து சமயச் சிந்தனைகள் ஆகமாட்டா என்பதே அவர்கள் கருத்தாகும். கீதையை எதிர்க்கப் பிராமணர்களுக்குப் பல காரணங்கள் இருந்தபோதிலும், அவர்கள் அந்த நூலை வைதீகத்தை எதிர்க்க வந்த நூலாகவே கருதியதால், அதனைத் தீவிரமாக எதிர்த்தனர்.

சமய நூல் தொகுதிகளான மறைநூல்களுள் கீதையே முதல் முதலில் மராத்தி மொழியில் மொழிபெயர்க்கப் பெற்றது; ஞானதேவரால் அது மொழிபெயர்க்கப் பெற்றது; ஏகபோகமாய் ஆதிக்கம் செலுத்திவந்த சமக்கிருதக் கல்விக்குப் போட்டியாகவும் அது கருதப்பெற்றது. கீதையைக் கற்பதே நல்லது அல்ல என்ற எண்ணம் நிலவிய காலம்; துக்காராம் வாழ்ந்த அதே காலத்தில் வாழ்ந்தவர் 'கச்சேஸ்வர பிராஹ்மே' என்பவராவார். அவர் தனது இளமைக்கால அனுபவங்களைக் குறித்துவைத்துச் சென்றுள்ளார். அவருடைய குறிப்புகளில், அவரது இளமைக் காலத்தில் அவர் கீதையைப் படித்ததற்காக அவரை அவர் தந்தையார் நையப் புடைத்தார் என்றும், என்ருலும், தன் தந்தைக்குத் தெரியாமல் திருட்டுத்தனமாகத் தான் அந்த நூலைப் பயபக்தியோடு படித்ததாகவும் அவர் குறித்துவைத்துள்ளார். கீதையைப் படிப்பது தெய்வ நிந்தனை என்று கருதிய அவர் தந்தை, அவரை வீட்டைவிட்டே துரத்திவிட்டாராம். கீதையைப் படிப்பது தெய்வ நிந்தனையாகக் கருதப்பட்டது அக்காலத்தில். ஏன் அவ்வாறு கருதப்பட்டதென்ருல், அதில் வைதீகப் பிராமணீயத்தைச் சாடும் சில கருத்துகள் இருப்பதுதான் காரணம். கீதையின் மராத்தி மொழிபெயர்ப்பின்மீது வைதீகப் பிராமணர்கள் வெறுப்பைக் காட்டினர்; சினந்து அம்மொழிபெயர்ப்பை ஒதுக்கித் தள்ளினர். அம்மொழிபெயர்ப்பைப் படித்துச் சூத்திரனும் மறைநூல் உண்மையை அறிய வாய்ப்பு நிகழ்ந்துவிடுமே என்பதுதான்

---

6 வி. எஸ். பெந்தரே: திருத்தொண்டர் துக்காராம், இயல் 7.

அவர்கள் வெறுப்புக்குக் காரணமாகும். சூத்திரன் திருமறையில் தெளிவுபெறுவதை வைதீகப் பிராமணீயம் வரவேற்காததால் வந்த வெறுப்பாகும் அது.

எளிமையும், இனிமையும் வாய்ந்த, முற்போக்குச் சிந்தனைகளை உள்ளடக்கிய கீதையால் ஏற்கெனவே கவரப்பெற்றிருந்தவர் துக்காராம். கீதையின்பால் அவருக்கிருந்த மதிப்பு நாளுக்குநாள் உயர்ந்ததால், அதை மராத்தியில் மொழிபெயர்த்து வெளியிட முடிவுசெய்தார்; ஞானேசுவரின் அழகிய மொழிபெயர்ப்பு ஏற்கெனவே இருந்தபோதிலும், தானும் கீதையை மொழி பெயர்க்க விரும்பினார். தன்னுடைய நோக்கில் கீதையில்பெற்ற புது விளக்கத்தை, கீதையின் மொழிபெயர்ப்பில் தரவிரும்பினார்; பக்திநெறியையும் அத்துவைதப் போக்கையும் உள்ளடக்கிய தன் கருத்துகளை வலியுறுத்தும் நோக்கில் கீதை மொழிபெயர்ப்பைச் செய்ய முடிவு செய்தார். சமய உலகில் ஆற்றவேண்டிய கடமைகள், சமுதாய நிலையில் ஆற்றவேண்டிய கடமைகள் ஆகிய இரண்டுக்கும் இடையே முகிழ்க்கும் முரண்பாடுகளைச் சுவைபடச் சித்திரித்துக் காட்டுவது கீதையின் போக்காகும். சமுதாய நிலையில் ஒவ்வொருவனும் செய்து முடிக்கவேண்டிய பணிகள் இருக்கின்றன; அவற்றைச் செய்துமுடிக்கச் செயலில் இறங்கும்பொழுது சந்திக்கின்ற சிக்கல்களை—தவிப்புகளை, நாடகமாக்கிக் காட்டுகிறது கீதை என்பார்கள்; கீதையின் அந்தப் போக்கு துக்காராமின் ஆன்மீக உளைச்சலுக்கு மிகப் பொருத்தமானதாகத் தோன்றியது. தான் எதை நாடி அலைந்தாரோ, அந்த அலைச்சலுக்கு உரிய நெருங்கிய துணைபோலக் கீதை கைகொடுத்தது. பயன் கருதாது பணிசெய்து கிடப்பதே கீதையின் உயிர்க்கீதமாகும். பற்றின்றிப் பணி செய்தால், ஆன்ம சுதந்திரம் கிடைக்கும் என்ற மையக் கருத்தை உயிர்நாடியாகக் கொண்டதல்லவா கீதை? அந்தக் கருத்தையே துக்காராம் பெரிதும் விரும்பினார்; துக்காராம் கீதையை மொழிபெயர்த்து அம்மொழிபெயர்ப்புக்கு 'மந்திர—கீதை' எனப் பெயர் சூட்டினார்,

கிடைத்துள்ள தகவல்களைக்கொண்டு பார்க்கும்பொழுது, துக்காராமின் வாழ்வைப் பற்றிய நம்பவேண்டிய சில மெய்ம்மைகள் உள்ளன. அவருடைய சொந்தக் கிராமத்தில் அவர் ஏற்படுத்திய புரட்சி படிப்படியாக உணரப்பெற்றது. எண்ணத்திலும் சொல்லிலும் தோற்றுவித்த அவர் புரட்சியை மக்கள் மேலும் மேலும் அறியத்தொடங்கினர். அவரும் ஆன்மீக முதிர்ச்சியைப் படிப்படியாக அடைந்துகொண்டிருந்தார்; புதிய புதிய ஆன்ம அனுபவங்களைத் தொடர்ந்து தன்னளவில் பெற்றுக்கொண்டே வந்தார்; துக்காராமின் கிராமத்தைச் சுற்றி வாழ்ந்துகொண்

டிருந்த வைதீக மனோபாவம் கொண்டவர்களுக்குத் துக்காராம் ஒரு பெரிய தலைவலியாக இருந்தார். துக்காராமின் தோற்றமே அவர்களுக்கு வேதனையைக் கொடுத்தது. துக்காராமின் நடமாட்டம் தங்களுக்குத் தொல்லையாக இருப்பதாக உணர்ந்தனர். இந்தக் காலக்கட்டத்தில்தான் துக்காராம் அளவுக்குமீறிய இன்னலை அனுபவித்தார்; துக்காராம் குழம்பிப்போய் நின்ற காலம். கடவுளை அடைய வழி எது? ஏன் தன் ஆன்மா அமைதியுறவில்லை? தம் முன்னோர் போற்றி ஒழுகிய கோசவி நெறி சிறந்தது தானா? அல்லது கண்ணனையும் விட்டல்பெருமானையும் வழிபடும் வழிபாடு சிறந்ததா?—இப்படிப் பல கேள்விகள் அவரைத் துளைத்தன. இத்தகைய தவிப்புகளில் உழன்றபோது, அவர் உற்ற உணர்ச்சி யனுபவங்களையே பாடல்களாக வடித்தார். அவர் பாடிய அவ்வுணர்ச்சிப் பாடல்கள், அவருடைய நூற்றொகுதிகளில் மிகப் பெரிய இடத்தை ஆக்கிரமித்துள்ளன.

பாபாஜி சைதன்யர் என்பவரால் கி.பி. 1640-இல் துக்காராம் சைதன்ய நெறிக்குள் சேர்க்கப்பெற்றார். சைதன்ய நெறியில் சேர்க்கப்பெற்று சமயச் சார்பான தீட்சை பெற்றபொழுது, துக்காராமைப் பற்றி நின்ற கவலைகள் மறைந்துபோயின. சைதன்ய நெறியில் சேர்ந்து தீக்கை பெற்றபொழுது உணர்ந்த மனநிலையைப் பற்றிக் குறிப்பிடுகையில் துக்காராம் அவர்கள்,

> ''மாபெருங் குருநாதர் பாபாஜி கருணையால் என் கட்டுகள் அவிழ்ந்தன''

என்கிறார். துக்காராமிற்கு உண்மையின் உயிர்நிலை உணர்த்தப் பெற்றது; மாயத்திரை விலகியது; உண்மை உணர்த்தப்பெற்றது. சமயத் தீக்கை பெற்றவுடனே தங்குதடையின்றிப் பாசுரங்கள் பாடத்தொடங்கிவிட்டார் என்ற ஒரு செய்தி வழிவழியாக வந்து கொண்டிருக்கிறது; அத்தகைய ஒன்று நிகழ்ந்திருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.

பாபாஜியின் வழியில், சைதன்யர்களால் பின்பற்றப் பெற்று வரும் வழிபாட்டு மரபானது மிக்க புகழ் வாய்ந்ததாகும். அந்த வழிபாட்டு மரபானது 15-ஆம் நூற்றாண்டில் இராகவ சைதன்யர் என்பவரால் தோற்றுவிக்கப் பெற்ற சமயக் கோட்பாட்டு முறையாகும். அந்த நெறியைத் தோற்றுவித்த இராகவ சைதன்யர் இந்து மககளாலும் முசுலீம்களாலும் மதிக்கப் பெற்றவர். அவருடைய பூர்வீகம் சௌராஷ்டிரப் பகுதியிலுள்ள 'கிரிநார்' ஆகும். பின்னர் மகாராஷ்டிரத்திற்குக் குடிபெயர்ந்தார்; இறுதியாகத் தெலிங்கானாப் பகுதிக்கு வந்து சேர்ந்தார்; அவருடைய செயலுக்கான பெருங்களமாக அமைந்தது தெலிங்கானாப் பகுதிதான். குல்பர்காவுக்கு அருகேயுள்ள இராகவ சைதன்யர் கோயி

லுக்கு இன்றும்கூட இந்துக்களும் முசுலீம்களும் சென்று வழிபடு கின்றனர். குல்பர்காவில் அவர், 'Hazrat Ladle Mashayak alias Ragav daraz Aland Sharif' என்றழைக்கப் பெறுகிறார். குல்பர்காவை ஆண்ட மன்னனுக்கு ஆன்மீகத்தைப் போதிக்கும் ஞான குருவாகத் திகழ்ந்தார்; அந்த மன்னன் தொடக்கத்தில மகாநுபாவர்களின் இயக்கத்தால் ஈர்க்கப் பெற்றிருந்தவன். மகாநுபாவர்கள் என்பார் 'அவைதிகர்கள்' என அழைக்கப் பெறுவர். வேதமே எல்லாம் என்னும் கொள்கையை மகாநு பாவர்கள் ஒத்துக்கொள்ளாதவர்கள்; அவர்கள் வேதத்தின் மேலாண்மையை ஏற்றுக்கொள்ளாதவர்கள். அதுமட்டுமல்லாது, அவர்கள் 13-ஆம் நூற்றாண்டில் வைதிக இந்து சமயத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தவர்கள்; இந்து சமயத்தில் உள்ள 'வருணாச்சிர' முறையை மதிக்காதவர்கள்; அதற்கு அப்பாற் பட்டவர்களுமாவர். ஆனால், சைதன்யர்கள் விரைவில் அவர்களை யும் விஞ்சிவிட்டனர். மகாநுபாவர்கள் நான்கு வருணத்திற்கு அப்பாற்பட்டு வாழும் புதுநெறியை உருவாக்கியபோது, இராகவ சைதன்யரின் வழிபாட்டு மரபைச் சார்ந்தவர்களோ எந்தவித மான சமயநெறிக்கும் அப்பாற்பட்டு வாழும் புதுநெறியைப் போற்றினார்கள். அதனால், அவர்கள் சமயக் கட்டுகள் எதுவாயி னும், அவற்றையெல்லாம் கடந்து வாழும் நெறியை மேற் கொண்டனர்; அவர்கள் போற்றிய வழிபாட்டு நெறியானது புனிதமானதும், ஆன்மீகச் சார்புடையதுமாகும்; இந்திய மண்ணில் வாழ்ந்த 'நாதர்களும்', 'சித்தர்களும்' காட்டிய நெறியைப் போன்றது சைதன்யர்களின் நெறியாகும்.

கேசவ சைதன்யர் என்பவர் இராகவ சைதன்யர் என்பவரின் சீடராவார்; அவர் துக்காராம் வாழ்ந்த பகுதியைச் சேர்ந்தவர்; துக்காராமின் கிராமத்திற்கு அருகேயுள்ள ''ஓடூர்'' என்னுமிடத் தில் வாழ்ந்தவர்; கேசவ சைதன்யரைப் பின்பற்றியவர்தான் பாபாஜி சைதன்யர்; மேலும், 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பல கவிஞர்கள் அவருடைய சீடர்கள்தாம். பாபாஜி திடீரென்று யாருமறியாத வண்ணம் மறைந்துவிட்டார் என்று சொல்லப் பெறுகிறது. அவர் மறைவு யாரும் அறியமுடியாத புதிராகும் என்கின்றனர்; அவர் மறைந்தது மறைந்ததுதான்; அதற்குப் பிறகு அவர் வெளிப்படவே இல்லை; அதுதான் அவருடைய முடிவாகிப் போயிற்று. நாம் பார்க்கப்போகிற துக்காராமின் முடிவுகூட அத்தகைய புதிரான ஒன்றுதான்.

துக்காராம் 'ஓடூர்' சென்று பார்க்கப்போனார்; போன இடத்தில் பாபாஜியின் தண்ணருளுக்குப் பாத்திரமானார்; தன் வயமிழந்து நின்றார்; எல்லாவற்றையும் மறந்து ஆழ்ந்த அனுபூதி

பெற்ருர்; 'ஓடூரில்' பார்க்கப்போன நேரத்தில் பாபாஜியின் பரு உடலைக்கண்டு தரிசித்திருக்கமுடியாது; அருவ நிலையில் ஆட் கொள்ளப் பெற்றிருக்கிருர்; அவர் வசியமாகிவிட்டார்; தனக்குத் தீக்கை கிடைத்ததைத் துக்காராம் விரிவாகச் சொல்லும் பகுதி கொண்டு அதை உய்த்துணர முடிகின்றது:

எந்தன் நெற்றியில் இட்டார் தன்கையை,
காட்டினர் அந்த ஆனந்தக் களிப்பினை,
பேரானந் தப்பேர் அருங்காட் சியை
காட்டினர் எனக்குக் களிவெறி கொள்ள;
பின்னர் தோன்றியது பேரொளி ஒன்று,
முழுமையும் அழகிய நீல வண்ணமாய்—ஒளிர்ந்தது;
செம்மையும் வெண்மையும் மஞ்சளும் ஆகி
நீலமும் கறுப்புமாய் நிறங்கள் மாறித்
தோன்றித் தோன்றிப் பின்னர் மறைந்தன;
வண்ணங் களெல்லாம் வடிய நின்றன
வண்ணமில்லா வடிவு பூண்டது,
உள்ளொளி யாகி உறைந்தது என்னுள்—தூயதாய்.[7]

இதுபோன்று தன்வயமிழந்து நிற்கும் பேரானந்த வெறிநிலை வேறுபல திருத்தொண்டர்களாலும் விவரிக்கப்பெற்றுள்ளன. துக்காராமைப்போல மற்ற திருத்தொண்டர்களும் அத்தகைய அனுபவத்தைப் பெற்றுள்ளனர். பருப்பொருள் அளவில் மாற்றங் கள் நிகழ்வதுபோல் தோன்றக்கூடும்; பருப்பொருள் தன்மைகளில் மாற்றங்கள் நிகழ்வதுபோல் தோன்றலாம்; மாற்றங்களுக்கிடை யிலும் மனம் பாதிப்பு இன்றித் தன்னளவில் உயர்ந்த உணர்வை நோக்கிய விழிப்பு நிலையில்தான் உள்ளது; புறமாற்றங்கள் (அவ்வளவாக) அக நோக்கைப் பாதிப்பது இல்லை. தனக்குற்ற அனுபவத்தைத் துக்காராம் சொல்லும்பொழுது,

''பாபாஜியால் அவ்வாறு செய்யப்பெற்றது, தனக்கே யுரிய பீடத்தில், என்னைப் பிடித்து இருத்தினர் நிரந்தரமாய்''

என்கிருர்.

துக்காராமிற்குப் பிறகு சைதன்ய நெறியின் சுவடு அற்றுப் போயிற்று என்று கருதவேண்டியுள்ளது; துக்காராம் தனக்கு நேரடி

7. ஜீ தே[3]ஹாசே மாதா[3] டே[3]வூனியா ஹாத 1
உன்மனீ ஸாக்ஷாத் தா[3]வ் கி[3]லீ 11
உன்மனீசி முத்ரா சேபோனியா தி[3]லீ 1
அவ்கோ[4] தீ ஜாலீ ஸுனீல்ப்ரபா[4] 11
ரத்த ச்வேத பீத நீல ஆணி க்ருஷ்ண 1
ரகே[3] உமடதீ நானா பரீ !1
ரங்க டாகோனியா அரங்காத் கே[3]லே 1
நிர்மல ராஹிலே நிஜ தேஜ 11

யான சீடர்களை வாரிசுபோல் வைத்துக்கொள்ளாதது காரணமாய் இருக்கலாம். அதற்கான ஓர் பக்தி அமைப்பைக் கட்டி வளர்ப்பதையும் தவிர்த்தார்; தன்னைத்தானே ஆராயும் தூய ஆன்மீகத்தின் மீதே முழுக்கவனத்தையும் செலுத்தினார். பல புலவர்கள் தங்களை அவர் சீடர் என்று உரிமை கொண்டாடியபோதிலும், அவர் அதைப்பற்றி எதுவும் சொல்லாமல் மௌனத்தையே கடைப்பிடித்தார்.

கி.பி. 1640-ஆம் ஆண்டு அளவில், குருநாதரிடம் தீக்கை பெற்ற பின்பு, துக்காராமின் வாழ்க்கை அடியோடு மாறிவிட்டது. சமுதாயச் சார்புள்ள வாத எதிர்வாதங்களில், அவர் ஈடுபடுமாறு அவர் உள்மனம் அவரைப் பிடர்பிடித்து உந்தியது; தன்னுடைய ஆன்மீக மேலாண்மையை மெய்ப்பித்துக் காட்டுவதற்காக, 1645-ஆம் ஆண்டில், கடுஞ்சோதனை முறைகளையெல்லாம் சந்திக்க வேண்டியிருந்தது. சமுதாய நிலையில் பிறப்பால் ஒத்த மனிதர்களை வேறுபடுத்திப் பார்க்கும் போக்கினையும், சமய உலகில் பிராமணீயத்தின் ஆதிக்கப் போக்கினையும் கண்டு, அவற்றையெல்லாம் மிகத் தெளிவான முறையில் தம் கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார்; இவருடைய புரட்சிப்போக்கு பிராமணர்களுக்குக் கட்டாயம் எரிச்சல் ஊட்டியிருக்கவேண்டும்; அவருடைய கீதை மொழிபெயர்ப்பும் பண்சுமந்த பக்திப் பாசுரங்களும் மக்களிடையே பரவிச் செல்வாக்குடன் வளர்வதைக் கண்டபொழுது, பிராமணர்கள் தங்களுக்குள் அடக்கி வைத்திருந்த கோபத்தைப் படிப்படியாக வெளியிடத் தொடங்கினர். சமயச் சார்பானவை பற்றி அவர் எழுதும் எழுத்துகளையும், கீர்த்தனைகளுடன் கலந்து மக்கள் மத்தியில் தன் கருத்தை எடுத்துச் சொல்லிக்கொண்டுவரும் அவரது சொற்பொழிவுகளையும் பற்றிக் குறைகூறத் தொடங்கினர்; அவற்றையெல்லாம் சொல்வதற்கும் செய்வதற்கும் அவருக்கு என்ன தகுதியிருக்கிறது என்று வினாக்களைத் தொடுக்கத் தொடங்கினர். மொத்தத்தில் துக்காராமின் பணியைக் கண்டு பிராமணர்கள் மனம் புழுங்கினர்.

இந்து மக்களின் பழக்க வழக்கங்களையும் சமயச் சடங்குகளையும் அவர்களின் ஆண் தெய்வங்களையும் பெண் தெய்வங்களையும் இடைவிடாது தொடர்ந்து துக்காராம் எள்ளி நகையாடிக் கொண்டே வந்தார். அந்தக் காலக்கட்டத்தில், இந்து சமய நெறிக்கு முரண்பட்ட கோட்பாட்டினைக் கொண்ட பெரும்பாலோர், முற்றிலும் மாறுபட்ட ஒழுகலாற்றை ஏற்று ஒழுகினர். வெளிப்படையாகத் தம் மாறுபாட்டைத் தெரிவிக்க அவர்கள் நடைமுறைகளை மட்டும் மாற்றிக்கொள்ளவில்லை; மாறுபாடு தெளிவாகத் தெரிவதற்காகச் சீருடைகளைத் தேர்ந்தெடுத்தும் அணிந்து

கொண்டனர். அவர்கள் இவ்வாறு முரண்பட்டு நின்றதற்கான காரணம், ஆன்மீகப்பேற்றை அடைவதற்காக உள்ள வழிகளில் தடைக்கற்களாக இருந்த ஏற்றத்தாழ்வுகளை அகற்றுவதுதான். ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல் செய்வதுதான் அவர்களின் இலட்சிய மாகும். ஆனல், வரகரி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நடை முறைக்கு மிகவும் பொருந்திவரக்கூடிய ஒழுக்கங்களைத் தேர்ந்து எடுத்துக்கொண்டனர்; கிராமப்புறக் கடவுளர்களையும், பிராமணர் களின் வைதீகப் போக்கையும், வேதத்தின் பெயரால் நிகழும் சடங்குகளையும் எள்ளி நகையாடுவதிலும், ஒரு தீவிரமில்லாத மிதமான போக்கையே கையாண்டனர். துக்காராம், விட்டல் பெருமானை அளவுக்குமீறிப் புகழ்ந்தும், வாழையடிவாழையாகப் போற்றிவந்த இந்து சமய மரபுகளைச் சாடியும் கீர்த்தனங்கள் செய் தார். துக்காராமின் இச்செயல் பிராமணர்களுக்கு அச்சத்தைத் தந்தது. கவிதைகள் மூலம் வெளியிட்ட அவரது ஆற்றல்மிக்க கருத்துகள் நாளுக்குநாள் மக்களிடையே செல்வாக்குப் பெற்றன. சமயத்தின் பெயரால் நடைபெறும் பல சடங்குகளைக் கைவிட்டு விடுமாறு எடுத்துக்கூறினர். மறைநூல் வாசகங்களைப் பொருளறி யாமல் முணுமுணுத்தல், நோன்பு இருத்தல், தெய்வத்திற்கு நேர்ந்துகொள்ளுதல், குரு–சீடர் உறவுமுறை, மந்திரத் தொடர் கள், வசிய ஆற்றல்கள் முதலானவற்றையெல்லாம் ஒருசேரக் கைகழுவி விடுதலே உண்மையான சமயநெறியாகும் என்பது துக்காராமின் கருத்தாகும். நடைமுறைக்குப் பொருத்தமான தாக உள்ள சமயநெறியையே அவர் கூறினர். அறியாமையில் வாழும் ஆடவரும் பெண்டிரும்கூட ஏற்றுக்கொள்ளக்கூடியதாகச் சமயநெறி இருக்கவேண்டும் என்பது அவரது கொள்கை. எல் லாரையும் எளிதில் அரவணைத்துக்கொள்வதாகச் சமய நெறி இருக்கவேண்டும் என்று எண்ணினர். அதுமட்டுமல்லாது, எல் லோரும் கடைப்பிடித்து ஒழுகக்கூடியதாகவும் நெறி அமைந்திருக்க வேண்டும் என்று பாடுபட்டார். எளிமை, தூய்மை, உண்மை யான வழிபாடு ஆகியவற்றை வற்புறுத்தினர். அவரது வழிபாட்டு நெறியில் கீர்த்தனைகள் முழங்கும்; தாளக்கட்டைகளை வைத்துக் கொண்டு மனமுருகிப் பண்நிறைந்த பாசுரங்களை ஒலிநயத்தோடு பாடுவார். பாட்டும் தாளமும் கலந்து நாத உலகமே உருவாகும். தாளலயத்தோடு கூடிய நாதமயமான சூழலில் பாடுவோர் தம்மை மறந்து உருகுவர். பாடுவோரைப்போலவே அச்சூழலில் வந் திருந்து கேட்போரும் உள்ளம் கிளர்ச்சியுற உருகி நிற்பர். நாதத் தால் கட்டுண்டு பாடுவோரும் கேட்போரும் பரவசமுற்று உடலால் இயங்கும் வாழ்க்கையை மறந்திருப்பர். உடல் என ஒன்று இருப்பதையே மறந்து வானத்தில் மிதப்பதுபோல் உணர்வர். நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து,

பக்திப்பெருக்கில் நனைந்து நனைந்து, தம்மை மறந்து திளைப்பர். அத்துவைத சித்தாந்தங்களை உள்ளடக்கிய அப்பாசுரங்களைக் கேட்டுத் திளைத்த உள்ளத்தில் வேற்றுமைகள் மறையும்; ஒற்றுமை ஓங்கும்; பன்மைகள் மறையும்; ஒருமையே ஓங்கும்; பன்மையில் ஒருமைகாணும் பாங்கு மிளிரும். ''எல்லாம் தானே: தானே எல்லாம்'' என்னும் உணர்வு சிறக்கும். பேதமில்லாத ஒருமை பிறப்பெடுக்கும். தாளக்கட்டைகளைக் கையில் வைத்துக்கொண்டு, கவின்மிகு பக்திப் பாசுரங்களை வாய்விட்டுப் பாடிக்கொண்டு, சமுதாய சமத்துவத்தை எடுத்துக் கூறிக்கொண்டு திரிவார் துக்காராம். அதனால், மக்கள் எல்லோரும் மதிக்கும் மாண்புடைய வராக மாறினார் துக்காராம். கோயிலில் இருந்துகொண்டு பக்தி பரவசத்தோடு நாள்தோறும் அவர்பாடும் கீர்த்தனைகள் மக்களைக் கூட்டம் கூட்டமாகத் திரண்டுவரச் செய்தன. அவர் பாடிய வழி பாட்டுப் பாசுரங்கள், அவர் கிராமத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் மாறுபட்ட சூழலைத் தோற்றுவித்தன. பக்திச் சூழல் பரவியது; நாளுக்குநாள் அவரைப் பின்பற்றுவோர் தொகை பெருகியது; பின்பற்றுவோரில் பிராமணர்களும் இருந்தனர்; அவர் புகழ் நாளடைவில் திக்கெட்டும் பரவியது; விட்டல்பெருமான்மீது பக்தி செலுத்தும் பக்தர்கள், துக்காராமின் அமுத மொழிகளைக் கேட்டு இன்புற, 'தெஹு' என்னும் அவர் இருப்பிடம் நோக்கிச் சாரி சாரியாக வரத் தொடங்கினர்.

அவ்வாறு வந்த பக்தர்களில் ஒருவர்தான் பஹிணபாய் என்பவர்; துக்காராமின் காலத்தில் வாழ்ந்த பெண்பாற் புலவர் ஆவார். அவுரங்காபாத்துக்கு அருகே உள்ள 'தியோகௌன்' என்னுமிடத்தில் வாழ்ந்த பிராமணர் ஒருவரின் மகள்; வைதிக மான ஒரு பிராமணனுக்கு வாழ்க்கைப்பட்டவளு மாவாள் கோல்காபூரில் குடும்பம் நடத்திக்கொண்டிருந்தபொழுது, ஜயராம சுவாமி என்ற ஒரு நபர் கூட்டுவழிபாடு ஒன்றில் துக்காராம் இயற்றிய பண்ணார்ந்த பாசுரத்தைப் பாடக் கேட்டார்;[8] அப் பாடலைக் கேட்டுப் பரவசமடைந்தார்; கேட்டுக் கிறுகிறுத்துப் போனார்; துக்காராமின் பாசுரங்களால் கவரப்பெற்ற அவர், துக்கா ராமைப் பார்க்கவேண்டும் என்று முடிவெடுத்தார்; முடியுமானால் அவரைக் கண்டு தரிசிப்பதோடமையாது, அவரின் சீடராகவும் இருக்க ஆசைப்பட்டார். துக்காராமின் பக்திப் பாசுரங்களைப்பற்றி அந்த அம்மையார் குறிப்பிடும்பொழுது,

> 'துக்காராமின் அத்வைதப் பாடல்கள் மிகுபுகழ் வாய்ந்தவை. அவற்றின் பொருள்களோ, மனத்தை ஈர்த்து, ஆவலுடன் கேட்கச் செய்து, எண்ணி எண்ணி ஏங்க வைப்பவை'

என்கிறார்.

---

8. வாழ்க்கை வரலாறு —'பஹிணபாய்சா கதா'

துக்காராமிடம் அந்த அம்மையாருக்குள்ள ஈடுபாடு, அந்த அம்மையாரின் பொறுமைகொண்ட கணவனிடம் சந்தேகத்தை ஏற்படுத்தியது. மனைவியின் நடத்தையில் ஐயுறவுகொண்டதால் குடும்பத்தில் பிரச்சனைகள் தலைதூக்கின; அதனால் சச்சரவுகள் ஏற்பட்டன; சூத்திர வருணத்தில் பிறந்த துக்காராமை, பிராமண குலத்தில் பிறந்த பெண்ணொருத்தி சமயத்துறைக்கு வழிகாட்டியாக ஏற்றுக்கொள்வது அடுக்குமா? என்ற வினா பிறந்தது. இப்படியாகப் பல பிரச்சனைகள் தலைதூக்கின. கடைசியில் பஹினாபாய் கோல்காபூரிலிருந்து 'தெஹு'விற்கு மாறிச் செல்வதில் தன் கணவனை ஒருவாறு இணங்கச் செய்தாள். அந்த அம்மையார் துக்காராம் குறித்த செய்திகளை எழுதி வைக்குமிடங்களில், அச்செய்திகளுக்கிடையே துக்காராமின் வழிபாட்டுப் பாடல்களின் அருமைப்பாடுகளையும் பொறித்து வைத்துள்ளார்.

'கோசவி கிளையில் தோன்றியவர் துக்கோபா,
சூத்திர வருணத்தில் பிறந்த பலசரக்கு வியாபாரி,
அரிகதையைப் பாடுகிறார் அயராது கோயிலுள்ளே,
பிராமண குலத்தில் பிறந்தவரும் கூடத்தான் பணிகின்றார்
பாடும் அப்பக்தனின் பாதார விந்தங்களில்'

என்று விளக்கமாக அந்த அம்மையார் கூறியுள்ளார். துக்காராமின் கீர்த்தனைகளின் பெருமையைக் குறித்தும் அவற்றால் தானடைந்த மகிழ்ச்சியைக் குறித்தும், அந்த அம்மையார்,

துக்காவின் கீர்த்தனைகள், அவை,—வேதத்தின் விழுப் பொருள்கள்; அவற்றால், மனநிறைவு கொண்டு மகிழ்கின்றேன்'[9]

என்று எழுதியுள்ளார்.

பகைமையுணர்வு கொண்ட பிராமணர்கள், அவள் துக்காராமைத் தன் குருவாக மதிக்கிறாள் என்பதை அறிந்தபொழுது, அவளைத் துன்புறுத்தத் தொடங்கினர்; அடக்குமுறை, அட்டூழியங்களை அவள்பால் அவிழ்த்துவிட்டனர். பிராமணக் கூட்டத்திற்குத் தலைவனாக அப்பொழுது மாம்பாஜி என்ற ஒரு பிராமணன் இருந்தான். ஒரு சூத்திரனுடைய மூளையில் அறிவு இருக்காது என்று எண்ணக்கூடிய பிராமணன் அவன். அந்தப் பிராமணன் பஹினாபாயைப் பார்த்துக் கோபமாக, 'ஒரு சூத்திரன் மூளையில் அறிவு செறிந்திருப்பது எங்ஙனம் இயலும்?' என்று கேள்வி கேட்டான்.[10] சூத்திரன் சிறந்த ஞானியாக இருக்கமுடியாது

9. துகோவாசீ கதா² வேதாந்தில் அர்த்த ||
பாவே மாஜே⁴ சித்த ஸமாத⁴ான் ||

10. சூத்³ராசியா அந்தரா ஜான் கைசே ?

என்றும், பிராமணன் ஒருவன்தான் அறிவாளியாகவும் ஞானியாகவும் இருக்கமுடியும் என்ற நம்பிக்கை நிலவிய காலம் அது.

துக்காராம் நிதானத்தோடும் முழு நம்பிக்கையோடும் சமயப் புரட்சி செய்தார்; அவர் செய்துவந்த சமயப் புரட்சி நாளுக்கு நாள் வலிவோடும் பொலிவோடும் சிறப்புற்றது; அச்சிறப்பைக் காணச் சகியாதவர்களாகப் பிராமணர்கள் மாறினார்கள். அவர் போற்றி வளர்த்த இயக்கத்தின் வளர்ச்சியைப் பிராமணர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை; சமயப் புரட்சியின் விளைவால் சமக்கிருதக் கல்விப் பயிற்சிக்கு இருந்த சிறப்புரிமை குறையலாயிற்று. மேலும் சொல்வதாக இருந்தால், சமக்கிருதக் கல்வி குறையக் குறைய, பிராமணர்களின் வருவாயும் குறையத் தொடங்கியது. பஹினாபாய் என்ற அப்பிராமணப் பெண், தன்னுடைய வாழ்க்கை வரலாற்றில் துக்காராம்மீது ஏவிவிடப்பெற்ற அடக்குமுறைகளையும் அட்டூழியங்களையும் பற்றிய தகவல்களைத் தரும் கதைகளைப் பற்றிய உண்மைகளை உறுதி செய்துள்ளார்; அப்பெண்மணி துக்காராம் வாழ்ந்த கிராமமான 'தெஹு'விற்கு மாற்றலாகி வந்து சேர்ந்தபொழுது, மாம்பாஜியின் இல்லத்தில்தான் தங்கினாள். அந்த மாம்பாஜியோ அவளுடைய வருகைக்கான காரணத்தை அறிந்தபொழுது, அதற்கு அவர் உடன்படவில்லை. சூத்திரன் எப்படி அறிவாளியாக இருக்கமுடியும்? என்றும், ஆன்மீக உலகிற்கான வழிகாட்டியாக ஒரு சூத்திரனால் எப்படி இருக்கமுடியும்? என்றும் கேள்விக்கணைகளை அவளைப் பார்த்துக் கோபமாகத் தொடுத்தார். அவருக்கு அவள்மீது கோபம் அதிகமாகியதேயொழியக் குறையவில்லை. துக்காராமின் கூட்டுவழிபாட்டில் அவள் கலந்துகொண்டதற்காக, அவளை அந்தப் பிராமணன் தன் வீட்டிலிருந்து வெளியேற்றிவிட்டான். அவள் தன் குடும்பத்தாருடன் வெளியேற்றப்பட்டாள். துக்காராம்மீது மாம்பாஜிக்கு இருந்த பகைமையைக் காட்டுவதற்கான நிகழ்ச்சிக் குறிப்புகளைத் தன்னுடைய வாழ்க்கை வரலாற்றில் பஹினாபாய் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். மாம்பாஜியும் வேறுசில பிராமணர்களும் ஒன்றுசேர்ந்து, புனேயில் வாழ்ந்த பிராமணர்கட்கும் சமய பீடங்களில் மேலாண்மை செலுத்துபவர்களான மதத்தலைவர்களுக்கும் ஒரு வேண்டுகோள் விடுத்தனர். அதாவது, பிராமணர்கள் ஒரு சூத்திரனைக் குருவாக ஒத்துக்கொண்டிருக்கும் புனிதத் தன்மையை மதிக்காத அடாவடிச் செயல்களை அலசி ஆராயவேண்டுமென்று, அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். இவ்வாறு பிராமணர்கள் நடந்துகொண்ட நடைமுறைகளையும், துக்காராம்மீது அவர்களுக்கிருந்த வெறுப்பினையும், மேலும் சில தகவல்களையும் பஹினாபாய் குறிப்பிட்டுள்ளார். துக்காராம் குறைகூறத்தக்க நிலையினையுடையவர் என்பதற்கு, அவர் கீதையை மொழிபெயர்த்திருப்பதே தக்க

சான்று ஆகும் என்று பிராமணர்கள் வாதிட்டனர். சூத்திரனுகப் பிறந்த ஒருவன் மக்களின் அன்றுடப் பேச்சுமொழியில் கீதையை மொழிபெயர்த்துக் கூறியதனைப் புனிதமற்ற செயலாகவும், குறை கூறத்தக்க செயலாகவுமே அன்றைய பிராமண உலகம் கருதியிருந்தது. இவற்றையெல்லாம் அந்த அம்மையார் தம் எழுத்துக்களில் மிகத் தெளிவாக உணர்த்துகிருர். ரமேஷ்வர்பட் என்ற கல்வி அறிவுடைய பிராமணனே துக்காராமின்மீது அடாதபழிகளைச் சுமத்தும் இயக்கத்திற்குத் தலைவனுக இருந்தான் என்று நம்பப்படுகிறது.

துக்காராம் தனக்கு நேர்ந்த அனைத்துத் துன்பங்களையும் பொறுமையோடு தாங்கிக்கொண்டார். ஆணவம் பிடித்த பிராமணர்களால் துக்காராமின் வாழ்க்கை துயரம் நிறைந்ததாக மாறியது என்பதை மெய்ப்பிக்க எண்ணற்ற கதைகள் சொல்லப் பெறுகின்றன. சான்றுகச் சிலவற்றை இங்குக் குறிப்பிடலாம். அவருடைய பசுமாடு அடித்துக் கொல்லப்பெற்றது. மிக அற்பமான குற்றங்களுக்காகக்கூட அல்லது மிகச்சிறிய நடைமுறை மீறல்களுக்காகக்கூட, அவர் அடித்து வதைக்கப்பெற்ருர். அவர் செய்த குற்றத்திற்குத் தண்டனை வழங்குவதாகச் சொல்லி, அவரை ஊரிலிருந்து ஒதுக்கிவைத்தனர். திருவினை, வழிபாடு முதலான எல்லாத் தொடர்புகளிலிருந்தும் அவரை விலக்கி வைத்தனர்.

சூத்திர வருணத்தில் பிறந்து, சாதியிலிருந்து ஒதுக்கி வைக்கப் பெற்ற அவர், தன் இலட்சியத்திலிருந்து பிறழ்ந்து விடவில்லை; தன் இலட்சியப் பயணத்தை மன உறுதியோடு தொடர்ந்தார். அஞ்சுவதுமில்லை, அஞ்ச வருவதுமில்லை என்று சூளுரைத்துக் கொண்டு, தன் இலட்சியத்தில் குறியாக இருந்தார். சாதி அமைப்புகளின் கொடுமைகள் குறித்துத் தொடர்ந்து பேசினுர்; கடவுளின் மிகப் பணிவான ஊழியன் என்ற முறையில், சாதிப் பிடிப்பின் கடுமையை எதிர்த்துத் தொடர்ந்து வாதாடினுர். கடவுளின் மிகப் பணிவான தொண்டன் என்று தன்னை அழைத்துக் கொண்டு, தொடர்ந்து நடைமுறையில் இருந்த சாதி அமைப்பின் கெடுபிடிகளையெல்லாம் அவர் எதிர்த்துக்கொண்டு வந்தது, அவர்மீது ஏற்கெனவே பகைமை கொண்டிருந்த கூட்டத்தார்க்கு மேலும் எரிச்சலை ஊட்டியது; சினத்தைத் தூண்டியது. துக்காராமின் பல பாடல்கள், அவர் தனது எதிரிகளின் மேலாண்மையை எதிர்த்து எவ்வாறெல்லாம் அறைகூவல் விட்டார் என்பதனைக் காட்டுகின்றன. ஒரு பாடலில்,

'நன்று செய்தனை, ஓ இறைவா!
என்னை நீ ஒரு (குன்பீ) வேளாளன் ஆக்கினுய்,
இல்லாது போனுல்,

வெளிவேடத்திற்கு இரையாகி வீழ்ந்துபட்டிருப்பேன்' என்கிருர்.

'துக்காராம் மற்ருேர் பாடலில்,
கற்று வல்லனுய் இருப்பனேல்,
அக்கல்வியே எனக்குப் பேரிடரைத் தந்திருக்கும்,
ஆணவத்திற்கும், அகங்காரத்திற்கும்,
ஆட்பட்டுப் போயிருப்பேன்,
நரகத்தின் வழியதனை நாடி நான் போயிருப்பேன்'
என்கிருர்.

வேறு ஓர் பாடலில் துக்காராம், அவர்களைக் குறித்துப் பேசும்பொழுது,

'வேதப் பொருளின் விளக்க மறியாது,
கிளிப்பிள்ளை போலச் சொன்னதையே சொல்லிக்கொண்டு
நீர் போய்க் கொண்டே இரும்;
வாராதீர் நீர் எந்தன் வழிக்கு'

எனச் சாடுகிருர். அவர்கள் அறிந்து வைத்திருக்கும் வேதத்தின் வழியே, சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைபோலச் சொல்லிக் கொண்டே போகட்டும்; வேதநெறியல்லாத தன் பக்திநெறிக்கு அவர்கள் வரவேண்டியதில்லை என்ற கருத்தில் சொல்லிப் போகிருர். மற்றுஞ் சில பாடல்களில், திருமறைகளின்பால் அவர்களுக்கிருந்த ஞான சூனியத்தை மிக அழகாக வெளியிட்டுள்ளார். திருமறைகளை அவ்வைதீக மனேபாவங் கொண்டவர்கள் புரிந்து கொண்டிருக்கும் பாங்கே கேள்விக்குரியதாகும் என்பது துக்காராம் கருத்தாகும். அவர்களின் நிலையையும் தனது நிலையையும் துக்காராம் பாசுரங்களில் வெளிப்படுத்தியுள்ளார்:

'வேதத்தின் உண்மைப் பொருளை,
நாங்கள் மட்டுமே அறிவோம்;
மற்றவர்களோ,
அதன் சாரத்தையறியாது பாரத்தைத் தாங்கி
நிற்பவராயினர்
உணவை உண்ணுதலை,
உணவைப் பார்த்தலோடு ஒப்பிடல் ஒல்லுமோ!
உண்டலைப் பார்த்தலோடு ஒப்பிடலாகாது;
மேலும் அதனை விளக்குவதாயின்,
அவர் நிலை,
கூலிக்கு உழைப்பவர் போன்றதே யாகும்
அவர்களோ,
பொருள்களின் பாரத்தைச் சுமந்து செல்பவர் தாம்;

ஆக்கலும், காத்தலும், அழித்தலும்—எல்லாம் அவனதே;
கண்டோம் யாம் அதன் வேர் முதல் தன்னே.
அதற்கேயுரிய கனிவந்துறும், இனி நம் கையகத்தே'[11].
என்று துக்காராம் விளக்கமாகப் பாடியுள்ளார்.

ரமேஷ்வர்பட் அவர்களைப் பொறுத்தவரையில் துக்காராமைப் பணியச் செய்து, அவரை முற்றிலும் வலுவிழக்கப் பண்ணுவது, தனக்கு ஏற்பட்ட மானப் பிரச்சனை என அதனை எடுத்துக்கொண்டார்; அவரைப் பொறுத்தவரையில் அது இயற்கையானதேயாகும். அன்றையச் சூழலில், துக்காராம் தன்னை விலக்கி வைப்பதைத் தவிர்க்க விரும்பி இருந்தால், அவர் கடுஞ்சோதனைகளுக்கு ஆட்பட்டே ஆகவேண்டும்; அவரால் தப்ப முடியாது. ரமேஷ்வர்பட், துக்காராமைப் பார்த்து, ''நீ எழுதிய பாடல்களையெல்லாம் எடுத்துச் சென்று, உன் கையாலேயே அவற்றையெல்லாம் ஆற்று நீரில் போட்டு மூழ்கடிக்கச் செய்'' என்று ஆணையிட்டதாக மகிபதி என்பவர் தெரிவிக்கிறார்.

பதினேழாம் நூற்றாண்டைய சமுதாய வாழ்வில், சூத்திரனாகப் பிறந்த ஒருவன் பிராமண ஆதிக்கத்திற்கு உண்மையான அச்சுறுத்தலாய் அமைந்ததும், அந்த ஆதிக்கத்தைச் சூத்திரன் ஒருவன் கேள்விக்கணைகளால் திணற அடித்தான் என்பதும் கேள்விப்படாத ஒன்றாகும்; துக்காராம் சூத்திரராகப் பிறந்தார்; பிராமண ஆதிக்கத்திற்கு உண்மையாகவே ஓர் அச்சுறுத்தலாய் அமைந்தார்; கேள்விக்கணைகளைச் சரமாரியாகத் தொடுத்துப் பிராமண மேலாதிக்கத்தைத் திணறச் செய்தார்—என்பன போன்ற தகவல்களைத் துக்காராம் வாழ்விலிருந்து அறிய வருகிறோம். பிராமணீயத்தின் மேலாண்மையைத் திணற வைத்தவர்களுள் துக்காராமைப் போன்ற வேறு சிலரும் உண்டு. ஞானதேவர், ஏகநாதர் போன்ற வரகரி இயக்கத்தைச் சார்ந்த திருத்தொண்டர்களும் பிராமணீயத்தின் மேலாண்மையை எதிர்த்தவர்கள்தாம். ஆனால், அவர்களோ பிராமண குலத்தில் பிறந்தவர்களாவர்; துக்காராமோ சூத்திர வருணத்தில் பிறந்தவர். அதனால்தான், துக்காராமிற்கு, பிராமணர்கள் சீற்றம் அடையாத வண்ணம் தான் கண்டு உணர்ந்த நம்பிக்கையூட்டுதற்கான சான்று

11. வேத³ா சாதோ அர்த்த ஆம்ஹாஸீச டா²வா ।
யேராணம் வாஹாப் ப⁴ார் மாத²ா ॥
க²ாதவ்யாஞ்சீ கோடீ³ தே³கீ²ல் யாஸீ நா ஹீ ।
ப⁴ார த⁴ன் வாஹீ மஜூரீசே ।
உத்பத்தீ பாலன ஸம்ஹாரா சே நிஜ் ஜேணே நேலே பீஜ்² த்யாசே ஹாதீ ॥
துகாம்ஹணே ஆம்ஹா ஸா படலே மூல் ।
ஆபணீச் ப²ல் ஆலே ஹாதா ॥

களைக் கூறி நிலைநிறுத்துவது இயலாததாக இருந்தது. எனவே, துக்காராமின் ஆன்மீக அனுபவ உரைகள் பிராமண ஆதிக்கத் திற்கு எரிச்சலைத் தந்தன; மோட்சத்தை அடைவதற்கான புதிய வழிமுறைகளைத் துக்காராம் போதித்தார். அவற்றைப் போதிக்க அவருக்கு உரிமையில்லை என்று நீதி வழங்குமாறு பிராமணர்கள் தக்க அதிகாரிகளை வேண்டினர். நீதிகளை விளக்கிக்கூற அவருக்கு உரிமையில்லை என்று தீர்ப்பளிக்க வேண்டுமென்பதையே அவர்கள் விரும்பினர். அக்காலத்தில் கிராமங்களின் நிருவாகப் பொறுப் பைக் கவனிக்க அலுவலர்கள் இருந்தனர்; அவ்வலுவலர்களின் தலைமைப் பொறுப்பாளரை, 'பட்டீல்' என்று அழைப்பார்கள். துக்காராம்மீது கோபமாக இருந்த பிராமணர்கள், கடைசி முயற்சியாக நிருவாகத் தலைமை அலுவலரான 'பட்டீலை' அணுகி, துக்காராமை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்குமாறு தூண்டினார்கள். அவர்கள் முயற்சியின் விளைவாகத் துக்காராமின் எழுத்துகளுக்குத் தடை பிறந்தது.

தன் ஆன்ம அனுபவங்களை—தான் கண்டுணர்ந்த கருத்துக் கருவூலங்களையெல்லாம் வெளியிடுவதற்குத் தடையேற்பட்டதை எண்ணி அதிர்ச்சியுற்றார். தடை ஒன்று தன்மீது கொடுமை யாகத் திணிக்கப்பட்டிருப்பதைக் கண்டு செய்வதறியாது திகைத் தார். துக்காராமுக்கு அன்றைய ஆட்சியிலிருந்தவர்களின் பக்க பலமும் இல்லை; சமூக மதிப்பு என்ற பலமும் அவருக்கில்லை; ஆகவே, செயலற்றுத் திகைத்தார். யாருமற்ற தனிமை, சாதியி லிருந்து தள்ளிவைத்தமை, சமுதாயக் குழுக்களிலிருந்தெல்லாம் நீக்கிவைத்த கொடுமை—இவைதாம் அன்று துக்காராமுக்குக் கிடைத்த பரிசுகள். 17–ஆம் நூற்றாண்டில், எங்கோ ஒரு ஒதுக்குப் புறக் கிராமத்தில், உணர்ச்சிமிக்க கவிஞன் ஒருவன், சமுதாயத்தி லிருந்து தள்ளிவைக்கப் பெற்ற கொடிய சூழலில், எப்படியெல் லாம் அவதிப்பட்டிருப்பான் என்பது, இன்றையச் சூழலில் வாழும் ஒருவனால் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியாத ஒன்றாகும். துக்காராம் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள அவரால் எதைச் சொல்லமுடியும்? அவரால் சொல்ல முடிந்ததெல்லாம் ஒன்றே ஒன்றுதான். அதாவது, தான் பண்ணார்ந்த பாசுரங்களைச் செய்வது தன்னுடைய விருப்பத்தினால் அல்ல என்றும், கடவுளின் ஆணைக்காகவே தான் பாடல்கள் செய்வதாகவும் சொல்வதைத் தவிர வேறொன்றும் அவரால் சொல்ல முடியவில்லை; அதுதான் உண்மையுங்கூட; அதைத் தவிர அவரிடம் சொல்வதற்கு வேறொன்றுமில்லை. தனக்குள்ள ஆதரவற்ற சமுதாயச் சூழலைக் கவிதை ஒன்றில், தெளிவாகக் காட்டியுள்ளார்:

எவ்வளவு கொஞ்சம் பொருள் என்னிடம் இருந்ததோ
அவ்வளவு பொருளும் அதிவிரைவில் செலவாகியது;

அதற்குப் பிறகு,
கடன் வாங்குதல் தவிர்க்க முடியாததாயிற்று;
கடன்கூட எவரும் கொடுத்திலர்.

மற்றுமொரு பண்ணூர்ந்த பாசுரத்தில் தன்னுடைய தவிப்பினைக் குறித்துப் பேசும்போது, துக்காராம் அவர்கள்,:

இப்பொழுது நான் என்னத்தை உண்பேன்?
எங்கு நான் போவேன்?
யார் தயவில் நான் கிராமத்தில் வாழ்வது?
யாருடைய தயவை நான் கணக்கில் கொள்வது?
கிராமத் தலைவர்—(பட்டீல்,) கோபமாயுள்ளார்,
கிராம மக்களும் கோபத்திலுள்ளனர்;
என்னைப் பற்றிக் கவலைப்படுவதற்கு
இங்கு, இப்பொழுது யார் இருக்கின்றனர்?
அவர்கள் என்னைப் பார்த்துக் கூறுவதெல்லாம்,
''அந்த மனிதன் மட்டுமரியாதை அனைத்தையும் விட்டவன்''

என்பதேயாகும்.

அத்தோடு அவர்கள் அமைதி பெற்றார்களா?
அல்லவே அல்ல;
வழக்கு மன்றத்திற்கு இழுக்கிறார் என்னை.
மரியாதைக்குரிய மக்கள் சிலர்—எனை
அடைத்து வைக்கவோர் ஆலோசனை கூறினர்;
நலிந்த ஓர் மனிதனும் என்னை—நசுக்கிக்கொல்ல
நல்லுரை வழங்கினர் மேலும் சில்லோர்;
ஒவ்வொருவரும் ஓர் உபாயம் கூறினர்
ஒடுக்கி அடக்கி முடக்குவதற்கு என்னை.
அன்னார் கூட்டம் எனக்கு ஆகாததாகும்;
இப்பொழுது போக எனை அனுமதியுங்கள்
விட்டல்பெருமானைத் தேடிச் செல்ல' [12]

என்கிறார்.

---

12. காப்^{3} க^{2}ாசே ஆதா கோணீகடே^{3} ஜாபே I
க^{3}ாவாத ராஹாவே கோண்யா ப^{3}லே II
கோப^{3}லா பாடீல் க^{3}ாவீசே ஹேலோக் I
ஆதா க^{4}ாலீ ஜீ^{4}க் கோண் ப^{4}ஜ I
ஆதா வேணே சலீ ஸாண்டி^{3}லீ ம்ஹணதீ I
நிவாட^{3}ா கரிதீ திவாணுத் II
ப^{4}லே லோக் வாசீ ஸாங்கிதலீ மாத் I
கேலா மாஜ^{4}ா க^{4}ாத் துர்பலாசா II
துகாமணே யாஞ்சா ஸங்க நபஹே மலா I
சோதீ^{4}த் விட்ட^{2}லா ஜாஊ ஆதா II

துக்காராமின் வாழ்க்கைச் செய்திகள், மகாராஷ்டிரப் பகுதியின் சமுதாய வரலாற்றில் மிகவும் தனித்தன்மை வாய்ந்த ஆராய்ச்சிக்குரிய செய்திகளாக உள்ளன. அன்றைய காலச் சூழலில் வாழ்ந்த பெரும்பான்மையான பிராமணரல்லாதார், பிராமணீயச் சட்டவிதிகளுக்கு விட்டுக்கொடுத்துப்போகவே நேரிட்டது; விட்டுக்கொடுத்துப்போக விரும்பாதவர், பிராமணருடைய சீற்றத்தைத் தூண்டியாக வேண்டும்; அல்லாதுபோனால், மனமறிந்து பிராமணீயத்தை ஏற்றுக்கொண்டேயாகவேண்டும்; தவறு என்று தெரிந்தால்கூடப் பொறுத்துக் கொண்டுதான் போகவேண்டும். சாதியிலிருந்து தள்ளி வைக்கப் பெற்ற ஞானதேவர் போன்றோருங்கூட பிராமணீயச் சட்டவிதிகளுக்கு இணங்கிப் போய்த்தான் வாழவேண்டியிருந்தது; அவர்களோடு ஒருவகையில் சமரசம் செய்துகொண்டே வாழ்க்கையை ஓட்டினார். ஆனால், துக்காராம் பிராமணீயச் சட்டவிதிகளுக்கு ஒத்துப் போகவேயில்லை; அதிகார வர்க்கத்தின் துணைகொண்டு பிராமணீயம் வெளிக்காட்டிய தடைகளை ஏற்று, இணங்கிப் போக மறுத்தார். அவர்களோ துக்காராம் எழுதக்கூடாது என்று, அவர் எழுத்துகளுக்குத் தடை விதித்தனர்; தடைகளை ஏற்றுக்கொண்டு எழுதாமல் துக்காராம் இருந்துவிடவில்லை; மாறாகத் தொடர்ந்து எழுதினார். உண்மையாகச் சொல்லப்போனால், தடைகளை மீறுவதன்மூலம் பல சோதனைகளையும் சந்திக்கத் தயார் ஆனார். மிகப் பணிவோடு, ''நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ செய்யுங்கள்''; ''என்னை விட்டல்பெருமான் காப்பாற்றுவார்'' என்றே சொன்னார். துக்காராம் அதிகார வர்க்கத்தின் ஆணைகளுக்கு அஞ்சவேயில்லை.

அவர் தொடர்ந்த போராட்டத்தின் இறுதி முடிவுபற்றிச் சொல்லமுடியாத அளவிற்கு, அந்த முடிவு மூடுமந்திரமாய் உள்ளது. எழுதிய அனைத்தையும் நதியில் எறிந்துவிடுமாறு அவர் வற்புறுத்தப் பெற்றார்; விட்டல்பெருமானை வழிபட்டுக்கொண்டே தியானத்தில் ஆழ்ந்தார்; அவரது ஏடுகளை நதியில் எறியும் சோதனை நிகழ்ச்சி சுமார் கி.பி. 1645-ஆம் ஆண்டில் நடந்ததாகும்; அப்பொழுது அவருக்கு வயது முப்பத்து ஏழாகும். அவர் வாய் திறந்து பேசாமல் அமைதியானார்; மனோபலங்களை யெல்லாம் உண்ணா நோன்பு பூண்டு ஒருசேரத் திரட்டினார்; தியானம் செய்தார்; கடவுளின் உதவியை வேண்டிக் கடுநோன்பு நோற்றார். இது குறித்துத் துக்காராம் அவர்கள்,

> இது எனது முரட்டுத் துணிச்சலுள்ள முயற்சிதான், இப்பொழுது நான் என்னையே மூழ்கடிக்கிறேன்,
>
> ''சந்திரபாகாவினுள்''

என்று வெளியிட்டுள்ளார்.

பதின்மூன்று நாள்களுக்குப் பிறகு, வியக்கத்தக்க அளவில் நீரில் மூழ்கடித்த தாள்கள் நீரின்மேல் மிதந்தன. ஆற்று நீரில் மூழ்கப் பண்ணிய கவிதைகள் நீரில் மிதக்கத் தொடங்கிய அந்த அற்புதக் காட்சியை அவர் காலத்தில் வாழ்ந்த பலர் தம் எழுத்துகளில் பதிவு செய்துள்ளனர். அந்த அற்புதமான தெய்வீக நிகழ்ச்சி பற்றிய செய்திகள் திசையெங்கும் பரவின; துக்காராமைப் பின் பற்றுவோர், கட்டவிழ்த்துவிடப் பெற்ற அடக்குமுறை அட்டூழியங்களை எதிர்த்துப் பெற்ற வெற்றியாக அச் செயலைக் கருதி ஆரவாரித்தனர்; துக்காராமைப் புகழ்ந்து பேசினர்; அந்த அற்புத நிகழ்ச்சி, துக்காராமை மனிதர்களுள் மேம்பட்ட ஒரு தெய்வீக மனிதராக உயர்த்திக் காட்டியது; அவர் பாடிய பாசுரங்கள் எதிர்காலத்தில் வருந் தலைமுறையினருக்கு வழங்கிய புனித மொழிகளாயின.

அவருடைய இறுதிக்கால வாழ்க்கை அமைதியில் கழிந்தது என்ற உண்மையைத் தற்கால ஆராய்ச்சி தெரிவித்துள்ளது. அவருடைய கிராமத்திற்கு அருகே, துக்காராமுக்கு ஓரளவு பயிரிடும் நிலம் இருந்தது; பயிர்த்தொழிலையும் பார்த்துக்கொண்டு வாழ்க்கையை அவர் அமைதியாகக் கழித்திருக்க வேண்டும்; அப்பொழுது அவருக்குப் போதுமான அளவு ஓய்வும் இருந்திருக்க வேண்டும்; அதனுல், அவர் தியானத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும்; தியானத்தில் ஈடுபடுவதும், தியானத்தில் ஈடுபடாமலிருந்த எஞ்சிய பொழுதுகளில் வீட்டிலிருந்துகொண்டு எழுதவும் செய்திருப்பார்; துக்காராம் அவர்களோ, ஆன்மீகச் செல்வத்தை அடைவதற்கே தனக்குரிய நேரத்தின் பெரும்பகுதியை ஒதுக்கினுர். அவரே தெரிவிப்பதுபோல, மக்கள் அவரை ஓர் அவதார புருஷராகவே கருதினர்:

மக்கள் என்னைத் 'தேவன்' என்கின்றனர்,
வெறுக்கத் தக்க வேண்டா உரையது;
ஓ இறைவா! யான் அறிவேன் எனது பாவங்களை;
அத்தகைப் புகழ்ச்சிகளால்,
எந்தன் பகட்டு பெருகிவிடாது பேணவேண்டும் நீ;
உன்னிடமிருந்து என்னைப் பிரிக்க,
இறுமாப்புக்கு இடந்தரக் கூடாது;
பெரியோன் என்ற எண்ணமே,
பெரும்பளுவாகும் என்பதை உணர்வேன்.

துக்காராம் நடைமுறை வாழ்க்கையை நன்கு அறிந்திருந்தவர்; அவர் வெறும் மனக்கோட்டையில் வாழ்பவரல்லர்; நல்ல செயல் வீரர்; எப்பொழுதும் எல்லைகளுக்குச் சென்று வாழும் இயல்பு படைத்தவரல்லர்; நடைமுறையை உணர்ந்து அதற்கான

செயற்பாங்கு கொண்டவர். மற்ற சமயப் பெரியார்களைப்போல, அவர் பெண்களை வெறுப்பவரல்லர்; குழந்தை குட்டிகளையோ குடும்பக் கடமைகளையோ வெறுத்து ஒதுக்கியவரல்லர், வாழ்க்கையின் எல்லாத்தரப்பு மக்களும்—உயர்ந்தோராயினும் சரி, தாழ்ந்தோராயினும் சரி,—எல்லாரும் அவரது பக்தர்கள் ஆயினர்; அனைவருக்கும் அவர்பால் ஈடுபாடு உண்டு. எல்லாரையும் இறைவனின் அங்கமாகக் கண்டு தெளிந்தவராதலால், பேதமின்றி அனைவரையும் நேசித்தார். ஒரு பாடலில் துக்காராம் அவர்கள்,

'நாடிச்செல்கிறேன் மக்களை நான்,
ஏனென்றால்,
எல்லாரிடத்தும் இறைவன் இருக்கிறான்;
(மக்கள் யாவரும்),
ஒரே உடம்பின் உறுப்புகளாவர்,
அவர்களிடையே,
பேதம் காணுதல் பேதைமை யாகும்;
இறைமையும் அன்று'

என்று, பேதமில்லாக் காட்சியைப் பெரிதுபடப் பேசுகிறார்.

துக்காராமின் பாடல்களைக்கொண்டு ஆராய்ந்து பார்க்கும் பொழுது, அவர் பணிவும் எளிமையும் அமைதியும் அன்புள்ளமும் நிறைந்த ஒரு மனிதராகக் காட்சியளிக்கிறார்; அவர் எழுத்தறிவு இல்லாதவர் என்று, ஒரு பரவலான கருத்து நிலவுகிறது. ஆனால், அதற்கு முரணாக எண்ணும்படி அவர் பாடல்கள் உள்ளன. அவருடைய பாடல்களோ அவர் நிறைந்த கல்வியறிவு உடையவர் என்பதைத்தாம் காட்டுகின்றன. சிற்சில சமயங்களில் முன்கோபக்காரராகவும், வெறுப்பை உமிழ்பவராகவும், முரட்டுத்தனத்தோடு நாகரிகமில்லாமல் நடந்துகொள்பவராகவும் இருந்திருக்கிறார். ஆனால், மன்னிக்கும் மனோபாவமும் அகநோக்கு ஆராய்ச்சியும் கள்ளங் கபடமில்லாத வெள்ளை மனமும் வெளிப்படையாகப் பேசும் இயல்பும் உடையவராகவே அவர் இருந்தார் என அறிகிறோம். அவரைப் பொறுத்தவரையில், அவருடைய வளர்ச்சியானது இயற்கையானதாகும். மரமானது தனக்குரிய இயற்கைச் சூழலில் விதையிலிருந்து தோன்றிப் பெருமரமாய் வளர்ந்தோங்கி நின்றதைப் போன்றதே அவருடைய வாழ்வும் வளர்ச்சியும். வாழ்வின் தொடக்கத்தில் அவர் சமுதாய மதிப்பைப் பெற்றிருக்கவில்லை; பக்கத்தில் வாழ்ந்தவர்களும் அவருக்குப் பரிவு காட்டவில்லை; அவருடைய அறவாழ்க்கைக்கு வழிகாட்டும் ஆசிரியரையும் பெற்றிருக்கவில்லை; வழிநடத்திச் செல்லக்கூடிய தலைவரும் அவருக்குக் கிடைக்கவில்லை; கவிதை எழுதுவது எப்படியென்று

யாரும் அவருக்குக் கற்றுத்தரவுமில்லை. நோயாளிகளுக்கு உதவுதல், களைத்துச் சோர்ந்தவர்களின் பாரங்களைத் தூக்கிச் சென்று உதவுதல், தாகமுற்று வருவோர்க்குத் தண்ணீர் தருதல், பசித்தோருக்குப் புசிக்க உணவு கொடுத்தல், நடக்க இயலாத நொண்டிகட்குக் குற்றேவல் செய்து உதவுதல் ஆகிய பல்வேறு தொண்டுகளை அவர் செய்து வந்ததாக, மகிபதி அவர்கள் தன் எழுத்துகளில் அவரைப்பற்றி விவரித்துள்ளார். இறைவன் தான் துக்காராமுக்குத் தலைவரானார்; தன் அனைத்துச் செயல்களையும் அத்தலைவருக்கே அர்ப்பணித்தார்.

சமயப் பெரியார்களுக்குள்ளே மிக்க மனிதாபிமானமுடைய அருட்செல்வர் துக்காராம். சொல்வது வேறு, செய்வது வேறு என்றில்லாதவர்; சொல்லிய வண்ணமே வாழ்ந்து காட்டியவர்; மனித நலன்களில் மிக்க அக்கறையுடையவராக இருந்தார். அந்தக் காலத்தில் தக்காணம் முழுமையும் அளாவிநின்று அலைக்கழித்துக்கொண்டிருந்த அரசியல் அலைகளுக்கு ஆட்படாமல் முழுவதும் ஒதுங்கியே யிருந்தார். துன்ப அலைகளுக்கு நடுவிலும் எவ்விதமான பாதிப்பும் இன்றி, அமைதியாக அவர் வாழ்ந்து காட்டிய கருணை நிறைந்த அவர் வாழ்க்கையைக் கண்ட சமகாலத்தில் வாழ்ந்த சீடர்களும், அத்தகைய ஒரு வாழ்க்கையைக் கேள்வியுற்றுப் பிற்காலத்தில் அவர் வாழ்க்கை வரலாற்றை எழுதிய ஆசிரியர்களும், அவரது அந்தச் சலனமற்ற நிலையைச் சற்று மிகைப்படுத்தியே எழுதியுள்ளனர். அவர்கள் அவ்வாறு மிகையாக எழுதியதற்குக் காரணம், மகாத்மா என்று சொல்லப் பெறும் ஒருவர் வழக்கமாகத் தமக்கு நேரும் தொல்லைகளுக்கு மத்தியிலும், அவற்றைப் புறங்கண்டு எப்படியெல்லாம் வாழ்வார் என்று தாங்களே தங்களுக்குள் கற்பித்துக்கொண்டிருந்த ஒரு கற்பனைப் போக்குதான் காரணமாகும். மகாத்மா என்றால் இப்படித்தான் ஒருவர் இருப்பார் என்று தாங்கள் ஒரு கருத்தை ஏற்றுக்கொண்டிருந்ததால், அதுமாதிரியான ஒத்த நிகழ்ச்சிகளைத் துக்காராம் வாழ்வில் கண்டதாலும் கேட்டதாலும் அவ்வாறு மிகைப்பட எழுத முற்பட்டனர். வாழ்க்கையின்மீது வெறுப்பு, இல்லறக் கடமைகளில் அக்கறையின்மை, பிடிப்பு இல்லாத இரண்டுங்கெட்டநிலை, துறவு, அற்புதங்களைச் செய்துகாட்டி மருட்டும் ஆற்றல்—இவைபோன்ற பலவற்றைத் துக்காராம் வாழ்வோடு பொருத்திப் பல கதைகளைப் பின்னிவிட்டனர். அக்கதைகள் எல்லாம் நம்பகமான வரலாற்றுக்கு உரியவைதானா என்பது ஆராய்ச்சிக்கு உரியதாகும்; கதைகளுக்கு அவரவர் தரும் விளக்கங்களைப் பொறுத்ததேயாகும்.

துக்காராம் பந்தர்பூருக்குக் கால ஒழுங்கு தவறாது விட்டுவிட்டு யாத்திரை செல்வார் அல்லது கிராமங்களுக்குச் சென்று தான்

கண்டுணர்ந்த உண்மைகளை மக்களுக்கு விளக்கிச் சொல்வார் என்ற கருத்து, பரவலாக மக்கள் மத்தியில் உலவுகிறது. அந்தக் கருத்தை மெய்ப்பிப்பதற்கான சான்றுகள் எதுவும் இல்லை; சான்றுகள் தந்து மெய்ப்பிக்க முடியாத பல கருத்துகள் அவர் வாழ்க்கையைப்பற்றிப் பரவலாகச் சொல்லப்பெறுகின்றன. மற்றும் ஒரு கட்டுக்கதை நிலவுகிறது; அதாவது, அவருக்கும் சிவாஜி மன்னருக்கும் இடையே சந்திப்பு ஒன்று ஏற்பட்டதாகவும், அந்தச் சந்திப்பின் காரணமாக, சிவாஜி மன்னர் தன் ஆசைக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு, மராத்தியப் பேரரசைக் கட்டி உருவாக்க இருந்த கடமையைக் கைவிட்டுவிட்டதாகச் சொல்லப்பெறுகிறது. சிவாஜி மன்னரும் துக்காராமும் பெரும்பாலும் எந்தக் காலத்திலும் சந்தித்திருக்கமாட்டார்கள். பிராமண குலத்தில் பிறந்த சுறுசுறுப்பான திருத்தொண்டர் இராமதாசரை ஒருவேளை சந்தித்திருக்கக்கூடும். அவர்கள் இருவரும் சமுதாய எழுச்சியில் நம்பிக்கை கொண்டவர்கள். சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியை உண்டாக்க இடைவிடாது உழைத்தவர்கள். ஆனால், இருவரும் ஒருவருக்கொருவர் தாம் தாம் பின்பற்றும் நெறியளவில் மாறுபட்ட போக்கினைக்கொண்டவர்கள். ஒருவர் காட்டும் வாழ்க்கை நெறிக்கும் மற்றொருவர் காட்டும் வாழ்க்கை நெறிக்கும் வேறுபாடு உண்டு. தேர்ந்தெடுத்த நெறியில் வேறுபாடுகள் இருப்பினும், இலட்சியம் இருவருக்கும் ஒன்றுதான். மேலும், துக்காராம் தன்னுடைய நடவடிக்கைகளைத் தன்னுடைய கிராம அளவில் நிறுத்திக்கொண்டவர். ஆனால், இராமதாசரோ வளர்ந்து வந்த மராத்திய தேசிய எழுச்சியின் துணைகொண்டு இந்து மக்கள் முழுமைக்குமான ஓர் அரசைத் தோற்றுவிக்க விரும்பினார்.

துக்காராமின் கடைசிக் கால வாழ்க்கையோடு பல அற்புதங்கள் இணைத்துப் பேசப்பெறுகின்றன; வாழ்க்கை நிகழ்ச்சிகளோடு அற்புதங்களை இணைத்துப் பேசுவதன்மூலம் அவருக்கிருந்த பரவலான செல்வாக்கு மெய்ப்பிக்கப்பெறுகிறது. எடுத்துக்காட்டுக்கு ஒரு வியத்தகு நிகழ்ச்சியை இங்குக் குறிப்பிடலாம். ‘லோஹ்கௌன்’ (Lohgaon) என்னும் இடத்தில், ஓர் ஏழைப் பெண்மணி வாழ்ந்து வந்தாள்; அவள் வளையல் விற்றுப் பிழைக்கும் சாதியைச் சேர்ந்தவள். துக்காராமின் கூட்டு வழிபாட்டு நிகழ்ச்சியில் உண்மையாகவே கலந்துகொள்ள விரும்பினாள்; அவளுக்கு ஒரு குழந்தை உண்டு. வீட்டில் அதைத் தனியாக விட்டுவிட்டுக் கூட்டு வழிபாட்டுக்குப் போகமுடியாத நிலை; அவள் செய்வதறியாது திகைத்தாள். துக்காராமின் கீர்த்தனைகளைக் கேட்பதில் உண்மையான நாட்டங்கொண்டவள். இரவில் வீட்டில் வாழ்கின்ற மற்றவர்களுக்குக் குழந்தை எவ்விதத் துன்பமும் தராமல் இருக்கும் பொருட்டு, அக்குழந்தைக்குக் கடுமையான மயக்க மருந்தைக்

கொடுத்துத் தூங்கப்பண்ணிவிட்டுத் துக்காராமின் கீர்த்தனைக்குச் சென்றுவிட்டாள்; மருந்தின் கடுமையால் குழந்தை மரணத்தைத் தழுவியது; குழந்தையின் மரணம் அத்தாய்க்குத் தெரியாது. அத்தாயின் செயல் கண்டு கோபங்கொண்ட அவ்வீட்டார், அந்தச் செத்த குழந்தையின் உடலை எடுத்துக்கொண்டு நேரே துக்காராமின் கீர்த்தனைக் கூடத்திற்கே வந்துவிட்டனர். அவ் வீட்டாருக்கோ அளவிடமுடியாத கோபம்; அக்குழந்தையின் தாய்க்கோ விட்டல்பெருமானிடம் எல்லையில்லாத பக்தி; தாயின் பக்திப் பெருமையைத் துக்காராம் உணர்ந்தார். அந்த அன்னை யின் பக்திப் பெருமையை உலகோர்க்கு மெய்ப்பித்துக்காட்டும் முறையில், அக்குழந்தைக்கு மீண்டும் உயிர் வரச் செய்தார்; குழந்தை பிழைத்துக்கொண்டது. இப்படி ஒரு வியத்தகு நிகழ்ச் சியைத் துக்காராம் வாழ்வோடு இணைத்துப் பேசுகின்றனர்; இதைப்போல எத்தனையோ கதைகள் துக்காராம் வாழ்வோடு இணைத்துப் பேசப்படுகின்றன; உணவுக்கும் உடைக்கும் ஏங்கி நின்ற ஏழை மக்களுக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் கொடுத்ததாகக் கதைகள் உள்ளன. துக்காராமின் கொடைச் செயல்கள், ஓயாது நச்சரிக்கும் அவர் மனைவிக்கு மேலும் மேலும் எரிச்சலை ஊட்டின; இதுபோன்ற செயல்களும் அவர் வாழ்க்கை யில் நடந்துகொண்டுதான் இருந்தன; வாழ்க்கையின் ஒருபக்க நிகழ்ச்சி இது.

உயிரினங்கள்மீது துக்காராமிற்குள்ள இரக்க மனப்பான்மை யைக் குறிக்க வேறு ஒரு கதை உள்ளது. இவர் தியானம் செய்யும் இடத்திற்கு அருகே ஒரு பண்ணை நிலம் இருந்தது. அங்குச் சோளம் பயிரிடப்பட்டிருந்தது. அந்த நிலத்திற்குச் சொந்தக் காரர் அந்தச் சோளக் கொல்லையைக் கவனித்துக்கொள்ளுமாறு துக்காராமை வேண்டினார்; கதிர்மணிகளைப் பறவைகள் வந்து தின்று அழித்துவிடாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும் என்பது அவருக்கிட்ட பணி. கவண் உதவிகொண்டு அப்பணியைச் செய்யுமாறு துக்காராமைப் பண்ணை உரிமையாளர் வேண்டிக் கொண்டார்; அந்த வேலைக்கு அரை மணங்கு சோளம் கொடுப்ப தாக உரிமையாளர் வாக்குறுதி தந்திருந்தார். அப்பணியைத் துக்காராம் செய்ய முன்வந்தார். ஆனால், துக்காராம் அப்பணி யைச் செய்யும்போது எண்ணிப் பார்த்தார்—பறவைகளும்கூட, கடவுளின் படைப்புகளே; அவைகளும் விட்டல்பெருமானின் குழந்தைகளே; அவைகளை எப்படித் தடைப்படுத்துவது நியாய மாகும்—என்றெல்லாம் எண்ணினார்; எனவே, பறவைகளை அவர் விரட்டவேயில்லை. பயிர்களின் கதிர்மணிகளையெல்லாம் பறவைகள் உண்டு போகுமாறு விட்டுவிட்டார்; கவண் கொண்டு அவை களை விரட்டவேயில்லை. பயிர்கள் அனைத்தையும் பறவைகள்

மொய்த்தன; கதிர்மணிகளைத் தின்றன; அவை சென்றன. துக்காராம் பறவைகளை விரட்டுவதை விட்டுவிட்டு, இறைவனின் திருநாமத்தை ஒலிப்பதிலேயே பொழுதையெல்லாம் போக்கினார்;

> ''இந்தத் தானிய மணிகளில் பறவைகளுக்கென்ன பங்கா இல்லை? நான் ஏன் அவைகளை விரட்டவேண்டும்''

என்று ஒரு பாசுரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பண்ணை உரிமையாளர் வந்து பார்த்தார்; பதறித் துடித்தார்; தானிய மணிகள் எல்லாம் தின்று தீர்க்கப்பெற்று மிச்ச சொச்சம் எதுவும் வயலில் இல்லாததைக் கண்டு வயிறெறிந்தார். துக்காராம்மீது எல்லையில்லாத சினங்கொண்டார்; கிராமப் பஞ்சாயத்தாரிடம் சென்று, நடந்தவைகளையெல்லாம் சொல்லி நீதி கேட்டு வாதாடினார்; தன்னுடைய நிலத்தில் இயற்கையாக 40 மணங்கு விளையுமென்றும், அதற்கு ஈடாக 40 மணங்கு தானியத்தைத் துக்காராம் தரவேண்டும் என்றும் முறையிட்டார். கிராமப் பஞ்சாயத்தார் அந்த வழக்கைக் கேள்வியுற்று, உரிமையாளரை நிலத்திற்குச் சென்று அறுவடை செய்யச் சொன்னார்கள். கதிர் அடித்து மணிபிரித்துக் கதிர்மணிகளை அளந்தார்கள். அவர்கள் எல்லாரும் வியக்கும்வண்ணம் பலநூறு மணங்கு சோளம் விளைவாகியிருந்தது. கிராமப் பஞ்சாயத்தார் பண்ணையாருக்குச் சேரவேண்டிய அளவைப் பண்ணையாருக்குக் கொடுத்து விட்டு, எஞ்சிய தானியங்களைத் துக்காராமிடமே தந்தனர். ஆனால் துக்காராம், ஒருவர் செய்த செயலின் விளைவை மற்றொருவர் அனுபவிக்க எவ்வித உரிமையுமில்லை என்று சொல்லிய வண்ணம் அதை எடுத்துக்கொள்ள மறுத்துவிட்டார்.—துக்காராமிற்கு உயிரினங்கள்மீதுள்ள கருணையைக் காட்டுவதற்கு இப்படி ஒரு கதை வழங்குகிறது.

துக்காராமிற்கு உயிரினங்கள்மீது அளவிலாப் பரிவு உண்டு. ஒரு சமயம் அவர் வயல் வழியே போய்க்கொண்டிருந்தார். அவர் வருகையைக் கண்டு அஞ்சிப் பறவைகள் பறந்து சென்றுவிட்டன. அக்காட்சியைக்கண்டு அவர் துன்புற்று வருந்தினார்; அவற்றைத் தான் வெருட்டி அனுப்பிவிட்டதுபோல் உணர்ந்தார். எந்த இடத்தில் அத்தகைய ஒரு நிகழ்ச்சி நடந்ததோ அதே இடத்தில் அசையாமல் நின்றார். ஒன்றுமறியாத அப்பாவி உயிரினங்களை என்னிடமிருந்து எது அச்சுறுத்தி விரட்டியதோ, அது தன்னுடைய உடம்பிலிருந்தும் மனத்திலிருந்தும் அகலவேண்டும் என்று கடவுளை நோக்கி வழிபட்டார். மிக நீண்ட நேரம் வழிபாடு செய்து கொண்டே அங்கு நின்றார். சென்ற பறவைகள் எல்லாம் திரும்பி வந்து மரக்கிளைகளில் உட்காருவதுபோல் தன்மீது உட்காரும்

வரை அங்கேயே நின்று வழிபாடு செய்தார். இப்படி ஒரு கதையும் சொல்லப்பெறுகிறது.

இல்லறக் கடமைகளைச் செம்மையாகச் செய்து முடிப்பதன் மூலம் ஆன்மீகப்பேற்றை அடையமுடியும் என்று யார் நம்புகிருர்களோ, அவர்களுக்கெல்லாம் முன்மாதிரியாக இருப்பது துக்காராமின் வாழ்க்கையாகும்.. கீதையில், பலனை எதிர்பாராமல், அத்தகைய கடும் முயற்சியில் ஈடுபடுவதற்கான வலியுறுத்தல்கள் போதுமான அளவு உள்ளன.

சத்தியத்தை நாடிச்செல்லும் முயற்சியில் தொடர்ந்து நம்மை ஈடுபடுத்திக் கொள்வதன்மூலம், நாம் நமது கீழ்மைகளையும் தன்னல மனோபாவத்தையும் வெற்றிகாண முடியும்; தான் என்னும் அகங்காரம் மறைவதையும் அனுபவத்தில் உணரலாம். நம்மை நாமே வன்மையாகச் சோதித்துக்கொள்வதன்மூலம், நாம் நம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்கிறோம்; இந்த முறையில் துக்காராம் அவரது சொந்த கடந்தகால வாழ்க்கையை நுணுகி ஆராய்ந்தார்; கழிவிரக்கத்தோடு அவரது சொந்த மனத்தின் இயல்பைப் பகுத்துப் பார்த்தார். இளமைக்கால வாழ்க்கைப் பகுதியில் அவரைத் துன்புறுத்திய தாழ்வு மனப்பான்மை, பிற்காலத்தில் அவரைவிட்டு மறைந்துபோயிற்று. மேலும், சூத்திர வருணத்தில் பிறந்த அவர்,—பிராமணர்களிடத்து எல்லாவகையான அவமதிப்புகளையும் சந்தித்த அந்தத் துக்காராம், கடைசியில் ஒரு கருத்தை வெளியிட்டார்; அதாவது, ''பக்தர்களாகிய நாம் மட்டுமே வேதங்களின் உண்மைப் பொருள்களை அறிந்தவர்களாவோம்; மற்றவர்கள் எல்லோரும் அவற்றின் பளுவை மட்டுமே தூக்கிச் செல்கின்றனர்''—என்ற கருத்தை வெளியிட்டார்.

''கல்வி அறிவுள்ள பிராமணர்கள் நம்மைக் கெஞ்சுகிறவர்களாக ஆவார்கள்''

என்று வேறு ஓர் பாசுரத்திலும் பக்தர்களின் பெருமை குறித்த கருத்தை வெளியிட்டார். ஒரு புதிய நம்பிக்கையோடு மேலும் சில கருத்துகளை வெளியிட்டுள்ளார்; ஒரு பாசுரத்தில்,

''தாழ்ந்த சாதிக்குரியவனான நான்
வேதங்களைக் கேட்டுக்கூட இருக்கமுடியாது,
அத்தகைய ஒருவனுக்கு,
துறக்கத்தில் ஓர் இடம் கொடுத்துள்ளாய்,
அன்புக் கடவுளே!
இப்பொழுது நான் எவ்விதத்திலும் இளைத்தவனல்லன்;
பிறப்பினாலோ அன்றிப் பிறந்த குடும்பத்தினாலோ

தாழ்ந்தவனல்லன் யான்;
வருத்தம் உற்றிலேன் யான்''[13]

என்று கூறியுள்ளார்.

இத்தகைய ஒரு பெரிய மாற்றம் தன்னிடம் நிகழ்ந்தமைக்காக, அதற்குக் காரணமாய் இருந்த விட்டல்பெருமானுக்கு நன்றியுடையவராய் இருந்தார்.

இறையனுபவத்தைத் தான் மட்டும் உணர்ந்ததோடு துக்காராம் நிறைவு பெற்றுவிடவில்லை. மக்கள் எல்லாரும் தங்கள் தங்கள் எல்லைக்குள் இருந்துகொண்டே தான்பெற்ற அவ்விறையனுபவத்தைப் பெற வழிவகை கண்டார். பன்மையாகத் தோற்றமளிக்கும் பிரபஞ்சத்தினூடே இழையோடி நிற்கும் ஒருமையைக் கண்டு, அதனோடு கலந்து அனுபவம் பெற்றார். அவ்வனுபவத்தைப் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டு உழைத்தபோது, அவர் உற்ற உணர்வு மனத்தின் நிலைகளைப் பல பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார். பன்மையாகப் பரந்து தோற்றமளிக்கும் இவ்வுலகப்பரப்பினுள் இழையோடி நிற்கும் ஒருமையைக்கண்டு தெளிய எடுத்துக்கொண்ட முயற்சிகளின்போது, அவர் மனம் உற்றநிலைகளையெல்லாம் பண்நிறைந்த பாசுரங்கள் பலவற்றில் வெளிப்படுத்தியிருக்கிறார்; அப்பாசுரங்களில் அவரின் அநுபூதிநிலையை அழகுறக் காட்டியுள்ளார். ஆதியும் அந்தமும் இல்லாத தனிமுதலை, காலத்தையும் இடத்தையும் கடந்து நின்ற அவரால் உணரமுடிந்திருக்கிறது. தனிமுதலை உணர்ந்து, உணர்ந்த அவ்வனுபவத்தைப் பொதிந்து வைத்திருக்கும் அப் பாடல்களுக்குப் பக்திப் பாடல்களின் வரலாற்றில் ஒரு தலையாய இடமுண்டு.

கி. பி. 1650-இல் அவர் மறைவு நிகழ்ந்தது; துக்காராமின் மறைவு குறித்துக் கருத்து வேறுபாடு உள்ளது; அவர் தன் பாடல்களை இசையோடு உருக்கமாகப் பாடிக்கொண்டிருக்கும்பொழுது திடீரென்று மறைந்துவிட்டார் என்று சொல்லப்பெறுகிறது. விளக்கிக் கூறமுடியாத குறிப்பிடத்தக்க அந்த அற்புத நிகழ்ச்சியைச் சூதுவாதற்றவர்களும் கற்றுவல்லார்களும் நம்புகின்றனர். அந்த நிகழ்ச்சி, அவர் காலத்தில் வாழ்ந்த பலராலும் மற்றும் அவரது சீடர்களாலும் உறுதிப்படுத்தப் பெற்றுள்ளது. துக்காராம் பாடியதாகக் கருதப்பெற்றுவரும் ஓர் உணர்ச்சிமிக்க இசைப் பாடலில், கடவுள் தேரில் வந்து தன்னை எவ்வாறு பார்த்துவிட்டுச் சென்றார் என்ற நிகழ்ச்சியை விளக்கிக் கூறியுள்ளார். அத்தகைய

[13] யாதிஹீன் நயே ஐகோ ஜயா வேத் ।
தயாதி³லே பத வைகண்டீ² சே ॥
ஆதா மீ ஸர்வதா² நம்ஹேஹ க²ா துர்பல் ।
யாதிஹீன் குல தைன்ய வாஹூ ॥

வியத்தகு நிகழ்ச்சிகளுக்கு ஒரு நம்பகமான வரலாற்றுச் சோதனை பார்ப்பது என்பது இயலாததாகும். அப்படியே ஒரு சோதனையில் இறங்கினாலும், அதுவும் இறைநிலைசார்பான ஒன்றில் போய்த் தான் முடியும். இத்தகைய அற்புத நிகழ்ச்சிகளைப் பகுத்தறிவு மோகத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தினால் எதிர்பார்க்கும் பலன் கிடைக்காது. அறிதோறும் அறியாமை வந்து எய்துவதுபோல, சோதனை செய்யச் செய்ய அறிவால் விளக்கிக்கூறமுடியாத தெய் வீகத் தொடர்புகொண்ட ஒன்றை நோக்கியே அது போய்க்கொண் டிருக்கும். பெர்முதா முக்கோணம்பற்றிய விளங்காப் புதிர்கள், மயனின் பழமையை நினைவூட்டும் சின்னங்கள், சூனியவித்தை, உளநோய் இயல், ஜாலவித்தைகள் (பகற்பொழுதில் பலர்முன் செய்துகாட்டப் பெறும் கண்கட்டி வித்தைகள்), செய்வினைகள், மந்திர தந்திரங்கள், ஒருவரைப் பிறிதொருவராக மாற்றம் செய் தல், பறக்கும் தட்டுகள், பால்பெக்கின் மிகப் பெரிய 'இறங்கு தளங்கள்'—ஆகிய இவற்றின்மீது எழுப்பப் பெற்றுள்ள கொள்கை கள் யாவுமே மிகவும் சிந்திக்கக்கூடிய பகுத்தறிவுவாதியையும் திணற அடிக்கக்கூடியவையாகும். இராமகிருஷ்ண பரமஹம்சர், நரசிம்ம சரசுவதி, அரவிந்தர் போன்ற யோகியர்களும் சித்தர் களும் உணர்வுநிலையோடு கூடிய ஒட்டுமொத்த உருமாற்றங்கள் (கூடுவிட்டுக் கூடுபாய்வதுபோன்ற உணர்வுநிலை மாற்றங்கள்) எப்படி நிகழக்கூடும் என்பதைக் காட்டிச் சென்றுள்ளனர். இந்த மெய்ம்மைகள் யாவுமே வியக்கத்தக்க நிகழ்ச்சிகள் நிகழக்கூடும் என்பதற்கான ஒரு புதிய எல்லைப் பரப்பினைத் திறந்து காட்டி யுள்ளன; அத்தகையதோர் புதிய எல்லைப் பரப்பின் விளிம்பில் தான் இன்று மனிதன் நின்றுகொண்டிருக்கிறான்.[14]

துக்காராம் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவரான பஹினாபாய் என்ற அம்மையார் ஓர் இடத்தில்,

> "ஓ துக்காராம்! நாங்கள் உமைப் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே, நீர் ஒருநொடியில் காணமுடியாத வண்ணம் மறைந்துவிட்டீரே!"[15]

என்று வியந்து எழுதியிருக்கிறார்.

துக்காராமின் இறுதி முடிவைப்பற்றிய செய்திகள் தெளி வின்றி மூடிமறைக்கப் பெற்றுள்ளன; பலர் பலவிதமான கருத்து களைத் தெரிவித்துள்ளனர். சில அறிஞர்கள், அருகே ஓடிய ஆறு ஒன்றில் அவர் மூழ்கடிக்கப் பெற்றார் என்று கற்பனைசெய்து வெளி யிட்டுள்ளனர். பொதுவாகத் திருத்தொண்டர்களாய் வாழ்பவர்

---

[14] P. D. Ouspensky: Tertium Organum.

[15] துகாராம் தம்ப் தேக²தா தேக³தா ।
ஆலே அகஸ்மாத் குப்தரூப ॥

கள் சமய யாத்திரை போவதுண்டு; தொடங்கிய இடத்திற்கு வரவேண்டும் என்ற இலட்சியமில்லாமல், யாத்திரை தொடங்கிய இடத்திற்கு எக்காலத்திலும் திரும்பிவர விருப்பமில்லாத ஒரு சமயச் செலவினை மேற்கொண்டு ஒழுகுதல், பொதுவாக ஒரு திருத் தொண்டருக்குரிய இயல்பான செயலேயாகும். அத்தகைய ஒரு சமயச் செலவினை மேற்கொண்டு சென்றவர்தான் துக்காராம் என்றும், அப்படி நாடோடியாகப்போன துக்காராம் பின்பு திரும்பி வரவில்லை என்றும் தமக்குத் தாமே கருதிக்கொண்ட மற்றும் சில அறிஞர்கள், அத்தகையதோர் கருத்தையும் தெரிவித் துள்ளனர். சமயத்துறையில் சமாதி அடைதல் என்ற குறிப் பிடத்தக்க நிகழ்ச்சி ஒன்றுண்டு. வாழையடிவாழையாகக் குருகுல வாழ்வில் சமாதிநிலை பேசப்பட்டு வருகிறது; அதுபோன்ற ஒரு முடிவைத் துக்காராம் சந்தித்திருக்கக்கூடும். அதாவது, அவர் சமாதிநிலை அடைந்திருக்கலாம். மறைவதற்கு முன்பு துக்காராமுக் கிருந்த மனநிலையை அவரது பண்ணூர்ந்த பாசுரங்கள் சில நன்கு விளக்குகின்றன:

உயிரொடு உலவும் உடலும் ஒரு செத்த சவம் போன்றதே,
கல்லறை நோக்கிச் செல்வதற்கென்றே பிறப்பெடுத்தது;
சாவதற்கென்றே பிறப்பெடுத்த சவம் நமதுடல்.
எறிபவர் சுழற்றி எறியப்படுகிறார்;
திருவடித் தலத்தில் துகள் துகளாகிச் சிதறி யுதிர்ந்தன;
வேதனை நிகழ்ச்சிகள்,
'ஐயோ! மரணம்! மரணம்!'—என்று
அனைத்துப் பகலும் இரவும் பெண்டிர்
அழுதுகொண்டிருந்தனர் கதறிய வண்ணம்
பற்றறு தன்மைத்தாம் விராட்டி பருஉடல் மறைக்க
தியானமாம் நெருப்பு பரப்பிரும்மத்தைத் தொடுகின்றது;
மிகப்பெருஞ்சொல்லின் கூக்குரல் ஒலியாம் மரணக்கதறல்
வெளிப்படுகின்றது.
குடும்பம், பெயர், வடிவம் எல்லாம் எரியுற
யாருக்குச் சொந்தமோ அவருக்கே அவ்வுடல்
முறைப்படி ஒப்படைக்கப் பெறுகின்றது—

என்று, வாழ்வின் நிலையாமை குறித்துப் பேசுகிறார்.

'மற்றோர் பாசுரத்தில் துக்காராம் அவர்கள்,
என் சொந்தக் கண்களால் என் மரணத்தைக் கண்டேன்,
உண்மையில் அது ஓர்,
ஒப்பிடமுடியாக் கொண்டாட்டமாக இருந்தது;
மூவுலகங்களும் களிப்பால் நிறைந்து தளும்பின,
துய்த்து மகிழ்ந்தேன் அதனையான், அகிலத்தின் ஆன்மாபோல்;

தன்னலவேலியால் வரம்பிட்டுக் கிடக்கும்
தரணி ஒன்றில் யான் சிறைப்பட்டுக் கிடந்தேன்;
அதனைத் துறந்ததால் மிகுவளம் தொடர்ந்தது
பிறப்புக்கும் இறப்புக்குமான
ஈமக் கடன்கள் எல்லாம் முடிந்தன;
எனக்கே உரிய இறுக்கத்திலிருந்து
இப்பொழுது யான் விடுவிக்கப் பெற்றேன்'[16]

என்று, தனது அனுபவத்தை வெளியிட்டுள்ளார்.

எவ்விதமான பற்றுர்வமின்றிப் பாடுகிறுர்; புளியம்பழம் தோட்டினின்று தன்னைக் கழட்டிக்கொள்வதுபோலத் தானும் தன்னை உலக பந்தங்களினின்றெல்லாம் விடுவித்துக்கொண்டு பாடுகிறுர்; எவ்விதமான எதிர்பார்ப்பும் இல்லாத நிலைக்கு வந்துவிடுகிறுர். அவர் ஒரு பாடலில்,

'இதற்காகவே யான்வெறிகொண்டுழைத்தேன்—மிகக் கடுமையாக,
இறுதிநாள்கள் இனிமையாக மாறவேண்டும் என்ற நோக்கிற்காக;
அவா எனும் பந்தயத்தில் ஆட்பட்டு ஓடி ஓய்ந்ததால்
இடுக்கண் இன்றி இளைப்பாறுகின்றேன், இப்பொழுது யான்'[17]

என்கிறுர் துக்காராம்.

துக்காராம் மறைவிற்குப் பின்பு வாழ்ந்த அவர் சீடர்களுள் பல கவிஞர்கள் இருந்தனர்; அவர்களனைவரும் சாதித்தடைகளை மீறிப் பல பிரிவுகளினின்றும் வெளிப்போந்தவர்கள். அவர்களுள் பஹிணுபாய் என்ற பெண் கவிஞர் ஒருவர் உண்டு; அவர் பிராமண வகுப்பைச் சார்ந்தவர். பஹிணுபாயைப்போலவே சாதித்தடைகளையெல்லாம் தகர்த்து எறிந்துவிட்டுத் துக்காராமின் சீடர்களாக மாறிய பிராமணர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள், கச்சேஸ்வர பிரஹ்மே, நிலோபா, இராமேசுவர பட், மாம்பாஜி ஆகியோ

[16] ஆபுலே மரண பாஹிலே ம்யா டே³ாலா ।
தோ ஜ⁴ாலா ஸோஹலா அனுபம்ய ॥
ஆனந்தே த³ாட்லீ திந்ஹி த்ரிபு⁴வனே ।
ஸர்வாத்மகபணே பே⁴ாக ஜ்⁴ாலா ॥
ஏகதேசீ ஹோதோ அஹம்காரே ஆதி²லா ।
த்யாசா தியாக³ ஜ⁴ாலா ஸுகால் ஹா ॥
பீ²டலே ஸுதக் ஜ்ன்ம மரணுசே ।
மீ ப⁴ாஇயா ஸங்கோசே து³ரீ ஜ⁴ாலோ ॥

[17] யாஜஸா டீ³ கேலா ஹோதா அட்டாஹாச ।
சேவடசா தீ³ஸ் கோ³ட்³ பஹாப³ா ॥
ஆதா நிச்சிதீனே பாவலோ விஸாவா ।
கு³ம்டலியா த⁴ாவா த்ருஷ்ணேசியா ॥

ராவர். மேற்குறிப்பிட்ட பிராமணர்களுள் கடைசி இருவரும் தொடக்கத்தில் துக்காராமுக்குத் தொந்தரவு கொடுத்தவர்களே; பின்னர், அந்த இருவரும் துக்காராமின்மீது அளவுகடந்த பற்றுக் கொண்டு அவரைப் பின்பற்றும் சீடர்களாக மாறியவர்கள். மேற் குறிப்பிட்ட அப்பிராமணர்களைப்போலவே துக்காராமின் சீடர் களாக அவர் காலத்துக்குப் பின் வாழ்ந்தவர்களுள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர்கள் ஷேக் மகம்மது, சந்தாஜி தெலி, சந்தோப பவார் ஆகியோராவர். ஆனால், இவர்களனைவரும் சூத்திர வகுப்பைச் சார்ந்தவர்கள். வைதீகப் பிடியிலிருந்து தங்களை விடுவித்தமைக்காக, அவர்கள் துக்காராமுக்கு மிகவும் நன்றி யுடையவர்களாக இருந்தனர். அடிமைத்தளையினின்றும் தாங்கள் விடுபடத் துக்காராம் காரணமாய் அமைந்ததால், அவருக்கு மிக மிக நன்றியுடையவர்களாக மாறினர் (மகாராஷ்டிரப் பகுதியில்). இலட்சக்கணக்கான மக்களின் ஆன்மீக வழிகாட்டியாகத் துக்காராம் விரைவில் மாறினார். அந்த மக்களோ மகாராஷ்டிரப் பகுதி முழுவதிலும் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் துக்காரா மின் பாடல்களை இசையோடு முழங்கினர்; பண்ணார்ந்த அவர் பாசுரங்களைப் பட்டி தொட்டிகளிலெல்லாம் பாடிப் பரப்பினர். அதனால், தொடக்கத்திலிருந்தே துக்காராமிற்கு மக்கள் மத்தியில் ஓர் இடம் கிடைத்தது. அவர் பாடல்கள் எங்கும் பரவின; பலராலும் பாடப்பெற்றன; பேச்சுக்கிடையே மக்களால் அடிக்கடி எடுத்தாளப்பெற்றன; பண்ணோடு கலந்து பாடவும் பெற்றன. அவர்மீது பக்திகொண்டவர்கள் அவரது பாடல்களுள் ஒரு பகுதியைப் படியெடுத்து வைத்துக் கொண்டனர்; பாடல்கள் பதிப்புகளாய் வெளிவந்தன; பாடல்கள் தொகுப்புகளாய் வெளி வந்தன; துக்காராமின் பாடல்களுக்கு விளக்கவுரைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், புதுப்புது விளக்கங்கள், பாராட்டுகள் பலவும் அன்றும் இன்றும் மிகுதியாக வந்துள்ளன.

4. கவிஞராகவும் திருத்தொண்டராகவும் உள்ள துக்காராம்

துக்காராமின் பாடல்களுக்கான மூலப்படிகள் — அதாவது, தொடக்கத்திலிருந்த கையெழுத்துப் படிகள் கிடைக்கவில்லை. வழி பாடு செய்யும்பொழுது தன் உள்ளத்தே பொங்கிப் பெருகிய உணர்ச்சிப் பெருக்கிற்கு அவர் உடனுக்குடன் தந்த கலைவடி வங்கள் தாம் அவரது பண்ணார்ந்த பாசுரங்கள் என்றும், அவருடைய பெரும்பாலான பக்திப் பாசுரங்கள் எவ்விதத் தயாரிப்புமின்றி முன்முயற்சி எதுவுமில்லாமல் அவ்வப்போது பாடப்பெற்றவை என்றும் நம்புவதற்கான காரணங்கள் பல உள்ளன (அவரது பாடல் தொகுதியில்); முன்னுக்குப் பின் முரணானவைகளும் ஒவ்வாதவைகளும் பொருத்தம் அற்றவை களும் கலந்து காணப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். எவ்விதமான தயாரிப்பும் செய்துகொள்ளாமல் உடனுக்குடன் பாடப்பெற்ற பாடல்களில் — அதாவது, பக்திநிலையில் மனங் கசிந்தபோதெல்லாம் உளம் உருகி உருகிப் பாடிய பாடல்களில் முரண்பாடுகளும் பொருத்தமற்றவைகளும் கலந்து காணப்படுவது இயற்கையே யாகும். அவர் பாடல்களின் துணைகொண்டு அவருடைய தத்துவ அமைப்புமுறையை — அதாவது, அவர் கண்டுணர்த்திய மெய்விளக்கக் கோட்பாட்டு முறையைச் சீராக்கிக் காட்டுவதில் சிக்கல் உள்ளது. அவருக்கேயுரிய தன்னியலான ஒரு வளர்ச்சியை — ஆன்மீக அனுபவங்களின் துணையால் பெற்ற இயல்பான விளைவை — தனக்கேயுரிய அநுபூதிநிலையை, அவர் பாடல்களில் காணலாம். அவருடைய மனப்போக்குகளை, நம்பிக்கைகளை, தோல்விகளை, மயக்கம் அகன்றதால் பெற்ற தெளிவினை, பல்வகையான பலதுறைப் பட்டறிவினையெல்லாம் அவர் பாடல்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

துக்காராமின் மறைவுக்குப் பின்னர், அவர் பாடல்களைக் கொண்ட ஏடுகள் அவருடைய சீடர்கள் பலரிடம் கொடுக்கப் பெற்றன என்றும், அச்சீடர்கள் அப்பாடல்களை மனப்பாடஞ் செய்துகொண்டார்கள் என்றும், படியெடுத்துக் கொண்டார்கள் என்றும் நம்பப் பெறுகிறது; அத்தகையதோர் கருத்து உலவுகிறது. எது எப்படியிருப்பினும், அவருடைய மூலப்படிகள் இதுவரை யிலும் கண்டுபிடிக்கப்படவில்லை, பல கையெழுத்துப் படிகள்

உள்ளன. அவை, மூல ஏடுகளிலிருந்து படி எடுக்கப்பெற்றவையாக இருந்திருக்க வேண்டும். கால ஓட்டத்தில் மகாராஷ்டிரப் பகுதி முழுவதும் வாய்மொழியாகவோ எழுத்துருப்பெற்ரே, அதாவது, ஒலிவடிவிலும் வரிவடிவிலும் புழங்கியிருக்க வேண்டும். இவ்வாருகப் பதினேழாம் நூற்ருண்டின் இறுதிக்கு முன்பு வரையிலும் துக்காராமின் பாடல்களைக் கொண்ட நம்பகமான செய்யுள் தொகுதி உருப்பெறவில்லை. மேலும், தொடக்கத்திலிருந்து வந்து கொண்டிருந்த மூலச் செய்யுள்களில், அவ்வப்போது ஒலிமாற்றங்கள், சொல் மாற்றங்கள், திசைவழக்கு காரணமாய் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியனவும் புகுந்தன; சில நேரங்களில் பாடல்களோடு சிலவற்றைச் சேர்த்துக் கூறும் நிலையும் ஏற்பட்டது. இதன் விளைவாகப் பாடபேதங்கள் மலிந்தன; குழப்பங்கள் மிகுந்தன; பாடபேதங்கள் பொருத்தமற்ற விவாதங்களைத் தோற்றுவித்தன; நூலின் நோக்கத்திற்கு மாருன விளைவுகளுக்கும் காரணமாகி நின்றன. துக்காராமின் பாசுரங்களைத் திரட்ட அவரது கொள்ளுப் பேரன் முயற்சி எடுத்தார்; பலவிடங்களுக்கும் தேடிச் சென்று திரட்டினர்; வாய்மொழி வழியாகக் கிடைப்பதாயிருந்தாலும், எழுத்துவடிவில் கிடைப்பதாயிருந்தாலும் கிடைக்கும் அந்த இடங்களுக்கெல்லாம் சென்று சான்று ஆதாரங்களைத் திரட்டித் தொகுத்தார். இதுதான் துக்காராமின் பாடல்களைக் கொண்ட, கிடைக்கக் கூடிய, முதல் நம்பகமான செய்யுள் திரட்டு ஆகும். கி. பி. 1867 இல், பம்பாய்நகரில் முதல்முதலாக அச்சுப் போடப்பெற்று, துக்காராமின் பாடல்களைக் கொண்ட தொகுதி வெளிவந்தது.

காலவரிசைப்படி ஒழுங்குபடுத்தப்பெற்ற ஓர் அமைப்புக்குள் துக்காராம் பாடல்களை வைத்துப் பார்ப்பது இயலாததாகும்; காலவரிசைப்படி ஒழுங்குபடுத்திக் காட்டக்கூடிய நிலையில் அவை இல்லை; மேலும், பாடல்களின் உள்ளடக்கமாய் வந்துள்ள பாடு பொருள்களின் அடிப்படையில் பார்ப்பதிலும் சங்கடங்கள் உள்ளன. எவ்விதமான முன்னேற்பாடோ வரையறைத் திட்டங்களோ இல்லாமல் அவ்வப்போது பாடப்பெற்ற பாடல்களாதலின், அவற்றைப் பொருளடிப்படையில் காண்பதும் பொருத்தமாக இராது. ஆகையால், ஒவ்வொரு பாசுரத்தையும் தனித்தனியாகவே வைத்துப் பார்ப்பது நல்லதாகும். அவ்வாறு பாசுரங்களைத் தனித்தனியாகப் பார்த்துப் பின்னர் அவற்றின் துணைகொண்டு அவரது வாழ்க்கையின் உணர்வுச் சூழல்களைக் கற்பனைசெய்து காண்பது நலம் தருவதாகும். பல்வேறு வகைப்பட்ட பாடுபொருள்களைக் கொண்டவையாக அவர் பாசுரங்கள் உள்ளன. கிராமிய விளையாட்டுகளை ஊடகமாகக் கொண்டு உருவாக்கிய உருவகங்கள், அவற்றின் உட்பொருள் விளக்கங்கள், புராணக் கதைகள், பக்திக் கோட்பாடுகளின் விளக்கம், அறக்

கோட்பாடுகள், அவரைச் சுற்றிய வாழ்க்கைச் சித்திரங்கள், அவரது சொந்த வாழ்வோடு தொடர்புடைய நிகழ்ச்சிகள், அவரது சமயச்சார்பான அனுபவங்கள், சமுதாயத்தைப் பற்றி ஆய்ந்து அறிவித்த கருத்துகள் ஆகிய அனைத்தும் அவரது பாசுரங்களில் இடம் பெற்றுள்ளன. புனிதமான ஆன்ம நாட்டத்திலிருந்து மிக அற்பமான பொருள்கள் வரையுள்ள எல்லாமே அவர் பாடல்களில் உள்ளன. துக்காராம் ஒரு திருத்தொண்டராக இருந்த போதிலும் ஒரு சமயியாக (சமய சித்தாந்தியாக) வாழாமல், தத்துவ ஞானியாகவும், அதேபொழுது மக்களோடு இணைந்து வாழும் இயல்புடையவராகவும் இருந்தார். தத்துவங்களைப் பேசிக் கொண்டு மக்களை விட்டு ஒதுங்கிப்போய் அவர் வாழவில்லை. துக்காராம் அவர்கள் ஒவ்வொன்றையும் பார்க்கும் பொழுது, அவற்றிற்கான மூலத் தோற்ற வளர்ச்சியை அறிந்துகொள்வதில் ஆர்வம் காட்டவில்லை. கண்முன்னே நிகழும் வாழ்க்கையைக் காண்பதிலும், காணும் அந்த வாழ்க்கையிலிருந்து வாழ்க்கையின் மெய்ம்மைகளைத் தேர்ந்தறிவதிலுமே நாட்டம் கொண்டார். மூலங்களை ஆராய்ந்துகொண்டிருப்பதில் கவனம் செலுத்தி, நடைமுறை வாழ்க்கையைப்பற்றிக் கவலைப்படாமல் தத்துவ விசாரம் செய்துகொண்டு, அதன்விளைவாக அவர் வாழ்க்கையை விட்டு ஒதுங்கிப் போகும் நிலைக்கு ஆளாகவில்லை. வாழ்க்கையோடு சார்ந்து நின்றே வாழ்ந்தார்; சமயம் என்ற போர்வையில் அவரிடம் நாம் காண்பதெல்லாம் மானுடமேயாகும். மானுடத்தின் உணர்வு ஓவியங்களையே அவர் சமயத்திரையில் சித்திரித்துள்ளார். அறிவின் எல்லையைக் கடந்த புதிரான ஒருவகைச் சமய உலகுக்குள் ஆட்பட்டுக் கிடக்கும் ஓர் ஆன்மாவையும், அவ் வான்மவேதனையையுமே அவர் பாடல்கள் முழுவதும் வெளிப்படுத்திக் காட்டுகின்றன. உண்மை ஞானத்தை அடைவதற்குத் துன்பப்படுதல் என்பது தவிர்க்க முடியாதது என்பதையும், துன்பப்படுதல் என்ற கருவியின் துணைகொண்டே ஞானத்தெளிவு பெறமுடியும் என்பதையும் அவர் பாடல்கள் காட்டுகின்றன. வாடியதும், வாடி வருந்தியதும், ஞானத்தை நாடியதும், நாடிக் கண்டுகொண்டதும் ஆகிய அனைத்தும் அவர் பாசுரங்களில் காணலாம். வாழ்க்கை முழுவதும் துக்காராம் அமைதியின்றி அல்லற்பட்டிருக்கிறார்; மெய்யறிவு பெறும்வரை நிம்மதியின்றித் தவித்திருக்கிறார்; சொல்லொணுத் துயரத்தை மென்று விழுங்கியிருக்கிறார். அவர் உற்ற துயரம் அவருடைய தன்னலத்திற்கானதல்ல; மனித சமுதாயத்தின் நன்மை கருதியே துன்பத்தில் உழன்றார். மானுடத்தின்மீது அவருக்கிருந்த பரிவே அவர் அடைந்த அத்தனை துன்பத்திற்கும் காரணமாகும். அவரிடம் இருந்த மனித நேயமே பாடல்களாக வெளிப்பட்டு அழகிய கலை வடிவங்களாக மாறின. தற்காலத்த

வருங்கூட உணர்ச்சிவயப்படும் நிலையில் அவர் பாடல்கள் அமைந்துள்ளன. அவர் உழன்று பெற்ற ஆன்ம அனுபவங்கள் மனிதராகப் பிறந்த அனைவருக்கும் பொதுவானவை; அவர் தனது வாழ்க்கைப் பயணத்தில் சந்தித்த சமூகப் பிரச்சனைகள் உலக முழுமைக்குமான பிரச்சனைகளே; அவர் வாழ்க்கையில் உழன்றார்; எந்த எல்லைக்கும் சென்றுவிடவில்லை. பற்றற்று வாழ்ந்தபோதிலும் சரி, பற்றுக் கொண்டு வாழ்ந்த காலத்திலும் சரி, எந்தக் காலத்திலும் தீவிரமாகி ஓர் எல்லைக்குச் சென்று வாழ்ந்துவிடவில்லை. இவர் காலத்திற்கு முன்போ இவர் காலத்திற்குப் பின்போ வாழ்ந்த மராத்தியக் கவிஞர்களில் இவரளவிற்கு எந்தக் கவிஞரும், பரத்தின்மீது நாட்டங்கொண்டு வாழ்ந்து கொண்டே, இகவாழ்க்கையை வற்புறுத்திப் பாடவில்லை.

ஆன்மீக வழிகாட்டி என்ற முறையில் தன்னுடைய பணி என்ன என்பதைத் துக்காராம் மிகத் தெளிவாக அறிந்துவைத்திருந்தார்; தனக்குரிய கடமை எது என்பதையும் அறிந்தேயிருந்தார். வாழ்க்கையின் அடிப்படை உண்மைகளை ஒருவன் தனக்குத் தானே கட்டாயம் கண்டறிய வேண்டுமென்றும், அவற்றை வெறும் நம்பிக்கையின் அடிப்படையில் கண்மூடி ஒத்துக்கொள்ளக் கூடாது என்றும் மக்களிடம் எடுத்துக்கூறி மக்களை நம்பவைப்பது, ஒரு கவிஞன் என்ற முறையில் தனக்குரிய தலையாய பணியாகும் என்று எண்ணிக்கொண்டே செயல்பட்டார். அவர் பாடல்களில், தனக்கேயுரிய வாழ்வையும் உள்ளுணர்வு சார்ந்த அகநிலைகளையும் தெளிவாக வற்புறுத்திக்கூறும் போக்கினைக் காணலாம். அவரைப் பொறுத்தவரையில், வாழ்க்கையின்மீது அவருக்கு இருந்த பிடிப்பின் ஒரு கூறுதான் இலக்கியமாகியது; வாழ்க்கையிலிருந்து இலக்கியம் படைத்தார்; வாழ்க்கையை மறந்து இலக்கியம் படைக்கவில்லை; அவருக்கு, வாழ்க்கையின் ஓர் அங்கமாக இலக்கியம் அமைந்தது.

மராத்திக் கவிதைகளில் பக்திநெறியை விளக்கிக் கூறுவதில் தலைசிறந்தவர் துக்காராம். பக்திநெறியை விளக்கிக் கூறுவதில் தலைசிறந்தவராகத் திகழும் அவர், ஆன்மசித்தி அடைந்தவராகவும் உள்ளார். ஆன்மசித்தியை அடைவதற்கான நெறியில், அவர் கடந்துவந்த பல்வேறு படிநிலைகளை—அதற்கான பரிணும வளர்ச்சியில் அவர் கடந்துவந்த பல்வேறு வளர்ச்சிப் படிநிலைகளை, அவர் பாடல்களின் துணைகொண்டு நாம் ஓரளவு அறியக்கூடும். படிப் படியாக அடைந்த ஆன்மசித்திக்கான பரிணும வளர்ச்சியை அறிந்துகொள்வதற்கு அவர் பாடல்கள் துணைநின்றாலும், அப் பாடல்களைக்கூட உண்மையை அறிவதற்கான கருதுகோள்கள் என்ற நிலையில்வைத்தே பார்க்கவேண்டும். மேலும், அப்பரிணும

வளர்ச்சியின் பல்வேறு படிநிலைகள் அவருடைய படைப்பு முயற்சி யுடன் எவ்வாறெல்லாம் உள்ளார்ந்த நிலையில் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து வந்துள்ளன என்பதைக் காண்பது மிக்க ஆர்வத்தை ஊட்டக்கூடிய ஒன்றாகும்.

தொடக்கத்தில் கடவுளை நோக்கிய ஆன்ம எழுச்சியுள்ளது. நாம் காணும் புற உலகின்மீதுள்ள பற்று மருட்சி தருகிற மாயை யாகத் தோற்றமளிக்கிறது; அப்பற்றானது கேடுபயக்கும் உணர்ச்சி களை வெளிக்கொணர்வதுடன், மனிதர் நெறி திறம்பி வாழ வழி வகையும் செய்கிறது. நேரடியான மெய்ம்மைகளிலிருந்து ஆன்மா அறுத்துக்கொள்கிறது; உலகிலுள்ள பொருள்களின்மீதுள்ள பந்தம் துண்டிக்கப்படுகிறது. உள்ளேயுள்ள உயிர்க்கும் புற உலகுக்கும் உள்ள உறவு புளியம்பழத்திற்கும் அதன் தோட்டிற்குமுள்ளதைப் போல, கட்டற்றுப்போகிறது. அடுத்துத் தொடர்வது அகத்தே போராட்டம்; பயங்கரமான இடைவிடாத போராட்டம்; திருப்பித் திருப்பித் தாக்குறுவதுபோன்ற நிலையில் உடல் உறுப்புகள் உள்ளன. உடலின் கட்டமைப்பு முழுவதுமே அலைக்கழிக்கப்படு கிறது; கெட்ட வழக்கங்கள், மனோபாவங்கள் இருந்த இடந்தெரி யாமல் தலைமறைவாகின்றன; பற்றுகளின் தளைகளிலிருந்து அறுத்துக்கொண்டு பக்தன் வெளிப்படுகிறான். நடந்து முடிந்த செயல்களுக்காக எண்ணிவருந்தும் கழிவிரக்கம், ஊற்றுப்பெருக் காய் அதனைத் தொடர்ந்து பீறிட்டுப் பாய்கிறது. துக்காராம், அல்லற்பட்டு ஆற்றாது அமைதியின்றித் தவிக்கிறார்; அத்தவிப்பு நிலையை ஒரு பாடலில் அழகாகச் சித்திரித்துள்ளார்:

'உன்னைநான் ஓயாது நினைப்பதற்காக,
என்னை நீ,
வீடற்றவனுக்கு,
செல்வமற்ற தரித்திரனுக்கு,
குழந்தைச் செல்வமற்ற குடும்பத்தானுக்கு'

என்கிறார் துக்காராம்.

அதே துக்காராம் மற்றோரிடத்தில்,
'என்னினும் பெரியபாவி இருக்க இயலாது'

எனப் புலம்புகிறார். அப்புலம்பலுக்கிடையேயும் வாழ்க்கையைப் பற்றி எண்ணிப் பார்க்கிறார்; எண்ணிப் பார்த்தபின்,

'எனினும் அச்சம் நிறைந்தது அந்த வாழ்க்கை ...
அந்தக் குடும்ப வாழ்க்கையோ
ஒதுக்கிவிட முடியாத ஒன்றாகும்'

என்கிறார்.

கழிந்ததை எண்ணிக் கலங்கும் கழிவிரக்கம் நிகழ்ந்து முடிந்த பின்பு, அன்புணர்ச்சியும் நல்லெண்ணங்களும் தலைகாட்டி, விலங்குநீர்மைகளை அப்புறப்படுத்துகின்றன. துக்காராம், தன்னுடைய அகத்தைத் தானே கடுமையாக உள்ளார்ந்த நிலையில் சோதிக்கத் தொடங்கினர். சோதிக்கச் சோதிக்கத் தன்னை ஒரு பாவியாகவே கருதிக்கொண்டார். பல நூற்றுக்கணக்கான பாடல்களில் தன்னை ஒரு பாவியாகக் கருதிக்கொண்டு பாடியுள்ளதைக் காணலாம். கணக்கற்ற பாவங்களுக்காகவும் குறைபாடுகளுக்காகவும் தன்னையே துக்காராம் கண்டித்துக்கொள்கிருர். சமயத்துறையில் கடுமையான சீர்திருத்தவாதியென்னும் கண்ணேட்டத்தில்தான், அவர் தன்னை அவ்வாறெல்லாம் குறைத்தும் கண்டித்தும் பாடுகிருர்.

தன்னைப் 'பாவத்தின் குவியலாகக்' குறைத்துப் பாடியிருக்கிருர். முந்தைய வாழ்க்கையில் அறிவின்மையால் செய்த தவறுகளைக் குறித்தும் பாடியுள்ளார். கழிவிரக்க நிலையில் 'வாடினேன்; வாடிவருந்தினேன்; மாயையை உண்மையென்று கருதி மயங்கி ஓடினேன்; ஓடிஓடி உழன்றேன்' என்பதுபோலவெல்லாம் பாடியுள்ளார்.

எனது அகங்காரம் ஆணவம் தாக்குண்டு
தூள் தூள் ஆகட்டும்,
என்னை அணிசெய்ய வந்த என்நாமம்
எரிந்து சாம்பலாகட்டும்

என்று பாடுகிருர்.

இளைப்பாறும் இடமறியாது
என்மனம் இங்குமங்கும் விரைந்தலைகிறது;
ஒருநொடிப் பொழுதாவது
என்மனம் ஓரிடத்தில் நிற்பதில்லை

என்கிருர்.

ஓடி உழலும் இந்த நிலையைத் தொடர்ந்துவரும் அடுத்தகட்ட வளர்ச்சி நிலையில் மனத்தூய்மைக்கான நிலை உருவாகிறது; மனம் ஒன்றைப்பற்றியே ஓயாது எண்ணும் நிலை உருவாகிறது; ஒன்றையே பற்றியெண்ணும் இடைவிடாத தியானநிலை ஏற்படுகிறது. பற்றற்ற நிலை, தன்னலமற்றபோக்கு, பொதுமை குறித்த பார்வை ஆகிய இவை ஏற்படுகின்றன. இவைபோன்ற பற்றற்ற நிலைகளும், தன்னலமற்ற போக்குகளும் மானுடத்தின்மீது காட்டும் பொதுமை குறித்த பார்வைகளுமே படைப்பு இலக்கியங்களுக்கான மூலங்களாகும். பக்தி நிலையில் அடையப்பெறும் அதே பற்றற்ற தன்மையும், தன்னலமற்ற போக்கும், பொதுமை தழுவிய பார்வையும் இலக்கியப் படைப்பு உலகிற்குத் தேவைப்படும் இயற்கையான மூலப்

7

பொருள்களாகும் என்பதை நாம் நினைவிற்கொள்ளவேண்டும். துக்காராம் பற்றற்ற பரிபக்குவ நிலையை முழுமையாக அடைந்த பொழுது தூயமனமும் துலங்குநல் இதயமும் கொண்ட ஒரு புதிய மாறுபட்ட மனிதராகத் தலைகாட்டினார்:

பேசாதிருத்தல், எனது பேச்சாகும்;
வாழ்தல் என்பது, சாதலாம்;
இவ்வுலகில் யான் இல்லாதிருத்தல், இருத்தலாம்;
துய்த்து மகிழ்வதுள், துய்த்தலற்றிருப்பவன்;
கூட்டுவாழ்வினுள், தொடர்பறுத்து நிற்பவன்;
பற்றுடன் வாழ்தலும் பற்றறுத்து நிற்றலும்—ஒன்றே.
எப்படியிருக்க வேண்டுமோ, அப்படி நான் இல்லை,
என்னைப் பற்றிக்கேட்க ஏதாவதிருப்பின்
விட்டல்பெருமானையே வினவுங்கள்

என்கிறார் துக்காராம்.

பற்றறுத்த நிலையில் அவர் தன்னைத்தானே மீண்டும் மீண்டும் நுணுகி ஆராயத் தொடங்கினார். உள்ளார்ந்த மெய்ம்மைகளைப் பற்றிய ஆழ்ந்த ஆய்வினை அவர் தொடர்ந்து செய்தார். அதன் விளைவாக அவர் எல்லையில்லாத மனோ ஆற்றல் கைவரப் பெற்றார்; அந்த மனவாற்றல் அவரைப் பேரானந்தத்திற்கு இட்டுச்சென்றது. தன்னைத்தானே அறிந்துகொள்ள அரும்பாடுபட்டார்; அவ்வாறு ஈடுபட்டுழைத்துக்கொண்டிருந்தபொழுது, வழக்கத்திற்கு மாறு பட்ட குழப்பங்களைச் சந்திக்கவேண்டியேற்பட்டது; தீவிரமான அக(மன) ஆராய்ச்சி வீண் குழப்பங்களைத் தோற்றுவித்தது; உள்ளார்ந்த அவ்வக ஆராய்ச்சியை வெற்றிகரமாக முடித்த நிலையில், வழக்கத்திற்கு மாறுபட்ட சாந்தியை (அமைதியை) அடையப் பெற்றார்; புலன் கடந்த மறைபொருளாராய்ச்சியின் நிலையில் வைத்துக் கூறுவதாயிருந்தால், அவ்வக (மன) ஆராய்ச்சியை இடை விடாது செய்ததன் பயனாக அவர் பேரமைதி நிலையை அடைந் தார். சாந்தம் பொலியும் அவ்வமைதி நிலையென்பது தெய்வீகம் பொருந்திய வாழ்க்கையைக் குறிப்பதாகும்.

துன்புறுத்தும் வேதனை தொலைந்து முடிந்தது இப்போது,
அதன் பளுவெல்லாம் இப்பொழுது ஆண்டவன் இடத்ததே,
எதிர்பார்ப்புகள் எல்லாம்போயின; தீர்ப்பும் வந்தது;
இதுபோல் பிறப்பு இனிமேல் இல்லை.
வாழ்வின் மகுடம் அமைதியாம்;
வேறுவகையான இன்பங்கள் யாவும்
வேதனைகளன்றி வேறொன்றுமில்லை

என்கிறார் துக்காராம்.

மனம், உடம்பில் மாறுதல்கள் தோன்றக் காரணமாக அமைய லாம்; அதுபோல, உடம்பில் ஏற்படும் மாறுதல்கள் மனத்தில் பாதிப்பையும் உண்டாக்கலாம். மனத்தின் ஆற்றலால் உடலும், உடலின் மாற்றத்தால் மனமும்—இவ்வாறு ஒன்று மற்றொன்றைப் பாதிக்கும் நிலைக்கு ஆளாவது வாழ்க்கையில் ஒரு கட்டமாகும்; மனம், உடல் ஆகிய இவற்றுள் ஒன்று மற்றொன்றால் செயலாற்றும் நிலைக்கு—ஒன்றின்மீது மற்றொன்று செயலாற்றும் நிலைக்கு—உரிய அந்தக் கட்டத்திற்குத் துக்காராம் வந்தார். மனிதர்களிடமுள்ள கண், காது முதலான பொறிகளின் செயற்பாட்டிற்கு ஒரு வரை யறை உண்டு. அப்பொறிகளுக்கென அமைந்துள்ள செயற்பாட்டு வரையறையைக் கடந்து, பார்க்கவும் கேட்கவும் கூடிய ஒரு கட்டத்தைத் துக்காராம் அடைந்தார். அவருடைய பண்ணூர்ந்த பாசுரங்களில் துக்காராம் உணர்ந்த பெருமகிழ்ச்சியையும், மாயக் காட்சிகளில் மனம் படிந்தபொழுது பெற்ற உள்ள உவகையையும் நாம் காணலாம். துக்காராம், தன் பாடல்களைத் தானே வாய் விட்டுப் பாடும்போது, ஆடிக்கொண்டும் கதறி அழுதுகொண்டும் பாடுவார் என்று அவர் காலத்தில் வாழ்ந்த புலவர்கள் விளக்கிக் கூறியுள்ளனர். கண்ணுக்குத் தோன்றும் இவ்வுலகம், தெய்வ நிலைக்குரிய ஆன்ம இயலான பிரபஞ்சத்தின் ஒரு பகுதியாகவே துக்காராமுக்குத் தோன்றுகிறது. தெய்வத்தோடு துக்காராமுக் குள்ள உள்ளார்ந்த தொடர்பை அவர் பாடல்கள் காட்டும்:

உள்மனத்தோடு உரையாடல்
நடந்ததாக நவில்கிறார் துக்கா;
அவ்வுரையாடலும்,
தனக்கேயுரியது,
தன்னுடன்தானே நடத்திக்கொண்டது

என்றும் கூறுகிறார்.

முன்பு அறிந்திராத பல விளைவுகளைத் தோற்றுவித்துக் கொண்டு, துக்காராம் அகத்தே, ஆன்மீக ஆற்றல் பெருக்கெடுத்து ஓடியது; விட்டல்பெருமானிடம் துக்காராமுக்குள்ள உறவுக் கலப்பு பல்வேறு வடிவங்களாக வெளிப்பட்டது; அந்த உறவுக் கலப்பு அவர்மீது பொறாமை கொள்வதுபோலவும் அவரை அச்சுறுத்துவதுபோலவும் காதல் செய்வதுபோலவும் கைவிடப் பட்ட காதலர் புலம்புவதுபோலவும் பல்வேறு நிலைகளில் பரிண மித்தன. தன்னை முழுவதும் இறைவனிடம் ஒப்படைத்தல், கழுவாய் தேடிக்கொள்ளுதல், அவனிடமிருந்து பிரிவதால் ஏற் படும் பிரிவுத்துயரைக்கூட அடைய முயற்சி செய்தல்—இப்படியும் பல நிலைகளை அடைந்தார். துக்காராம் இறைவனுடன் ஆத்மார்த்த மாகக் கொண்ட பல்வேறு உறவுநிலைகளை அவர் பாடல்கள்மூலம்

அறியலாம். துக்காராமின் எண்ண அலைகள் வண்ணக் கவிதைகளாக வடிவு பெற்றுள்ளன. கீழ்வரும் வரிகள் துக்காராமின் பல்வேறு நிலைகளைப் பறைசாற்றுவனபோல் உள்ளன.

உனது பணியாள் என என்னை
அழைத்துக் கொள்வதற்கு வெட்கப்படுகிறேன்,
நீ கொடுமையானவன்,
இரக்க உணர்ச்சியற்றவன், சொரணை இல்லாதவன்,
பசிக் கொடுமையால்,
உன் குழந்தைகள் துடிதுடித்துக் கதற அனுமதிப்பவன்,
பார்த்துக்கொண்டு வாளா இருப்பவன்.
அக்கறையின்றி இருப்பதையே
மேலும் நீ தொடருவாயானால்
உனக்கு இருக்கும் நல்ல பெயரை நான் கெடுத்துவிடுவேன்.
என்னைப் பொறுத்தவரையில் கடவுள் இறந்துவிட்டார்—
(இறந்துபோனவரே)
இருக்கிறார் அவர் என்று யார் எண்ணுகிறார்களோ
அவர்களுக்காக அவர் இருக்கட்டும்
—இருந்துவிட்டுப் போகட்டும்.
நீ நாணமில்லாதவன்;
உனக்குச் சாதியில்லை, குடும்பமில்லை;
நீ ஒரு கள்வன், ஒழுக்கங்கெட்டவன்.
சண்டை ஒன்றுக்கு
என்னைச் சினமூட்டித் தூண்டினாய்,
என் வாயை அடைக்க
இப்பொழுது எவராலும் முடியாது.
ஒரு தாயைக் காட்டிலும் மிக்க அன்பினன் நீ
குளிர்மதியைக் காட்டிலும் குளிர்ச்சியுடையவன் நீ
நீரைக் காட்டிலும் மிகுதியாய் (வளைந்து கொடுத்து)
இணங்கி நடப்பவன் நீ
ஆரவாரத்துடன் பொங்கிப் பீறிட்டெழுந்திடும்
அன்புப் பெருக்கு நீ.[18]
தாயே! நான் மிகவும் தளர்ந்துபோய்விட்டேன்
இதற்குமேலும் என்னால் நடக்க இயலாது
உன் கருணையாலும் காதலாலும் கைகொடுத்து என்னை
—மேலே தூக்கு
உன் மார்பிடத்தே என்னைக் கிடத்து; என் பசியைத் தணிவி.

கடவுளை மெய்யாகக் காண்பதற்காக முயற்சிகளை மேற்கொண்டார்; அவ்வாறு முயற்சி செய்து கடவுள் ஞானம் கைவரப்

[18] து மாஉலோகு³னீ மாயால சந்த்ராஹூ³னீ சீதள் I
பரணியா ஹூ³நீ பாதள் கல்லோல ப்ரேமாசா II

பெறுவதற்காக உழைத்துக்கொண்டிருந்தபோது சிலவேளைகளில் பொறுமையின்றித் தவித்தார். அடிக்கடி மனஞ்சோர்ந்து கவலைக் கடலில் மூழ்கினர்; அடிக்கடி செயல் குலைந்து நிற்பார். ஆனல், எல்லாக் காலங்களிலும் அவருடைய படைப்புகளுக்கான ஊக்க சக்தியாகக் (தூண்டுகோலாகக்) கடவுள் இருந்தார். கடவுளோடு அவர் கொண்டிருந்த தொடர்புதான், தேவைப்படும்போதெல்லாம் அவருக்கு மிக்க வலிமையைத் தந்து உதவியது. ஒரு பாடலில் அவர் குறிப்பிட்டிருப்பதுபோல, அவரைப் பொறுத்தவரையில் அவருக்கு எல்லாமே கடவுள்தான்.

இறைவன்மீது எல்லையில்லாப் பக்தி செலுத்தினர்; பக்தியினுல் பரந்தாமனை நெருங்கினர். நெருக்கமான தொடர்பு பக்தியால் கிட்டியது. அத்தொடர்பால் வலிமை மிகப் பெற்ருர். அந்தப் பக்தர் துக்காராமுக்கு எல்லாமே கடவுள்தான். கடவுளின் நாமத்தில் எல்லாமே அடக்கம் என்கிருர் அவர். இக்கருத்தை ஒரு பண்ணுர்ந்த பாடலில் அவர் வெளியிட்டுள்ளார்:

எனது தவம்,
எனது சமயக் கொடைகள்,
எனது சமயப் பயணம்,
தெய்வத்தை இணக்குவிப்பதற்காகச் செய்யப்பெறும்
சடங்குகள்,
எல்லாம் உனது திருநாமமே,
புனித நாமத்தை வாயாரப் புகழ்ந்து பாடுவதும் அதுவே;
எனது சமயச் சடங்கிற்குப் பயன்படும் புனித நீர்,
சூளுறவைக் கடைப்பிடித்தல்,
சத்தியம், கருமம், தருமம் மற்றும் சடங்குகள்
—எல்லாம் உன் நாமமே;
உனது நாமமே எனது யோகமும், எனது தியாகமும்,
தியானமும்,
குடும்பச் சடங்குகளும் கோத்திரச் சடங்குகளும்;
உனது நாமமே எனது எண்ணமும் செயலும்
எனது திடஉறுதியும்—எல்லாமுமே.

இவையெல்லாம், உன் நாமத்தின் அடக்கமே என்று துக்காராம் தன் பண்ணுர்ந்த பாடல் ஒன்றில் கூறியுள்ளார். மற்றுமொரு பாடலில் இறைவனுக்கும் தனக்குமுள்ள உறவினை நல்ல முறையில் சித்திரித்துள்ளார்.

கங்கைப் பேராறு கடலில் கலக்கும்பொழுது
இரண்டிற்குமிடையே இருக்கும் இடைவெளி
மருட்சியன்றி மற்ருென்றில்லை.

எனக்கும் உனக்கும் இடையே இருக்கும் இடைவெளி,
அதனைப் போன்றே அமைந்ததாகும்.
விதைக்குள் இருக்கும் விதையினை உனக்கு
வெளிக்காட்டியுள்ளேன் யான்;
கனியும் மலரும் தோன்றும் மறையும்
அவையெலாம்,
வெறும் மாயமேயன்றி மற்றொன்றில்லை.
தோற்றமும் மறைதலும் ஏமாற்றுதல்களே.

பக்தி இலக்கியத்தில் இதயத்தைத் தொடும் உட்கதைகள் மிகுதியும் உண்டு; விட்டல்பெருமானுக்குத் துக்காராம் எழுதிய கடிதம் ஒன்றுண்டு. அக்கடிதம் அத்தகைய மனங்கவரும் கிளைக் கதைகளுள் மிகவும் உருக்கமான ஒன்றாகும். பக்திப் பெருக்கில் திளைத்து அவர் பாடுகிறார்:

எங்கெங்குச் சென்றாலும் என்னை நீ தொடர்ந்து வருகிறாய்,
என் கையைப் பற்றிக்கொண்டு என்னை வழிநடத்திச்
செல்லுகிறாய்,
நான் நடக்க விரும்புகிறேன்,
ஏனென்றால் நான் உன்னைச் சார்ந்துள்ளேன்,
என் பளுக்களை யெல்லாம்
எப்பொழுதும் தாங்கி நிற்பவன் நீ.
நான் உளறும்பொழுது, நீ அதைச் சரிப்படுத்துகின்றாய்,
என்னிடமிருந்த நாணத்தை, கூச்சத்தை அகற்றினாய்,
துணிவுடையவனாய் ஆக்கினாய்,
எல்லா மாந்தரும்,
என் காப்பாளராய் மாறினர்,
கேளிராய் மாறினர், கிளைஞராய் மாறினர்,
உறவினராயும் நட்பினராயும் உவந்து மாறினர்;
இப்பொழுது யான் பற்றுமீதூர்ந்து ஆடிக்களிக்கிறேன்,
உள்ளும் புறமும் எங்கெங்கும்—
உனது பேரின்பம் பரவியுள்ளது[19]

என்கிறார் துக்காராம்.

---

[19] ஜேதே^{2} ஜாதோ தேதே^{2} து மாஜா^{4} ஸாங்க^{3}ாதீ |
சால்லிஸீ ஹாதீ க^{4}ருநியா ||
சாலோ வாடே ஆம்ஹீ துஜ^{4}ாசி ஆத^{4}ார் |
சால்விஸீ ப^{4}ார் ஸவே மா ஜ^{4}ா ||
பே^{3}ாலோ ஜாதா ப^{3}ரள் கரிஸிதே நீட் |
நேளீ லாஜ் தீ^{4}ட் கேலோ தே^{3}வா ||
அவதே^{4} ஜனமஜ ஜாலே லாகபால் |
ஸோஇரே ஸகல ப்ராண ஸகே^{2} ||
துகா ம்ஹணே ஆதா கே^{2}லதே கவதுகே |
ஜாலே துஜே ஸுக^{2} அந்தர்ப^{3}ா ஹீ ||

அண்டத்துக்குரிய இயல்பினை அறிந்த நிலையில், தனது ஆன்மீகப் பயணத்தின் கடைசிக் கட்டத்தை மிகவும் சிறப்பாகத் துக்காராம் வருணித்துள்ளார். அண்டத்தைப் பற்றிய உணர்வு நிலையில் அவர் சித்திரிப்பதாவது:

அணுவைக் காட்டிலும் அதிநுட்பம் வாய்ந்தது,
எனினும் அதனுடன்,
எல்லையற்ற பரந்த ஆகாயம் இணையானதாகும்.
அணுவும் அகல்விசும்பும் துக்காவிற்கு ஒன்றே.
இம்மைத் தொடர்பான மருட்கை நிறைந்த
உலகின் அதே உருவத்தை,
நான் விழுங்கினேன்;
பிண்டத்தை உமிழ்ந்தேன்;
அறிவு, அறிபவன், அறியப்படுபவை எனும்
நடைமுறை யுலகின் மும்மையை
உதறித் தள்ளினேன் ஒருங்கே யான்;
உள்ளுளே ஒளி ஏற்றப் பெற்றது,
பிறர்க்குத் தொண்டு செய்வதற்காகவே
தான் இனியும் வாழ்வதாகத் துக்கா சொல்கிறார்.[20]
யாருடைய உந்திக் கமலம் (கருப்பை)
எல்லையில்லாத உயிர்த்தொகுதிகளை உள்ளடக்கியுள்ளதோ
அந்த ஆன்மநாயகன்
என் உள்ளத்தில் இருக்கிறார்.
எனக்கு யான் கருஉயிர்த்தேன்
என் சூல் பையினின்றே யான் வெளிப்போந்தேன்.
துவைதத்திற்கும் அத்துவைதத்திற்கும் இடையேயுள்ள பேதம் மறைந்தது.
இடம், காலம் மற்றும் பொருள்—எல்லாம் மறைந்தன.
அகிலத்தின் வடிவை ஆன்மா கொள்கின்றது.
அந்தச் 'சொல்' என்றும் இருந்ததில்லை:
இருப்பது பரப்பிரும்மம் (தனிமுதல்) ஒன்றே.
'நான் நானாகவே இருக்கின்றேன்' என்ற தெளிவு ஏற்பட்டுவிட்டது.
'நீயும் இருக்கின்றாய்' என்ற உண்மை
தெய்வீகப் பேரின்பத்தால் பறையறைவிக்கப்பெறுகின்றது
தன்னில் எல்லாமாகியுள்ளார் துக்காராம்.

---

[20] அணு ரேணுயா தே^{2}ாகட^{3}ாதுகா ஆகாசா ஏப^{3}ட^{4}ா ।
கி^{3}ளுநீ ஸாண்டிலே கலிவர் ப^{4}வப்^{4}ரமாசா ஆகார் ॥
ஸாண்டிலீ த்ரிபுடீ தீ^{3}ப உஜ்லலா க^{4}டீ ।
துகாம்ஹணே ஆதா உரலோ உபகாராபுரதா ॥

(துக்காராம் தன்னுடைய உடலில் இவற்றையெல்லாம்
அடைந்துவிடுகின்றார்)

'எனது மரணம் மரித்துவிட்டது;
யான் மரணமற்றவன் ஆனேன்.
அதன் வேர்முதல் வெளிப்படுத்தப்பெற்றுள்ளது'

என்கிறார் துக்காராம்; மரணமிலாப் பெருவாழ்வு கண்டுவிட்டதாகக் கூறுகிறார்.

அறிவின் வரம்புக்கு உட்பட்ட, காலத்தின் பரிமாணங்களுக்காகத் துழாவித் தேடிக்கொண்டிருக்கும் தற்காலக் கவிஞர்களைப் போல அல்லாமல், அறிவின் வரம்புகடந்த மேம்பட்ட நிலைக்குச் சென்று கவிதை பாடியவர் துக்காராம். அண்டம் முழுமைக்குமான கற்பனைச் சித்திரங்களையும் படிமங்களையும் மிக எளிமையாகக் கையாண்டுள்ளார். 'அண்டம் முழுமையுமே தனது தாயகமாகும்' என்று கூறுகிறார் துக்காராம். ஓர் எல்லைக்கு வந்தபின்பு, அவர் பேதங்களைக் கடந்து நின்றார். வீண் வாதங்களிலும் கேலிப் பேச்சுகளிலும் அவர் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளவில்லை. துவைதம் அத்துவைதம், சகுணம் நிர்குணம், நன்மை தீமை மற்றும் இவைபோன்ற பிற அறிவுச் சலசலப்புகளிலும் வெற்று ஆரவாரங்களிலும் வீண் விவாதங்களிலும் தன்னைத் துக்காராம் ஈடுபடுத்திக்கொள்ளாமல் அவற்றையெல்லாம் கடந்து நின்றார். சமயம் என்பது அவரைப் பொறுத்தவரையில் ஒரு நம்பிக்கையே; அதுவும் ஆக்கம் கருதிய நம்பிக்கையாகவே அவருக்கிருந்தது. அத்தகைய சமய உணர்வே அவரது கவிதைகளுக்கு வலுவான தளம் அமைத்துக் கொடுத்தது; அவர்பால் இருந்த சமயப் பிடிப்பே கவிதைகள் பிறப்பெடுப்பதற்குக் காரணமாகியது. மிகவும் ஆழ்ந்த நம்பிக்கையுடன் அவர் கடவுளுக்குத் தெரிவிப்பார்:

நாங்கள் பிச்சைகேட்டுப் பெறக்கூடும் என்பதற்கு
உன்னிடம் ஒன்றுமில்லை.
ஒ இறைவா! நாங்கள் கேட்டுவிடுவோமோ என்று நீ
அஞ்சியிருந்தபோதிலும்.[21]

சிரிப்பும் பொய், அழுகையும் பொய்
பொய் பொய்யையே மிகுதிப்படுத்துகிறது;
எனது என்பதும் பொய், உனது என்பதும் பொய்
பொய், பொய்ம்மையின் சுமையாகும்;
பாடுவதும் பொய், தாங்குவதும் பொய்

[21] ஆம்ஹீ மாகே^ரா ஜஸே நாஹீ துஜ்பாசீ ।
ஜரீ தூ ப்ரீ^ஷ்தோஸீ பாண்டுரங்கா ॥

மெய்ம்மையல்லாதது மெய்ம்மையல்லாததை நாடுகிறது;
துய்த்தல் என்பது மெய்ம்மையல்லாதது
துறத்தல் என்பதும் மெய்ம்மையல்லாதது
(யான்) துறவி என்று கூறுவதும் மெய்ம்மையல்லாதது
மாயை என்று கூறுவதும் மெய்ம்மையல்லாதது
துக்கா என்பதும் மெய்ம்மையல்லாதது,
அவருடைய பக்தி என்று சொல்வதும் மெய்ம்மையல்லாதது;
மெய்ம்மையல்லாத கேட்பவர்களுக்கு
மெய்ம்மையல்லாதவற்றைப் பேசுவதாகும்.

துக்காராம் மேலும் மேலும் ஆழ்ந்து சிந்தித்தார்; அகமன அனுபவம் பெற்ருர்; அந்த அனுபவம் அவருக்கு உண்மையை வெளிப்படுத்திக் காட்டியது; உண்மையை உணர்ந்த அந்த நிலையில், துக்காராம் பேரின்பம் பெற்ருர்; அவர் பெற்ற அந்தப் பேரின்பத்திற்கு ஒப்பு உவமையே கிடையாது என்று சொல்லலாம்.

'கண்ணயர்ந்து தூங்குதற்குக்
கல்படுக்கையே சாலச் சிறந்தது,
உடம்பைப் போர்த்தும் போர்வைகளுள்
வானப் போர்வையே சாலச் சிறந்தது.
எதற்காகவேனும் ஏன் ஆர்வம் காட்டவேண்டும்?
ஆர்வம் காட்டுதல் வாழ்க்கையை வீணடிப்பதாகும்'[22]

என்று துக்காராம் பாடுகிருர். அற்றது பற்றெனில் உற்றது இன்பம் என்னும் நிலைக்கு அவர் வந்துவிட்டார்.

துக்காராமின் பாடல்களைப் படிக்கையில், வெகுசில பாடல்களில் ஒரு குறிப்பிட்ட அளவில் இருண்மை அதாவது தெளிவற்ற தன்மை புலப்படுகிறது; அவருக்கே உரிய தனித்த உணர்ச்சியனுபவங்களை வெளிப்படுத்தும் பாடல்களில், உணர்ச்சிகளைக் குறியீடுகளாலும் உருவகங்களாலும் கலந்து, கதம்ப நிலையில் சில கருத்துகளை வெளியிட்டுள்ளார். அக்குறியீடுகளாலும் உருவகங்களாலும் வெளிப்படுத்தப்பெறும் கருத்துகள், அவை எவற்றைப் புலப்படுத்த வந்துள்ளன என்பதை அறிந்துகொள்வதில்தான் ஒருவகை இருண்மை நிலவுகிறது. தெளிவாக இன்ன கருத்தை விளக்க வந்தவைதாம் இப்பாடல்கள் என்று கூறமுடியாதவாறு அமைந்த சில பாடல்கள் இருக்கின்றன. மேலும், பாடல்களில் வரும் அக்குறியீடுகளாலும் உருவகங்களாலும் உணர்த்தப்பெறும்

---

[22] நித்ரேஸீ ஆஸின உத்தம பாஷாண ।
வரீ ஆவரண ஆகாசா சே ।
தேதே[2] காய கரணே கவணுசீ ஆஸ் ।
வாயா ஹோய் நாச ஆயுஷ்யாசா ॥

கருத்துகளுக்கான தொடர்புகளை அறிந்துகொள்வதில் மிகுந்த சிக்கல் உள்ளது.

எங்கெங்கு நான் பார்க்கினும்
முழுமையான வானத்தின்
உயிர்க்கூறான மைய இழைமம்
நிற்பதைக் காண்கிறேன்;
மனத்தகத்து ஆழமாய்ச்
சுவடு பதிந்துள்ளது என்பதற்கேற்ப
கண்களில் அவ்வுருவம் பெரிதும் நிலைபெற்றுவிட்டது;
சிவப்பு, வெள்ளை, கருப்பு மற்றும்
மஞ்சள் வண்ணத்தில் பல்வேறு வகையாக ஒளிர்கிறது;
கண் வலியைப் போக்கும் களிம்பு,
விழிப்புணர்வு நிலையில் அக்களிம்பு விழிகளுள் புகுந்தது,
புகுந்ததால் பார்வையில் விழிப்புணர்வு விளைந்தது.
(பேதமாம் பிணி தீர்க்கும் விழிப்புணர்வுக் களிம்பு நுழைந்தது;
பேதமற்ற தெளிவைக் காட்சியில் விளைவித்தது)
துவைதம் அத்துவைதம் என்னும் கருத்து மறைந்தது;
இடம்பற்றியும், காலம்பற்றியும், பொருள்பற்றியும்
நிகழும் பேதங்கள் மறைந்தன;
ஆன்மா அகிலத்தின் வடிவை மேற்கொண்டது.

புலன்களால் அறியத்தக்க சராசரி உலகின் எல்லைகளுக்கும் அப்பாற்பட்டுள்ள பிரபஞ்சத்தின் உண்மை இயல்பு, துக்காராம் அவர்களால் மேற்காட்டியவாறு கண்டு வெளிப்படுத்தப்பெற்றது.

ஆன்மீகக் கருத்துகள் என்றும் மாறாத உண்மைகளாகவோ மூடநம்பிக்கைகளாகவோ இருக்கக்கூடும்; உலகியல் கடந்த கருத்துகளும்கூட விடாப்பிடியான கொள்கையாகவோ அறிவியலுக்கு அப்பாற்பட்டதாகவோ இருக்கக்கூடும். ஆனால், அத்தகைய ஒரு நம்பிக்கையை வைத்திருப்பதால் ஏற்படக்கூடிய பேரின்பமானது, எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி அது ஓர் அரிய சிறப்புத் திறமையேயாகும்; அது நிறைவின் அறிகுறியு மாகும். திருத்தொண்டர்கள் கூறிவந்த ஆன்மீகக் கருத்துகள், சமூகத்தில் நிலவி வந்த இணக்கமான போக்கில் குறுக்கிட்டு எவ் விதமான சமநிலையற்ற தன்மையையும் ஏற்படுத்திவிடவில்லை யென்பதற்கு, அத்தொண்டர்கள் போதித்து வந்த தத்துவங்கள் காலங்கள்தோறும் சான்று பகர்கின்றன. அவர்கள் உலகுக்கு வழங்கிய மெய்யுணர்வுக் கோட்பாட்டில் பக்தியும் என்றும் மாறாத அறவியல் கொள்கைகளும் இடம்பெற்றன. தூய்மை, தன்னடக்கம், இன்னா செய்யாமை, பரிவு, பிறர் பிழை பொறுத்தல்,

அமைதியாக இருத்தல் ஆகிய நல்லொழுக்கக் கோட்பாடுகள் அவர்கள் காட்டிய மெய்யுணர்வுக் கோட்பாட்டில் இடம் பெற்றுள்ளன. நம்முடைய வரலாற்றில் சோதனை மிகுந்த கட்டங்கள் ஏற்பட்டபொழுதெல்லாம் அத்திருத்தொண்டர்கள் காட்டிய மெய்விளக்க நெறி கைகொடுத்து உதவியுள்ளது; அக் காலக்கட்டங்களில் அது ஒருமைப்பாட்டு நெறியைப் பேணிப் பாதுகாத்து வந்தது. அத்தகைய மெய்விளக்க நெறியானது திருத்தொண்டர்களுக்கு ஓர் அலாதியான மனநிலையைத் தந்தது; மேலும் அது, அச் சமயச் செல்வர்களுக்கு ஞானத் தொடர்பான பெருமகிழ்ச்சியையும் நல்கியது. அத்தகைய பெருமிதமான நிலையை மெய்விளக்க நெறி காட்டி உதவியது.

துக்காராம் தன்னுடைய முக்திக்கான ஒன்றுகச் சமயத்தைக் கொண்டாரில்லை. மனிதகுலம் முழுமைக்குமான துன்பத்தைத் துடைக்கவந்த ஒன்றுகச் சமயத்தைக் கருதினர். வழிதவறிச் செல்லும் மனிதகுலத்தை மீட்கவந்த ஒன்றுகச் சமயத்தைத் துக்காராம் கண்டார்; தன்னுடைய சிந்தனைகளுக்கெல்லாம் நாயக மாகக் கடவுளைக்கொண்டார். அவனன்றி ஓர் அணுவும் அசை யாது என்பது துக்காராம் கொள்கை. அவனே எல்லாம் என்றூர். ஆனுலும், சமுதாய வாழ்க்கையில் அவருக்கிருந்த ஆர்வத்தை அவர் இழந்துவிடவில்லை. சமுதாயத்தைப் புறக்கணித்து வாழ்ந்த துறவியாகவும் அவர் இருந்துவிடவில்லை; அவருடைய சமயக் கோட் பாடும் இறைபற்றிய கோட்பாடும் மிகவும் உன்னதமானவை. உலகாயதத்தின் அனைத்தும் அவரது சமயக்கொள்கைகளில் இடம் பெற்றிருந்தன. அவருடைய சமயக் கோட்பாட்டில் உலகாயதத் திற்கும் கடவுள் கோட்பாட்டிற்கும் முரண்பாடு இல்லாததைப் போன்றே, அவருடைய பக்திப் பாடல்களிலும் வாழையடி வாழை யாக வரும் மரபுக்கும் புதுமையைச் செய்யத் துடிக்கும் தனித் துவத்திற்குமிடையே எவ்விதமான முரண்பாடும் இருப்பதாகத் தோன்றவில்லை. பக்திமான்களில் துக்காராம் என்ற ஒரே ஒரு திருத்தொண்டரிடம்தான் மிக ஆழமானதும் அதே நேரத்தில் தற்சார்பு மலிந்ததுமான சமய உண்மைகளைக் காணுகின்றோம். ஆனல், அவருக்கென்று ஒரு தத்துவக் கோட்பாடு உண்டு. மிகமிக ஆழமான உணர்வுகளையும், அதே நேரத்தில் பிறரால் உணர்ந்து வெளிப்படுத்த முடியாததும் தனக்கே உரியதுமான சமய உண்மை களையும் துக்காராம் என்ற திருத்தொண்டர் ஒருவரிடம்தான் காணமுடிகின்றது.

துக்காராமின் தத்துவக் கோட்பாட்டிற்கு, கீதை காட்டும் சமயக் கோட்பாட்டின் பின்னணி உண்டு. கீதையைத் துக்காராம் மொழிபெயர்த்து எளிய மொழியில் விளக்கிக் காட்டியுள்ளார்.

தன்னுடைய மொழிபெயர்ப்புக்கு 'மந்திர—கீதை' என்று பெயர் கொடுத்துள்ளார். துக்காராம் தன் வாழ்வில் சைதன்யரின் நெறியைத் தழுவினுர்; அதோடு, வரகரி நெறியின் தத்துவத்தை எடுத்து விளக்குவதில் வல்லுநராகவும் இருந்தார்.

துக்காராமின் மனத்தில் புரையோடிப்போன பழமையை எதிர்க்கும் புரட்சி கனன்றுகொண்டேயிருந்தது. இயற்கையாகவே துக்காராம், இந்து சமயத்திலுள்ள பலகூறுகளுக்கு எதிர்ப்பாளராக இருந்தார். அவர், இந்து சமயத்திலுள்ள பல கூறுகளை எதிர்த்த தற்குக் காரணம் இருந்தது; அந்தக் கூறுகள் உண்மையாகவே இந்து சமயத்தை நம்புகிறவர்கள்கூட, எளிதில் ஆன்ம சித்தியை அடையமுடியாதவாறு இருந்தன. எட்டாத நிலையில் இருப்ப தனுலேயே எதிர்த்தார். கடையனுக்கும் கடைத்தேற்றம் அளிக்கக் கூடிய நிலையில் இருக்கவேண்டும் என்று விரும்பியவராகையால் எதிர்த்தார். இடைக்காலத்திய இந்து சமயக் கொள்கைகளில் மிகுதியான நம்பிக்கை கொண்டவராகத் துக்காராம் எப்போதும் இருந்ததில்லை. பண்ணையார் மனுேபாவத்திலும் அவர் நடந்து கொள்ளவில்லை; எஜமானத்துவம் அவரிடம் இருந்ததில்லை. எல்லாருக்கும் ஓர் இலட்சிய வாழ்க்கையைத் தரவல்லது இந்து சமயம் என்று அவர் வற்புறுத்தியதாகத் தெரியவில்லை. இந்து சமயமே எல்லாம் என்று அவர் எண்ணியதாகத் தெரியவில்லை. அதற்குமாறுகப் பல சமயங்களில் இந்து சமயத்திலுள்ள பெரும் பகுதியைக் குறைகூறியிருப்பதைக் காணலாம்.

மனிதநிலையும் தெய்வநிலையும் மாறி மாறி ஒன்றையொன்று ஊடுருவிப் பரவுந் தன்மை வாய்ந்தது என்பதைத் துக்காராமின் வாழ்க்கை நிரூபித்துள்ளது. சமயப் பற்றற்ற நிலையிலிருந்து எதை யும் தீவிரமாகப் பகுத்து உணரும் நிலைக்கு, துக்காராம் படிப்படியாக உயர்ந்தார். ஐயுறவு வாதத்திலிருந்து பகுத்தறிவு வாதத்திற்கு வளர்ந்தார்; தன்னளவில் துக்காராம் தூய்மை பெற்றுர்; மனித குலத்தைத் தூய்மைப்படுத்தவேண்டும் என்ற எண்ணங்களால் சூழப்பெற்றுர். தான் பெற்ற புனித நிலையை மனிதகுலம் பெற வேண்டும் என்று எண்ணினுர். தனிமனிதனது வாழ்வுபற்றிய தனித்துவம், மனிதனது உள்ளுணர்வுகள் ஆகியவற்றின்மீது துக்காராம் பெரிதும் அக்கறை காட்டினுர்; தனிமனிதனது சுதந் திரம், கடமையுணர்ச்சிபற்றிய புதிய எல்லைகளுக்கெல்லாம் சென்று சிந்தித்தார். அவர் வாழ்ந்த காலமோ மிகவும் அச்சந் தரத்தக்க காலம். போர்களாலும் பஞ்சத்தினுலும் இயற்கை அழிவுகளினு லும் மட்டும் மக்கள் துன்புறுத்தப்படவில்லை; மன உளைச்சல்களா லும் உள்மனப் போராட்டங்களாலும் பெரிதும் அவதியுற்ற காலம். மிக மிக அதிகமான அளவில் அஞ்சத்தக்க நிலையில் மனப்

போராட்டங்களுக்கு ஆட்பட்ட காலம்; அன்றையச் சூழலில், ஒன்று துறவுபூண்டு சந்நியாசியாகவேண்டும் அல்லது பிராமணீயத்தின் மோசடிகளுக்கு முற்றிலும் சரணடையவேண்டும். மோட்சத்தை அடைவதற்கு உரிய ஒரே வழியாக அன்றிருந்தது, வஞ்சகம் நிறைந்த பிராமணீயத்தின் காலடியில் வீழ்ந்து சரணடைவது தான் அல்லது வீட்டைவிட்டு ஓடிப்போகும் துறவுநிலைதான். இத்தகைய கொடிய சூழல் அன்று நிலவியது. இத்தகைய காலக் கட்டத்தில்தான் துக்காராம் பக்தி உலகத்திற்குப் புத்துயிர் ஊட்டினார்; ஏற்றத்தாழ்வற்ற சமுதாய வாழ்வை வெளிப்படையாகவே மக்களிடைப் பிரச்சாரம் செய்தார்; தான் வாழ்ந்த காலத்திலிருந்த ஒத்துவராத பழமையான போக்குகளை ஒதுக்கித் தள்ளினார். கொள்கையளவில் அடிப்படையிலேயே ஏற்படுத்த வேண்டிய புதிய மாற்றத்தை வலியுறுத்தினார். மாற்றத்தின் தேவைகளை மக்களுக்கு எடுத்துச் சொன்னார். பழமைப் பிடிப்பில் சிக்கியிருந்த பண்டிதர்கள், சில கோட்பாடுகளுக்குக் காலத்துக்குப் பொருந்தாத குறுகிய விளக்கங்களைத் தந்துகொண்டிருந்தனர். அக்கோட்பாடுகளை அடியோடு மாற்றுவதற்கான தீவிரப் போக்கில் துக்காராம் ஆர்வம் காட்டினார்; அடிப்படை மாற்றம் காண ஆசைப்பட்டார். தொன்றுதொட்டு இருந்துவரும் கொள்கைகளுக்கு, காலத்திற்கு ஏற்ற மாறுபட்ட விளக்கங்களைத் தந்தார்.

> 'இரக்கம் என்பது வாழும் உயிரினங்கள் அனைத்தின்பாலும் நல் (இணக்க) உணர்ச்சி காட்டுதல், மேலும் தீமை செய்வோரின் அழிவும் ஆகும்'[23]

என்பது துக்காராம் தரும் புது விளக்கம்.

சமுதாயச் சீர்திருத்தக்காரர் என்ற அளவில், துக்காராம் தன்னைப் பின்பற்றுபவர்களிடம் மனத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்திக் கூறிவந்தார். மேலும், உலகப் பற்றுகளால் வரும் தீமைகளினின்று தாங்கள் விலகி நிற்க வேண்டுமென்றும், பற்றுகளையெல்லாம் விட்டொழிக்கவேண்டுமென்றும் அடிக்கடி துக்காராம் தன்னைப் பின்பற்றுபவர்களிடம் வற்புறுத்திக் கூறிக்கொண்டிருந்தார். அவர் ஒழுக்கம் நிறைந்த அறிஞராக விளங்கினார்; தூய நல்லொழுக்க நடைமுறைகளை வற்புறுத்தி வந்தார்; எண்ணம், செயல் எல்லாவற்றிலும் தூய்மையை வலியுறுத்தியவர்.

'தூய உள்ளத்திற்கு எவ்வித அறிவுரையும் தேவையில்லை' என்பது துக்காராம் கூற்றாகும்.

---

[23] த[3]யாதிசே நாவ பூ[4]தாஞ்சே பாலன் 1
ஆணிக் நிர்தலன் கண்ட காஞ்சே 11

அறிவுரைகளும் தகுதிக்கேற்பவே இருக்கவேண்டும்; என்ருலும், அறிவுரைப் பளுவும் தாங்கும் அளவினைத் தாண்டிவிடக் கூடாது என்பார். துக்காராம் வெறும் கொள்கைவாதியல்லர்; நடைமுறை உலகை நன்கறிந்த திருத்தொண்டர்; ஒழுக்கநெறிகளை உணர்வுபூர்வமாகப் பின்பற்றி ஒழுகியவர். ஒழுக்கநெறியின் இன்றியமையாமையை உளமார உணர்ந்தவர் துக்காராம்.

''யாரொருவர் செல்வத்தை நல்வழியில் ஈட்டி,
நடுவுநிலை பிறழாத நல்லறம்பூண்டு,
ஈட்டிய செல்வத்தைச் செலவு செய்கின்ருரோ,
அவருக்கு நல்வாழ்வு கிட்டும் மறுமையில்''

என்கிருர் துக்காராம். துக்காராம் வாழ்வு சோகம் நிறைந்தது தான்; என்ருலும், அச்சம் தவிர்த்து வாழவேண்டும் என அறிவுறுத்திஞர். 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்' என்ற திருத்தொண்டர் வாழ்வை வாழ்ந்து காட்டிஞர். அஞ்சுவதுமில்லை, அஞ்சவருவதுமில்லை என்ற செருக்கு நிலையினை வலியுறுத்திஞர். நம்முடைய வாழ்க்கைப் பயணத்தில் சற்று இளைப்பாறக் கிடைத்த சாவடிதான் இந்த உலகம் என்று விளக்கியவர் துக்காராம்.

மனிதன் காமத்தை வெல்லவேண்டும்; தற்பெருமையைப் பழிக்கவேண்டும்; வன்செயல்களைக் கண்டிக்கவேண்டும்; தியாகத்தை வரவேற்கவேண்டும்; தீயசக்திகளின் பாதிப்புகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு நாள்தோறும் நல்ல பண்புகளை ஈட்டிப் பாதுகாக்கவேண்டும்; மனிதர்கள் முயற்சி உடையவர்களாய் இருக்கவேண்டும்—இவ்வாருன பல கருத்துகளைக்கொண்டவர் துக்காராம். உழைப்பின் பெருமையை வற்புறுத்திக் கூறவந்த துக்காராம் அவர்கள்,

நிலம் வழிவழியாக வந்த நன்கொடையாக இருக்கலாம்
தன்பாட்டிற்குத் தானே அது பலனைத் தந்துவிடாது—

என்கிருர்.

பலவித இச்சைகளுக்கு ஆட்படாமல் மனிதன் தனியாக ஒதுங்கி வாழவேண்டும்; பெண்ணுசை பொன்னுசைகளினின்று மனிதன் விலகி நிற்கவேண்டும். துக்காராம் நெறியின்படி, நன்னெறிகளும் செயலும், சொல்லும் செயலும், பக்தி நெறியும் கருமநெறியும், இம்மையும் மறுமையும், நடத்தையும் நம்பிக்கையும், உயிர்களின்மீது இரக்கமும் நன்னடத்தையும்— அனைத்துமே ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்துள்ளன. சோர்வுற்று, எழுச்சியற்றுத் தனக்குத்தானே நிறைவை ஏற்படுத்திக் கொண்டு, காலங்காலமாகக் கண்மூடிப் போற்றிவந்த பழைய

பழக்க வழக்கங்களில் மாற்றம் கொண்டுவர முனைந்தார். சமய நன்னெறிகளில் புத்தார்வம் தோன்றுவதற்காகச் சோர்ந்துபோய்க் கிடந்த பழமையில் மாறுதலைக் காணவிழைந்தார்; சமய நன்னெறிகளைத் தன்னுடைய கோட்பாட்டிற்கு ஏற்ப மாற்றிக்கொண்டு, மாறுதல் ஏற்படுத்த முனைந்து உழைத்தார்.

'உங்கள் எண்ணப் போக்கில் சில மாறுதல்களை
ஏற்படுத்திக்கொள்ளுங்கள்,
இப்போது உங்களுக்குக் கிடைத்திருக்கும் வாழ்வு
இனி என்றும் திரும்பப் போவதில்லை' [24]

என்று, துக்காராம் வற்புறுத்திக் கூறுகிறார். இவ்வாறாக இரண்டு வரிப் பாடல் ஒன்றில், நம்பிக்கை அறிவாராய்ச்சி என்ற இரண்டுக்கும் இடையே இருந்த பிரிவினைத் தன்மையை ஒழித்துக் கட்டினார். மேலும், தன் காலத்தில் நிலவிய பல தீயொழுக்கங்களை, அத்தகைய பல பக்திப் பாடல்களில் கடுமையாகத் துக்காராம் கண்டித்தார்.

பக்தன் என்ற நிலையில் துக்காராம் ஓர் உண்மையைக் கண்டு வெளியிட்டார். எல்லாவிதமான துக்கத்திற்கும் மூலமாக இருப்பது (எதையும்) பேதமாகப் பார்க்கும் பேத உணர்ச்சியே என்று கண்டு கூறினார். இரு பொருள் வாதம் என்றும், துவைதம் என்றும் கூறப்படுவது, வேறுபடுத்திக் காட்டக்கூடிய ஒரு கோட்பாட்டைப் பற்றியதாகும். அத்தகைய வேறுபடுத்திக் காணும் துவைதப் போக்கே துக்கங்கள் எல்லாவற்றிற்கும் மூல காரணம் என்பது, அவரது கண்டுபிடிப்பாகும். பேதப்படுத்திப் பார்க்கும் பார்வைதான் சமுதாய ஏற்றத் தாழ்வைத் தோற்றுவித்தது. காலங்காலமாகச் சமூகத்தில் இருந்துவரும் சாதீய அமைப்பில், அத்தகைய ஏற்றத் தாழ்வு வெளிப்பட்டுத் தோன்றுகிறது. எனவேதான், துக்காராம் சாதீய அமைப்பையும் அதன் அனைத்துத் தீமைகளையும் கடுமையாகச் சாடினார். மரபாக இருந்துவரும் நால்வகைச் சாதீய அமைப்புக்கு அடித்தளமாக இருப்பதே, பிராமணர்கள் தூய்மையானவர்கள் என்பதுதான். பிராமணர்கள் தூய்மையானவர்கள், உயர்ந்தவர்கள் என்று கூறி வந்த அக் கட்டுக்கதைகளையெல்லாம் தகர்த்து எறிந்தார். வேதங்களைக் கண்மூடிப் படித்தல், சாதீய அமைப்பிற்குக் கட்டுப்பட்டு அதன் தேவைகளைக் கடமை உணர்வோடு நிறைவேற்றல், சமயச் சார்புடைய அதிகாரக் குழுவினர்க்கு மதிப்பளித்தல், கொடுமையான, அறிவுக்குப் பொருத்தமற்ற விரதங்களால் உடம்பை நலிவித்து வருத்துதல் ஆகிய இவையும், இவைபோன்ற பிறவும்

[24] பு^{3}த்தீ^{4}சா பாலட் த^{4}ரா ரே காஹீ 1
மாகு^{3}தா ஹா நாஹீ மணுஷ்யதேஹ 11

உபயோகமற்றவையென்றும் முக்திக்கான வழிகள் அல்ல என்றும் சொற்பொழிவுகள் மூலம் எடுத்து விளக்கினர். வழி வழியாக வருகிறது என்பதற்காக எதையும் கண்மூடிப் போற்றிவிடக்கூடாது என்பது துக்காராம் கருத்தாகும். தொன்றுதொட்டு வரும் எவ்வித மரபுகளும் தனிப்பட்ட சிறப்பியல்புகளின் அடிப்படையில் அமைந்திருக்கவேண்டுமென்றும், சிறப்புக் கருதியே எதனையும் பாராட்ட வேண்டுமென்றும், கண்மூடி வழக்கங்கள் மண்மூடிப் போகவேண்டும் என்றும் எடுத்துக் கூறினர்.

'தாழ்ந்த குலத்தில் பிறந்தவன் எத்தகைய துன்பங்களுக்கெல்லாம் ஆளாவான் என்பதைத் தன்னளவில் தானே உணர்ந்தவர் துக்காராம். ஆன்மசித்தியை அடைவதற்காக முயன்று நடந்த அவரது வழியில் அவரது குலப்பிறப்பே குறுக்கிட்டது. குலத்தால் ஏற்பட்ட குறுக்கீடுகளையெல்லாம் துக்காராம் தனது பாடல்களில் குறித்துச் சென்றுள்ளார்:

தாழ்ந்த சாதியினன் யான்,
புத்திக் கூர்மையிலும் தாழ்ந்தவனே,
ஆதரவற்றவன்—ஏழையான்,
எனினும், இன்னும் என்னை
விட்டல்பெருமான் விரும்பி ஏற்றுக் கொள்கிறார்.
ஒரு சூத்திரனுகப் பிறந்தேன் யான்—எனவே,
அனைத்துவகை வஞ்சனைகளினின்றும் அப்பாற்பட்டு நின்றேன்;
வேதங்களைப் படித்தவன் என்று சொல்லவும் உரிமையற்றவன்,
எல்லா நிலையிலும் ஆதரவற்றவன்,
தாழ்ந்த சாதியினனுக இருந்ததனுல்'

என்கிறார்.

அவரது பாடல்களில் இருவகைப் பொருளுணர்ச்சி தொனிக்கிறது; ஒரு நிலையில் வஞ்சகப் புகழ்ச்சி; மற்றொரு நிலையில் துயரம் நிறைந்த சோகம்; தன்னுடைய இயலாமையை இவ்வாறெல்லாம் தன் பாடல்களில் வெளிப்படுத்தியிருக்கிறார்; தீண்டாமையைப் போற்றி ஒழுகிய பிராமணர்களைப்பற்றி அவர் குறிப்பிட்டுப்பேசும் பொழுது,

'எந்த ஒரு பிராமணன் ''மஹர்'' என்ற இழிகுலத்தானை
அறியாது தொட்டுவிட்டு,
அதற்குச் சினங்கொள்கிறனே,
அவன் ஒரு பிராமணன் ஆகமாட்டான்;
அத்தகைய ஒரு பிராமணனுக்குத்
தற்கொலை ஒன்றே கழுவாய் ஆகும்'

என்று கருத்துத் தெரிவிக்கிறார் துக்காராம்.

விஷ்ணுவின்பால் பக்தி செலுத்துபவன் வைணவன்; தாழ்ந்த குலத்தில் பிறந்து விஷ்ணுவின்பால் பக்தி செலுத்தும் ஒரு வைணவனைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது,

'ஒரு தீண்டத்தகாதவனுடைய தாய்
புனிதத்திற்கும், போற்றுதலுக்கும் உரியவள்—
அவன் ஒரு விஷ்ணு பக்தனுயிருந்தால்;
அவனது கால்வழி மரபு இரு நிலைகளிலும் தூய்மையானது,
தாழ்ந்த குலத்தினனுயினும், அவனே உண்மையான
பிராமணன்'

என்கிறுர்.

கடவுளால் படைக்கப்பெற்றது எதுவும் தூய்மையற்றது என்று சொல்வதற்கில்லை என்னும் கோட்பாட்டைக் கொண்டவர் துக்காராம். தனிமனிதனுக்குரிய தூய்மையின் இன்றியமை யாமையை வலியுறுத்தும்போது, தன்னைப் பின்பற்றும் பக்தர் களின் மனத்தில் இருந்து சாதிபற்றிப் பதிந்திருந்த மனோபாவங் களையெல்லாம் அகற்ற அரும்பாடுபட்டார். மக்களாய்ப் பிறந்த எல்லாரும் எண்ணத்திலும் செயலிலும் தூயவர்களாய் மாறினுல், தூய்மைச் செல்வமானது எங்கும் சம அளவில் பரவி நிற்கும் என்றுர் துக்காராம்.

தாழ்ந்த குலத்தில் பிறந்த, மிகவும் கூர்த்த மதிவாய்ந்த வியப்புக்குரிய பெரியவர்களைக்கூட, பிறந்த குலத்தைக் காரணமாக வைத்துக்கொண்டு, அத்தகைய பெரியார்களைப் பிராமணர்கள் தாழ்வாக நினைத்துச் சிறுமைப்படுத்தினர். இதன் விளைவால் எழுந்த போக்கு, மக்கள் உள்ளத்தில் எதிர்காலத்தின்மீது நம்பிக்கையற்றுப்போன பிடிப்பில்லாத ஒரு நிலையைப் பரப்பியது; தாழ்ந்த குலத்தில் பிறந்துவிட்ட அத்தகைய இந்தியப் பெரியார் களுக்காக வாதிடுபவராகவும், அவர்களை ஆதரித்து வழக்காடுபவ ராகவும், அவர்களைக் காக்கும் பாசறையாகவும் துக்காராம் விளங் கினுர்.

எங்கே கடவுள் தொண்டர்கள் தோன்றினுர்களோ,
தோன்றிய அத் தொண்டர்களின் குடும்பமும் புனிதமானது;
அவர்கள் பிறந்த நாடும் புனிதமானது;
(—சாதிப் பிரிவினைக்கு அங்கு இடமில்லை—)
பிறந்த சாதிப் பெருமையைக் கொண்டே
புனிதம் பெற்றவர் எவராவது உண்டா?
அறியக் கூறுவீர்! அகிலத்தீர்!
தீண்டத்தகாத சாதியினர்,
பக்தியின் துணைகொண்டு—

சம்சார வாழ்வெனும் சாகரம் கடந்தார்;
அவர்களின் வீறுர்ந்த புகழை விளம்புகின்றன
புராணங்கள்கூட;

கோரா—ஒரு குயவர்,
ரவிதாசு—செருப்புத் தைக்குந் தொழிலர்,
கபீர்—ஒரு 'மோமின்',
லத்தீப்—ஒரு இசுலாமியர்—முசல்மான்,
சேனு—ஓர் அம்பட்டன், முடிவெட்டுந் தொழிலர்,

இவர்கள் அனைவரும் விஷ்ணு பக்தர்கள்.
கன்ஹோபத்ரா—செதுக்குந் தொழிலர், சிற்பியன்றே;

சோகமேளாவும் வங்காவும்—மஹர் என்னும் தீண்டத்தகாத சாதியர்தாமே.

ஜானி—யார்?—நாமதேவரின் வேலைக்காரி; அவளது கடவுள் நம்பிக்கைதான் எவ்வளவு பெருமைக்குரியது! சிறந்தது! விட்டல் பெருமான் அவளோடு சேர்ந்துண்ணுமளவிற்குச் சிறந்து நின்ற பக்தியல்லவா, அவளது பக்தி.

விஷ்ணு பக்தர்களுக்குள்ளே சாதியால் உண்டாகும்
பேதங்கள் கிடையா—
இதுதான் வேதத்தின் தீர்ப்புமாகும்;
நாரணன் நெறியில் நால்வருண பேதத்திற்கு இடமில்லை
இது நான்குமறைத் தீர்ப்புமாகும்.

இதற்கு மாறாக 'உயர் குலத்தில்' பிறந்தோர் எப்படி ஒழுகினர்?

பிராமணர்கள் தமக்குரிய கடமையைக் கைவிட்டனர்
பெரும் பொய்யர்களாய் மாறினர்
பிராமணனே,
தீண்டத்தகாத 'மாங்' இனப் பெண்ணோடு
சரசத்திற்காகச் சச்சரவு செய்துகொண்டிருந்தான்—
அதாவது, காலநியதியோடு கூடிய கலவிக்காகக் காத்துக்
கிடந்தான்.[25]

அவர்கள் சமூகத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தனர்; நேர்மையற்ற முறையில் மக்களுக்குத் தொல்லை கொடுத்தனர். இரக்கமில்லா அன்றைய ஆட்சியாளர்களின் தீரா அடிமைகள்; எவ்விதத் தவறுக்கும் இரக்கமின்றித் தாக்குறும் அடிமைகள்.

[25] பிராமணர்கள் மத்தியில் உலவும் மூடநம்பிக்கையைப் பற்றியது. 'மாங்' என்றழைக்கப் பெறும் தீண்டத்தகாத வகுப்பைச் சேர்ந்த பெண்ணொருத்தியிடம், கிரஹண காலங்களில் உடலுறவு கொள்பவன் இலட்சாதிபதியாவான் என்பதாகும்.

புனித சமயச் சடங்குகளான
நீராடல், வழிபாடு, நாமம் நவின்று பூசனை புரிதல்—
அனைத்தையும் விற்பனை செய்பவன்.
தொழில்களிலெல்லாம் ஈனமான தொழில்
பணம்கொடுத்து வாங்கும் வட்டித் தொழில்;
என்றாலும், இந்தக் கொடிய காலத்தில்,
அவ்வட்டித் தொழிலும் அவர்களால் செய்யப் பெற்றது.

இத்தகைய பல பாடல்களில் பிராமணீயத்தின் பரிவாரங்கள் அனைத்தையுமே சாடுகிறார். பிராமணீயத்தின்பால் தான் கண்ட பிறப்பால் உயர்வு கருதுதல், கண்மூடித்தனமான நம்பிக்கைகள், கிளிப்பிள்ளைபோல் வேதத்தை ஒப்புவித்தல், மரபையே போற்றி வாழும் வாழ்க்கை நிலைகள், சடங்குகள், பொருள் தெரியாமல் கூறியதையே கூறிவருதல், தன் அனுபவமற்ற வெறும் நூல் படிப்புகள் ஆகிய இவற்றையெல்லாம் துக்காராம் கடுமையாகக் கண்டித்தார். மனிதனது நடத்தையை வைத்தே மதிப்புத் தந்தார்; நன்னடத்தைகொண்டே ஒருவரை அறியவேண்டும் என்றார்; பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றார்; செய்தொழில் சிறப்புக் கொண்டே ஒருவரைக் கண்டுணரவேண்டும் என்றார்; துக்காராமின் கருத்துப்படி, மனிதனைச் சோதனைசெய்து தெளிவதற்கு உரிய கருவி, அவனது நன்னடத்தையே ஆகும்.

பிராமணர்களை மட்டும் துக்காராம் கண்டித்தார் இல்லை; பொதுமக்களையும் அவர் விட்டுவிடவில்லை; பிராமணர்களைக் கண்டித்து நகையாடியதுபோலவே, ஏனைய பொதுமக்களிடமிருந்த தீமைகளையெல்லாம் எள்ளி நகையாடினார். அவர்களிடமிருந்த தீமைகளை அங்கதப் பாங்கோடு சாடினார்; வட்டிக்குப் பணம் கொடுத்து வாங்குபவரையும், போலியான சமயத் தொண்டர்களையும், குருமார்களையும், சந்நியாசிகளையும், 'பைராகிகளையும்', நாதர்களையும், மலாங்கர்களையும், ஜங்கமர்களையும், பக்கீர்களையும் மற்றும் வறுமைச் சமுதாயத்தில் அட்டைபோல் மக்களை உறிஞ்சி வாழும் கூட்டத்தினரையும் துக்காராம் கண்டித்தார். பொது மக்கள்பால் அவருக்கிருந்த கருணையே அவரை இவ்வாறெல்லாம் பேசச்செய்தது. இரக்கமாகிய சுமையை அவரது இதயம் தாங்க மாட்டாமல் தாங்கிக்கொண்டிருந்ததே இதற்கெல்லாம் காரணமாகும். கடுமையான அங்கதப் பாங்கோடு கண்டித்துக் கூறிய இடங்களில்கூட, அவருடைய அன்புநிறைந்த இதயத் துடிப்பை நாம் உணர்கிறோம். சாதாரண எளிய மக்களுக்குத் தொடர்பாக இருக்கும் அனைத்தையும் அணுக்கமாக வந்து, கண்டு தெளிந்த சமய ஞானியாவார் துக்காராம். அவர் பெரிய ஞானியாக இருந்த போதிலும், பொதுமக்களுக்கு எட்டாத உயரத்தில் அவர் இருக்க

வில்லை. பொதுமக்களைப் பாதிக்கும் பிரச்சனைகளைப் பரிவுடன் அணுகிய அணுக்கத் தொண்டர்; ஏழை எளியவர்களுக்காக இரக்கம் காட்டியவர். சமய உலகினைச் சார்ந்த ஒரு மனிதன் (திருத்தொண்டன்) எப்படியிருக்கவேண்டும் என்று ஒரு பாடலில் கூறியுள்ளார்:

'யார் ஒருவர் சமுதாயநிலையில்
அடக்கிவைக்கப் பட்டிருப்பவர்களையும் ஆகூழில்லாதவர்களையும்
அரவணைத்துக் கொள்கிறாரோ—அவரே உண்மையான திருத்தொண்டர்;
அவரிடம் கடவுளைக் காணலாம்;
அவரிடம் கடவுள் காணப்படுகிறார்.
உள்ளும் புறமும் வெண்ணெய் போன்ற மென்மையுடையவர்
அதாவது கனிந்த பாங்கினர்; நல்ல மனிதரின் பாங்கும் அத்தகையதே'

என்கிறார் துக்காராம். அருள்கனிந்த திருத்தொண்டர்களைப்பற்றி அழகுடன் வடித்துக் காட்டிய துக்காராம், சமுதாயத்தில் அட்டை போல உறிஞ்சி மக்களைச் சுரண்டிவாழும் பொல்லாதவர்களை அனல் கக்கும் சொற்களால் பழித்தும் பேசுகிறார். சுரண்டி வாழும் போலித் துறவியைச் சுடுசொற்களால் தாக்கியுள்ளதை அவர் பாசுரங்களில் காணலாம்:

ஆசையாம் தளைகளை அறுத்துத் தள்ளாமல்
தோற்றத்தில் மட்டுமே துறவிக் கோலம்;
தலையை மழித்துக் கொள்ளல்,
மேலெழுந்த வாரியாக நடந்துகொள்ளல்,
உண்மையான பக்தியை அவன் ஒரு நாளும் அடைய முடியாது;
உரனென்னுந் தோட்டியால் ஓரைந்தும் காவாமல்,
புலனிச்சையைத் தீவிரமாக அடக்குதற்கு மாறாக,
அகங்காரம் உள்ளே அனன்று எழுகிறது;
தான் என்ற எண்ணம் தலைதூக்கி உறுமுகிறது;
தன்னல வாழ்வைத் தவிர வேறொன்றுமில்லையென்று
இயங்கும் அவ்வியல்பு மனிதனைத் தவிர்த்தலே நன்று;
அன்னார் ஒப்பனை முழுவதும் உண்மையல்லாதது;
(பசுத்தோல் போர்த்த புலிபோலதாகும்).
பொய்த் தோற்றத்தால் பூண்ட சந்நியாசம்
மக்களை ஏமாற்றி மயக்கி வாழ்வதற்கே
நன்மையாய் அமையும் நானிலத்தில்; —என்று
துக்கா சொல்கிறார் துகளறு மொழியால்.

புலனுகர்ச்சிக்கான பொருள்களை ஒரேயடியாகக் கைகழுவி விடுதலைக் காட்டிலும், அவற்றை ஏற்றுத் தழுவுதல் எவ்வகையிலும் நல்லதன்று; இருவகைச் செயல்களுமே மனிதனை அழியா மெய்ம்மையிடத்து அழைத்துச் செல்லா. ஒன்று மற்றொன்றிடமே மாற்றி மாற்றி அழைத்துச் செல்லும் என்பது துக்காராமின் கருத்தாகும்.

இந்தக் குருநிலை என்பதும் கண்டிக்கத் தக்கதே.
சீடன் நிலை என்பதும் கண்டிக்கத்தக்கதே
துக்கா சொல்கிறார்,
அத்தகைய குருவும் சீடனும்,
இருவரும் நரகத்திற்குப் போகின்றனர்.

தனிநிலை விரும்பும் சமயக் குழுவினருக்கு எதிராகத் துக்காராம் பேசிய வன்சொற்கள் மிகவும் கூர்மையானவை; அவ்வாறு அவர்களை அவர் சாடியதற்குக் காரணம் உண்டு; அதாவது, அவர்கள் வாழ்க்கையில் போலித்தனம் மிளிர்ந்தது; மேற்போக்கான ஒரு வாழ்க்கையையே அவர்கள் நடத்தினர். அவலத்தில் இன்பம் காண்பவர்களாகவும் கொடுவெறிக் காமுகர்களாகவும் வாழ்ந்தனர். உண்மையை உளப்பூர்வமாக நம்பிய துக்காராமிற்கு அப்பசுத் தோல் போர்த்த புலிகளின் வஞ்சக வாழ்க்கை கட்டோடு பிடிக்கவில்லை; ஆகவே, கடுமையான சொற்களால் அவர்களைக் கண்டித்தார்; அத்தகையோரிடம் கடுகளவும் கருணை காட்டக்கூடாது என்றே துக்காராம் கூறினர். அவர்களைப் பார்த்துத் துக்காராம்,

உடம்பைப் போர்த்தியிருக்கும் புறத்தோலைக் கழுவுவதைத் தவிர
புனித இடங்களுக்குப் போவதன்மூலம்
என்ன செய்திருக்கிறீர்கள் நீங்கள்?—

என்கிறார்.

மேலும், புறச் சடங்குகள் போதா என்றும், தன்னுர்ந்த அனுபவமே தகவுடையதென்றும் கூறவந்த இடத்தில், 'உள்ளார்ந்த அனுபவம் ஒன்றுமில்லாதபோது எல்லாமே வீண்'— என்கிறார் துக்காராம். வேலை செய்யாமல் சோம்பேறியாக இருந்து கொண்டு பிழைப்பு நடத்துபவர்களையும், திருவோட்டை நம்பிப் பிழைப்பு நடத்துபவர்களையும் மிக இழிவான சொற்களால் ஏசுகிறார்.

'அன்னார் முகத்தில் காறி உமிழுங்கள்'—

என்றும்

அல்லது,
பிச்சைப் பாத்திரம் (ஏந்துதல்) வெட்கக்கேடானது அவ்வாறு
இரந்துண்டு வாழ்வது கண்டிக்கத்தக்கது—

என்றும் துக்காராம் அவர்களை நோக்கி வசை பொழிகிறார்.

அவரது சொந்த வரகரி நெறியாளர்களுக்குப் பல கட்டளை களைப் பிறப்பித்துள்ளார்; அவ்வரகரி நெறியாளர்கள் பக்திப் பாடல்களைப் பாடிச் செல்லும் காலத்து எவ்வெவ்வாறெல்லாம் நடந்துகொள்ளவேண்டுமென்று பல கட்டளைகளைப் பிறப்பித்துள் ளார்:

'கீர்த்தனைகள் பாடுமிடத்தில் வழங்கும் உணவை
ஏற்றுக்கொள்ளாதீர்;
ஏற்றுக்கொள்பவர் எவரோ, அவரும்;
காசுகளைக் கொடுப்பவர் எவரோ,—அவரும்;—
இருவருமே நரகத்திற்குச் செல்கின்றனர்'

என்கிறார்.

சோம்பேறியாக இருந்துகொண்டு பிச்சையெடுத்து உண்பவர் களை இழிந்த சொற்களால் தாக்கியதுபோலவே, இந்து மதத் தினருக்குரிய சிறு தெய்வங்களாயுள்ள ஆண் தெய்வங்களையும் பெண் தெய்வங்களையும் ஒருசேரக் கண்டித்தார்:

''அவைகளைத் தெய்வம் என்று எவன் அழைக்கிறானோ அவன்
முட்டாள்''

என்று பழித்துரைத்தார்.

கடுமையாகவும் இழித்துக் கூறியும் வந்தபோதிலும், துக்காராமின் சமுதாயத்தைப்பற்றிய மதிப்பீடானது, சகிக்க முடியாத அளவை எட்டிவிடவில்லை; பழிவாங்கும் நிலைக்கு இழுத்துச் சென்றுவிடவில்லை; அவரது சமுதாயம்பற்றிய காரமான பதில்கள் சமூகத்தில் நிலவிய எல்லாவிதமான தீமைகளையும் சாடும் நிலையில் இருந்தன; அவரது சமுதாய மதிப்பீடு நடுநிலையான போக்கில் அமைந்திருந்தது; ஒருதலைச் சார்பான போக்கு அவரிடம் எப்போதும் இல்லை. தன்னிலை விளக்கமாகத் துக்காராம் அவர்கள்,

''உங்கள் வாழ்க்கைப் பாதைக்கு
ஒளியூட்டவே நான் வந்தேன்;
மேலும், நடுவுநிலை பிறழாது
நன்மை தீமைகளை நாடித் தீர்ப்பளிக்கவே
நான் வந்தேன்''

எனப் பறைசாற்றுகிறார்.

''ஒருவருக்கொருவர் நாம் உதவவேண்டும்; மேலும்,
நேரான நெறியில் நாம் நடைபோடவேண்டும்''

என, அறிவிக்கிறார்.

சமய உட்பிரிவுகள் அனைத்திலுமுள்ள, குருட்டுப் பிடிவாதங் களையும் வெறிப் போக்குகளையும் பாசாங்குகளையும் படிற்றொழுக்

கங்களையும் தகர்த்து எறிவதில் துக்காராமின் பணி, ஒரு சாதனை யாக அமைந்தது. முழுக்க முழுக்கச் சமுதாயத்தின் கடைசி வகுப்பினைச் சார்ந்த மக்களுள் தானும் ஒருவன் என்ற நிலையில், தன்னுடைய கருத்துகளையெல்லாம் அந்த வர்க்கத்துக்குரிய மொழியிலேயே வெளிப்படுத்தினார்; அதனால், அவர் எதிர்பார்த் ததைவிட மேலான பலன் அவருக்குக் கிடைத்தது; அச்சமில்லாத திருத்தொண்டருக்கேயுரிய முறையில், உறுதியான குரலில் தமது இயல்பினைப் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார்:

கடவுளின் ஊழியர்களாகிய நாங்கள்
மெழுகைக் காட்டிலும் மென்மையும் உருக்கமும்
வாய்ந்தவர்கள்;
என்றாலும், நாங்கள்
இடியேற்றைக் காட்டிலும் இறுகிய தன்மை வாய்ந்தவர்கள்;
யாம் மகிழ்வுற்றால்,
குண்டித்துணியையும் கொடுத்துவிடுவோம்;
ஆனால், போக்கிரி தலைமிசைக் கோல்கொண்டு தட்டுவோம்;
நாங்கள்,
பெற்றோரைக் காட்டிலும் மிக்க பாசமுடையவராய் இருக்கக்
கூடும்,
ஆனால், நாசவேலை செய்வதாயின்
எதிரியுங்கூட எமக்கு இணையாக மாட்டார்;
எங்களோடு ஒப்பிடுவதாயின்,
அமுதத்தின் இனிமைதான் எம்மாத்திரம்?
நஞ்சின் கடுமைதான் எம்மாத்திரம்?
நாங்கள் யாவரும் இனியர்,
எம்மிடமிருந்து எதிர்நோக்கும்போது
யாம் ஒவ்வொருவரின்
அடக்கமுடியாத ஆசையை நிறைவு செய்கிறோம்.[26]

தன் காலத்தில் நிலவிய அரசியல் நிலைகுறித்து ஆழ்ந்த அக்கறை காட்டாதபோதிலும், எந்தக் காலத்திலும் தீவிரமாகத்

---

[26] ம2 மேணுஹூன் ஆம்ஹீ விஷ்ணுதாஸ் ।
கடீ2ண வஜ்ராஸ் மேதூ ஜஸே ॥
மலேதரோ தேஊ காண்டீ3சீ ஸங்கோடீ ।
நாட்யாலாசே காடீ3 தேஊ மாதீ2ர ॥
மாய பாபாஹூணீ பஹூ மாயாவந்த் ।
கரூ க4ாதபாத சத்ரு ஹூணீ ॥
அம்ருத தே காய கோட் அம்ஹாபுடே4 ।
ஸிஷதே ஸாபுடே3 கடூ3 கிதீ ॥
துகாம்ஹணே ஆம்ஹீ அவதேசி கோட்3 ।
ஜ்யாசே புரே கோட்3 த்யாசே பரீ ।

தன்னை அரசியலில் ஈடுபடுத்திக்கொள்ளாதபோதிலும், தான் பிறந்த மாவட்டத்தில் தோற்றமெடுத்து, வீர சிவாஜியின் கிளர்ச்சியில் உருப்பெற்ற தேசிய உணர்ச்சியைத் துக்காராம் ஊக்குவித்தார். மக்களைச் செயலற்றதாக ஆக்கக்கூடிய அடக்க ஒடுக்கமான எண்ணங்களுக்கு எதிரிடையாக இருந்து செயல்பட்ட திறத்தினை அவரது பல பாடல்கள் காட்டுகின்றன. கொடிய சக்திகளைத் தடுத்து நிறுத்துவதற்குத் தேவைப்படுபவற்றை மக்களுக்குப் போதித்தார். முள்ளை முள்ளால் எடு என்பதுபோல், ''தீமையைத் தடுக்கத் தீமையைத் தேர்ந்தெடு'' என்கிறார் துக்காராம். அவர் வெளிப்படுத்தியுள்ள அத்தகைய கருத்துகள், மக்கள் மத்தியில் தீவிரமான எதிர்ப்புணர்ச்சியைத் தூண்டிவிட்டவர் அவர் என்பதற்குச் சான்றாக நிற்கின்றன. ''பைக் அபங்'' என்ற பெயரில் அவர் பாடிய பாடல் வரிசை; அப்பாடல்கள் போர் வீரர்களுக்காக உள்ள போர்ப் பாடல்கள் போன்றவை; அவ்வகைப் பாடல்களை அவர் நேரிடையாகக் கிராம மக்களை நோக்கிப் பாடியுள்ளார்; அப்பாடல்களில் கிராம மக்கள் மேற்கொள்ளவேண்டிய தியாகத்தின் தேவை குறித்தும், உண்மை ஊழியத்தின் கட்டாயத் தேவை குறித்தும் பாடியுள்ளார். சிவாஜியின் எதிரிகள் மக்களைப் படுகொலை செய்தபோதும், நாட்டில் அட்டூழியங்கள் நிகழ்த்தியபோதும், அவற்றைச் சகித்துக்கொள்ள முடியாமல், அவற்றிற்கான தன் எதிர்ப்புகளையெல்லாம் மிக்க துயரத்தோடு பாடல்களில் பதிவு செய்துள்ளார்:

'அக்கொடுமைகளைப் பார்த்துக்கொண்டு
தாங்கிக்கொள்வது என்பது என்னால் முடியாதது;
அத்தகையதாகும் இத்துன்ப நிகழ்ச்சி . . .
அவர்கள்படும் வேதனை குறித்து என் இதயம் வருந்துகிறது;
என்னுடைய பக்தியைத் தாழ்வுபடுத்துகிறீர்கள்,
இறைவா! வாழ்ந்துகொண்டிருப்பது வெட்கக்கேடாகும்'

என்று துக்கா வருந்துகிறார்.

துக்காராம் காலத்தில் நாட்டில் படையெடுப்பும் தாக்குதல்களும் நிகழ்ந்தவண்ணம் இருந்தன. அத்தகைய படையெடுப்பும் தாக்குதல்களும் நிகழ்ந்த காலங்களில் மக்கள் அவதிப்பட்டனர். அத்தகைய படையெடுப்பும் அதன் விளைவால் ஏற்பட்ட மக்கள் அவதியும் துக்காராமைக் கடுமையாகப் பாதித்தன. மக்கள் தங்களுக்குரிய தனித்தன்மையை எப்படிக் காப்பாற்றிக்கொள்வது என்றும், பொது நன்மைக்காக ஒன்றுபட்டு நிற்பது குறித்தும், மக்கள் இணைந்து செயலாற்றுவது குறித்தும் துக்காராம் மக்களுக்கு எடுத்து விளக்கினார். போர்க் காலத்திற்கேற்ற வீர உணர்ச்சியை மக்களிடம் ஊக்குவித்தார். மன்னருக்காக மக்கள்

தம்மையே அழித்துக்கொண்டு செய்யவேண்டிய தியாகத்தின் இன்றியமையாமை குறித்தும் மக்களுக்கு எடுத்துக்கூறி உற்சாக மூட்டினுர்; மக்களை ஊக்கப்படுத்தினுர். அவர் குறிப்பிட்டுப் பேசியுள்ள மன்னர் வீர சிவாஜியாக இருக்கக்கூடும்:

'தம் மக்களைக் காவல் செய்து காப்பவன் எவனே,
குற்றமிலனுய்க் குடிசெய்து வாழ்பவன் எவனே,
பகைவர்களை வேரறுப்பவன் எவனே,
அவனே போர்வீரன் ஆவான்.
தான் பிறந்த நாடு
தனித்துயரில் தவித்து நிற்கும்பொழுது,
போர்வீரன் தன் வாழ்க்கையைத் தியாகம் செய்தே ஆக வேண்டும்.

போர்க்களத்தில் இடைவிடாது
துப்பாக்கி ரவைகளும் அம்புகளும் வெடிகுண்டுகளும்
பொழிந்துகொண்டிருக்கும் பொழுது,
போர்வீரன் களத்தை நோக்கி முன்னேறியாகவேண்டும்;
அச்செயலே அவனுக்குப் புகழ் ஒளி நல்குவதாகும்;
பெருமை சேர்ப்பதாகும்'

என்பன போன்ற பல கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

5. முடிவுரை

மராத்தி மொழி பேசும் மக்களின் சமயம்பற்றிய சிந்தனைகளிலும் சமுதாயம்பற்றிய எண்ணங்களிலும், மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலாகவே, துக்காராம் ஆழமான செல்வாக்கை ஏற்படுத்தியிருந்தார். தூரமான கிராமங்களில் தங்கிவாழும் கிராம மக்களுக்கும் அணுக்கமாய் இருக்கக்கூடிய எல்லைக்குப் பக்தியைக் கொண்டு வந்து நிறுத்தியிருந்தார். அவருடைய பக்தி நெறியின் பாதிப்பு எல்லாரிடமும் ஏற்பட்டிருந்தது. அவருடைய பக்திப் பாடல்களுக்குள்ள மட்டுமீறிய செல்வாக்கானது, அப்பாடல்களின் தகுதிக்கு மீறியவை என்று சொல்லமுடியாது. எல்லாரையும் திணற அடிக்கக்கூடிய அளவிற்குச் செல்வாக்குப் பெற்றவை அவரது படைப்புகள். ஏறத்தாழ ஒவ்வொரு தலைமுறையிலும் அவரது பாடல்கள் பலராலும் படிக்கப்பெற்றன; பலர் அவற்றைப் பெயர்த்து எழுதிவைத்துக்கொண்டனர்; தலைமுறைதோறும் மக்கள் அவற்றைப் பாடி அனுபவித்துவந்தனர்; அப்பாடல்களின் செல்வாக்கு சமயச்சார்பான வட்டங்களுக்குள்ளும், எழுத்தறிவில்லாத பக்தர்களுக்குள்ளும் மட்டும் அடங்கிக் கட்டுப்பட்டுக் கிடக்கவில்லை. அவை தோன்றிய நாள்தொட்டுத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் நூற்றாண்டுகளில், அந்தப் பாடல்களின் செல்வாக்கு எங்கும் பரவியது. எல்லாவகையான உரைநடைகளிலும் கவிதைகளிலும் அவற்றின் செல்வாக்கு காலங்காலமாக இடம் பெற்று வந்துள்ளது. துக்காராம் காலத்துக்குப் பின்பு எழுதப் பெற்ற பெரும்பான்மையான கவிதைகளில் அவரது பாடல்களின் செல்வாக்கு ஊடுருவியுள்ளது. அநேகமாக எல்லாப் பெரும் மராத்திக் கவிஞர்களும், துக்காராமிற்குத் தாங்கள் எந்த அளவிற்குக் கடன்பட்டுள்ளோம் என்பதனைத் தங்கள் எழுத்துகளில் வெளிப்படுத்தியுள்ளனர். அவர் தோற்றுவித்த கவிதை மரபால் பாதிப்புப்பெறாத ஒரு கவிஞரை மராத்தி இலக்கிய உலகில் காண்பது அரிதாகும்; அந்த அளவிற்குத் துக்காராம் செல்வாக்கு மிக்க கவிஞராக இருந்தார்.

மிகமிகத் தீவிரத்தன்மை கொண்ட உணர்ச்சி நிறைந்ததும், தனக்கே உரிய உணர்ச்சியனுபவம் வாய்ந்ததும், ஆன்மீகத்தன்மை வாய்ந்ததுமான மனப்போராட்டங்களையும், உணர்வுவயப்பட்ட மன உளைச்சல்களையும், ஆன்மீக அனுபவங்களையும் துக்காராம் அவர்கள் வியப்பையும் அதிர்ச்சியையும் தரத்தக்க உவம உருவக

அணிகளில் கற்பனே நயம் கொழிக்க வெளிப்படுத்தியுள்ளார். அவர் தனது பாடல்களில் ஆண்டிருக்கும் உவம உருவக அணிகள் எல்லாம் சாதாரண வாழ்க்கையிலிருந்து எடுக்கப்பெற்றவைதாம். அவர் உணர்ந்த உணர்வுகள் எல்லாம் பொருத்தமான கலேவடிவங்களேப் பூண்டு, பேச்சு வழக்கிலுள்ள சந்தங்களே ஏற்று, 'அபங்' என்று அழைக்கப்பெறும் நெகிழ்ச்சிமிக்க வடிவத்தில் கவிதைகளாக மலர்ந்தன. அவர் உணர்ந்த உணர்வுகள் அவர் கவிதைகளில் நாடகப் பாங்கில் வெளிப்பட்டன; அப்பாடல்கள் குறிப்பிடத்தக்க வடிவ அமைப்புக் கொண்டவை. அவர் பாடிய பக்திப் பாடல் ஒன்றில் நான்கு அல்லது ஐந்து அடிகள் இருக்கும். ஒவ்வொரு அடியிலும், அதாவது அடிதோறும், எட்டு எட்டுச் சீர்களோ ஆறு ஆறு சீர்களோ அளவொத்துவரும். அடியின் நடுப்பகுதியில் இடை நிறுத்தம் இருக்கும். இவ்வாறு பாடல் வரியில் இடைநிறுத்தம் பயின்று அடிதோறும் ஆறு ஆறு சீர்களோ எட்டு எட்டுச் சீர்களோ அளவொத்து வந்து, நான்கு அல்லது ஐந்து அடிகளில் அமைந்து, சந்த அமைதி பெற்றுவரும் பண்ணுர்ந்த பாசுரங்களே துக்காராம் பாடிய பாடல்களாகும். ஒவ்வொரு நாள் காலேயிலும் மாலேயிலும் கிராம மக்கள் அவருடைய இனிமையான பாடல்களேப் பாடுகின்றனர். கற்றுவல்ல அறிஞர்கள் தங்களுடைய விவாதங்களுக்குப் பக்கபலமாக இருக்க துக்காராமின் மொழிகளே எடுத்தாளுகின்றனர். சொற்பொழிவாளர்கள் தங்களுடைய பேச்சு சிறந்து விளங்குவதற்காக, துக்காராமின் பாடல் வரிகளே அடிக்கடி பயன்படுத்துகின்றனர்; நாட்டுப்புறத்து உழவர் குல மக்களேக் கவருவதற்கு, அரசியல்வாதிகள் அடிக்கடி அவர் வரிகளே எடுத்தாளுகின்றனர். துக்காராமின் இலக்கியப் படைப்புகளில் பயின்றுவரும் தொடர்கள், மராத்திய நாவல்கள், நாடகங்கள் பலவற்றிற்குத் தலேப்புகளாகியுள்ளன. மராத்தி இலக்கியங்கள் பல்வேறு வகைகளில் வளமைபெறத் துக்காராமின் இலக்கியப் படைப்புகள் காரணமாகின; துக்காராமின் செல்வாக்கு இல்லாதிருப்பின் மராத்தி மொழியே வறுமையுற்று இருக்கும் எனலாம். ஒவ்வொரு வகை மனிதனுக்கும் அவனவனது மனநிலேக்கு ஏற்ப எடுத்தாளக் கூடிய மிகப் பொருத்தமான பழமொழி போன்ற சொற்றொடர்களேத் துக்காராம் தந்துதவியிருக்கிருர். அவருடைய படைப்பு எல்லாருடைய கவனத்தையும் மிகப் பெரிய அளவில் ஈர்த்துத் தன்வசப்படுத்தியதற்கான இரகசியமே, அவர் பேச்சு வழக்கிலுள்ள சொற்களேயும் சொற்றொடர்களேயும் தம் கவிதைகளுக்குப் பயன்படுத்திக்கொண்டதுதான்; நாம் அறிந்த அளவில், அவர் உலக நடைமுறையறிந்து ஒழுகிய பாங்கினர்; செயல்முறைக்கு ஒத்த ஒரு நடைமுறையாளர்,

துக்காராம் ஆறு குழந்தைகளுக்குத் தந்தை; ஒரு கூட்டுக் குடும்பத்தின் தலைவன்; தன் சொந்த சாதியில் உள்ள ஆடவர்களுக்கே, தன்னுடைய குலமுறைக்கு ஏற்ற மரபிலே, தன் பெண் மக்களைத் திருமணம் செய்து கொடுத்தவர். அவர் வாழ்ந்த வாழ்க்கையும் சாதாரணமான ஒரு மனிதன் வாழ்ந்த வாழ்க்கையை மிகமிக ஒத்தே இருந்தது. மரபாகப் பயன்படுத்திவரும் சமக்கிருத உவமைகளையும் உருவகங்களையும் அவர் அடிக்கடி எடுத்துப் பயன்படுத்தியபோதிலும், ஒரு புதிய சொற்றொடரை உண்டாக்க முனையும்பொழுது மக்களிடையே வழங்கிய எளிய சொற்களையே அவர் கவனமாகத் தேர்வு செய்தார்; சொற்கள் செறிவுடையதாக இருக்கவேண்டும் என்ற போக்கினையும் அவரிடம் காண்கிறோம்; பக்திநெறியை விளக்கிக் காட்டவந்த இடங்களில் சுற்றி வளைத்துப் பேசுவதில்லை; எளிமையான முறையில் வெளியிட்டுப் பேசுவதை மேற்கொண்டார்; அவ்வாறு வெளியிட்டுப் பேசும் வரிகளில் நிலவுலகில் நிகழக்கூடிய, மனித வாழ்க்கைக்குத் தொடர்பான கணக்கற்ற உவமைகளையும் உருவகங்களையும் சேர்த்தே வெளியிட்டார்; வாழ்க்கைக்குத் தொடர்பானவற்றிலிருந்து வெளியிட்டுப் பேசியதால், எழுத்தறிவில்லாத மக்களுங்கூட அவர் கவிதையில் மனங்கலந்து ஈடுபட முடிந்தது. தங்கள் வாழ்க்கையே அத்தகைய பாடல்களில் எதிரொலிப்பதாக உணர்ந்தனர். தங்களது சொந்த அனுபவங்களின் எதிரொலியை அவற்றில் கேட்டதால், அவர்கள் ஈடுபட்டு உணரும் நிலையை அடைந்தனர். துக்காராம் பாடல்களைப் படிக்கும்போது, அவற்றைக் கற்போர் அனைவரும் அவரது வளமார்ந்த கலையுலகில் பங்கு கொள்பவராக மாறிவிடுகின்றனர். படிக்கப் படிக்க அப்பாடல்கள் காட்டும் கலையுலகில் படிந்து தாமும் அவ்வுலகினராகவே மாறிவிடுகின்றனர்.

பாடல்கள் செய்யும்பொழுது, துக்காராம் எந்த மொழியைத் தன் பாடலுக்கான கருவியாகப் பயன்படுத்தினாரோ, அந்த மொழியாகிய கருவியின் ஆற்றலைத் தெளிவாகவே அறிந்திருந்தார்.

சொற்களாம் செல்வத்தை நாம் உடையராயிருக்கின்றோம்
சொற்கள் நம் செல்வம்
அச்சொற்களாம் ஆயுதங்கொண்டு நாம் போரிடவேண்டும்;
நம் வாழ்வின் உயிர்மூச்சு, சொற்கள்;
மக்களிடையே சொற்களாம் செல்வத்தைப்
பகிர்ந்தளிக்க வேண்டும் நாம்;
துக்கா சொல்கிறார்: கவனி! ''சொல்''லின் பொருள் கடவுள்,
அந்தச் 'சொல்'லைக் கொண்டு,
நாம் மிக உயர்வாகப் புகழவும் வழிபாடு செய்யவும் வேண்டும்.

எல்லாருக்கும் உரிய பொதுப்படையான பலவகைப்பட்ட வாழ்க்கை நிகழ்ச்சிகளிலிருந்தே, தம் கவிதைகளுக்குரியனவற்றை

அவர் எடுத்திருக்கிறார் என்று கருதுவதற்கு, அவரது படைப்புகளில் நிறைய சான்றுகள் உள்ளன. அவருக்கும் இறைவனுக்குமுள்ள ஐக்கியத்தை விளக்கும் பகுதிகளில், அதாவது, அவர் இறையனுபவத்தோடு ஒன்றி நின்ற பகுதிகளை விளக்கும் பகுதிகளில், அவரது உணர்வின் பழுத்த முதிர்வினையும், அவரது சமய வாழ்வின் கனிவினையும் ஒருங்கே உணரலாம். அவரது பாடல்களில் இடம்பெற்றுள்ள படிமங்களும் உவம உருவக அழகுகளும் தனித்தன்மை வாய்ந்தவை. அவரது சொந்தச் சிந்தனையின் விளைவுகளே அத்தகைய உவம உருவகங்களையும் படிமங்களையும் அவர் பாடல்களில் இடம்பெறச் செய்தன. அவர் படைத்துத் தந்திருக்கும் சில உருக்காட்சிகள்:

எரியூட்டவேண்டிய உடம்பு கிடத்தப்பட்டு இருந்தும் விதைப்பு முடியும்வரை
உடம்பை எரியூட்டாமல் போட்டுவிட்டு நீங்கும்
உழவனைப்போல—
விரைந்தோடி உழலும் விவசாயிபோல

என்பது ஓர் உவமைக் காட்சி.

மணம்முடிந்து புக்ககத்திற்குப் பிரிந்துசெல்லுகின்ற பொழுது,
மணமான சிறுமி, ஆர்வம்மிக, வருத்தம்தோய்ந்த நிலையில்,
பார்வையைப் பின்னோக்கிச் செலுத்துவதுபோல

என்பது மற்றுமோர் உவமைக் காட்சி.

ஓ இறைவா! உனக்காக என் இதயம் எண்ணி எண்ணி ஏங்குகிறது:
தாயைத் தவறவிட்டுவிட்ட குழந்தை ஏங்கித் தவிப்பதுபோல,
நிலைகொள்ளாமல் துடிப்பதுபோல,
அல்லது, நீரின் நீங்கியமீன் கரையிற் கிடந்து துடிப்பதுபோல—
அந்த அளவிற்கு அவர் இதயம் ஏங்கி ஏங்கி இணைகிறது—
துக்காவின் துயரம் அத்தகையது[27]

இது ஒரு காட்சி.

(வரவு செலவுக்) கணக்குகள் ஒத்துவராதபோது,
இரவெல்லாம் விளக்கின்முன் உட்கார்ந்து
கணக்கைச் சரிபார்த்துக் கொண்டிருக்கும்
கணக்குப் பார்ப்பவனைப் (பனியாவைப்) போல

இது ஒருவகை உவமைக் காட்சி.

[27] கன்யா ஸாம் ஸுராஸி ஜாயே மாகே³ பரதோனீ பாஹே ।
தைஸே ஜ⁴ாலே மாஇயா ஜீவா கேவஹா மேடஸீ கேசவா ॥
சுக்லியா மாயே பால ஹுரு ஹுரு பாஹே ।
ஜீவனு வேக³ளீ மாஸோளீ தைஸா துகா தல்மளீ ॥

கடவுளே நீர் கடனாளி,
என்னிடமிருந்து பக்தியாம் கடனை வாங்கியுள்ளாய்,
உன் திருப்பாதங்களை,
அதற்கு ஈடாக என்னிடம் அடமானம் வைத்துள்ளாய்
கடவுளே, அன்பெனும் வட்டியை அளிமின் எமக்கு;
காலந்தாழ்த்தாது, விரைவில் உம்கணக்கைத் தீரும்

என்பது உருவகங்களும் உவமைகளும் கலந்ததொரு சித்திரமாகும்.

தன்மகன் புகழைத் தாய்கேட்பதுபோல்
என்மனநிலையும் அவ்வாறே இருந்திடல் வேண்டும்;
நின் நாமம் பரவும்போதும்,
நின் புகழ் கேட்கும்போதும்

என்பது மற்றுமொரு சித்திரம்.

பெரிய மரங்கள் வெம்மை மிக்க கோடையில் பூத்துப் பொலி
கின்றன, அவற்றிற்கு நீர் வார்த்தது யார்?

என்று கேட்பதுபோல் ஒரு பாடல்.

பயணி ஒருவர்,
இரவுத் தங்கலுக்காக வந்து (பின்)
விடியலில் விட்டு நீங்குவதுபோல

என்று ஓர் உவமைக் காட்சி.

வாய்விட்டுப் பாடி மகிழத்தக்க ஆழ்ந்த உணர்ச்சியும் நடைமுறை வாழ்க்கைக்குரிய விழுமிய கருத்துகளும் ஒருங்கிணைந்த துக்காராமின் கூற்றுகளில், நூற்றுக்கணக்கானவை பழமொழிகளுக்குரிய மதிப்பைப் பெற்றுச் சிறந்தன என்று கூறுவதில் வியப்பொன்றுமில்லை; அந்த அளவிற்கு அவரது பாடல்கள் நடைமுறை வாழ்க்கையின் மெய்ம்மைகளை நயம்படத் தெரிவிக்கும் நல்லாற்றல் பெற்று விளங்கின. நாட்டுப்புறப் பாங்கும் தெளிவும் கற்பனைப் புனைவுகளான படிமங்களும் நிறைந்த அவரது பாடல்கள் நேராக மக்கள் உள்ளங்களில் புகுந்தன; பொதுமக்களின் ஆர்வத்தையும் கற்பனையையும் தூண்டுகின்ற முறையில் ஒள்ளிய உருக்காட்சிகள் அவரது பாடல்களில் இடம் பெற்றிருந்தன.

'கொசுவுக்கு நாம் என்ன செய்யமுடியும்?
நமக்குத் தொந்தரவு கொடுக்கும் தன்மை
அதன் இயற்கையிலேயே அமைந்திருக்கிறது.
காலுக்கு மட்டுமே நல்லது காலுறைகள்.
மூட்டைப் பூச்சிகள் மொய்த்து அலைக்கழிக்கும்
ஒரு படுக்கையில் மகிழ்ச்சி குறித்து நினைப்பது(போல).
ஓர் எறும்பாக மாறுவதன் மூலம் சர்க்கரையை ஒருவர்
தின்னக்கூடும்!

உனக்கு மிக விருப்பமான பொருள்களை நீ அடைய
உருவில் சிறியனாயிரு'

என்கிறார் துக்கா.

ஓ இறைவா!
தாழ்ந்தநிலை (பணிவு) மிகவும் நன்றாம்,
அந்நிலையானது,
ஒருவனது எதிரிகளை ஆற்றல் இழக்கச் செய்கிறது;
ஒருபெரிய வெள்ளம்
மிகப்பெரிய மரங்களை வேரோடு வீழ்த்தியடித்து வாரிக்
கொண்டு செல்லும்பொழுது,
சிறிய நாணல்கள் (அதற்குத்) தப்பிவாழ்கின்றன.[28]

துக்காராம் இவ்வாறு பலவற்றை வெளியிட்டுள்ளார். அவர் வெளியிட்டுள்ளவற்றில் குடும்பப்பாங்கான உணர்வுகள் தொடங்கி, சமயச் சார்புடைய விழுமிய உணர்ச்சிகள் வரை பரந்துகிடக்கின்றன. செய்யுள் வடிவில் கற்போர் நெஞ்சில் நேரிடையாகச் சென்று பதியும் வண்ணம் வெளியிட்டுள்ள திறம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இயல்பாகப் பேசப்பட்டுவரும் பேச்சு என்னும் பட்டியலில் உள்ள கவர்ச்சிமிக்க சந்தங்களைப் பற்றிய தொடர்ந்த கண்டு பிடிப்பை விளக்கிக் காட்டுவதுபோல, அவர் பாடல்கள் அமைந்துள்ளன. நாட்டுப்புறப்பாங்கும் இனிய ஓசைநயமும் வாய்ந்தவை அவரது பாடல்கள்.

நீரில் ஒருமீன் எப்படித் தூங்குகிறது?
அதன் இனத்தில் பிறந்தால் மட்டுமே
அதனை அறிவான் ஒருவன்.[29]

அவரது பாடல்களில் பயின்றுவரும் உவம உருவக அணிவகைகளின் பொதுவான கலைப்பண்புக் கூறுகளில் ஒன்று என்று குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது அவற்றிலுள்ள உண்மைத் தன்மையாகும். கலையுரைத்த கற்பனைகளில் இயல்பாகக் காணக்கிடக்கும் உண்மைக்குப் பொருந்தாத உருவகங்களின் தொகுதியினை அவர் பாடல்களில் காணமுடியாது. இது, அவரதுபடைப்புகளில் காணக் கிடைக்கும் மிகச் சிறந்த கலைப்பண்பாகும். அவரது பாடல்களில் கலைநலம் செறிந்த, உண்மைக்குப் புறம்பாகாத உருவகத் தொகுதிகளை அடிக்கடி படிப்போர் சந்திக்கலாம். உளியும் தெய்வ உருவமும், போரும் வீரமும், காவலும் அரசன்பால் பக்தியும், தங்கமும் அதன் தூய்மையும், சந்தனக்கட்டையும் அதன் கலப்பட

[28] நீசபண் வரே நசலே கோணு சாஹீ த³ாவா ।
மஹாபுரே ஜ⁴ாடே⁶ ஜாதீ தேதே² லவ்ஹாலே ராஹ்தீ ॥

[29] பாண்யாதீல மாஸா ஜே⁴ாப கே⁴கீகைஸா ।
ஜாவே தயாசியா வம்சா தேவ்ஹா கலே ॥

மில்லாத் தூய்மையும், அளவைகளும் நேர்மையான வாணிகமும் முதலியனபற்றிய உருவகத் தொகுதிகள் அவர் பாடல்களில் அடிக்கடி பயின்று வருகின்றன. நேர்மையில் அவருக்குள்ள ஈடு பாட்டையும், தன்னைத்தானே தூய்மை செய்துகொள்ளுகின்ற அவரது போக்கையும், தனக்குள்தானே நடத்திக்கொண்ட கடுமை யான போராட்டங்களையும் அவர் பாடல்களில் அடிக்கடி இடம் பெறும் உருவகத் தொகுதிகள் விளக்கிக் காட்டுகின்றன. துக்காரா முக்கு வாழ்க்கையானது,[30]

இரவும் பகலும் இடைவிடாது நடக்கும் ஒரு சண்டை,
உள்ளுக்குள்ளேயும் வெளியேயும் நடத்தியபோர்,
புறஉலகிலும் மனத்துள்ளும்—
இருவிடத்தும் நடத்திய ஒழிவிலாப் போர்.[31]

துக்காராம் தன்னை ஓர் அளவுக் கருவியோடு ஒப்பிட்டுக் காட்டி யுள்ளார்:

ஓயாது பயன்படுத்திய அளவையொன்று தேய்ந்தழிவதுபோல
நான் (என்னையே தேய்த்தழித்தேன்) தேய்ந்தொழிந்தேன்;
மதிக்கப் பெருத இத்தகுதி கண்டிக்கப்படலாம் (கைவிடப்பட்டு
விடலாம்.)[32]

மதிக்கப்பெருத ஒரு தகுதியை வைத்துப் போற்றுவதால் என்ன பயன் என்றும், அதனைக் கைவிட்டு விடுதலே நல்லது என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார். ஒரு ஒழுக்கங்கெட்ட பெண்ணின் மனஉறுதி குறித்தும் கருத்துத் தெரிவித்துள்ளார். அதை ஒரு முன்மாதிரியாக்கிப் பேசுகிருர்:

'ஒருவனுக்கு மனைவியான ஒருத்தி,
ஒருகாதலனுடன் இன்பநுகர்வுகளை நாடினுல்,
அதனுல் வருமிடர்களைத் துணிந்து
வாழ்க்கையில் எதிர்நோக்கி ஆகவேண்டும்;
அவளது இல்வாழ்க்கைக்கு
ஒருமுறை நெருப்பு வைத்தபின்பு,
அதனைமீண்டும் அவள் திரும்பிப் பார்க்கக்கூடாது'
(இலட்சியத்தில் இறங்கும் ஒருவர்)
அவனைப்போலத் துணிவுமிக்கவராக இருந்தாகவேண்டும்'

என்று துக்கா சொல்கிருர் ('எண்ணித் துணிக என்பதும்', 'துணிந்தபின் எண்ணுவம் என்பதும்' இழுக்காக முடியும் என்ற

30 வி. பி. கோல்தே (துக்காராம் பாசுரங்கள்) துக்காராமசே அபங். பக். 62

31 ராத்ரம்தின் ஆம்ஹா யுத்த4ாசா ப்ரஸங்க்3 ।
அந்தர்ப3ாஹ்ய ஜக3 ஆணி மன ॥

32 மோஜ"னீ ஜீ4ஜலோ மாபாசியே பரீ ।
ஜாலாவீஹே தே2ாரீ லாய4ாவிண ॥

கருத்தைத்தான் இவ்வாறு உவமை ஒன்றின் மூலமாகக் குறிப்பாக அறிவிக்கிறார்போலும்.) துக்காராம் வாழ்ந்த காலச் சூழலில், அத்தகைய ஒரு முனைப்பான துணிவுமிக்க செயலைப் பாராட்டுதல் சமய ஒழுக்கத்திற்கு எதிரானதாகக் கருதப்படும். ஆனால், துக்காராம் அப்பணியை மிக்க பணிவுடன் செய்தார். அவர் சொல்வார்:

என்னைப்போன்ற ஒரு இழிந்தமனிதன்
பொருள் சிறப்பின் நுண்ணிய நயங்களை
எவ்வாறு அறிய முடியும்?
விட்டல்பெருமான் என்ன பேசப்பணிக்கிறாரோ,
அதை நான் வெளிப்படையாகப் பேசுகிறேன்.
அவர் எழுத்தாளர்க்குக் கூறிய அறிவுரை:
செம்பொருளைச் சென்று தழுவுவன எவையோ,
அவற்றை மட்டுமே பேசு;
அன்றெனில் பேச வேண்டாம்
எனத் துக்கா அறிவுரை வழங்கியுள்ளார்.

எங்கும் ஊடுருவிப் பரவியுள்ள உணர்ச்சிக் கனிவுகளும் கூரிய அறிவுத்திறனும் அவரது படைப்புகளில் கலந்து செறிந்துள்ளன. அவருடைய தன்னுணர்ச்சிப் பாக்கள் சிலவற்றில் அவற்றிலுள்ள சந்தங்களே உணர்ச்சிகளை மிக அழகாக வெளிப்படுத்திக் காட்டுகின்றன; பாடல்களில் பயின்றுவரும் தொடைநயங்களும், எதுகை மோனைகளும் பாடலில் ஊடாடியுள்ள உணர்ச்சியழகை வெளிப்படுத்தும் நோக்கில் அமைக்கப்பெற்றனவேயாகும்.

காத்துக் கொண்டிருக்கிறேன்,
என்கண்கள் சலிப்புற்றுச் சோர்ந்துவிட்டன;
என் கண்களுக்கு
எப்பொழுது நீ காட்டுவாய் உன் திருவடிகளை[33]
என்று நயம்பட விவரித்துள்ளார்.

துக்காராமின் காலத்தில் வாழ்ந்த நிளோபா என்ற ஒரு கவிஞர், துக்காராமின் புகழைப்பாடியுள்ளார். அவரது பெருமைகளையெல்லாம் தொகுத்துத் தந்துள்ளார்.

அவற்றை யெல்லாம் அனுபவித்துக் கொண்டே
வாழ்க்கைத் தொடர்பான நடவடிக்கைகளைத்
துறந்துவிட்டாய் நீ;
செய்ததற்கு இரங்குதலாம் நெருப்பினுக்கே
ஐம்புல உணர்வுகளை அளித்துவிட்டாய் நீ;

---

33. வாடுவீ பாஹாதா ஸீணலே டோ³ஞுலே I
தோ³விஸீ பாஉலே கை வோ டோலா II

உணர்ச்சிக்கு இடங்கொடாத் தன்மையின்பால்
உனக்கிருக்கும் நம்பிக்கையை வெளிக்காட்டிவிட்டாய் நீ;
தான் எனும் அகந்தையையும் பாசத்தையும் இழந்து
உனக்குரிய அமைதியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாய் நீ;
ஓ குருவே! துக்காராம்! வெற்றி உமக்கே; கொடையாளி நீ;
அன்பான உறவினர்களுக்கும்
மற்றும் அனைவருக்குமே மீட்பன் (இரட்சகன்) நீ;
பக்தியின் பரிமாணங்களை உண்மையாகவே உயர்த்தியவன் நீ;
பற்றற்று இருத்தலாம் புதையலைப் பாருக்கு வெளிக்
காட்டியவன்
உலகனைத்திற்கும் பரிகாரமாய் இருக்கக்கூடிய தீர்வினை
நல்கினாய் நீ;
திட்டுபவர்கள், பழிபாவத்துக் கஞ்சாதவர்கள்
ஆகியோரது ஐயங்களை இல்லாது செய்தாய்;
ஓ குருவே! துக்காராம்! வெற்றி உமக்கே; கொடையாளி நீ;
அன்பான உறவினர்களுக்கும்
மற்றும் அனைவருக்குமே மீட்பன் (இரட்சகன்) நீ.

சமயத்திற்கும் பண்பாட்டிற்குமிடையே பிளவு ஏற்படுவதற்கு முன்பே, பெரியோர்களது மனங்கள் பருப்பொருள் உண்மை சாராத, நுண்பொருள் ஆய்வுக் கோட்பாட்டில் ஈடுபட்டு ஆராயத் தொடங்கிவிட்டன. எனவே, அவர்கள் புலன்களின் எல்லைகளுக்கு உட்பட்டுத் தோன்றும் பருப்பொருள்களின் பேதங்களில் ஈடுபட்டு வேறுபாட்டை வளர்த்துக்கொள்ளவில்லை. உயரிய பொருள்களில் அவர்களது மனங்கள் திளைத்தன. துக்காராம் அத்தகைய ஒரு பெரியார்; நுண்பொருள் ஆய்வில் ஈடுபட்டுழைத்தவர்; பருமையில் தோன்றும் பேதங்களுக்கு இடமளிக்காத மனமுடையவர்; வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கும் பண்புடையவரல்லர்; வாழ்வதைத் தலையாய கடமையாகக் கொண்டவர் துக்காராம். வாழ்க்கை நடவடிக்கைகளால் மிகுதியும் தொந்தரவுக்கு ஆட்பட்டபொழுது, அவர் இலக்கியப் படைப்புகளில் ஈடுபட்டுத் துயரத்தை மறந்து திளைத்தார். இவ்வுலக வாழ்க்கை பொருள் பொதிந்தது என்று, அவர் காலத்தைத் தொடர்ந்து வந்த மூன்று நூற்றாண்டுகளில் அவரது எழுத்துகளைப் படிப்பவர்கள் நம்புமளவிற்கு, அவர் எழுதினார்.

அவரைப் பொறுத்தவரையில் உலக வாழ்வுக்கும் தெய்வீக வாழ்விற்கும் இடையேயிருந்த எல்லை வரம்புகளைத் துடைத்தெறிந்தார்; கால வரம்புகளை மீறினார்; எந்தவிதக் கவலையுமின்றி ஆனந்த கீதம் பாடினார்.

வெறுமையில் நாம் ஒரு வீட்டைக் கட்டியுள்ளோம்,
நம்முடைய நித்திய இருப்பு வடிவமின்மையில் உள்ளது;
மாயமற்றதோடு கூடி இணைந்து ஒன்றுளோம்,
தொடர்ந்து வரும் ஒன்றுந்தன்மையைப் பெறுபவர்கள்
ஆகின்றோம்

தன்முனைப்பு இப்பொழுது சிறிதும் இல்லாது போகின்றது;
நான் இப்பொழுது என்றுமுள்ள தூய்மைப் பொருளுடன்
இணைந்து (ஐக்கியமாகி) விடுகின்றேன்

என்கிறார் துக்கா.

6. அருஞ்சொற்களும் அவற்றின் விளக்கங்களும்

அத்வைதம்: ஒரு மெய்விளக்கக் கோட்பாடு; இறைவன், உயிர் என்ற இரண்டையும் இருமையாக வேறுபடுத்திக் காணுமல் ஒன்றெனக் கொள்ளும் மெய்விளக்கக் கோட்பாடாகும்.

அபங்: உணர்ச்சியோடு பாடி இறைவனை வழிபடுவதற்காக அமைந்த ஒருவகை இசைப் பாடல்; தமிழில் உள்ள பக்திப் பாசுரம் போன்றது; நாட்டுப்புறப் பாங் கமைந்த யாப்பமைதி கொண்டது.

அவைதிகர்: வேதத்தின் மேலாண்மையை ஏற்றுக்கொள்ளாதவர்.

ஏகாதசி: இந்து நாள்காட்டிக் குறிப்பேட்டின்படி, ஒரு திங்களை இரு பகுதியாகப் பிரித்து (இரண்டு இருவார காலப் பகுதிகள்) வழங்குவர். அமாவாசையிலிருந்து பதி ஞேராம் நாளையும், நிறைமதி நாளிலிருந்து பதி ஞேராம் நாளையும் ஏகாதசி என்பர். அது நோன்பு நாள் ஆகும்.

கீர்த்தங்கர்: கீர்த்தனம் செய்வதைத் தொழிலாகக் கொண்டவர்.

கீர்த்தன்: பக்தர்களின் கூட்டத்தைக் குறிப்பது; அங்குப் பக்தி சார்பான பொருள் குறித்து விவரமாக எடுத்துக்கூறி விளக்கப்பெறும். அவ்வாறு கூறும்போது, மக்களை நன்னெறிப்படுத்தும் நோக்கில், தாங்கள் கூறும் கருத்துக்குத் துணைசெய்யும் ஆதாரங்களைச் செய்யுள் களிலிருந்தும், காப்பியங்களிலிருந்தும், வேதங்களி லிருந்தும், பெரியோர்களின் வாழ்க்கையிலிருந்தும் எடுத்துக் கூறுவர்.

அக்கீர்த்தனம் 'ஹரிகதா' என்றும் அழைக்கப்பெறும்.

குன்பி: ஒரு விவசாயியைக் குறிக்கும்; கடந்தகாலத்தில் இச் சொல் அனைத்து மராத்தியச் சாதிகளையும் குறித்தது.

சந்நியாசம்: உலகப் பற்றுகளையும் சிற்றின்பங்களையும் ஒருசேர உதறித்தள்ளிவிட்டு வாழும் துறவு வாழ்வு.

சம்ஸார்: கவலைகளும் தொந்தரவுகளும் நிறைந்த மண்ணுலக மனித வாழ்க்கை—குடும்ப வாழ்க்கை பற்றியது.

சமாதி: (i) வழக்கமாக யோகத்தின் சுழுத்திநிலையில் தன்னையே பலியிட்டுக்கொள்ளும் நிலை குறித்தது.

(ii) ஆழ்ந்த தியானத்தின்போதுள்ள யோகியின் மன நிலை.

சூத்திரர்: நான்கு வருணப் பிரிவில் நான்காவது பிரிவைச் சார்ந்தவர்கள்; இந்து மக்களுக்குள்ளே ஊழியம் செய்யும் வகுப்பினர்.

துவைதம்: ஒரு மெய்விளக்கக் கோட்பாடு; இறைவன், உயிர் என்ற இரண்டையும் இருமையாக வேறுபடுத்திக் காண்பது. அண்டத்தையும் ஆண்டவனையும் இருமையாக வேறுபடுத்திவைத்து நோக்கும் கோட்பாடாகும்.

நாத்: சிவனை வழிபடும் பக்தர்களுக்கான ஒரு யோக நெறி; அந்நெறியைச் சார்ந்தவர்கள், அறிவுக்கெட்டாத மறைவியலான (சமய) வாய்பாடுகளை—சுருக்க விதிகளைப் பயன்படுத்துவதில் புகழ்பெற்றவர்கள்.

பக்தா(ர்): இறைவனை உள்ளன்போடு வழிபடுபவர்; பக்தி நெறியினைச் சார்ந்தவர்.

பக்தி: தனிப்பட்ட முறையில் இறைவனிடத்து ஏற்படுத்திக் கொள்ளும் உணர்வுவழிப்பட்ட உறவு முறையாகும்; இறைவனிடத்துப் பற்றுக்கொள்வோன் நடந்துகொள்ளும் தோரணை குறித்தது; அன்பு நெறியையும் ஒழுக்கத் தூய்மையையும் வலியுறுத்துவது. அத்தகைய பக்தியின் துணைகொண்டு வீடுபேற்றை அடையும் நெறியே பக்தி நெறியாகும்; அப்பக்தி நெறியானது, ஞானநெறி கருமநெறி என்ற இரண்டு வகையான நெறிகளுக்கும் வேறுபட்ட நெறியாகும்.

பட்டீல்: கிராம நிருவாகத்தின் தலைமை ஆட்சிப் பொறுப்பு அலுவலர்.

பஜன்: (i) ஒரு கூட்டு வழிபாடு; வழிபாட்டில் கலந்துகொள்வோர் அனைவரும் பாடுவது 'பஜன்' ஆகும்.

(ii) ஒரு தெய்வத்தைப் புகழ்ந்து பாடுதற்கென்று அமைந்த சிறியதோர் பக்திப் பாடல்.

மகாநுபாவர்: சக்ரதாரி என்பவரால் தோற்றுவிக்கப்பெற்று 13-ஆம் நூற்றாண்டில் மிக்க செல்வாக்குடன் விளங்கிய துறவிகளுக்குரிய சமயக் கோட்பாட்டு முறையாகும். அது வேதங்களை மதிக்கவில்லை; பிராமணீயத்தைக் கண்டித்துத் தாக்கியது; கிருஷ்ணனைத் தவிர வேறு தெய்வங்களை ஏற்றுக் கொள்ளாதது. பெண்டிருக்கும் சூத்திரருக்கும் சரி நிகர் நிலையை வழங்கியது. இன்றும்கூட அந்த நெறி சுறுசுறுப்புக் குறையாமல் உள்ளது. சமக்கிருதத்திற்கு எதிராகக் கிளர்ந்து எழுந்து வட்டார மொழிகளுக்கு ஆதரவு தந்தது; மராத்தி மொழியின் உரைநடை, செய்யுள் இலக்கியத்தை முதன் முதல் வளப்படுத்தியவர்கள் அக்கோட்பாட்டைச் சார்ந்தவர்களே.

மஹார்: ஒரு தீண்டத்தகாத வகுப்பைக் குறிக்கும்; அச்சாதியில் பிறந்தவரையும் குறிக்கும்.

மாங்: ஒரு தீண்டத்தகாத வகுப்பைக் குறிக்கும்; அச்சாதியில் பிறந்தவரையும் குறிக்கும்.

வரகரி: (i) சமயப் பிரிவு: பதின்மூன்றும் நூற்றாண்டில் நாமதேவராலும் ஞானதேவராலும் தோற்றுவிக்கப்பெற்ற சமயப் பிரிவு. தீவிரமான வைதீக பிராமணீயத்தை எதிர்த்துத் தோன்றியது. இற்றை நாள்வரையிலும் மகாராஷ்டிரத்திலும் கர்நாடகத்திலும் இருந்துவரும் மிக்க செல்வாக்குவாய்ந்த சமயப் பிரிவாகும். சந்திரபாகா நதிக்கரையின்மீதுள்ள பந்தர்பூரில் இருக்கும் விட்டல்பெருமானை வழிபடுவது; சமய உலகிலும் சமுதாய நிலையிலும் மறுமலர்ச்சியைக் கொண்டுவந்தது; 17-ஆம் நூற்றாண்டுவரையிலும் மராத்தி மொழிக்கு நல்ல பல கவிதைகளை விளைவித்து வழங்கியது.

(ii) நெறியாளர்: விட்டல்பெருமான்மீது ஆழ்ந்த பக்தி செலுத்துபவர்; மது வகைகளைப் பருகார்; புலால் சாப்பிடாதவர்; பந்தர்பூருக்கு ஒழுங்கான சமய யாத்திரையை மேற்கொள்பவர்.

விட்டல்: பந்தர்பூரிலுள்ள வழிபாட்டுத் தெய்வ உருவம்; விஷ்ணுவின் திருஉருவாக நம்பப்பெற்று வந்த போதிலும் அத்தெய்வத்தின் தோற்ற வரலாறு அறிய முடியாதது.

ஹரிகதா: 'கீர்த்தன்' என்பதைப் பார்க்கவும்.

7. பயன்பட்ட நூல்களின் பட்டியல்

பிறைக் கோட்டிற்குள் இருக்கும் எழுத்து, எந்த மொழியில் நூல் உள்ளது என்ற தகவலைத் தரும்; அதாவது 'ம' — மராத்தியைக் குறிக்கும்; 'ஆ'—ஆங்கிலத்தைக் குறிக்கும்.

துக்காராம் (ம) : அபங்கஞ்சி கதா (பல பதிப்புகள்)

துக்காராம் (ஆ) : துக்காராம் பாடல்கள்: 3 தொகுதிகள்; மொழி ஆக்கம்: ஜே. நெல்சன் ஃப்பிரேசரும் கே. பி. மராதேயும்; கிறித்துவ இலக்கியக் கழகம்; சென்னை, 1909–15,

துக்காராம் (ம) : மந்திரகீதா, பதிப்பித்து வெளியிட்டவர்: வி. எஸ். பெந்த்ரே; பம்பாய், 1962.

அஜ்க ஓங்கர், ஜே. ஆர். (ம) : மகாராஷ்டிர கவி சரித்திரம்: தொகுதி 9: துக்காராம்; எம். என். குல்கர்ணி; பம்பாய், 1935.

பஹிணுபாய், (ம) : பஹிணுபாயிஞ்ச கதா; சித்திரசாலா அச்சகம், புனே, 1956.

பெந்த்ரே, வி. எஸ். (ம) : சாந்த் துக்காராம்; செய்தி ஒலிபரப்பு அமைச்சகம்; புது தில்லி, 1963.

பெந்த்ரே, வி. எஸ். (ம) : துக்காராம் மகாராஜாஞ்சி குரு பரம்பரை; மௌஜ் பிரகாசன்; பம்பாய், 1963.

பெந்த்ரே, வி. எஸ். (ம) : துக்காராம் மகாராஜ் யாஞ்சே சந்தசங்கதி; மௌஜ் பிரகாசன்; பம்பாய், 1958.

பம்பாய் கெஜட்டீர் (ஆ) : தொகுதி XX, 1884.

ஃப்பிரேசர், ஜே. என்.—உம், எட்வர்ட், ஜே. எஃப்—உம் (ஆ) : துக்காராமின் வாழ்வும் வாக்கும்; கிறித்துவ இலக்கியக் கழகம்; சென்னை, 1922.

ஹர்ஸீ, ஆர். ஜி. (ம) : துக்காராம், ஆர். ஜி. ஹர்ஸீ; புனே, 1933.

கோல்தே, வி. பி. (ம) : மகாராஷ்டிர தர்மசேப்ரணீதே-யிலுள்ள 'துக்காராமசே அபங்'; செய்தி ஒலிபரப்பு அமைச்சகம்; தில்லி, 1959.

மஹிபதி, (ம) : பக்த லீலாம்ருதம்: இயல் 25 முதல் 40; சத்திய பாமா பாண்டுரங்கா; பம்பாய், 1940.

மஹிபதி, (ஆ) : மகாராஷ்டிர அருள் கவிஞர்கள்: தொகுதி 7; துக்காராம்; மொழி ஆக்கம்: ஜஸ்டின், இ. அப்பாட்; என். ஜே., யு. எஸ். ஏ., 1930.

உஸ்பென்ஸ்கி, பி. டி. (ஆ) : டெர்டியம் ஆர்கானம்—மூன்றுவது அமெரிக்கப் பதிப்பு, 1920, ஏ. ஏ. க்னேப்; நியூயார்க்; ரௌட்லெட்ஜ் உம் கேகன் பாலும்; லண்டன், 1949.

பங்கார்கர், எல். ஆர். (ம) : ஸ்ரீ துக்காராம் சரித்திரம்; கே. பி. தவாலே; பம்பாய், 1927.

ரானடே, எம். ஜி. (ஆ) : மராத்திய சக்திகளின் எழுச்சி; செய்தி ஒலிபரப்பு அமைச்சகம், தில்லி, 1961.

ரானடே, ஆர். டி. (ஆ) : மகாராஷ்டிரத்தின் மறைஞானம்: இந்திய தத்துவ வரலாறு: தொகுதி, 7; ஆர்ய பூஷண் அச்சகம்; புனே, 1933.

சர்தார், ஜி. பி. (ம) : சாந்த வாங்மயாச்சி சமாஜிக் பால ஸ்ருதி; மகாராஷ்டிர சாகித்ய பரிஷத்; புனே, 1962.

சர்மா, எஸ். ஆர். (ஆ) : துக்காராம் குறித்து; பாபுலர் புக் டெப்போ, பம்பாய், 1962.

பக்தி இயக்கமானது, இந்த ஆயிரமாண்டுக் காலத்தில் இந்தியச் சிந்தனையாளர்களின் மிகவும் புகழ்வாய்ந்த படைப்புகளுக்குரிய பேரலையாக (ஒருவேளை) இருக்கலாம். எல்லாருக்குமான பக்தி நெறியை மகாராஷ்டிரப் பகுதியில் காட்டிக் கொடுத்தவர் துக்காராம்; கி. பி. 1608 முதல் கி. பி. 1650 வரை வாழ்ந்தவர்; வழிவழியாக மக்களால், ஒருவகையில், ஆர்வமாகப் போற்றப் பெற்று வருபவர். சூத்திர வருணத்தில் பிறந்து, புரட்சிகரமான சமுதாயச் சிந்தனைகளை வெளியிட்டு, மக்கள் மத்தியில் மிகப் பெரிய செல்வாக்கை ஏற்படுத்திக் கொண்டவர். பெருகிவரும் செல்வாக்கைக் கண்டு சகிக்கமுடியாத வைதீகப் போக்குடையவர்களால் துன்புறுத்தப் பெற்றவர். அவருக்கு நேர்ந்த முடிவு புதிராகவேயுள்ளது. புதிரான அவரது மரணத்திற்குப் பின்பு, அவர் வாழ்ந்து முடிந்த அந்தக் காலத்திலேயே, மிகவும் மதிக்கப் பெறும் நபராகத் துக்காராம் மாறினர். மராத்தி பேசும் மக்களின் பண்பாட்டு வாழ்வில், மூன்று நூற்றுண்டுகளுக்கு மேலாக, துக்காராம் மிக ஆழமானதோர் செல்வாக்கை ஏற்படுத்தியிருந்தார். கிட்டத்தட்ட ஒவ்வொரு தலைமுறையிலும் அவரது உணர்ச்சிமிகு பாடல்கள், பெரிதும் பரவலாகப் பாடப்பெற்றன; படிக்கப்பெற்றன; பழமொழிகள் போல அடிக்கடி எடுத்தாளப் பெற்றன. அவரது பாடல்களில் அவருக்கேயுரிய ஆழமான சமய உண்மைகள்—ஆன்ம அனுபவங்கள் மிளிர்ந்தன. எல்லாரையும் கவர்ந்திழுத்தவைகள் அவ்வனுபவங்கள் தாம். எப்போதைக் காட்டிலும் அவர் வலியுறுத்திய (ஒழுக்கப் பண்புகள்) அறக் கோட்பாடுகள் நம் காலத்துக்கும் ஏற்புடையனவாகும். உலக இலக்கியத்தை உண்மையாகப் படிக்க விரும்பும் எந்த மாணவனும் துக்காராமைத் தவிர்க்க இயலாது.

இங்கு, துக்காராமின் கவிதைகளில் வெளிப்படுத்தப் பெற்றிருக்கும் அவரது சமுதாயப் பின்னணி, வாழ்க்கை, மற்றைய அனுபவங்கள் எல்லாம் நுணுகிக் கூறப் பெற்றுள்ளதோடு, மராத்தி தெரியாத வாசகர்களுக்காக, ஏராளமான கவிதைகள் மொழிபெயர்த்து வழங்கப் பெற்றுள்ளன. இலக்கியத்தையும் இலக்கியப் பண்பாட்டையும் அறிய விரும்பும் மாணவர்களுக்கு பாலசந்திர நெமதே எழுதிய இத் தனி நூல் மிக்க பயனுடையதாக இருக்கும்; உயர்வானதும் மதிப்புடையதாகவும் அமையும். நெமதே நாடறிந்த மராத்தி எழுத்தாளர். ஔரங்காபாத்திலுள்ள மராத்வாடா பல்கலைக் கழகத்தில் ஆங்கில இலக்கியத்தையும் மொழி இயலையும் கற்றுத் தருபவர். கவிதைக்கெனத் தனியாக ஒரு சிறிய நூல் வெளியீட்டு நிறுவனத்தை நடத்திக் கொண்டிருப்பவர்.

•

அட்டை அமைப்பு: சத்தியஜித் ரே

உருவப்படம் : சி. எம். ருத்ரா

விலை ரூ. 5/–